உ

கடவுள் துணை.

0165:17

சைநமுனிவர்கள் - திருவாய்மலர்ந்தருளிய

நீதிநூலாகிய

நாலடியார்மூலமும்

உரையும்.

இஃது,

களத்தூர் - தமிழ்ப்புலவர்,

வேதகிரிமுதலியா ரவர்களால்

பதவுரையும் - கருத்துரையுஞ் செய்து

பலவிலக்கணமேற்கோளு

மச்சிற் பதிப்பித்த பிரதிக்கிணங்க - பரிசோதித்து

திருநின்றவூர்,

அருணாசலசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு,

பூவிருந்தவல்லி,

கந்தசாமிமுதலியாரால்

தமது

இயலிசைநாடகவிலாச

அச்சுக்கூடத்திற்பதிப்பிக்கப்பட்டது,

1860

இரௌத்திரி - ௵ - ஆவணி - ௴

நாலடி நானூறு.

முதலாவது.

அறத்துப்பால்.

அஃதாவது—விதித்தவைகொள்ளலும், விலக்கியவைதள்ளலுமாம்.

முதல் - அதிகாரம்.

செல்வநிலையாமை.

அஃதாவது- செல்வமானது நிலைநில்லாமையாம்.

அறுசுவையுண்டியமர்ந்தில்லாளூட்ட ... ...❋
மறுசிகைநீக்கியுண்டாரும்-வறிஞராய்ச் ... ... ❋
சென்றிரப்போரிடத்துக்கூழெனிற்செல்வமொன் ... ❋
றுண்டாகவைக்கற்பாற்றன்று ... ... ❋

(இதன்பதப்பொருள்) அறுசுவை - அறுவகை ருசியாகிய—உண்டி- உணவை—அமர்ந்து- விரும்பி—இல்லாள்- மனைவி—ஊட்ட-ஊட்டுதல்செய்ய—மறு- மறுக்கப்பட்ட—சிகை- (வன்மையான) பதார்த்தங்களை—நீக்கி - தள்ளி—உண்டாரும்- (மென்மையானபதார்த்தங்களை) உண்டசெல்வர்களும்—வறிஞராய்-தரித்திரர்களாய்—ஓரிடத்து- ஒருவிடத்தில்— சென்று - போய்—கூழ்- கூழினை—இரப்பரெனில்- யாசிப்பாராகில்—செல்வம்- ஐசுவரியமானது—ஒன்றுண்டாக - ஒருபொருளுள்ளதாக— வைக்கல் - வைக்கும்—பாற்று - பகுதியுடையது—அன்று- அல்ல— (எ-று) (அரும்பதக்கொத்து) "சிகையென்பதுவேபதார்த்தமாகு-மதுவேவன்மைமென்மையெனப்படும்,, இவ்விதியால் சிகையென்பதுபொதுப்படப்பதார்த்தமாம், செல்வர்கள்வன்மையான பதார்த்தங்களை வருத்தமுற்றுக்கடித்துஉண்ணுதலரிதாகலின்மறுசிகைநீக்கியென்றார். இளமைநிலையாமையில் "பருவமெனைத்துளபல்லின்பாலேனை,, இருசிகையுமுண்டோ-என்றதில்வயதினளவையும், பற்களின்வலியினளவையும் வினவிய விடத்தும், இருசிகையென்றதற்குப்பொருள்வன்மையானபதார்த்தங்களும், மென்மையானபதார்த்தங்களுமேயாம், சிகைபடைத்தசாதமெனினும் ஒருபிடிசோறெனினும்பொருந்தும், முற்சிகைநீக்கிப்பிற்சிகையுண்டாருமெனக்கொள்ளினுமமையும்❋ (இதன்தாற்பரியம்) அறுசுவை போசன பதார்த்தங்களைமனையாளூட்டுதல்செய்யஉண்டசெல்வர்களும் ஓரிடத்திற்போய்க்

கூழை இரந்துண்டாராகும் செல்வமானது ஒருபொருளாகவைக்கும் பகுப்புடையதல்ல என்பதாம். ☞ செல்வம் - எழுவாய் — வைக்கற்பாற்றன்று - பயனிலை. (௧)

(இன்னிசைவெண்பா.)

துகடீர்பெருஞ்செல்வந்தோன்றியக்காற்றொட்டுப் ... ❋
பகடுநடந்தகூழ்பல்லாரோடுண்க ... ❋
அகடுறயார்மாட்டுநில்லாதுசெல்வஞ் ... ❋
சகடக்கால்போலவரும் ... ❋

(இ-ள்.) அகடு-நடுநிலைமை—உற-பொருந்த—யார்மாட்டும்-யாவரிடத்தும்—செல்வம்-ஐசுவரியம்—நில்லாது-நிற்காது— சகடம்-தேரின்—கால்போல்-உருளையைப்போல—வரும் - (கீழ்மேலாய் மேல்கீழாய்) வருமாதலால்— துகள்-குற்றம்—தீர்-நீங்கிய— பெரும் - பெரிய—செல்வம்-சம்பத்தானது — தோன்றியக்கால் - கிடைத்தால்— தொட்டு-(கிடைத்தகாலந்)தொடங்கி—பகடு-ஏர்— நடந்த-உழுத— கூழ்- உணவை—பல்லாரோடு- பற்பலருடன்—உண்க- நீயுண்பாயாக (எ-று.) [தோன்றியக்காலென்பது வினையெச்சமெய்யொச்சமாகில் ஒற்றுமிகாது]. ❋ (இ-ம்.) செல்வமானது யாவரிடத்து நில்லாது தேர்ச்சக்கரம்போலக்கீழ்மேலாய்மேல்கீழாய்வருமாதலால்செல்வங்கிடைத்தால்பலருடனுண்ணக்கடவாய்-என்பதாம். ☞ நீ-தோன்றாவெழுவாய் உண்க-பயனிலை கூழ்-செயப்படுபொருள், இதில்-ஐயுருபு தொக்கியது. நல்வழியில்வந்த செல்வமென்றறிதற்குத் துகடீர்பெருஞ்செல்வமென்றார். (௨)

யானையெருத்தம்பொலியக்குடைநிழற்கீழ்ச் ... ❋
சேனைத்தலைவராய்ச்சென்றோரு-மேனை ... ❋
வினையுலப்பவேறாகிவீழ்வர்தாங்கொண்ட ... ❋
மனையாளைமாற்றார்கொள ... ❋

(இ-ள்.) யானை-யானையினது—எருத்தம்-பிடரியில்—பொலிய- பிரகாசிக்க—குடை-வெண்குடையின்—நிழற்கீழ்-நிழலின்கீழ—சேனை-சதுரங்கசேனைக்கும்—தலைவராய்-முதல்வராய்— சென்றோரும்-சென்றவரசர்களும்—ஏனைவினை-தீவினை—உலப்ப- கெடுக்க— வேறாகி-வேறுபட்டு—தாம்- தாங்கள்—கொண்ட- கொள்ளப்பட்ட— மனையாளை-மனையவளை—மாற்றார்-பகைவர்—கொள- கைக்கொள்ள— வீழ்வர்-கெடுவர்—(எ-று.) ❋ (இ-ம்.) சதுரங்கசேனைக்குத்தலைவராய்ச் சென்றவரசர்களும்தீவினை கெடுக்க வேறுபட்டுத்தங்கள்மனைவியைப் பகைவர்கைக்கொள்ளகெடுவர்கள்-என்பதாம். ☞ சென்றோரும்-எழுவாய் வீழ்வர்-பயனிலை, உம்மை-சிறப்பும்மை. (௩)

நின்றன நின்றன நில்லாவெனவுணர்ந் ※
தொன்றின வொன்றின வல்லே செயிற்செய்க ※
சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன் ※
வந்தது வந்தது ※ கூற்று ※

(இ-ள்.) வாழுநாள்-ஆயுள்கள்— சென்றன சென்றன-போயின போயின— செறுத்து-கோபித்து— உடன்-உடனே— கூற்று-இயமன்— வந்தது வந்தது-வந்தான் வந்தான் (ஆதலால்)— நின்றன நின்றன-நின்றன நின்றன (வென்னும் பொருள்கள்)— நில்லாவென-நிற்காவென— உணர்ந்து-அறிந்து— ஒன்றின வொன்றின-பொருந்திய பொருந்திய, (தருமங்களை)— செயின்-நீ செய்வையாகில்— வல்லே-சீக்கிரத்தில்— செய்க-செய்யக்கடவாய்— (எ-று) ※ (இலக்கணத்திரட்டு) [உயர்திணையிற்போலஃறிணைவருதலு-மஃறிணையிற்போலுயர்திணைவருதலுமருகல்விதியெனவரைந்தனரான்றோர், இவ்விதியால்-கூற்று-என்னும் அஃறிணையீறுஉயர்திணைக்குவந்தது, சென்றன சென்றன- வந்தன வந்தன-இவைவிரைவின்கண் இரட்டித்தன.] ※ (இ-ம்) ஆயுள்கள் போயின, இயமன் வந்தான் வந்தான்-நின்றனவான செல்வங்கள் நில்லாவெனவறிந்து, பொருந்திய தருமங்களை நீ செய்தால் சீக்கிரஞ் செய்யக்கடவாய், என்பதாம் ☞ நீ-தோன்றா எழுவாய், செய்க-பயனிலை. (௪)

என்னானு மொன்றுதங் கையுறப் பெற்றக்காற் ※
பின்னாவ தென்று பிடித்திரா-முன்னே ※
கொடுத்தாருயப்போவர் கோடிறீக்கூற்றந் ※
தொடுத்தாறு செல்லுஞ்சுரம் ※

(இ-ள்.) என்னானும்-யாதாகிலும்— ஒன்று-ஒருபொருள்— தம்-தமது— கை-கையில்— உற-பொருந்த— பெற்றக்கால்-பெற்றால்— பின்னாவதென்று-பின் கொடுப்போமென்று— பிடித்திரா-பிடித்திராமல்— முன்னே-முற்காலத்தில்— கொடுத்தார்-கொடுத்தவர்கள்— கோடு-தன் செய்கையிற் கோட்டம்— இல்-இல்லாத— தீ-பொல்லாத— கூற்றம்-இயமன், தொடுத்து-பாசத்தாற் கட்டி— செல்லும்-போகும்— சுரம்-பாலைவனத்தினது— ஆறு-வழியை (நீங்கி)— உயப்போவர்-பிழைத்துப்போவர்கள்— (எ-று) ※ (இ-ம்) யாதாகிலுமொருபொருள் தன் கையில் பெற்றால் பின் கொடுப்போமென்று வைத்திராது முன் கொடுத்தவர்கள், இயமன் கொண்டுபோம் வழியை நீங்கிப் பிழைத்துப்போவார்கள் என்பதாம், ☞ கொடுத்தார்-எழுவாய்-உயப்போவர், பயனிலை, ஆறு-செயப்படுபொருள்-இதில் ஐயுருபு தொக்கியது, [காலையின் மலர்ந்த மலர் மாலையினுலர்ந்தழியுமாறுபோற் செல்வமழிதல் பற்றி முன்னே கொடுத்தாரென்றார். (௫)

இழைத்தநா ளெல்லை யிகவா பிழைத்தொரீஇக் ⁕
கூற்றங் குதித்துய்ந்தா ரீங்கில்லை - யாற்றப் ⁕
பெரும்பொருள் வைத்தீர் வழங்குமின் னாளைத் ⁕
தழீஇந் தழீஇந் தண்ணம் படும். ⁕

(இ-ள்.) இழைத்த-தமக்களவு செய்த — நாள்-நாள்கள் — எல்லை-தம்மெல்லையை — இகவா-கடவா — கூற்றம்-இயமனை — பிழைத்து-தப்பி — ஒரீஇ-நீங்கி — குதித்து-அவன் குறிப்பைக் கடந்து — உய்ந்தார்-பிழைத்தவர்கள் — ஈங்கு-இவ்வுலகத்து — இல்லை-இல்லை — நாளை-நாளையே — தழீஇந் தழீஇம்-தழீஇந் தழீஇமென்னு மோசையுடனே — தண்ணம்-பிணப்பறை — படும்-சாற்றப்படுமாகையால் — ஆற்ற-மிகவும் — பெரும்-பெரிய — பொருள்-பொருளை — வைத்தீர்-தேடி வைத்தவர்களே — வழங்குமின்-அப்பொருளைக் கொடுங்கள் — (எ-று) ⁂ இ-ம். தமக்களவு செய்த நாள்கள் தம்மெல்லையைக் கடவா இயமனைக் கடந்து பிழைத்தவர்கள் இவ்வுலகத்தில்லை - நாளையே பிணப்பறை சாற்றப்படும், பொருளைத் தேடி வைத்தவர்களே நீங்கள் கொடுங்கள் என்பதாம். ☞ நீங்கள் எ, வழங்குமின்-ப, பொருள்-செ, இதில்-ஐயுருபு-தொக்கநின்றது. (௫)

தோற்றஞ்சால் ஞாயிறு நாழியா வைகலுங் ⁕
கூற்ற மளந்துநுந் நாளுண்ணு - மாற்ற ⁕
வறஞ்செய் தருளுடையீ ராகுமின் யாரும் ⁕
பிறந்தும் பிறவாதாரில். ⁕

(இ-ள்.) தோற்றம்-உதயம் — சால்-மிகுந்த — ஞாயிறு-சூரியனை — நாழியா-அளக்கு நாழியாக — வைகலும்-தினந்தோறும் — கூற்றம்-இயமன் — அளந்து-அளவிட்டு — நும்-உங்களுடைய — நாள்-ஆயுளை — உண்ணும்-உண்பாருகையால் — யாரும்-யாவரும் — பிறந்தும்-மக்கட்பிறப்பாய்ப் பிறந்தும் (வீணாகாமல்) — பிறவாதாரில்-பிறவாது மோட்சத்திலிருப்பவரைப்போல — ஆற்ற-மிகவும் — அறம்-தருமத்தை — செய்து-பண்ணி — அருளுடையீராகுமின்-கிருபையுடையீராகுங்கள் (எ-று) [யாரும்-யாவரும், பிறந்தும்-மனிதப்பிறப்பிற் பிறந்தும் அறஞ்செய்யாராகில், பிறவாதாரில்-பிறவாதவர்களில் வைத்தெண்ணப்படுவர்- எனினுமமையும்] ⁂ இ-ம், இயமன் சூரியனைப்படியாகக்கொண்டு உங்கள் நாளையளந்து உண்ணுகிறான்-ஆகையால் தருமத்தைச் செய்து கிருபையுடையீராகுங்கள்- என்பதாம். ☞ நீங்கள்-தோன்றா எழுவாய், அருளுடையீராகுமின்- பயனிலை, ஆண்பாலும் பெண்பாலுமென்றறிதற்கு- யாருமென்றார். (௬)

செல்வர்யா மென்றுதாஞ் செல்வுழி யெண்ணாத ⁕
புல்லறிவாளர் பெருஞ்செல்வ மெல்லிற் ⁕

செல்வநிலையாமை.

— கருங்கொண்மூவாய்திறந்தமின்னுப்போற்றோன்றி
மருங்கறக்கெட்டுவிடும்..............................*

(இ-ள்.) செல்வர்- செல்வமுள்ளோர்—யாமென்று-நாமென்று—தாம்-தாங்கள்—செல்வுழி-போமிடத்து—எண்ணுத-நினையாத—புல்லற்ப—அறிவாளர்- அறிவுடையாரது—பெரும்- பெரிய— செல்வம்-ஐசுவரியம்—எல்லில்- இராக்காலத்தில்—கரும்-கரிய—கொண்மூ-மேகமானது—வாய்திறந்த-வாய்விடப்பட்ட—மின்னுப்போல்-மின்னைப்போல— தோன்றி- உண்டாகி—மருங்கு- வழி—அற- அற்றுக—கெட்டுவிடும்-கெட்டுப்போம்(எ-று) ※ இ-ம்-செல்வமானது மின்னைப்போலத்தோன்றி யழியும் என்பதாம், ☞ செல்வம்-எழுவாய், கெட்டுவிடும்-பயனிலை. (அ)

உண்ணானொளிநிறானோங்குபுகழ்செய்யான்........*
துன்னருங்கேளிர் துயர்களையான்-கொன்னே.... *
வழங்கான்பொருள்காத்திருப்பானேல்அஆ.......*
விழந்தானென்றெண்ணப்படும் ....*

(இ-ள்.) உண்ணான்-உண்ணுதவனுக—ஒளி- பிரகாசத்தை—நிறான்- நிறுத்தாதவனுக— ஓங்கு- மிகுந்த— புகழ்-கீர்த்தியை— செய்யான்-செய்யாதவனுக— துன்-பெறுதற்கு— அரும்-அரிய—கேளிர்- சுற்றத்தாருடைய—துயர்-துன்பத்தை—களையான்-நீக்காதவனுக— வழங்கான்-கொடாதவனுக — கொன்னே-பயனில்லாமல்—பொருள்-திரவியத்தை, காத்து- காத்துக்கொண்டு—இருப்பானேல்-இருப்பானுனால்—அஆ-ஐயோ—இழந்தானென்று- இவன் பொருளையிழந்தானென்று—எண்ணப்படும்-யாவராலும் எண்ணப்படுவான்—(எ-று) ※ இ-ம்-பொருளைத்தேடிச்செலவிடாது வைத்துக்காத்திருந்தவன் பொருளை யிழந்தானென்று யாவராலும் நினைக்கப்படுவான்-என்பதாம், ☞ இவன்-தோன்றாஎழுவாய், எண்ணப்படும்-ப, பொருள்-செ, இதில-ஐயருபுதொக்கது, அஆ வென்பது-அருளின் கட்குறிப்பு, [நெருங்கிய வுறவினரொன்றுந்தான்றற்குத் துன்னருங்கேளிரென்றூர்.] (௯)

உடாஅதுமுண்ணாதுந்தம்முடம்புசெற்றுங்.......*
கெடாஅதநல்லறமுஞ்செய்யார்-கொடாஅது .. *
வைத்தீட்டினாரிழப்பர்வான்றோய்மலைநாட.... ....*
வுய்த்தீட்டுந்தேனீக்கரி.................................*

(இ-ள்.)உடாஅதும்-உடுக்காமலும்—உண்ணாதும்-உண்ணாமலும்—தம்-தங்களுடைய—உடம்பு- உடலை—செற்றும்-வருத்தியும்—கெடா

அத-கெடுதலில்லாத—நல்-நன்மையாகிய—அறமும்-தருமங்களையும், செய்யார்-செய்யாதவர்களாய்—கொடாஅது-யாதுங்கொடாது, வைத்தீட்டினார்-பொருளைத்தேடிவைத்தவர்கள்—இழப்பர்-இழப்பார்கள்—வான்-ஆகாயத்தை—தோய்-அளாவும்—மலை-மலைகளையும்—நாட-நாட்டையுடைய (பாண்டியனே)—தேன்-மலர்த்தேனை—உய்த்து-ஆராய்ந்து—ஈட்டும்-சம்பாதிக்கும்—ஈ-ஈயல்லவோ—கரி-சாட்சி(எ-று) இ-ம்-பொருளைத்தேடிக்கொடாதுவைத்தவர்கள் தேன் ஈயைப்போல இழந்துவிடுவார்கள்-என்பதாம், ☞ ஈட்டினார்-எ, இழப்பர்-ப, பொருளை-செயப்படுபொருள். (௰)

செல்வநிலையாமை - முற்றிற்று.

இரண்டாம் அதிகாரம்.

இளமைநிலையாமை.

அஃதாவது-இளமைப்பருவமானது நிலைநில்லாமையாம்.

நரைவருமென்றெண்ணி நல்லறிவாளர் ... ※
குழவியிடத்தே துறந்தார்-புரைதீரா ... ...※
மன்னாவிளமைமகிழ்ந்தாரேகோலூன்றி ... ※
யின்னாங்கெழுந்திருப்பார் ... ...※

(இ-ள்.) நரை-நரைதிரை—வருமென்று-வருமென்று—எண்ணி-நினைத்து—நல்-நல்ல—அறிவாளர்-விவேகிகள்—குழவியிடத்தே-இளமைப்பருவத்தில்—துறந்தார்-மனைவாழ்க்கையைவிட்டார்—புரை-குற்றம்—தீரா-நீங்காத—மன்னா-நிலைபெறாத—இளமை-இளமைப்பருவத்தை—மகிழ்ந்தார்-இச்சித்தார்—கோல்-தடியை—ஊன்றி-ஊன்றிக்கொண்டு—இன்னாங்கு-துன்பத்துடன்—எழுந்திருப்பார்-எழுந்திருப்பார்(எ-று) இ-ம்.அறிவுடையவர்கள் நரைதிரைவருமென்று இளமைப்பருவத்தில் இல்வாழ்க்கையைவிட்டார்கள்-இளமைப்பருவத்தைவிரும்பினவர்கள் துன்பத்துடன்தடியூன்றி எழுந்திருப்பார்-என்பதாம், ☞ அறிவாளர்-எ, துறந்தார்-ப, மகிழ்ந்தார்-எ, எழுந்திருப்பார்-ப, ஏ-அசை, [தீயிற்புகைதோன்றியழிதல்போலஇளமையுமழிதலான்-மன்னா இளமையென்றார். (௧)

நட்புநாரற்றன நல்லாருமஃகினா ... ※
அற்புத்தளையுமவிழ்ந்தன-வுட்காணாய் ... ※

வாழ்தலினூதியமென்னுண்டாம்வந்ததே.........*
யாழ்கலத்தன்னகலி.................................*

(இ-ள்.) நட்பு-உறவாகிய—நார்-பாசங்களும்—அற்றன-நீங்கின—நல்லாரும்-மகளிரும்—அஃகினார்-அன்பிற்குறைந்தார்—அற்பு-அன்பாகிய—தளையும்-பந்தங்களும்—அவிழ்ந்தன-நெகிழ்ந்தன—உள்-உன்னுள்ளே—காணாய்-பாராய்—ஆழ்-முழுகும்—கலத்தன்ன-கப்பலோசைபோல்—கலி-உறவினரழுமோசை—வந்ததே-வந்ததல்லவோ (ஆதலால்)—வாழ்தலின்-வாழ்தலினால்—ஊதியம்-இலாபம்—என்-யாது—உண்டாம்-உண்டாகும் (எ-று) ※ இ-ம்-கப்பலோசைபோலச் சுற்றத்தார் அழுகுரலோசைவந்ததல்லவோ ஆதலால், இல்வாழ்க்கையில் வாழ்தலினாற் பயனென்ன உண்டாகும்-என்பதாம், ☞ ஊதியம்-என், னுண்டாம்-ப. (௨)

சொற்றளர்ந்துகோலூன்றிச்சோர்ந்தநடையினராய்ப்
பற்கழன்றுபண்டம்பழிகாறு-மிற்செறிந்து ... *
காமநெறிபடருங்கண்ணினார்க்கில்லையே... ......*
யேமநெறிபடருமாறு.................................*

(இ-ள்.) சொல்-சொற்கள்—தளர்ந்து-குழறி—கோல்-தடியை—ஊன்றி-ஊன்றிக்கொண்டு—சோர்ந்த-தள்ளாடிய—நடையினராய்-நடையையுடையவராய்—பல்-பற்கள்—கழன்று-உதிர்ந்து—பண்டம் (உடலாகிய) பண்டம்—பழிகாறும்-பழிக்கப்படுமளவும்—இல்-இல்வாழ்க்கையில்—செறிந்து-நெருங்கி—காமம்-ஆசை—நெறி-வழியே—படரும்-நடக்கும்—கண்ணினார்க்கு-அறிவுடையார்க்கு—ஏமம்-தமக்குக்கோட்டையாகிய—நெறி-நல்வழியில்—படரும்-நடக்கும், ஆறு-வழி—இல்லை-இல்லை—(எ-று) ※ இ-ம்-இல்வாழ்க்கைவழியிலே நடப்பவர்கள் உயிர்க்கு-நல்வாழ்க்கைவழியில்லை-என்பதாம், ☞ ஆறு-எ, இல்லை ப, ஏகாரம்-அசை. (௩)

தாழாத்தளரார்த்தலைநடுக்காத்தண்டூன்று ... ...*
வீழாவிறக்குமிவண்மாட்டுங்-காழிலா.............*
மம்மர்கொண்மாந்தர்க்கணங்காகுந்தன்கைக்கோ *
லம்மனைக்கோலாகியஞான்று ....*

(இ-ள்.) அம்மனைக்கோல்-(தன்) தாய்கைக்கோலானது—தன்கைக்கோல்-தன்கையின்கோல்—ஆகியஞான்று-ஆனகாலத்தில்—தாழா-தாழ்ந்து—தளரா-தளர்ந்து—தலை-தலையை—நடுக்கா-நடுக்கி—தண்டு-அத்தடியை—ஊன்றா-ஊன்றி—வீழா-வீழ்ந்து—இறக்கும்-மரணமாகும்—இவண்மாட்டும்-இவளிடத்தும்—காழ்-உறுதி—இலா

இல்லாத—மம்மர்- மயக்கம்—கொள்- கொண்ட — மாந்தர்க்கு-மனிதர்க்கு—அணங்கு-துன்பம்—ஆகும்-உண்டாகும்—(எ-று) ※ இ-ம். தன்றாய்கைக்கோலானது தன்கைக்கோலானகாலத்து வருத்தமுற்று இக்குமிவளிடத்து மயக்கங்கொண்டவர்களுக்குத் துன்பமுண்டாகுமென்பதாம், (அம்மனைக்கோல்- இவ்விடத்து உயர்திணைக்கண் ணொற்றுமிகுந்தது- (செய்யுள்விகாரம்) ☞ அணங்கு-எ, ஆகும்-ப [இவண்மட்டும் என்பதை-இவ்விடத்தெனப்பொருள் கூறுவாருமுளர். (ச)

எனக்குத்தாயாகியாளென்னையீங்கிட்டுத் ... ... ※
தனக்குத்தாய்நாடியேசென்றாடனக்குத்தா ... ... ※
யாகியவளுமதுவானாற்றாய்த்தாய்க்கொண் ... ... ※
டேகுமளித்திவ்வுலகு... ... ... ※

(இ-ள்.) எனக்கு- எனக்கு—தாயாகியாள்-தாயானவள்—என்னை-என்னை—ஈங்கு-இவ்விடத்து—இட்டு-பெற்றுவைத்து— தனக்கு- தனக்கொரு—தாய்-தாயை—நாடி-தேடி— சென்றாள் - இறந்தாள்—தனக்கு-அவளுக்கு—தாயாகியவளும் - தாயானவளும்—அதுவானால்-அத்தன்மையளானால்—தாய்த்தாய்க் கொண்டு- தாயைத்தாயைத்தேடிக்கொண்டு—ஏகும்-போகும்— இவ்வுலகு-இவ்வுலகமானது— அளித்து-எளிமையுடையது. (எ-று) ※ இ-ம். இவ்வுலகமானது-தாயைத்தாயைத்தேடிக்கொண்டுபோகும் எளிமையுடையது.என்பதாம், [தாய்த்தாய்க்கொண்டு இவ்விடத்துயர்திணைமெய்யீறு ஒற்றுக்கண்மிக்கன செய்யுள்விகாரம்.] ☞ உலகு-எ, அளித்து-ப, ஏ-அசை, அளித்து-பெற்றுவைத்தெனினுமாம். (ரு)

வெறியயர் வெங்களத்துவேன்மகன்பாணி... ... ... ※
முறியார்நறுங்கண்ணிமுன்னர்த்-தயங்க... ... ... ※
மறிக்குளகுண்டன்னமன்னுமகிழ்ச்சி... ... ... ※
யறிவுடையாளர்கணில் ... ... ※

(இ-ள்) வெறி-வெறியாடலை—அயர்- செய்கின்ற — வெம்- வெய்ய—களத்து-பலிக்களத்து—வேன்மகன்-பூசாரி—பாணி- கையில்—முறி-தளிர்—ஆர்- நிறைந்த— நறும்-மணக்கும் — கண்ணி-மாலை—முன்னர்- தன்முன்னாக— தயங்க- அசைந்துதொங்க—மறி- ஆடு—குளகு-உணவாக—உண்டன்ன-உண்டாற்போலும்—மன்னு- நிலைபெறு—மகிழ்ச்சி-இளமையினுகுமகிழ்ச்சி— அறிவுடையாளர்கண்-விவேகிகளிடத்தில்—இல்-இல்லை, (எ-று) ※ இ-ம். ஆடுகொண்டமகிழ்ச்சி அறிவுடையாளர்களிடத்திலில்லையென்பதாம், ☞ மகிழ்ச்சி-எ, இல்-ப மறியின்மகிழ்ச்சியைப் போதேனு நில்லாமையைப்பற்றி மன்னுவென்றார்.

பனி ※ படுசோலைப்பயன்மரமெல்லாங் ※
கனியுதிர்ந்துவீழ்ந்தற்றிளமை-நனிபெரிதும் ※
வேற்கண்ணளென்றிவளைவெஃகன்மின்மற்றிவளுங் ※
கோற்கண்ணளாகுங்குனிந்து ※

(இ-ள்.) இளமை-இளமைப்பருவமானது — பனி-குளிர்ச்சி — படு-பொருந்திய — சோலை-சோலையில் — பயன்-பலனைத்தரும், மரமெல்லாம்-எல்லாமரங்களிலும் — கனி-பழங்கள் — உதிர்ந்து-உதிர்ந்து, வீழ்ந்தற்று-விழுந்தாற்போலுமாதலால் — நனி-மிக — பெரிதும்-பெரிய, வேல்-வேலைநிகர்த்த — கண்ணளென்று-கண்களையுடையவளென்று, இவளை-இப்பெண்ணை — வெஃகன்மின்-இச்சியாதிருங்கள் — மற்றிவளும்-பின்பிப்பெண்ணும் — குனிந்து-கூனியாகி — கோல்-கோலையே — கண்ணளாகும்-கண்ணாகவுடையவளாவாள். (எ-று) ※ தொல்காப்பியம் [வினையின்றொகுதி காலத்தியலும்.] ※ இ-ம். இளமைப்பருவமானது மரங்களிற்பழங்களுதிர்ந்தாற்போலும் ஆதலால், வேலொத்தகண்களையுடையவளென்றிவளையிச்சியாதிருங்கள் இவளுங்கூனியாகிக் கோலையேகண்ணாகக்கொண்டுதிரிவாளென்பதாம். ☞ நீவிர்-தோன்றாஎழுவாய்-வெஃகன்மின், ப-இவளை-செ. (௭)

பருவமெனைத்துளபல்லின்பாலேனை ※
யிருசிகையுமுண்டீரோவென்று-வரிசையா ※
னுண்ணாட்டங்கொள்ளப்படுதலால்யாக்கைக்கோ ※
ளெண்ணாரறிவுடையார் ※

(இ-ள்.) பருவம்-வயது — எனைத்து-எவ்வளவு — உள-உண்டாயிருக்கின்றன — பல்லின்-பற்களினுடைய — பால்-(வலிமைப்)பகுதி, ஏனை-எவ்வாறு — இருசிகையும்-வன்மையானபதார்த்தங்களையும்- மென்மையானபதார்த்தங்களையும் — உண்டீரோவென்று-புசித்தீரோவெனக்கேட்டு — வரிசையால்-முறைமையால் — உள்-உங்களுள்ளம், நாட்டம்- ஆராய்ச்சி — கொள்ளப்படுதலால்-பிறரால்செய்யப்படுதலால், யாக்கை-உடலினது — கோள்-கொள்கையை — அறிவுடையார்- விவேகமுடையார் — எண்ணார்-பொருளாகநினையார். (எ-று) ※ இ-ம். வயதெவ்வளவுபற்களின்பலமெவ்வளவுவலியபதார்த்தங்களையும் மெலியபதார்த்தங்களையுமுண்டீரோவென்றுகிரமமாயுங்களுள்ளம் பிறராலாராய்ச்சிகொள்ளப்படுதலாலுடலின்கொள்கையை விவேகிகள்பொருளாகவெண்ணார்கள், எ-ம். ☞ அறிவுடையார்-எ-எண்ணார், ப-கோள், செ. (௮)

மற்றறிவாநல்வினையாமிளையமென்னாது ※
கைத்துண்டாம்போழ்தேகரவா-தறஞ்செய்ம்மின் ※
முற்றியிருந்தகனியொழியத்தீவளியா ※
னற்காயுதிர்தலுமுண்டு ※

(இ-ள்.) முற்றி-முதிர்ந்து — இருந்த-இருந்த — கனி-பழங்கள் — ஒழிய-நீங்க — தீவளியால்-தீக்காற்றால் — நல்-நல்ல — காய்-காய்கள் — உதிர்தலும்-விழுதலும் — உண்டு-உண்டாகலால் நல்வினை-தருமத்தை — மற்று-இனிமேல — அறிவாம்-அறிந்துசெய்வோம் — யாம்-நாம் — இளையம் - இளமையவுடையோம் — என்னாது - என்றுநினையாது — கைத்து-திரவியம் — உண்டாம்-உண்டாயிருக்கும் — போழ்தே-காலத்திலே — கரவாது-ஒளிக்காமல் — அறம்-தருமத்தை — செய்ம்மின்- செய்யுங்கள் — (எ-று) ✻ இ-ம், தீக்காற்றுப்பழங்களை நீக்காய்களுதிர்தலு முண்டு - ஆகையால், தருமத்தைப் பின்செய்வோமென்று நினையாது பொருளுள்ளபொழுதே செய்யுங்கள் என்பதாம். ☞ நீங்கள்-தோன்றா எழுவாய்- செய்ம்மின்-ப, அறம்-செ. (௯)

ஆட்பார்த் துழலு மருளில்கூற் றுண்மையால் ... ✻
தோட்கோப்புக் காலத்தாற் கொண்டுய்ம்மின்- பீட்பிதுக்கிப் ✻
பிள்ளையைத் தாயலறக் கோடலான் மற்றதன் ... ✻
கள்ளங் கடைப்பிடித்த னன்று ... ✻

(இ-ள்) ஆள்-ஆளை — பார்த்து-பார்த்து — உழலும் திரியும் — அருள்-தயை — இல்-இல்லாத — கூற்று-இயமன் — உண்மையால்-இருக்கின்றதனால் — தோட்கோப்பு-கட்டமுதாகிய — (தருமத்தை) காலத்தால்-இளமைப்பருவத்தில் — கொண்டு-தேடிக்கொண்டு — உய்ம்மின்-பிழையுங்கள் — பீள்-கருப்பத்தை — பிதுக்கி-பிதுங்கச்செய்து — தாய்-தாயானவள் — அலற-அழ — பிள்ளையை-சிசுவை — கோடலால்-கொள்ளுதலால் — மற்றதன்-அவ்வியமனது — கள்ளம்-வஞ்சத்தை — கடைப்பிடித்தல்-உறுதியாவறிந்துகொள்ளுதல் — நன்று-நல்லது — (எ-று) ✻ (அகத்தியம்) [பின்னீறு பலர்பால்வினை யொடுமுடியுமே.] ✻ இ-ம், இயமனிருக்கிறபடியால் தருமத்தை யிளமைப்பருவத்திற்செய்து பிழையுங்கள் தாயழப்பிள்ளையைக் கொண்டுபோதலா லவன் வஞ்சத்தை யுறுதியாவறிந்து கொள்ளுதலுத்தமம்-என்பதாம், ☞ கடைப்பிடித்தல், எ-நன்றுபய. (௰)

இளமைநிலையாமை- முற்றிற்று.

௩-ம்- அதிகாரம்.

யாக்கைநிலையாமை

அஃதாவது- சரீரமானது நிலைநில்லாமையாம்.

மலைமிசைத் தோன்று மதியம்போல் யானைத் ... ✻
தலைமிசைக் கொண்ட குடையார்- நிலமிசைத் ... ✻

துஞ்சினாரென்றெடுத்துத்தூற்றப்பட்டாரல்லா ※
லெஞ்சினாரிவ்வுலகத்தில் ※

(இ-ள்.) மலை - மலையின் — மிசை - மேல் — தோன்றும் - உதிக்கும் — மதியம்போல் - சந்திரனைப்போல — யானை - யானையின் — தலைமிசை - தலைமேல் — கொண்ட - கவிக்கக்கொண்ட — குடையர் - குடையையுடைய மன்னர்களும் — நிலமிசை - பூமிமேல் — துஞ்சினாரென்று - இறந்தாரென்று — எடுத்து - பிறரால் எடுத்து — தூற்றப்பட்டார் - தூற்றிச்சொல்லப்பட்டார்களே — அல்லால் - அல்லாமல் — எஞ்சினார் - உயிரோடிருந்தார் — இவ்வுலகத்து - இந்தவுலகத்தில் — இல் - ஒருவருமில்லை — (எ-று) ※ இ-ம், யானைமேலேறியவரசர்களும் இறந்தார்களென்று சொல்லப்பட்டார்களேயல்லாமல் இவ்வுலகத்துயிரோடுவாழ்ந்தவர்களொருவருமில்லை என்பதாம் ☞ எஞ்சினார்-எ, இல்-ப. (௧)

வாழ்நாட்கலகாய்வயங்கொளிமண்டிலம் ※
வீழ்நாள்படாஅதெழுதலால்-வாழ்நா ※
ளுலவாமுன்னொப்புரவாற்றுமின்யாரு ※
நிலவார்நிலமிசைமேல் ※

(இ-ள்.) வாழ்நாட்கு - வாழும்நாள்களுக்கு — அலகாய் - அளவுமரக்காலாக — வயங்கு - பிரகாசிக்கும் — ஒளி - கிரணங்களையுடைய — மண்டிலம் - சூரியனானவன் — வீழ்நாள் - வீழுங்காலம் — படாஅது - உண்டாகாமல் — எழுதலால் - உதயமாதலால் — வாழ்நாள் - வாழுநாள்கள் — உலவாமுன் - கெடாமுன் — ஒப்புரவு - தருமத்தை — ஆற்றுமின் - செய்யுங்கள் — யாரும் - யாவரும் — நிலமிசைமேல் - நிலத்தின்மேல் — நிலவார் - நிலைக்கமாட்டார். (எ-று.) ※ இ-ம், யாருமுலகத்தில் நிலைநிற்கமாட்டார்கள் உங்களாயுள் கெடுமுன்னமே தருமத்தைச்செய்யுங்கள், எ-ம், ☞ நீங்கள் - தோன்றா எழுவாய் - ஆற்றுமின் - ப - ஒப்புரவு - செ. (௨)

மன்றங்கறங்கமணப்பறையாயின ※
வன்றவற்காங்கேபிணப்பறையாய்ப்-பின்றை ※
யொலித்தலுமுண்டாமென்றுய்த்தும்போமாறே ※
வலிக்குமாமாண்டார்மனம் ※

(இ-ள்.) மன்றம் - சபையில், கறங்க - சத்திக்க — மணப்பறையாயின - மணக்கோலத்திற்கானபறைகள் — அன்று - அன்றைக்கே — அவற்கு - அம்மாப்பிள்ளைக்கு — ஆங்கே - அவ்விடத்தே — பிணப்பறையாய் - பிணக்கோலத்திற்குக்கொட்டும்பறையாய் — பின்றை - பின்பு — ஒலித்தலும் - சத்தித்தலும் — உண்டாமென்று - உண்டாகுமென்றுநினைத்து — உய்ந்துபோம் - பிழைத்துப்போகிற, ஆறு - வழியை — வலிக்கும் - துணிந்த

நிற்கும்—மாண்டார்-பெரியோர்கள்—மனம்-இதயம்(எ-று) ❋ இ-ம் மனத்திற்குக்கொட்டப்படுபறைகளே பிணத்திற்குக்கொட்டும் பறைகளாமென்றுநினைத்துப் பெரியோர்கள்மனம்பிழைக்கும்வழியைத்துணிந்துநிற்கும் என்பதாம், ☞ மனம்-எ, வலிக்கும்-ப, ஆறு-செ. (௩)

சென்றே ❋ யெறிப வொருகால்சிறுவரை ❋
நின்றே யெறிபபறையினை-நன்றேகாண் ❋
முக்காலைக்கொட்டினுண் மூடித்தீக்கொண்டெழுவர் ❋
செத்தாரைச்சாவார்சுமந்து ❋

(இ-ள்.) சென்று-போய்—பறையினை-பிணப்பறையை—ஒருகால் ஒருமுறை—எறிப-அடிப்பார்கள்—சிறுவரை-சற்றுநேரம்—நின்று நிறுத்தி—(அப்பறையினை)எறிப-இரண்டாமுறையடிப்பார்கள்—முக்காலை-மூன்றுமுறை—கொட்டின்-அடித்தமாத்திரத்தில்—உள்-பாடையிடத்து—மூடி-(பிணத்தைச்சீலையால்)மூடி—தீ-நெருப்பை—கொண்டு-சட்டியிற்கொண்டு—செத்தாரை-இறந்தவரை—சாவார்-இனியிறப்பவர்கள்—சுமந்து-தோளிலெடுத்து—எழுவர்-மயானத்திற்கெழுவர்— நன்றேகாண்-நன்றாகப்பார்—(எ-று) ❋ (தொல்காப்பியம்) அர்-ஆர்-ப-என-வரூஉ மூன்றும் [பல்லோர்மருங்கிற்படர்க்கைச் சொல்லே] ❋ இ-ம்-மூன்றுமுறை பறையடித்தமாத்திரத்தில் பிணத்தைப்பாடையில்வைத்துச்சீலையால்மூடித்தீயுடன்சுடலைக்குக்கொண்டுபோவார்கள் என்பதாம். ☞ சாவார்-எ, எழுவர்-ப, செத்தாரை-செ, நீ-தோன்றா எழுவாய், காண்-ப, ஏ-இரண்டும் அசைகள். (௪)

கணங்கொண்டுசுற்றத்தார்கல்லென்றலறப் ❋
பிணங்கொண்டுகாட்டுய்ப்பார்கண்டு-மணங்கொண்டீண் ❋
டுண்டுண்டுண்டென்னுணர்விற்சாற்றுமே ❋
டொண்டொண்டொடென்னும்பறை ❋

(இ-ள்.) கணங்கொண்டு-கூட்டங்கூடிக்கொண்டு—சுற்றத்தார்-இனத்தார்—கல்லென்று-கலீலென்றுஞ்சத்தமுண்டாக—அலற - புலம்ப—பிணம்-சவத்தை— கொண்டு எடுத்துக்கொண்டு— காடு-சுடுகாட்டில்—உய்ப்பார்- செலுத்துபவரை—கண்டும்- பார்த்திருந்தும்—மணங்கொண்டு-விவாகஞ்செய்துகொண்டு—ஈண்டு-இவ்விடத்தில்— உண்டுண்டுண்டென்னும்- (இல்வாழ்க்கை) உண்டுஉண்டுஉண்டு என்று—உணர்வினான் - அறிவீனனுக்கு—டொண்டொண்டொடென்று-டொண்டொண்டொடுவென்னும் (ஓசையுள்ள) —பறை-சாப்பறை—சாற்றும்- (சரீரநில்லாமையை) அறிவிக்கும்—(எ-று) ❋ இ-ம்- இனத்தாரழப் பிணத்தைக் கொண்டுபோவதைக் கண்டிருந்தும் இல்

வாழ்க்கையைவிரும்பினவனுக்குச் சரீரநில்லாமையைச்சாப்பறையறிவிக்கும் என்பதாம், ☞ பறை-எ, அறிவிக்கும்-ப. (௫)

நார்த்தொடுத்தீர்க்கிலென்னன்றாய்ந்தடக்கிலென்.........*
பார்த்துழிப்பெய்யிலென்பல்லோர்பழிக்கிலென்......*
தோற்பையுணின்றுதொழிலறச்செய்தூட்டுங் .. ...*
கூத்தன்புறப்பட்டக்கால் .... *

(இ-ள்.) தோற்பை-உடலாகியபை—உள்-உள்ளே—நின்று- இருந்து, தொழில்-எத்தொழில்களையும்— அற-முற்றாக—செய்து- பண்ணி—ஊட்டும்-உண்பிக்கும்—கூத்தன்-ஆத்துமாவானது—புறப்பட்டக்கால்-வெளிப்பட்டால்—நார்-நாரினால்—தொடுத்து-(அவ்வுடலைக்)கட்டி—ஈர்க்கிலென்-இழுத்தாலென்ன—நன்று-நன்றாக—ஆய்ந்து- சுத்தஞ்செய்து, அடக்கிலென்-புதைத்தாலென்ன—பார்- பூமியின்—துழி-வெட்டிப்பள்ளத்தில்—பெய்யிலென்- போட்டாலென்ன—பல்லோர்-பலரும்—பழிக்கிலென்- பழித்தாலென்ன—(எ-று) பார்த்துழி யென்றதை- கண்டவிடமென்பாருமுளர், ※ இ-ம்-உயிர்போனபின்பு உடலை எவ்விதஞ்செய்யினும்பயனென்ன என்பதாம், ☞ பிறர்-தோன்றாவாய், இழுத்தல் முதலிய-ப, உடல-ஒ,செ, (தொல்காப்பியம்-வினையியல்-௩௨-(௫)) [பின்முன்கால்கடைவழியிடத்தென் னு-மன்னமரபிற்காலங்கண்ணிய-வென்னகிளவியுமவற்றியல்பினவே] இவ்விதியால்-புறப்பட்டக்கால்-வினையெச்சம். (௬)

படுமழைமொக்குளிற்பல்காலுந்தோன்றிக்.............*
கெடுமிதோர்யாக்கையென்றெண்ணித்-தடுமாற்றந் ..*
தீர்ப்பேம்யாமென்றுணருந்திண்ணறிவாளரை.........*
நேர்ப்பார்யார்நீணிலத்தின்மேல் ....*

(இ-ள்.) படு-பெய்கிற—மழை-மழையினது—மொக்குளின்-குமிழியைப்போல—பல்காலும்-பலகாலமும்—தோன்றி-உண்டாகி—கெடும்-அழியும்—இது-இஃது—ஓர்-ஒரு—யாக்கையென்று-உடலென்று—எண்ணி-நினைத்து—தடுமாற்றம்-பிறவித்துன்பத்தை—தீர்ப்பேம்-நீக்குவோம்—யாமென்று-நாமென்று—உணரும்- அறியும்—திண்-வலிய—அறிவாளரை-விவேகிகளை—நீள்- நீண்ட—நிலத்தின்மேல்-பூமியினிடத்து—நேர்ப்பார்-நேரானவர்—யார்-எவர்—(எ-று) ※ இ-ம்-குமிழியைப்போற்றோன்றி யழியுமுடலென்றெண்ணிப் பிறவித்துன்பத்தைநீக்கும் விவேகிகளையொப்பானவர்யார் என்பதாம், ☞ நேர்ப்பார்-எ, யார்-ப. (௭)

யாக்கையையாப்புடைத்தாப்பெற்றவர்தாம்பெற்ற ... *
யாக்கையாலாயபயன்கொள்க-யாக்கை .... *

மலையாடுமஞ்சுபோற்றோன்றிமற்றாங்கே ....*
நிலையாதுநீத்துவிடும் ....*

(இ-ள்.) யாக்கையை - உடலை — யாப்புடைத்தா - பலமுடைத்தாக — பெற்றவர் அடைந்தவர்கள் — தாம் - தாங்கள் — பெற்ற - அடைந்த — யாக்கையால் - அவ்வுடலால் — ஆய - ஆகிய — பயன் - தருமப்பிரயோசனத்தை — கொள்க - கொள்ளக்கடவர்கள் — யாக்கை - உடலானது — மலை - மலையில் — ஆடும் - சஞ்சரிக்கும் — மஞ்சுபோல் - மேகம்போல — தோன்றி - தோற்றமாகி — நிலையாது - நில்லாமல் — நீத்துவிடும் - கெட்டுவிடும் (எ-று) ※ இ-ம் - உடலைப்பெற்றவர்கள் தங்களுடலாகிய தருமப்பயனைக் கொள்ளக்கடவர்கள் உடலோமலைமேற்றோன்றும்மேகம்போற்றோன்றி யழியுமென்பதாம், ☞ பெற்றவர் - எ, கொள்க - ப, பயன் - செ. (௭)

புன்னுனிமேனீர்போனிலையாமையென்றெண்ணி ...*
யின்னினியேசெய்கவறவினை - யின்னினியே ....*
நின்றானிருந்தான்கிடந்தான் * றன்கேளலறச் ....*
சென்றானெனப்படுதலான் ....*

(இ-ள்,) இன்னினியே - இப்பொழுதே — நின்றான் - நின்றிருந்தான் — இருந்தான் - வீற்றிருந்தான் — கிடந்தான் - படுத்திருந்தான் — தன் - தன்னுடைய — கேள் - இனத்தார் — அலற - புலம்ப — சென்றான் - இறந்தான் — எனப்படுதலால் - என்று சொல்லப்படுதலால் — புல் - புல்லின் — நுனிமேல் - நுனியிடத்து — நீர்போல் - பனிநீரைப்போல — நிலையாமை யென்று - சரீர நிலையாதென்று — எண்ணி - நினைத்து — இன்னினியே - இப்பொழுதே — அறவினை - தருமத்தை — செய்க - செய்யக்கடவீர் — (எ-று) ※ (தொல்காப்பியம்) [தாமெனன்கிளவி பொருமைக்குரித்தே] ※ இ-ம் - இப்பொழுதிருந்தானிறந்தானென்று சொல்லப்படுதலால் சரீரநில்லாதென்றெண்ணி யிப்பொழுதே தருமஞ்செய்யக்கடவீர்கள் - என்பதாம், ☞ நீங்கள் - தோன்றாவெழுவாய் - செய்யக்கடவீர் - ப, அறவினை செ. (௯)

கேளாதேவந்துகிளைகளாயிற்றோன்றி ....*
வாளாதேபோவரான்மாந்தர்கள் - வாளாதே ....*
சேக்கைமரனொழியச்சேணீங்குபுட்போல ....*
யாக்கைதமர்க்கொழியநீத்து ....*

(இ-ள்.) மாந்தர்கள் - மனிதர்கள் — கேளாது - கேளாமல் — வந்து - வந்து — கிளைகளாய் - உறவினர்களாய் — இல் - மனைவாழ்க்கையில் — தோன்றி - பிறந்து — வாளாது - சொல்லாது — மரன் - மரத்தில் — சேக்கை - கூட்டை, ஒழிய - விட்டு, சேண் - தூரத்தில் — நீங்கு - நீங்கும் — புட்போல - பறவையைப்போல, யாக்கை - உடலை, தமர்க்கு - உறவினர்களுக்கு, ஒழிய நீத்

து-ஒழித்துவிட்டு—வருவாறு-சொல்லாது—போவர்-இறந்துபோவர்கள்—(எ-று) ※ இ-ம்-மனிதர்கள்-மனைவாழ்க்கையிற்பிறந்து-தங்களுடைய- உறவின்முறையார்களுக்குச்சொல்லாமலொழித்துவிட்டிறந்துபோவார்கள்,என்பதாம், ☞ மாந்தர்கள்-எ,போவர்கள்-ப,ஏகார மூன்றும்ஆலென்னும் அசைகள். (ய)

யாக்கைநிலையாமை- முற்றிற்று.

௩-ம் அதிகாரம்.

அறன் வலியுறுத்தல்.

(அஃதாவது-தருமத்தின்பலனையறிவித்தலாம்.)

அகத்தாரேவாழ்வாரென்றண்ணாந்துநோக்கிப் ※
புகத்தாம்பெறாஅர்புறங்கடைபற்றி ※
மிகத் ※ தாம்வருந்தியிருப்பரேமேலைத் ※
தவத்தாற்றவஞ்செய்யாதார் ※

(இ-ள்.) மேலை-முற்பிறப்பில்—தவத்தால்-தவங்காரணமாக—தவம்-நற்றவம்—செய்யாதார்-செய்யாதவர்கள்—அகத்தாரே- இல்வாழ்க்கையாரே—வாழ்வாரென்று-வாழ்பவர்களென்று—அண்ணாந்து-தலைநிமிர்ந்து—நோக்கி-பார்த்து—புகத்தாம் - தாமுள்ளேநுழைய—பெறாஅர்-பெறாதவர்களாய்—புறங்கடை-தலைவாயிலை—பற்றி- பிடித்துநின்று—மிக-மிகவும்—தாம்-தாங்கள்—வருந்தி-வருத்தப்பட்டு—இருப்பர்-இருப்பார்கள். (எ-று) ※ இ-ம்-முற்பிறப்பிற்றவஞ்செய்யாதார்இப்பிறப்பில்இல்வாழ்க்கையாரேவாழ்பவர்களென்று தலைவாயிலைப்பற்றிஉள்ளேநுழையாதவர்களாய்வருத்தப்பட்டிருப்பார்களென்பதாம், ☞ தவஞ்செய்யாதார்-எ,இருப்பர்-ப, அண்ணார்த்தலென்னுந்தொழிற்பெயர்வினையாங்கால-அண்ணுகிறதென்றும்-அண்ணார்ந்து- இதிலொற்றுக்கெட்டது ※ (தொல்காப்பியம்-பெயரியல்-௬௰-சூ) "தாமென்கிளவிபன்மைக்குரித்தே," (௧)

ஆவாநாமாக்கநசைஇயறமறந்து ※
போவாநாமென்னாப்புலைநெஞ்சே-யோவாது ※
நின்றுஞற்றிவாழ்தியெனினுநின்வாழ்நாள்கள் ※
சென்றனசெய்வதுரை ※

(இ-ள்.) ஆவாம்-வாழ்க்கடவோம், நாம்-யாமென்று—ஆக்கம்-செல்வத்தை—நசைஇ-இச்சித்து—அறம்- தருமத்தை—மறந்து-மறந்து

விட்டு—போவாம்- இறந்துபோவோம், நாமென்று- நாமென்றெண்ணுக—புலை-இழிவான—நெஞ்சே-மனமே—ஓவாது- இடைவிடாது—நின்று-நிலைபெற்று—உஞற்றி-முயற்சிசெய்து—வாழ்தியெனினும்- வாழ்வாயானாலும்—நின்-உன்னுடைய—வாழ்நாள்கள்-ஆயுள்கள்—சென்றன- போயின—செய்வது - இனிநீசெய்வதென்ன—உரை-சொல்—(எ-று.) ※ இ-ம். மனமே பலமுயற்சிசெய்து வாழ்வாயானாலும் உன்னுடைய ஆயுள்கள்போயின, இனிநீசெய்வதென்னசொல் என்பதாம். ☞ நீ-எ, செய்வதுரை-ப. (௨)

வினைப்பயன்வந்தக்கால்வெய்யவுயிரா.................... ※
மனத்தினழியுமாம்பேதை-நினைத்ததனைத்................ ※
தொல்லையதென்றுணர்வாரேதடுமாற்றத்................ ※
தெல்லையிகந்தொருவுவார்.............................. ※

(இ-ள்.) பேதை-அறிவில்லாதவன்—வினைப்பயன்-தீவினைப்பலன், வந்தக்கால்-வந்தால்—வெய்ய-கொடிதாக—உயிரா-பெருமூச்செறிந்து—மனத்தின்-மனத்தினால் நினைத்து—அழியும்-அழிவான்—அதனை அத்தீவினைப்பலனை—நினைத்து-ஆராய்ந்து—தொல்லையதென்று- முற்பிறப்பிற்செய்ததென்று—உணர்வாரே-அறிபவர்களே—தடுமாற்றத்து- பிறவித்துன்பத்தின்—எல்லை - பிரமாணத்தை—இகந்தொருவுவார்- கடந்துபோவார்—(எ-று) ※ இ-ம். அறிவில்லாதவன் தீவினைவந்தால் மனத்தினினைத்தழிவான் அத்தீவினை முன்வினையென்றறிந்தவர்களே பிறவித்துன்பத்தளவைக்கடப்பார்கள் என்பதாம் ☞ பேதை எ- அழியும்-ப-உணர்வார்-எ-ஒருவுவார்-ப-※ (யாப்பருங்கலமேற்கோள்) [தொன்னூல்விளக்கத்திலுங்காண்க.] ※ வெண்பாமுதலாநால்வகைப்பாவு, மெஞ்சாநாற்பால் வருணர்க்குரிய - இவ்விதியால் வெண்பா பிராமணசாதியாம். (௩)

அரும்பெறல்யாக்கையைப்பெற்றபயத்தாற்............ ※
பெரும்பயனுமாற்றவேகொள்க-கரும்பூர்ந்த .... ※
சாறுபோற்சாலவும்பின்னுதவிமற்றதன்.............. ※
கோதுபோற்போகுமுடம்பு .... ※

(இ-ள்.) பெறல்-பெறுதற்கு—அரும்-அரிய—யாக்கையை-உடலை, பெற்ற-அடைந்த—பயத்தால்-பலனால், பெரும்-பெரிய—பயனும்-தருமப்பலனையும்—ஆற்றவே-மிகவே—கொள்க-கொள்ளக்கடவீர்கள்—கரும்பு - கரும்பிலிருந்து—ஊர்ந்த-(ஆலையாற்) பரவிய—சாறுபோல்- சாற்றைப்போல—சாலவும்- மிகவும்—பின்னுதவி- (அத்தருமப்பலன்) பிற்காலத்துதவியாம்—அதன் - அக்கரும்பின்—கோதுபோல்- சக்கைபோல—உடம்பு-உடல்—போகும்-அழிந்துபோகும்

—(எ-று) ❋ இ-ம். பெறுதற்கரிய உடலடைந்தபலனுல் தருமப்பலனைக்கொள்ளக் கடவீர்கள். அப்பலன் கருப்பஞ்சாற்றைப் போலாம், உடலதன்சக்கைபோலாம், என்பதாம். ☞ நீங்கள்-தோன்று எழுவாய்-கொள்க-ப-பயன், செ-மற்று-அசை எவ்வகைப்பிறப்பினுமக்கட் பிறப்புமேலானமையால், அரும்பெறல்யாக்கையென்றார். (௪)

கரும்பாட்டிக்கட்டிசிறுகாலைக்கொண்டார்··· ·········❋
துரும்பெழுந்துவேங்காற்றுயராண்டுழவார்··· ······❋
வருந்தியுடம்பின்பயன்கொண்டார்கூற்றம்········· ···❋
வருங்காற்பரிவதிலர்···························❋

(இ-ள்.) கரும்பு கரும்பை—ஆட்டி-ஆலையிலாட்டி—கட்டி- வெல்லக்கட்டியை—சிறுகாலை-முற்காலத்தில்—கொண்டார்-கொண்டவர்கள்—துரும்பு- அக்கரும்பின் துரும்பு—எழுந்து- தீயாலெழுந்து—வேங்கால்- வேவுங்காலத்தில்—ஆண்டு-அவ்விடத்து—துயர்- துன்பத்தால்—உழவார்-வருந்தாரதுபோல—உடம்பின்- உடம்பாலாகிய—பயன்- தருமப்பலனை—வருந்தி-பிரயாசப்பட்டு—கொண்டார்- கைக்கொண்டவர்கள்—கூற்றம்-இயமன்—வருங்கால்-வரும்போது—பரிவது-வருந்துவது—இலர்-இல்லாதவர்களாவார்கள்—(எ-று) ❋ இ-ம் வெல்லக்கட்டியைக்கொண்டவர்கள் கரும்பின்சக்கைவேங்காலத்துவிசனப்படார்கள்அதுபோல உடம்பாலாகியதருமப்பலனைக்கொண்டவர்கள் இயமன் வரும்போதுவிசனப்படார்கள், என்பதாம். ☞ பயன்கொண்டார்-எ-பரிவதிலர்-ப. (௫)

இன்று❋கொலன்றுகொலென்றுகொலென்னாது ······❋
பின்றையேநின்றதுகூற்றமென்றெண்ணி········ ···❋
யொருவுமின்றீயவைவொல்லும்வகையான்········ ···❋
மருவுமின்மாண்டாரறம்·······························❋

(இ-ள்.) இன்றுகொல்-இன்றைக்கோ—அன்றுகொல்- நாளைக்கோ—என்றுகொல்-என்றைக்கோ—என்னாது- வருமென்றெண்ணாது—பின்றையே- பின்னையே—நின்றது-நிற்கின்றது—கூற்றமென்று-இயமனென்று—எண்ணி-நினைத்து—தீயவை-பாவங்களை—ஒருவுமின்-நீக்குங்கள்—மாண்டார்-பெரியோராற்சொல்லிய—அறம்- தருமங்களை—ஒல்லும்வகையால்-கூடியமாத்திரம்—மருவுமின்-பொருந்தும்படிசெய்யுங்கள்—(எ-று) ❋ இ-ம். இயமன்பின்னே நிற்கிறானென்றெண்ணி அதருமத்தைநீக்கித் தருமத்தைச்செய்யுங்கள்- என்பதாம். ☞ நீங்கள்-தோன்று எழுவாய்-ஒருவுமின்-ப-தீயவை-செ-நீங்கள்-எ-மருவுமின்-ப-அறம்-செ- ❋ (தொல்காப்பியம்) [கொல்லோவையம்.] அன்று கொலென்றது வாழ்நாளளவுமுடிவெனினுமமையும். (௬)

மக்களாலாயபெரும்பயனுமாயுங்கா.......... ...*
லெத்துணையுமாற்றப்பலவானுற்-றொக்க..........*
வுடம்பிற்கேயொப்புரவுசெய்தொழுகாதும்பர்க் *
கிடந்துண்ணப்பண்ணப்படும்...... ....*

(இ-ள்.)மக்களால்-மனிதர்களால்—ஆய-உண்டாகிய—பெரும்-பெரிய—பயனும்- விளைவும்—ஆயுங்கால்-ஆராயுமிடத்து— எத்துணையும்-எவ்வளவும்—ஆற்ற-மிக—பலவானுல்-பலவாயிருந்தால்—தொக்க-பொருந்திய—உடம்பிற்கே- உடலுக்கே—ஒப்புரவு- தருமத்தை—செய்து-பண்ணி—ஒழுகாது-நடவாமல்—உம்பர்-சுவர்க்கத்தில்—கிடந்து-இருந்து—உண்ண-அநுபவிக்க—பண்ண-தருமங்கள் செய்ய—படும்-தகும்—(எ-று) ※ இ-ம், நீங்களுங் கடலுக்குத் தருமத்தை செய்யாது சுவர்க்கத்திலிருந்தநுபவிக்கத்தருமத்தைச்செய்யுங்கள், என்பதாம், ☞ நீங்கள்-தோன்றுஎழுவாய்பண்ணப்படும்-ப, அறங்களை, செ.

※ உறக்குந்துணையதோராலம்வித்தீண்டி.........*
யிறப்பநிழற்பயந்தாஅங்-கறப்பயனுந்... ... ...*
தான்சிறிதாயினுந்தக்கார்கைப்பட்டக்கால்......... *
வான்சிறிதாப்போர்த்துவிடும்........................ ...*

(இ-ள்.)உறக்கும்- கிள்ளியெடுக்கும்—துணையது-அளவினையுடையது—ஓர்-ஒரு—ஆலம்வித்து-ஆலம்விதையானது—ஈண்டி- நெருங்கி (வளர்ந்து)—இறப்ப-மிகவும்—நிழல்-நிழலை—பயந்தா அங்கு-கொடுத்தாற்போல, அறம்- தருமத்தின்—பயனும்-பலனும்—தான்-தான், சிறிதாயினும்-சிறியதாயிருந்தாலும்—தக்கார்-பெரியோர்கள்—கைப்பட்டக்கால்-கையிற்பட்டால்—வான்- ஆகாயம்—சிறிதா-சிறியதாக—போர்த்துவிடும்-மூடிவிடும்—(எ-று) ※ இ-ம், ஒரு ஆலம்விதை வளர்ந்து மிகவும் நிழலைக்கொடுத்தாற்போலத் தருமப்பலன் சிறிதானாலும்பெரியோர்கையிற்கொடுக்கப்பட்டால் அப்பலன்வானிலும்பெரிதாயிருக்கும்என்பதாம் ☞ அறப்பயன்-எ-போர்த்துவிடும்-ப-உறக்கும் என்றது-உறங்குமெனக்கூறினும்பொருந்தும், ※ (அரும்பதக்கொத்து) [உறக்கல்கறத்தல்விரலாற்கிள்ளுதல்.]. (௮)

வைகலும்வைகல்வரக்கண்டுமஃதுணரார்...........*
வைகலும்வைகலைவைகுமென்-றின்புறுவர்..........*
வைகலும்வைகற்றம்வாழ்நாண்மேல்வைகுதல் ... *
வைகலைவைத்துணராதார்.. ....*

(இ-ள்.) வைகலும்-நாடோறும்—வைகல்-நாள்கழிதலை—தம்-தம்முடைய— வாழ்நாண்மேல்-ஆயுள்களின்மேல்— வைகுதல்வைத்து-செலவுநாளாகவைத்து—வைகலை-அந்தநாட்களை—உணராதார்- அறி

யாதார் — வைகலும்-நாள்தோறும் — வைகல்வர- தம்வாழ்நாள்கழிவுவர — கண்டும்-பார்த்தும் — அஃது-அதனை — உணரார்- அறியார் — வைகலும்- நாள்தோறும் — வைகல்- நாள்களை — வைகுமென்று- கழியுமென்று — இன்புறுவர்-இன்பத்தையடைவர் — (எ-று) ❁ இ-ம், நாள்தோறும்நாள்செல்லுதலைத்தம்வாழ்நாண்மேற்செல்லுதலாகவைத் தந்நாட்களையறியார் நாள்தோறுந்தம்வாழ்நாள்செலவுவரக்கண்டுமதையறியாமல் நாள்தோறும் நாள்செல்லுதலுக்கின்பத்தையடைவர் என்பதாம், ☞ உணராதார்-எ-இன்புறுவர்-ப* (யாப்பருங்கலமேற்கோள்) [அணியியலிலுங்காண்க] (இஃதகவல்வெண்பா) அகவல்வெண்பா வடிநிலைபெற்றுச், சீர்நிலைபெறாஉந் தொடைநிலைதெரியாது, நடைவயினேனொடு நெய்வார்ந்தன்ன, நயமுடைத்தாகியபொருளொடுபுணர்ந்த,வெழுத்தழியாதென்றது யாப்பருங்கலமேற்கோளறிக. (௯)

மானவருங்கலநீக்கியிரவென்னு .... *
மீனவிளிவினால்வாழ்வேன்மன்-னீனத்தா .... *
லூட்டியகண்ணுமுறுதிசேர்ந்திவ்வுடம்பு...... *
நீட்டித்துநிற்குமெனின் .... *

(இ-ள்.) ஈனத்தால்-இழிவால் — ஊட்டியகண்ணும்-இரந்தூட்டியவிடத்தும் — உறுதி-வலுமை — சேர்ந்து- பொருந்தி — இவ்வுடம்பு-இவ்வுடல் — நீட்டித்து-நெடுநாள் — நிற்குமெனின்- நிற்குமானால் — மானம்-அபிமானமாகிய — அரும்-அரிய — கலம்-ஆபரணத்தை — நீக்கி-தள்ளி — இரவென்னும்- யாசகமென்னும் — ஈனம்-கனவீனமான — இளிவினால்-அவமதிப்பால் — வாழ்வேன்-உயிர்வாழ்வேன் — (எ-று) ❁ இ-ம், இரந்தூட்டியவிடத்திவ்வுடம்புநிலைநிற்குமானாலபிமானமென்கிறவாபரணத்தைத்தள்ளிக் கனவீனமாகிய வவமதிப்பினு லுயிர்வாழ்வேன் என்பதாம், ☞ யான்-எ-வாழ்வேன்-ப-மன்-ஒழியிசை. (௰)

அறன்வலியுறுத்தல்-முற்றிற்று.

௫-ம் - அதிகாரம்.

தூயதன்மை.

அஃதாவது,சுத்தமல்லாத தன்மையைச் சொல்லுதலாம்.

மாக்கேழ்மடநல்லாயென்றரற்றுஞ்சான்றவர் ... *
நோக்கார்கொல்நொய்யதோர்புக்கிலை-யாக்கைக்கோ
ரீச்சிறகன்னதோர்தோலறினும்வேண்டுமே... *
காக்கைகடிவதோர்கோல் .... *

(இ-ள்.) யாக்கைக்கு-உடலிற்கு—ஓர்-ஒரு—ஈ-ஈயினது—சிறகு-சிறகை—அன்னது-ஒப்பாகியது—ஓர்-ஒரு, தோல்-தோலானது—அறினும்- அறுந்தாலும்—காக்கை- காகத்தை—கடிவது-துரத்துதற்கு, ஓர்-ஒரு, கோல்-தடி—வேண்டுமே- வேண்டுமல்லவா (ஆதலால்)—மா-மாமரத்தின், கேழ்-தளிர்நிறத்தையும்—மடம்-இளமையையுமுடைய—நல்லாயென்று-பெண்ணேயென்று—அரற்றும்- (அறிவீனர்)பிதற்றும்—நொய்யது- அற்பமாகியதாய்விளங்கும்—ஓர் ஒரு, புக்கில்லை உடலை—சான்றவர்-பெரியோர்கள்—நோக்கார்-பார்க்கமாட்டார்கள்—(எ-று) ❋ இ-ம். அறிவுடையோர்கள் இழிவாகிய உடலைப்பாரார்களென்பதாம், ☞ சான்றவர்-எ, நோக்கார்-ப, புக்கில்லை-செ, கொல்-அசை, நோக்கார்கொல்-என்றது-இழிவென்று காணாரோவெனினு மமையும், ❋ நன்னூல்-அரும்பதக்கொத்து, [கொல்லேயைய மசைநிலைக் கூற்றே. (ச)

தோற்போர்வைமேலுந் துளைபலவாய்ப் பொய்ம்மறைக்கு
மீப்போர்வைமாட்சித்துடம்பானால்-மீப்போர்வை ...❋
பொய்ம்மறையாக்காமம்புகலாதுமற்றதனைப் ....❋
பைம்மறியாப்பார்க்கப்படும்.......... ....❋

(இ-ள்.) தோல்-தோலாகிய—போர்வை- போர்வையானது—மேலும்-(உடன்)மேலும்—துளை-நவதுவாரங்கள்—பலவாய்-பலவிடமாய்—பொய்-மலங்களை—மறைக்கும்-மறைத்துவைத்திருக்கும்— மீப்போர்வை-மேற்போர்வையால்—மாட்சித்து-பெருமையுடையது—உடம்பானால்-உடலானதால்—மீப்போர்வை- மேலேபோர்த்தபோர்வையால்—பொய்-மலங்களை—மறையா-மறைக்கும்—காமம்-காமநுகர்ச்சியை—புகலாது-இச்சியாது—அதனை-அவ்வுடலை — பைம்மறியா-உட்புறந்திருப்பியபையைப்போல—பார்க்கப்படும்- நோக்கத்தகும்—(எ-று) பைம்மறியாப்பார்க்கப்படும்பாம்பின்கடைவாய்ப்பையுள் மறிபட்டவிடம்போலப் பார்க்கப்படுமென்பாருமுளர், ❋ இ-ம். மலங்களை மறைத்துத் தோலால் மூடிவைத்திருக்குமுடலை யுட்புறந்திருப்பிய பையைப்போலப்பார்க்கவேண்டும்- என்பதாம். ☞ நீ-தோன்றாவெழுவாய், பார்க்கப்படும்-ப, உடம்பினை செ, மற்று-அசை (௫)

❋ தக்கோலந்தின்றுதலைநிறையப்பூச்சூடி... ... .❋
பொய்க்கோலஞ்செய்யவொழியுமே-யெக்காலு ......❋
முண்டிவினையுளுறைக்குமெனப்பெரியோர்.........❋
கண்டுகைவிட்டமயல்..........❋

(இ-ள்.) எக்காலும்-எந்நாளும்—உண்டி-உணவால்வரும்—வினையுள்-தொழிலால், உறைக்குமென-துர்க்கந்தம்வீசுமென்று, பெரியோர்-

பெரியோர்கள்—கண்டு-அறிந்து—கைவிட்ட-கைவிட்டுவிட்ட—மயி
ல்-(உடலான) சேத்தைக்கு, தக்கோலந்தின்று தாம்பூலந்தின்று—தலை
நிறைய-சிரசுநிறைய—பூச்சூடி-பூவைத்தரித்து — பொய்க்கோலம்
பொய்யாகியவழகை—செய்ய- செய்தால்—ஒழியுமே-உள்ளுள்ளம
லநீங்குமோ (எ-று) ❁ இ-ம். பெரியோர்களுணவுத்தொழிலால் நாறு
மென்றுவெறுத்தவுடலுக்குத்தாம்பூலந்தின்றுபூவைச்சூடினால் உள்ளி
ருக்குமலங்கள்போய்விடுமோ-என்பதாம், ☞ மலம்-தோன்றா எழு
வாய், ஒழியுமே-ப, * (தொன்னூல்விளக்கம்) ஏலமிளகு வெற்றிலை
மூன்றுந் தக்கோலமென்றேசாற்றப்படுமே. (௩)

தெண்ணீர்க்குவளைபொருகயல்வேலென்று...... *
கண்ணில்புன்மாக்கள்கவற்ற-விடுவனோ .... *
வுண்ணீர்களைந்தக்கானுங்குசூன்றிட்டன்ன ......*
கண்ணீர்மைகண்டொழுகுவேன் ....*

(இ-ள்.) உள்-உள்ளிருக்கும்—நீர்-சலத்தை—களைந்தக்கால்-எடுத்தா
ல், நுங்கு- நுங்கை— சூன்றிட்டன்ன-தோன்றினாற்போலும்—கண்-க
ண்களுடைய—நீர்மை-குணத்தை—கண்டு-பார்த்து, ஒழுகுவேன் ந
டப்பேன்—தெள்-தெளிந்த—நீர்-சலத்திலுள்ள—குவளை- நீலோற்
பலத்தையும்—கயல்-கெண்டைமீனையும்—வேல்- வேலாயுதத்தையும்
—பொருவென்று-ஒப்பென்று—கண்ணில்- ஞானக்கண்ணில்லாத—
புல்-அற்பமான—மாக்கள்-மனிதர்கள்—கவற்ற-வன்மனதைக்கவலைப்
படுத்த—விடுவனோ-யான் துறவறத்தைவிடுவனோ, (எ-று) ❁ இ-ம். நு
ங்குக்கண்களைப்போலப்பெண்கள் கண்களைக்கண்டு நடப்பேன்- அறி
வீனர்என்மனதைக்கவலைப்படுத்தயான் துறவறத்தைவிடுவனோ-என்ப
தாம், ☞ யான்-எ, விடுவனோ-ப, [தொகுபெயர்வேற்றுமைத்தொட
ர்பெயரன்ன-வியற்றிரியழிவாக்கமியைந்தாந்தொகையே] இவ்விதி
யால்-நீர்களைந்தக்கால்என்றதில்ஐயுருபுத்தொகையில் இயல்பாயிற்று.

முல்லைமுகைமுறுவன்முத்தென்றிவைபிதற்றுங் *
கல்லாப்புன்மாக்கள்கவற்ற-விடுவனோ ....*
வெல்லாருங்காணப்புறங்காட்டுதிர்ந்துக்க ......*
பல்லென்புகண்டொழுகுவேன் ....*

(இ-ள்.) எல்லாரும்-யாவரும்—காண-அறிய—புறங்காட்டு-சுடுகாட்
டில்—உதிர்ந்து-உதிர்ந்து—உக்க-மக்கிக்கிடக்கிற—பல்லென்பு- பல்
லாகியஎலும்பை, கண்டு-பார்த்து, ஒழுகுவேன்-நடப்பேன், முறுவல்-
அப்பற்களை, முல்லைமுகையென்று-முல்லையரும்பென்றும், முத்தெ
ன்று முத்தென்றும், இவை-இவைகளை—பிதற்றும்-(ஒப்பாகச்)சொல்
லும்—கல்லா கல்வியறியாத—புல் அற்பமான—மாக்கள்-மனிதர்கள்,

கவற்ற-(என்மனதைக்) கவலைப்படுத்த—விடுவனோ யான் துறவறத்தை விடுவனோ—(எ-று) ❁ இ-ம், சுடுகாட்டிலுதிர்ந்துகிடக்கிறபல்லெலும்பைக்கண்டு நடப்பேன்-அறிவீனர்பெண்கள்வழியிலென்மனதைக்கவலைப்படுத்த யான் துறவறத்தைவிடுவனோ- என்பதாம், ☞ யான்-எ, விடுவனோ,ப, [மற்றென்கிளவி வினைமாற்றசைநிலை-யப்பாலிரண்டென மொழிமனார்புலவர்] (௫)

குடருங்கொழுவுங்குருதியுமென்புந் ... ... ❋
தொடருநரம்பொடுதோலு-மிடையிடையே ... ❋
வைத்தகடியும்வழும்புமாமற்றிவற்று ... ... ❋
ளெத்திறத்தாளீர்ங்கோதையாள் ... ... ❋

(இ-ள்.) குடரும்-குடலும்—கொழுவும்-மூளையும்—குருதியும்-உதிரமும்—என்பும்-எலும்பும்—தொடரும்-தொடர்ந்த—நரம்பொடு-நரம்புடன்—தோலும்-தோலும்—இடை-இடையே, நடு-நடுவாக—வைத்த-வைக்கப்பட்ட, தடியும்-இறைச்சியும்—வழும்பும்-நிணமும்—ஆம்-ஆகிய—இவற்றுள்-இவைகளுள்—ஈர்ங்கோதையாள்-குளிர்ந்தமாலையையுடையவள்—எத்திறத்தாள்-எந்தத்திறத்தையுடையவள்—(எ-று) ❁ இ-ம்-குடல்மூளையுதிரமெலும்புநரம்புதோல்இறைச்சி-நிணம்இவற்றுள்-மாலையணிந்தவள்எத்தன்மையுடையவள்- என்பதாம், ☞ கோதையாள்-எ, எத்திறத்தாள்-ப, மற்று-அசை. (௬)

ஊறியுவர்த்தக்கவொன்பதுவாய்ப்புலனுங் ... ... ❋
கோதிக்குழம்பலைக்குங்கும்பத்தைப்-பேதை ... ❋
பெருந்தோளிபெய்வளாயென்னுமீப்போர்த்த ❋
கருந்தோலாற்கண்விளக்கப்பட்டு ... ... ❋

(இ-ள்.) பேதை-அறிவில்லாதவன்—ஊறி-மலங்களூறி—உவர்த்தக்க-வெறுக்கத்தக்க—ஒன்பதுவாய்ப்புலனும்-நவதுவாரவிடங்களிலும்—கோதி-கொழித்து—குழம்பு-மலக்குழம்பை—அலைக்கும், ஒதுக்கும், கும்பத்தை-உடலானகுடத்தை, மீப்போர்த்த-மேலேமூடிய—கரும்-பெருமைபொருந்திய—தோலால்-தோலால்—கண்-கண்களுக்கு—விளக்கப்பட்டு-விளக்கம்பொருந்தி—பெரும்-பெரிய, தோளி-தோள்களையுடையவளே, பெய்வளாய்- இடப்பட்டவளையல்களையுடையவளே, என்னும்-என்றுசொல்லுவான்—(எ-று) ❁ இ-ம்-அறிவீனன் நவதுவாரங்களிலுமலத்தையொதுக்கும்-உடலையுடையவளைப்புகழ்ந்து சொல்லுவான்-என்பதாம், ☞ பேதை-எ, என்னும்-ப, கும்பத்தை செ. * (தொல்காப்பியம்-இடைச்சொல்லியல்-௰௪ ௫)[பல்லோர்படர்க்கைமுன்னிலைதன்மை-யவ்வயின்மூன்றுநிகழுங்காலத்துச்செய்யுமென்னுங்கிளவியொடுகொள்ளா]இவ்விதியால்என்னும்என்னுவானென்றாயிற்று.

பண்டமறியார்படுசாந்துங்கோதையுங் ... ... ✻
கொண்டுபாராட்டுவார்கண்டிலர்கொல்-மண்டி ... ✻
பெடைச்சேவல்வன்கழுகுபேர்த்திட்டுக்குத்து ... ✻
முடைச்சாகாடச்சிற்றுழி ... ... ✻

(இ-ள்.)முடை-நாறுகின்ற—சாகாடு-உடலானபண்டி—அச்சு-(உயிரான)வச்சு—இற்றுழி-முறிந்தவிடத்து—மண்டி-நெருங்கி—பெடை-பெட்டையும்—சேவல்-சேவலுமான—வன்கழுகு-வலியகழுகுகள்—பேர்த்திட்டு-அடிகள்பேர்த்திட்டு—குத்தும்-குத்தாநிற்கும் (ஆகையால்)பண்டம்-(உடலாகிய)பொருளினதுதன்மையை, அறியார்-அறியாதவர்களாய்—படு-பொருந்திய—சாந்தும்-சந்தனத்தையும்—கோதை-மாலையையும்—கொண்டு-கைக்கொண்டு—பாராட்டுவார்-(உடலைப்)பாராட்டுவார்—கண்டிலர்கொல்- அக்கழுகுகள்குத்துதலைக்காணார்களோ, (எ-று) ✻இ-ம்- உயிர்போனவிடத்துடலைக்கழுகுகள் குத்துதலைஉடலைப்பாராட்டுவார்காணார்களோ-என்பதாம், ☞ பாராட்டுவார்-எ, கண்டிலர்கொல்,ப. (அ)

கழிந்தாரிடுதலைகண்டார்நெஞ்சுட்கக் ... ... ✻
குழிந்தாழ்ந்தகண்ணவாய்த்தோன்றி-யொழிந்தாரைப் .. ✻
போற்றிநெறிநின்மினிற்றிதன்பண்பென்று ... ...✻
சாற்றுங்கொல்சாலச்சிரித்து ... ... ✻

(இ-ள்.)கழிந்தார்-இறந்தவர்கள்—இடு-இடப்பட்ட—தலை-தலைகளானவை—கண்டார்-பார்த்தவர்கள்—நெஞ்சு-இதயங்கள்—உட்க- பயப்பட—குழிந்தாழ்ந்த-குழிந்தாழ்ந்திருக்கின்ற—கண்ணவாய்-கண்களையுடையனவாக—தோன்றி-தோற்றப்பட்டு—ஒழிந்தாரை- சாவாதிருந்தவரை—போற்றி-பாதுகாத்து—நெறி-நன்மார்க்கத்தில்—நின்மின்-நில்லுங்கள்—இதன்பண்பு-இவ்வுடலினதுதன்மை—இற்றென்று-இத்தன்மையதென்று—சால-மிகவும்—சிரித்து-நகைத்து—சாற்றுங்கொல் சொல்வனபோலும்—(எ-று) ✻ இ-ம் இறந்தவர்கள்தலைகள் இறவாதவர்களைநல்வழியிலேநில்லுங்களென்றுசிரித்துச்சொல்வனபோலும் என்பதாம், ☞ தலைகள் எ, சாற்றும் ப. (கூ)

உயிர்போயார்வெண்டலையுட்கச்சிரித்துச் ... ... ✻
செயிர்தீர்க்குஞ்செம்மாப்பவரைச்-செயிர்தீர்ந்தார் ... ✻
கண்டிற்றிதன்வண்ணமென்பதனாற்றம்மையோர் ... .. ✻
பண்டத்துள்வைப்பதிலர் ... ... ✻

(இ-ள்.)உயிர்போயார் இறந்தவர்களுடைய—வெண்டலை-வெண்மையாகியதலைகள்—உட்க பார்த்தவர்களஞ்ச—சிரித்து நகைத்து— செம்

ரைப்பவரை-இல்வாழ்க்கையிலிறுமாந்தவரை—செயிர்- குற்றத்தை—தீர்க்கும்-நீக்கும்—செயிர்-குற்றம்—தீர்ந்தார்-நீங்கினவர்கள் — கண்டு-பார்த்து—இதன்வண்ணம்- இவ்வுடம்பின்வகை—இற்று-இத்தன்மையையுடையது—என்பதனால்- என்றுசொல்லப்படுதலால்—தம்மை-தங்களை—ஓர்பண்டத்துள்- ஒருபொருளிலே—வைப்பதிலர்-வைத்தெண்ணுரர்கள் — (எ-று) ❁ இ-ம்-இறந்தவர்கள் தலைகள் இல்வாழ்க்கையில் இறுமாந்தவர்களைக் குற்றத்தைவிட்டுநீக்கும் இதைக்குற்றமற்றவர்கள் கண்டு-தங்களை ஒருபொருளாகவையார்கள் என்பதாம். ☞ தலைகள்-எ, தீர்க்கும்-ப-செயிர்-செ-செயிர்தீர்ந்தார்-எ-வைப்பதிலா-ப- தம்மை-செ * (தொல்காப்பியம்வினையியல்-௩௰-சூ.) [தடுமாறுருபுகடாகுசில வுளவே,] இவ்விதியால ஒவ்வோரிடத்து ஐயுங்குவ்வும் பொருந்தும்.

தூயதன்மை- முற்றிற்று.

௬-ம்-அதிகாரம்.

துறவு

அஃதாவது-அகப்பற்றும்-புறப்பற்றும்- நீக்கலாம்.

* விளக்குப்புகவிருண்மாய்ந்தாங்கொருவன் … *
றவத்தின்முன்னில்லாதாம்பாவம்-விளக்குநெய் … *
தேய்விடத்துச்சென்றிருள்பாய்ந்தாங்குநல்வினை *
தீர்விடத்துநிற்குமாந்தீது…… … …… … …*

(இ-ள்.) விளக்கு-தீபம்—புக-பிரவேசிக்க—இருள்-இருட்டு—மாய்ந்தாங்கு-கெட்டாற்போல—ஒருவன்-ஒருவன்—தவத்தின்முன்-தவத்திற்குமுன்—பாவம்-தீவினை—நில்லாது-நிற்காது—விளக்கு-அத்தீபத்தின்—நெய்-தைலம்—தேய்விடத்து- குறைந்தபோது-இருள்-இருட்டு—சென்று-போய்—பாய்ந்தாங்கு- பாய்ந்ததுபோல—நல்வினை-புண்ணியம்—தீர்விடத்து-நீங்கினபோது— தீது-பாவம்,நிற்கும்-வந்துநிற்கும்—(எ-று) ❁ இ-ம்-விளக்கைக்கண்டு இருள்கெட்டாற் போலும்ஒருவன்செய்தவத்தின்முன்பாவங்கெடும் விளக்குநெய்யற்றபோது இருள்வந்து சம்பவித்தல்போலும் நல்வினை நீங்கியபோது தீவினைவந்துசம்பவிக்கும் என்பதாம். ☞ பாவம்-எ-நில்லாது-ப-தீது-எ-நிற்கும்-ப-ஆயிரண்டும்-அசை * (தாதுவிளக்கம்.)விளக்கஞ்செயலால் விளக்கெனப்படுமே. (க)

நிலையாமைநோய்மூப்புச்சாக்காடென்றெண்ணித் ※
தலையாயார்தங்கருமஞ்செய்வார்-தொலைவில்லாச் ※
சத்தமுஞ்சோதிடமுமென்றாங்கிவைபிதற்றும் ※
பித்தரிற்பேதையாரில். ※

(இ-ள்.) தலையாயர்-பெரியோர்கள்—நிலையாமை- செல்வமிளமைசரீரமிவை) நில்லாமை—என்று-என்றும்—நோய்-வியாதியும்— மூப்பு-விருத்தாப்பியமும்—சக்காடு-மரணமுமிருக்கின்றன—என்று-என்றும், எண்ணி-நினைத்து—தம்-தமது—கருமம்-காரியமாகியதவத்தை—செய்வார்-செய்வார்கள்—தொலைவில்லா-அளவில்லாத—சத்தமும்-சத்தசாத்திரமும்—சோதிடமும்- சோதிடசாத்திரமும்—என்று-என்றுசொல்லிய—இவை-இவைகளை—பிதற்றும் பலகாற்பேசும்—பித்தரின்-பித்தர்களைப்போல—பேதையார்-அறிவீனர்—இல்-இல்லை—(எ-று) ※ இ-ம்-பெரியோர்கள்செல்வமிளமைசரீரம்நில்லாவென்றும் பிணிமுதுமை மரணமுண்டென்றுந் தவத்தைச்செய்வார்கள் சத்தசாத்திரமும் சோதிடசாத்திரமுங்கற்றுப் பிதற்றும்பித்தர்களைப்போலும் அறிவீனர்களில்லை என்பதாம். ☞ தலையாயார்-எ செய்வார் ப கருமஞ் செ பேதையார்-எ இல் ப ஆங்கு- அசை என்று இரண்டிடத் தொட்டுக.※ (இலக்கணக்கொத்து சுரு ம் சூத்திரம்.) [நீக்கமின்றிநிகழ்த்தவுயின்மை] இவ்விதியால்பித்தரின்னென்றது ஒப்புப்பொருள் இச்சூத்திரத்திற்கு இச்செயுளே உதாரணங்காட்டினார். (உ)

இல்லமிளமையெழில்வனப்புமீக்கூற்றஞ் ※
செல்வம்வலியென்றிவையெல்லா-மெல்ல ※
நிலையாமைகண்டுநெடியார்துறப்பர் ※
தலையாயார்தாமுய்யக்கொண்டு ※

(இ-ள்.) தலையாயார் பெரியோர்கள்—இல்லம் இல்வாழ்க்கையும்—இளமை-இளமைப்பருவமும்—எழில் நிறமும்—வனப்பு அழகும், மீக்கூற்றம் மிகுந்தவினத்தாரவும், செல்வம் பாக்கியமும்—வலி பலமும்—என்று-என்றுசொல்லிய—இவையெல்லாம் இவைகளெல்லாம்—மெல்ல- ஆராயுமிடத்து—நிலையாமை- நில்லாமையை—கண்டு-பார்த்து—தாம் தாங்கள், உய்யக்கொண்டு-கடைத்தேறும்வழியைக்கைக்கொண்டு, நெடியார் தாமதங்கொள்ளாதவர்களாய்—துறப்பர். இருபற்றையும்விடுவர்—(எ-று) ※ இ-ம்-பெரியோர்கள் இங்ஙனஞ் சொல்லியயாவும் நில்லாவென்று இருவகைப்பற்றும்விடுவர்என்பதாம். ☞ தலையாயார்-எ-துறப்பர் ப. (ங)

துன்பம்பலநாளுழந்துமொருநாளை ※
யின்பமேகாமுறுவரேழையார்-இன்ப ※

மிடைதெரிந்தின்னாமைநோக்கிமனையா........ *
றடைவொழிந்தாரான்றமைந்தார்................ *

(இ-ள்.) ஏழையார்-அறிவில்லார்—பலநாள்-பலகாலமும்—துன்பம்-துயரத்தை—உழந்து அநுபவித்தும்—ஒருநாளை ஒருநாளில்வரும்—இன்பமே-சுகத்தையே—காமுறுவர் இச்சிப்பார்— ஆன்றமைந்தார்-அறிவுடையார்— இன்பம்- இல்வாழ்க்கையின்பத்தின்— இடை-வேறுபாட்டை— தெரிந்து- அறிந்து— இன்னாமை- துன்பத்தை— நோக்கி- பார்த்து —மனையாறு-இல்வாழ்க்கைவழியின்—அடைவு-சம்பந்தத்தை—ஒழிந்தார்- நீங்கினார்—(எ-று) ❁ இ-ம்-அறிவில்லார்- இல்வாழ்க்கைஇன்பத்தைஇச்சிப்பார்-அறிவுடையார் அவ்வில்வாழ்க்கையின்பத்தைவிட்டுநீங்குவர், என்பதாம் ☞ ஏழையார்-எ-காமுறுவர்-ப.இன்பம்-செ-ஆன்றமைந்தார்-எ-ஒழிந்தார்-ப-அடைவை-செ* (காக்கைபாடினியார்சூத்திரம்.) [தனியசையென்று விணையசையென்று விரண்டெனமொழிமனா ரியல்புணர்ந்தோரே, இவ்விதியால் இன்பம் இணையசை,] (௪)

கொன்னேகழிந்தன்றிளமையுமின்னே........ *
பிணியொடுமூப்பும்வருமாற்-றுணிவொன்றி...... *
யென்னொடுசூழாதெழுநெஞ்சேபோதியோ ... *
நன்னெறிசேர நமக்கு........................ *

(இ-ள்.) துணிவு-துணிதலை—ஒன்றி-பொருந்தி— என்னொடு-என்னுடன்—சூழாது-ஆலோசியாது—எழும்- எழுகின்ற—ஓநெஞ்சே-மனமே—இளமையும்- இளமைப்பருவமும்—கொன்னே- பயனில்லாமல்—கழிந்தன்று-நீங்கியது—இன்னே- இப்பொழுதே—பிணியொடு- மூப்பிணியுடன்—மூப்பும்-தள்ளாமையும்—வருமால்-வருமாகையால்— நமக்கு-நமக்கு—நன்னெறி- பிறப்பறுநல்வழி— சேர-பொருந்த—போதி- வருதி—(எ-று) ❁ இ-ம்-எனக்குடன்படாதெழுந்து செல்கின்றமனமே இளமைநீங்கி முதுமைவருமாகையால் நமக்குப்பிறப்பறும் வழியில் பொருந்தவா என்பதாம், ☞ நெஞ்சம்-எ-போதி-ப-போதல்-வருதல் இதனாற்போதிவருதியென்றாயிற்று-போதியோ-என்றதற்கு-போகிறாயாவென்பாருமுளர். (௫)

மாண்டகுணத்தொடுமக்கட்பேறில்லெனினும்... *
பூண்டான்கழித்தற்கருமையாற்-பூண்ட.......... *
மிடியென்னுங்காரணத்தின்மேன்முறைக்கண்ணே.
கடியென்றார்கற்றறிந்தார் .... *

(இ-ள்.) மாண்ட-பெருமைபொருந்திய— குணத்தொடு-நற்குணத்தொடு—மக்கட்பேறு-மக்களைப்பெறுதல்—இல்லெனினும்(மனைவிக்கு) இல்லையாயினும்—பூண்டான்-விவாகஞ்செய்தவன்—கழித்தற்கு

அவளைவிடுதற்கு — அருமையால்- அரிதாதலால் — பூண்ட- தான்கொண்ட-பிடியென்னும்-வறுமையென்னும் — காரணத்தின் -ஏதுவினால் கற்றறிந்தார்-பெரியோர்கள் — மேன்முறைக்கண்ணே-மேலாகிய துறவறவொழுக்கத்தைவிரும்பி — கடியென்றார், (மணஞ்செய்யமுன்னமேயில்வாழ்க்கையை) விட்டுவிடென்றார்கள் — (எ-று) ※ இ-ம்-நற்குணமுமக்கட்பேறுமனைவிக்கில்லாதிருந்துங் கொண்டவன்நீக்குதற்கு அரிதாதலால்தரித்திரமென்னுங்காரணத்தாலேனுந் துறவறத்தைவிரும்பி இல்லறத்தை நீக்கென்றார்கள்-என்பதாம். ☞ கற்றறிந்தார்-எ- கடியென்றார்-ப. (௬)

உணக்கித்தாங்கொண்டவிரதங்களுள்ளுடையத் ... ※
தாக்கருந்துன்பங்கடாந்தலை-வந்தக்கா ... ※
நீக்கிநிறாஉமுரவோரோநல்லொழுக்குங் ... ※
காக்குந்திருவத்தவர் ... ※

(இ-ள்.) உணக்கி- உறுதிகொண்டு — தாம்-தாங்கள் — கொண்ட- நல்லொழுக்கமாகக்கொண்ட — விரதங்கள்-தவங்கள் — உள்ளுடைய-இருதயங்கலங்க — தாக்கு-தாங்குதற்கு — அரும்-அரிய — துன்பங்கள்-துயரங்கள் — தலை(தம்)மிடத்தில் — வந்தக்கால்-வந்தால் — நீக்கி- தள்ளி — நிறாஉம்-தங்களைத்தவத்திலேநிறுத்தும் — உரவோரோ- அறிவுடையோரோ, நல்லொழுக்கம்-நற்றவவொழுக்கத்தை, காக்கும்-காப்பாற்றும் — திருவத்தவர்- சிறப்பினையுடையார், (எ-று) ※ இ-ம்- அறிவுடையோரொத்துன்பம்வரினு மத்துன்பத்தைச்சகித்துத் தவத்தைக்காப்பார், என்பதாம், ☞ உரவோர்-எ-திருவத்தவர்-ப-தாம்-அசை- தாக்கு-விகாரம் ※ (இலக்கணக்கொத்து ஒழிபியல்-௬-ம்-சூத்திரம்.) [இயற்கையளபெடை செயற்கையளபெடை, யெழுத்துபேறளபெடையிசைநூலளபெடை-யொற்றுப்பேறளபெடை யொரோவழிக்கூடி லைந்தெனமொழிப வளபெடையவைதாங்-குற்றெழுத்தளபெடை-நெட்டெழுத்தளபெடை-யொற்றெழுத்தளபெடையெனவொருமூன்றாய்-மொழிமுதலிடைகடைமூன்றினும்வருமே] இவ்விதியால்நிறாஉம்குற்றெழுத்தளபெடை. (௭)

தம்மையிகழ்ந்தமைதாம்பொறுப்பதன்றிமற் ... ※
றெம்மையிகழ்ந்தவினைப்பயத்தா-லும்மை ... ※
யெரிவாய்நிரயத்துவீழ்வர்கொலென்று ... ※
பரிவதூஉஞ்சான்றோர்கடன் ... ※

(இ-ள்.) தம்மை-தங்களை — இகழ்ந்தமை-இகழ்ந்துபேசினவற்றை, தாம்பொறுப்பதன்றி- தாங்கள்பொறுப்பதல்லாமல் — எம்மை- எங்களை — இகழ்ந்த-இகழ்ந்துபேசிய, வினைப்பயத்தால்-தீவினைப்பலனால், உம்மை-மறுபிறப்பில், எரிவாய்-தீயிடமாகிய — நிரயத்து- நரகத்தில்,

வீழ்வரென்று வீழ்வார்களென்று, பரிவதூஉம் இரக்கங்கொள்வதூம், —சான்றோர் பெரியோர்கள்— கடன் கடமை — (எ று) ※ இ-ம் பெரியோர்கள் பிறர்வைதலைப் பொறுப்பதன்றியும் வைதவர்கள் நரகத்தில்வீழ்வார்களென்றிரங்குவார்கள் -என்பதாம், ☞ சான்றோர் எ, கடன்-ப, மற்று-சொல் அசைகள். (௮)

மெய்வாய்கண்மூக்குச்செவியெனப்பேர்பெற்ற ... ※
வைவாயவேட்கையவாவினைக் கைவாய் ... ... ※
கலங்காமற்காத்துய்க்குமாற்றலுடையான் ... ... ※
விலங்காது ※ வீடுபெறும்... ... ... ※

(இ ள்.) மெய் உடலும்—வாய் வாயும்— கண் நேத்திரமும்—மூக்கு நாசியும்—செவி காதும்—என என்றுசொல்லிய— பேர்பெற்ற பெயர்கொண்ட— ஐவாய ஐந்திடமாகிய— வேட்கை ஆசையையும்—அவாவினை உளத்தால்வருமாசையையும்— கைவாய் ஒழுக்கவழியில்— கலங்காமல் கலக்கமடையாமல்—காத்து காப்பாற்றி—உய்க்கும் தன்னைநடத்தும்—ஆற்றலுடையான் வல்லமையுடையான்—விலங்காது தவறாது — வீடு மோட்சவீட்டை— பெறும் அடைவான்— (எ று) ※ இ-ம் ஐம்பொறிகளையும் ஐம்புலன்களிற் செல்லாமற்காக்கும் வல்லமையுடையவன் மோட்சமடைவான் என்பதாம். ☞ ஆற்றலுடையான்-எ பெறும் ப, வீடு-செ. ※ (இலக்கணத்திரட்டு) [வீடொன்றும்மே விளம்பப்படாப்பொருள்.] (௯)

துன்பமேமீதூரக்கண்டுந்துறவுள்ளா ... ... ※
ரின்பமேகாமுறுவரேழையா-ரின்ப ... ... ※
மிசைதொறுமற்றதனின்னாமைநோக்கிப்... ... ...※
பசைதல்பரியாதா ※ மேல் ... ... ※

(இ ள்.) ஏழையார் அறிவில்லார், துன்பமே துன்பத்தையே—மீதூர மேன்மேலும்வர—கண்டும் பார்த்தும் — துறவு துறவறத்தை —உள்ளார் நினையார்—இன்பமே இன்பத்தையே— காமுறுவர் இச்சிப்பார்—மேல் மேலாயினோர்— இன்பம் இன்பம்—இசைதொறும் இசைந்துவருந்தோறும்— அதன் அவ்வின்பத்தால்வரும் — இன்னாமை துன்பத்தை, நோக்கிபார்த்து—பசைதல் அவ்வின்பத்திற்பொருந்துதலை— பரியாது இச்சியார் (எ று) ※ இ-ம் அறிவில்லார் இன்பத்தை யிச்சிப்பார் அறிவுள்ளார் அவ்வின்பத்தை இச்சியார் என்பதாம். ☞ ஏழையார் எ, காமுறுவர் ப, இன்பம் செ, மேல் எ, பரியாது ப, பசைதல் செ, ※ சங்கத்தார் அரியவிதிச்சூத்திரம்) [விகுதிகுன்றியும் விளங்குமுயர்திணை] இவ்விதியால் மேலென்றது விகுதிகுன்றியது.

துறவு முற்றிற்று,

௭-ம்-அதிகாரம்.

சினமின்மை.

அஃதாவது கோபமில்லாதிருக்குந் தன்மையைச் சொல்லுதலாம்.

மதித்திறப் பாரு மிறக்க மதியா ... ✻
மிதித்திறப் பாரு மிறக்க மிதித்தேறி ... ✻
யீயுந் தலைமே லிருத்தலா லஃதறிவார் ... ✻
காயுங் கதமின்மை நன்று ... ✻

(இ-ள்.) மதித்து கனஞ்செய்து — இறப்பாரும் நடப்பவரும் — இறக்க நடக்கட்டும் — மதியா மதியாமல் — மிதித்து கனவீனஞ்செய்து — இறப்பாரும் நடப்பவரும் — இறக்க நடக்கட்டும் — மிதித்தேறி காலால் மிதித்தேறி — ஈயும் ஈயானதும் — தலைமேல் சிரசின்மேல் — இருத்தலால் இருக்கையால் — அஃது அவ்வீயினியல்பை — அறிவார் அறிபவர்கள் — காயும் கோபிக்கும் — கதமின்மை கோபமில்லாதிருக்கை — நன்று நல்லது — (எ-று) ✻ இம் மதித்து நடப்பவரும் நடக்கட்டும், மதியாது நடப்பவரும் நடக்கட்டும், அடிமேலேறிய ஈ முடிமேலேறி யிருத்தலா லத்தன்மையறிபவர் பிறர்மேற் கோபமில்லாதிருக்கை நன்று என்பதாம். ☞ கதமின்மை எ, நன்று-ப. (௧)

தண்டாச் சிறப்பிற் றம்மின் ✻ னுயிரைத் தாங்காது ... ✻
கண்டுழி யெல்லாந் துறப்பவோ-மண்டி ... ✻
யடிபெயரா தாற்ற விளிவந்த போழ்தின் ... ✻
முடிகிற்கு முள்ளத் தவர் ... ✻

(இ-ள்.) மண்டி நெருங்கி — அடி பாதங்களை — பெயராது பெயர்த்துவையாமல் — ஆற்ற-மிகவும், இளி இழிவு — வந்தபோழ்தில்-வந்தகாலத்தில் — முடிகிற்கும் (எண்ணியவற்றை) முடிக்கும் — உள்ளத்தவர் மனவலியுள்ளோர் — தண்டா கெடாத — சிறப்பின் சிறப்புடைய — தம் தமது — இன்னுயிர் இனியவுயிரை — தாங்காது காக்காமல் — கண்டுழி யெல்லாம் கோபங்கண்டவிடமெல்லாம் — துறப்பவோ உயிரைவிடுவார்களோ — (எ-று) ✻ இ-ம் மிகவுமிழிவுவந்தகாலத்தில் நினைத்தவற்றைமுடிக்கு மனவலியுடையோர் கோபங்கண்டவிடத்தி லுயிரைவிடார்கள் என்பதாம். ☞ உள்ளத்தவர் எ, துறப்பவோ ப, ✻ (தருக்கசங்கிரகம்) [உயிர்தானுடம்பொடு வெவ்வேறாகும்.] (௨)

காவா தொருவன்றன் வாய்திறந்து சொல்லுஞ்சொ ... ✻
லோவாதே தன்னைச் சுடுதலா லோவாதே ... ✻

பாய்ந்தமைந்தகேள்வியறிவுடையாரென்றுங் ... *
காய்ந்தமைந்தசொல்லார்கறுத்து ... ... *

(இ-ள்.) காவாது-(நாவைக்) காக்காமல்—ஒருவன்-ஒருவன்—தன்னது—வாய்திறந்து-வாயைத்திறந்து—சொல்லுஞ்சொல்-சொல்லுங்கொடுஞ்சொற்கள்—ஓவாது ஒழியாமல்—தன்னை-தன்னையே—சுடுதலால்-சுடலால், ஓவாது-ஒழியாமல், ஆய்ந்து-பலநூலாராய்ந்து—அமைந்த-நிரம்பிய—கேள்வி-கல்வி—அறிவுடையார்-விவேகமுடையார்—என்றும்-எக்காலத்திலும், காய்ந்து-கோபித்து—அமைந்த கொடுமைநிறைந்தசொற்களை—கறுத்து-சீறி—சொல்லார்-சொல்லார்கள்—(எ-று) ❊ இ-ம். ஒருவன் நாவைக்காவாது பிறனைவைதசொல்லானவை தன்னைச்சுடுதலால் கல்வி அறிவுடையார் எக்காலத்திலுங்கோபித்து கொடுஞ்சொற்களைச்சொல்லார்-என்பதாம், ☞ அறிவுடையார்-எ, சொல்லார்-ப, அமைந்த-செ, ஏகாரமிரண்டும் அசைகள். (௫)

நேர்த்துநிகரல்லார்நீரல்லசொல்லியக்கால் ... ... *
வேர்த்துவெகுளார்விழுமியோ-ரோர்த்ததனை ... ... *
யுள்ளத்தாலுள்ளியுரைத்துராயூர்கேட்பத் ... ... *
துள்ளித்தூண்முட்டுமாங்கீழ் ... ... *

(இ-ள்.) விழுமியோர்-பெரியோரானவர்—நிகரல்லார் ஒப்பில்லார்—நேர்த்து-எதிர்த்து, நீரல்ல-குணமில்லாச்சொற்களை—சொல்லியக்கால்-சொன்னால், வேர்த்து- மனம்புழுங்கி, வெகுளார்-கோபியார், கீழ்-கீழ்மகன்—ஓர்த்து-ஆராய்ந்து—அதனை- வைததனை—உள்ளத்தால்-மனதால்—உள்ளி- நினைத்து—உராய்- சென்று—ஊர்-ஊரார்—கேட்ப-கேட்க—உரைத்து- சொல்லி—துள்ளி- குதித்து—தூண்-தூணில்—முட்டும்-முட்டிக்கொள்வான்—(எ-று) ❊ இ-ம்-பெரியோர்கள் தமக்கொப்பில்லார் கொடுஞ்சொற்களைச்சொன்னால் கோபியார் கீழானவன் பிறன்வைததனை நினைத்து ஊரார்க்குச்சொல்லித் தூணில் முட்டிக்கொள்வான் என்பதாம். ☞ விழுமியோர்-எ, வெகுளார்-ப, கீழ்-எ, முட்டும்-ப, நேர்த்து-ஒத்துவிகாரம், * (நன்னூல்-வினையியல்-உகூ-ம்-சூத்திரம் [பல்லோர்படர்க்கை முன்னிலைதன்மையிற் - செல்லாதாகுஞ் செய்யுமென்முற்றே] இவ்விதியால்-முட்டும்-என்றது-முட்டுவானென்றாயிற்று. (௬)

இளையானடக்கமடக்கங்கிளைபொரு ... ... *
ளில்லான் கொடையேகொடைப்பய-னெல்லா ... ... *
மொறுக்குமதுகையுரனுடையாளன் ... ... *
பொறுக்கும்பொறையேபொறை ... ... *

(இ-ள்.) இளையான்-இளமையுடையவன்—அடக்கம்-ஐம்பொறிக ளையடக்குதல், அடக்கம் - அடக்கமாவது, இளை வளரும், பொருள்-திரவியம், இல்லான் இல்லாதவன், கொடையே - கொடுத்தலே, பய ன் பிரயோசனமுள்ள—கொடை-கொடையாவது, எல்லாம்-யாவும், ஒறுக்கும் சங்கரிக்கும்—மதுகை வெற்றியும்—உரன்- பலத்தையும்—உடையாளன் உடையசுத்தவீரன்—பொறுக்கும்-பொறுகின்ற—பொறையே-பொறுமையே—பொறை பொறுமையாவது—(எ-று) ✻இ-ம் இளையவன் ஐம்பொறியடக்குதலே யடக்கமாகும் இல்லாதவன் கொடுக்கிறதே கொடையாகும், சுத்தவீரன்பொறுக்கிறதேபொறுமையாகும்-என்பதாம். ☞ அடக்கம் எ, அடக்கம்-ப, கொடை- எ, கொடை ப, பொறை எ, பொறை ப. (௫)

கல்லெறிந்தன்னகயவர்வாயின்னாச்சொல் .. .. ✻
லெல்லாருங்காணப்பொறுத்துய்ப்ப-ரொல்லை ... ✻
யிடுநீற்றாற்பையவிந்தநாகம்போற்றத்தங் ... ... ✻
குடிமையான்வாதிக்கப்பட்டு .. .. ✻

(இ ள்.) இடு மந்திரித்திடும்—நீற்றால் திருநீற்றால்—ஒல்லை சீக்கிர ம், பை படம்—அவிந்த அடங்கிய— நாகம்போல் நாகத்தைப்போல் தத்தம் தங்கள்தங்களுடைய—குடிமையால்-குடிப்பிறப்பால், வாதிக் கப்பட்டு ஒறுக்கப்பட்டு—கல் கல்லை—எறிந்தன்ன எறிந்தாற்போலு ம்—கயவர் கீழானவர்கள்—வாய் வாயில்வரும்—இன்னாச்சொல் கொ டுஞ்சொற்களை—எல்லாரும் யாவரும்—காண அறிய—பொறுத்துய்ப் ப்பர் சகித்துநடப்பர்பெரியோர்—(எ-று) ✻இ-ம் மந்திரித்ததிருநீ ற்றாலடங்கியநாகம்போலப்பெரியோர் தங்கள்குலவொழுக்கத்திற்கஞ் சிக்கீழ்மக்கள்சொல்லிய கொடுஞ்சொற்களைப்பொறுத்து நடப்பார் எ ன்பதாம். ☞ பெரியோர் தோன்றா எழுவாய் உய்ப்பர் ப, இன்னாச்சொ ல் செ. (௬)

✻ மாற்றாராய்நின்றுதம்மாறேற்பார்க்கேலாமை ... ✻
யாற்றாமையென்னாரறிவுடையா-ராற்றாமை ... ... ✻
நேர்த்தின்னாமற்றவர்செய்தக்காற்றாமவரைப் ... ✻
பேர்த்தின்னாசெய்யாமைநன்று .... ✻

(இ ள்.) மாற்றாராய் பகைவராய்—நின்று நின்று—தம்-தம்மோடு—மாறேற்பார்க்கு மாறுபடுமவர்க்கு—ஏலாமை பொருந்தாமையை—ஆற்றாமை வல்லமையில்லாமை—என்னார் என்றுசொல்லார்—அறி வுடையார் அறிவுளார்—ஆற்றாமை பொறுத்தற்கரியவை— நேர்த்து எதிர்த்து—இன்னா துன்பங்களை— அவர் அப்பகைவர்—செய்தக்கா ல் செய்தால்—தாம் தாங்கள்—அவரை அப்பகைவரை, பேர்த்து மீண் டு—இன்னா தீங்குகளை, செய்யாமை செய்யாதிருத்தல், நன்று-நல்லது,

(எ-று.) ❊ இ-ம்-தம்முடன் எதிர்ப்பவர்மே லெதிராதிருத்தலை வல்லமையில்லாமையென் றறிவுடையோர்சொல்லார், -பகைவர்துன்பஞ் செய்தால் அவர்களுக்குத் துன்பஞ்செய்யாதிருத்தலே நல்லது என்பதாம். ☞ அறிவுடையார்-எ, என்றார்-ப, மற்று- அசை, ✻ (அவிநயம்.) [நெடின்மிகவருதனெடிற்செய்யுளென்ப.] (௭)

நெடுங்காலமோடினு நீசர்வெகுளி... ... ... ✻
கெடுங்காலமின்றிப்பரக்கு-மடுங்காலை... ✻
நீர்கொண்டவெப்பம்போற்றானேதணியுமே... ... ... ✻
சீர்கொண்டசான்றோர்சினம்... ... ... ✻

(இ-ள்.) நீசர்-கீழ்மக்களுடைய—வெகுளி-கோபமானது—நெடுங்காலம்-அநேககாலம்—ஓடினும்-சென்றாலும்—கெடுங்காலம்-கெட்டுப்போங்காலம்—இன்றி-இல்லாமல்—பரக்கும்-வளர்ந்துநிற்கும், சீர்-சிறப்பை—கொண்ட- கொண்டிருக்கிற—சான்றோர்- பெரியோர்—சினம்-கோபமானது—அடும்-காய்ச்சும்—காலை-காலத்தில்—நீர்-நீரானது, கொண்ட-கொண்டிருக்கிற—வெப்பம்போல்-உஷ்ணம்போல், தானே-தனக்குத்தானே—தணியும்-ஆறும். (எ-று) ❊ இ-ம்-கீழ்மக்கள் கோபம்நெடுநாட்சென்றாலும்-பெருகிநிற்கும், பெரியோர் கோபம் நீர்கொண்டவெப்பம்போற் றனக்குத்தானே தணியும்-எ-ம். ☞ நீசர் வெகுளி-எ, பரக்கும்-ப, சான்றோர் சினம்-எ, தணியும்-ப, ஏ-அசை.

உபகாரஞ்செய்ததனையோராதேதங்க... ... ✻
ணபகாரமாற்றச்செயினு-முபகாரந்... ... ✻
தாஞ்செய்வதல்லாற்றவற்றினாற்றீங்கூக்கல்... ... ✻
வான்றோய்குடிப்பிறந்தார்க்கில... ... ... ✻

(இ-ள்.) உபகாரம்- உதவி—செய்ததனை-செய்ததை— ஓராது-அறியாது—தங்கண்- தம்மிடத்து—அபகாரம்- ஒருவரபகாரத்தை—ஆற்ற-மிகவும்—செயினும்- செய்தாலும்—உபகாரம்- உதவியை—தாம்-தாங்கள்—செய்வதல்லால்- செய்வதல்லது—தவற்றினால்- (அவர்செய்த) குற்றத்தால்— தீங்கு-பொல்லாங்கை—ஊக்கல்- செய்தல்—வான்-பெருமை—தோய்-நிறைந்த—குடிப்பிறந்தார்க்கு- நற்குடியிற்பிறந்தார்க்கு—இல்- இல்லை—(எ-று) ❊ இ-ம்-ஒருவர் உபகாரத்தையறியாது- அபகாரத்தைச் செய்தாலும் நற்குடியிற்பிறந்தா ருபகாரஞ் செய்வதேயல்லாது- அபகாரஞ் செய்யார்— என்பதாம். ☞ ஊக்கல்ல-, இல்-ப, தீங்கு-செ, வான்றோய்குடி- உயர்ந்தகுடியெனினுமாம். (௯)

✻ கூர்த்துநாய்கௌவிக்கொளக்கண்டுந்தம்வாயாற் ... ✻
பேர்த்துநாய்கௌவினாரீங்கில்லை-நீர்த்தன்றிக்... ... ✻
கீழ்மக்கள்கீழாயசொல்லியக்காற்சொல்பவோ... ... ✻
மேன்மக்கடம்வாயாலீண்டு... ✻

(இ-ள்.) நாய் - நாயானது — கூர்த்து - கோபமிகுந்து — கௌவிக்கொள - கடித்துக்கொள்ள — கண்டும் - பார்த்தும், பேர்த்தும் - மீண்டும் — தம் - தம்முடைய — வாயால் - வாயினால் — நாய் - கடித்தநாயை — கௌவினார் - கடித்தவர் — ஈங்கு - இவ்வுலகில் — இல்லை - இல்லை — நீர்த்தன்றி - குணமில்லாமல் — கீழ்மக்கள் - கீழானவர்கள் — கீழாய - இழிவான சொற்களை — சொல்லியக்கால் - சொன்னால் — மேன்மக்கள் - மேலானவர்கள் — தம்வாயால் - தங்கள்வாயால் — மீட்டு - மறுத்து — சொல்பவோ - சொல்வார்களோ — (எ-று) ❊ இ-ம்-நாய்கடிக்கக்கண்டும், தங்கள்வாயாற் கடித்தநாயைக்கடித்தவர்கள், இவ்வுலகிலில்லை, கீழானவர்கள் இழிவான சொற்களைச்சொன்னால், மேலானவர்கள் ஒன்றுஞ்சொல்லார்கள் என்பதாம். ☞ மேன்மக்கள்-எ, சொல்பவோ-ப, கீழானவற்றை-செ* (அவிநயம்) ஒற்றுப்பயிலொற்றியற்செய்யுள். (௰)

சினமின்மை - முற்றிற்று.

௮-ம் - அதிகாரம்.

பொறையுடைமை.

அஃதாவது - பொறுமையையுடைத்தாயிருக்குந் தன்மையாம்.

கோதையருவிக்குளிர்வரைநன்னாட............................*
பேதையோடியாதுமுரையற்க-பேதை.....................*
யுரைப்பிற்சிதைந்துரைக்குமொல்லும் வகையான்........*
வழுக்கிக்கழிதலேநன்று...................................*

(இ-ள்.) கோதை - மாலைபோல்விழும் — அருவி - யாற்றைப்பொருந்திய — குளிர் - குளிர்ந்த — வரை - மலைகளையும் — நாட - நாட்டையுமுடைய பாண்டியனே — பேதையோடு - அறிவிலானுடன் — யாதும் - ஒன்றையும் — உரையற்க - சொல்லாதிருப்பாயாக — பேதை - அவ்வறிவிலான் — உரைப்பில் - ஒன்றைச்சொன்னால் — சிதைந்து - கெடுப்படி — உரைக்கும் - சொல்வான் (ஆதலால்) — ஒல்லும் - பொருந்தும் — வகையால் - விதத்தால் — வழுக்கி - தப்பி — கழிதல் - (அவனைவிட்டு) நீங்குதல் — நன்று - நல்லது — (எ-று) ❊ இ-ம்-பாண்டியனே அறிவீனனுடன் ஒன்றுஞ்சொல்லாதிருப்பாயாக சொன்னால் சிதைவுபடச்சொல்வான் ஆகையால் அவனைவிட்டுநீங்குதல் நல்லதென்பதாம், ☞ கழிதல்-எ, நன்று-ப, அறிவிலான் - செ, (தொன்னூல்விளக்கம்) [எதிர்மறையேவற்கே லேயல்லே - யல்லேமாவற்கவாகுமொருமை - யாமினம்மினற்பீர்பன்மை] இவ்விதியால் அற்கவிகுதி ஏவலொருமைக்கண்வந்தது. (க)

நேரல்லார் நீரல்ல சொல்லியக்கால் மற்றது
தாரித் திருத்தல் தகுதிமற் றோரும்
புகழ்மையாக் கொள்ளாது பொங்குநீர் ஞாலஞ்
சமழ்மையாக் கொண்டு விடும்

(இ-ள்.) நேரல்லார்-ஒப்பில்லாதவர்—நீரல்ல-குணமில்லாச்சொற்களை—சொல்லியக்கால்-சொன்னால்—தாரித்திருத்தல்-பொறுத்திருத்தல்—தகுதி-பொறுமை—மற்று-அதைப்பொறுக்காவிட்டால்—புகழ்மையா-புகழ்ச்சியாக—கொள்ளாது-கொள்ளாமல்—பொங்கு-மிகுந்த—நீர்-நீர்சூழ்ந்த—ஞாலம்-பூமி, சமழ்மையா-தாழ்மையாக—கொண்டுவிடும்-கொள்ளும்—(எ-று) ※ இ-ம்-தமக்கொப்பில்லார்தாழ்வானவைகளைச்சொன்னால் பொறுத்துக்கொள்ளல் பொறுமை-பொறாவிட்டா லுலகம்புகழ்ச்சியாகக்கொள்ளாது இகழ்ச்சியாகக்கொள்ளும்-என்பதாம், ☞ ஞாலம்-எ, கொண்டுவிடும்-ப, மற்று-ஓரும்-அசைகள். (௨)

காதலார் சொல்லுங் கடுஞ்சொல் லுவந்துரைக்கு
மேதிலார் இன்சொலிற் றீதாமோ-போதெலா
மாதர்வண் டார்க்கு மலிகடற் றண்சேர்ப்ப
வாவ தறிவார்ப் பெறின்

(இ-ள்) போதெலாம்-மலர்களெல்லாம்—மாதர்-அழகிய—வண்டு-வண்டுகள்—ஆர்க்கும்-சத்திக்கும்—மலி-நிறைந்த—கடல்-கடலையும்—தண்-குளிர்ந்த—சேர்ப்ப-கரையையுமுடையபாண்டியனே—ஆவது-ஆகவேண்டிய நன்மையை—அறிவார்-அறிந்தவரை—பெறின்-பெற்றால்—காதலார்-தம்மில்விருப்புள்ளோர்—சொல்லும்-சொல்கின்ற—கடுஞ்சொல்-கொடுஞ்சொல்லானது—ஏதிலார்-பகைவர்—உவந்துரைக்கும்-மகிழ்ந்துசொல்லும்—இன்சொலின்-இனியசொல்லைப்பார்க்கிலும்—தீதாமோ-குற்றமாகுமோ—(எ-று) ※ இ-ம்-பாண்டியனே சிநேகர் சொல்லுங்கடுஞ்சொல்லானது-பகைவர்சொல்லுமினிய சொல்லைப்பார்க்கிலுங்குற்றமாகுமோ என்பதாம், ☞ கடுஞ்சொல்-எ, தீதாமோ-ப. (௩)

※ அறிவ தறிந்தடங்கி யஞ்சுவ தஞ்சி
யுறுவ துலகுவப்பச் செய்து-பெறுவதனா
லின்புற்று வாழு மியல்புடையா ரெஞ்ஞான்றுந்
துன்புற்று வாழ்த லரிது

(இ-ள்.) அறிவது-அறியத்தக்கதை—அறிந்து-தெரிந்து—அடங்கி-அடங்கி—அஞ்சுவது-அஞ்சத்தகுவதற்கு—அஞ்சி-பயந்து—உறுவது-செய்யத்தகுவதை—உலகு-உலகத்தார், உவப்ப-மகிழ—செய்து-செய்து—பெறுவதனால்-பெறும்பலனால்—இன்புற்று-இன்பமடைந்து—வாழும்-வாழுகின்ற—இயல்புடையார்-குணமுடையார்—எஞ்

ஞான்றும் - எந்நான்றும் — துன்புற்று - துன்பமடைந்து — வாழ்தலரிது வாழ்தலில்லை — (எ-று) ❋ இ-ம் அறியத்தகுவனவையறிந்து அஞ்சத்தகுவதற்கஞ்சிச் செய்யத்தகுவனவைச்செய்து பெறும்பயனால் இன்பம் பொருந்திவாழுங்குணமுடையோர் துன்பம்பொருந்தி வாழ்தலில்லை - என்பதாம், ☞ வாழ்தல - எ, இல்லை - ப, * (அவிநயம்) [குறின்மிகுதல்குறிலியற்செய்யுள், யாப்பருங்கலத்திலுங்காண்க.] (௪)

வேற்றுமையின்றிக்கலந்திருவர்நட்டக்கால் ... ... *
தேற்றாவொழுக்கமொருவன்க-ணுண்டாயி ... ... *
னாற்றுந்துணையும்பொறுக்கபொறானாயிற் ... ... *
தூற்றாதேதூரவிடல் ... ... *

(இ-ள்.) வேற்றுமை - வேறுபடுங்குணம் — இன்றி - இல்லாது — கலந்து - பொருந்தி — இருவர் - இரண்டுபேர் — நட்டக்கால் - சிநேகித்தால், தேற்றா - தெளியாத — ஒழுக்கம் - நடக்கை — ஒருவன்கண் - ஒருவனிடத்து — உண்டாயின் - உண்டானால் — ஆற்றும் - (கோபம்) யடங்கும் — துணையும் - அளவும் — பொறுக்க - பொறுக்கக்கடவன் — பொறானாயின் பொறுக்கானாயில் — தூற்றாது - (அவன்) குற்றத்தைத்தூற்றாமல் — தூரவிடல் - அவனைவிட்டுவிடுக, (எ-று) ❋ இ-ம் - வித்தியாசமில்லாமல் இருவர்கலந்துசிநேகஞ்செய்யில் ஒருவனிடத்து நன்னடக்கை இல்லாவிடில் மற்றவன்பொறுக்குமளவும்பொறுக்கக்கடவன்பொறானாயிட்டால் தூற்றாமல்சிநேகத்தைவிடக்கடவன் என்பதாம், ☞ ஒருவன் - எ, தூரவிடல் - ப, நட்பிணை - செ, எ - அசை. (௫)

இன்னாசெயினுமினியவொழிகென்று ... ... *
தன்னையேதானோவினல்லது - துன்னிக் ... ... *
கலந்தாரைக்கைவிடுதல்கானகநாட ... ... *
விலங்கிற்கும்விள்ளலரிது ... ... *

(இ-ள்.) கானகம் - காட்டையும் — நாட - நாட்டையுமுடையபாண்டியனே — இன்னா - துன்பங்களை — செயினும் - ஒருவர்செய்தாலும் — இனிய - இனியனவாகவெண்ணி — ஒழிகென்று - கோபம்நீங்கென்று — தன்னையேதான் - தன்னைத்தானே — நோவினல்லது - நோவுவதல்லாமல் — துன்னி - நெருங்கி — கலந்தாரை - சிநேகித்தவரை — கைவிடுதல் - விட்டுவிடுதல் — விலங்கிற்கும் - மிருகத்திற்கும் — விள்ளல் - வேறுபடல் — அரிது - அருமை — (எ-று) ❋ இ-ம் - பாண்டியனே ஒருவர்துன்பஞ்செயினும் இன்பமாக நினைத்துத் தன்னை நொந்துகொள்வதே யல்லாது சிநேகித்தாரை விட்டுவிடுத லாகாது - மிருகத்திற்கும் பிரிதலரிது என்பதாம், ☞ கைவிடுதல் - எ, அரிது - ப, கலந்தாரை - செ. (௬)

பெரியார்பெருநட்புக்கோடறாஞ்செய்த ... ... *
வரியபொறுப்பவென்றன்றோ - வரியரோ ... ...

* ஒல்லெனருவியுயர்வரைநன்னாட....... ......*
நல்லசெய்வார்க்குத்தமர் .. ..*

(இ-ள்.) ஒல்லென்-ஒல்லென்னுஞ்சத்தமுள்ள—அருவி-யாற்றைப் பொருந்திய—உயர்- உயர்ந்த—வரை-மலையையும்—நன்னாட- நல்ல நாட்டையுமுடையபாண்டியனே— தாம்-தாங்கள்—செய்த-செய்த, அரிய-அரியகுற்றங்களை— பொறுப்ப-பொறுப்பார்கள்— என்றன்றே- என்றல்லவோ—பெரியார்- பெரியோர்களுடைய—பெருநட்பு-பெரியசிநேகத்தை—கோடல்-கொள்ளுதல்— நல்ல-நன்மைகளை, செய்வார்க்கு-செய்பவர்களுக்கு, தமர்-சுற்றத்தார்—அரியரோ-கிடையார்களோ (எ-று) ※இ-ம்-பாண்டியனே தாங்கள் செய்த குற்றங்களைப் பொறுப்பார்களென்றல்லவா பெரியோர்கள் சிநேகஞ்செய்தல் நன்மைகளைச் செய்பவர்களுக்குறவினர் கிடையார்களோ என்பதாம். ☞ தமர்-எ, அரியரோ-ப* (தண்டியலங்காரம்) [இடமெனப்படுபவை மலைநாடியாறே.] (எ)

வற்றிமற்றாற்றப்பசிப்பினும்பண்புலார்க்... ... *
கற்றமறியவுரையற்க-வற்ற...... ....*
மறைக்குந்துணையார்க்குரைப்பவேதம்மைத்......*
துறக்குந்துணிவிலாதார்..... ....*

(இ-ள்.) வற்றி-உடல்மெலிந்து—ஆற்ற-மிகவும்—பசிப்பினும்-பசித்தாலும்—பண்பிலார்க்கு- நட்புக்குணமில்லாதார்க்கு—அற்றம்-வறுமையை—அறிய- தெரிய—உரையற்க-சொல்லாதிருப்பாயாக, அற்றம்-வறுமையை, மறைக்கும்-நீக்கும்— துணையார்க்கு- அளவினையுடையார்க்கு—தம்மை-தம்முயிரை, துறக்கும்-விட்டுவிடும்—துணிவிலாதார்-துணிவு கொள்ளாதார்—உரைப்ப-சொல்வார்கள்—(எ-று) ※இ-ம்-உடல்மெலிந்து மிகப்பசித்தாலும் நட்புக்குணமில்லாதவர்க்கு வறுமையைச் சொல்லாதே-உயிர்விடத்துணியாதவர்கள் வறுமையை நீக்குவார்க்குச்சொல்வார்கள் என்பதாம். ☞ துணிவிலாதார்-எ, உரைப்ப-ப, எ-அசை. (அ)

இன்பம்பயந்தாங்கிழிவுதலைவரினு...... ....*
மின்பத்தின்பக்கமிருந்தைக்க-வின்ப..... ......*
மொழியாமைகண்டாலுமோங்கருவிநாட ... ...*
பழியாகவாறேதலை... .. ..*

(இ-ள்.) ஓங்கு-உயர்ந்த— அருவி-யாற்றைப்பொருந்திய—நாட-நாட்டையுமுடையபாண்டியனே— இன்பம்பயந்து- முன்னின்பத்தைக்கொடுத்து—ஆங்கு-(பின்)னவ்விடத்து—இழிவு-துன்பம்—தலைவரினும்-முதன்மையாகவந்தாலும்— இன்பம்-இன்பத்தினது—பக்கம்-பக்ஷம், இருந்தைக்க-நீங்கினாற்போலும்—இன்பம்- அவ்வின்பமானது—ஒழியாமை-நீங்காது—கண்டாலும்-தப்பிடத்துவந்தாலும்

—பழியாகா-தமக்குப்பழியாகாத—ஆறே- நெறியே, தலை-தலைமை,
(எ-று) ❁ இ-ம்-பாண்டியனே முன்னின்பம்வந்து பின் துன்பம் வ
ருமேயானால் அவ்வின்பம் நீங்கினுற்போலும் இன்பம்நீங்காதிருந்தா
லுங் குற்றமற்றவழியிலே வந்தவின்பமே முதன்மை என்பதாம். (கூ)
☞ ஆறு-எ, தலை ப.

தான்கெடினுந்தக்கார்கேடெண்ணற்கதன் ✻ னுடம்பி ✻
னூன்கெடினுமுண்ணார்கைத்துண்ணற்க-வான்கவிந்த ✻
வையகமெல்லாம்பெறினுமுரையற்க...... ....✻
பொய்யோடிடைமிடைந்தசொல்.................. ......✻

(இ-ள். தான்கெடினும்-தான்கெட்டாலும்—தக்கார்-தன்னைக்கெடு
க்குந்தன்மையாருக்கு— கேடு-பொல்லாங்கை—எண்ணற்க நினையா
திருப்பாயாக—தன்னுடம்பின்-தன்னுடலின்—ஊன்கெடினும் மா
மிசங்கெட்டாலும்— உண்ணார் உண்ணப்படாதார்—கைத்து கைப்
பொருளை—உண்ணற்க உண்ணாதிருப்பாயாக—வான்கவிந்த ஆகாய
மூடிய—வையகமெல்லாம்-உலகமெல்லாம்—பெறினும் பெற்றாலு
ம்—பொய்யோடு பொய்யுடன்—இடைமிடைந்த நெருங்கிய, சொ
ல் சொல்லை—உரையற்க சொல்லாதிருப்பாயாக—(எ-று) ❁ இ-ம்-
தான்கெட்டாலும்பிறர்க்குக்கேடுசெய்யாதே உண்ணத்தகார்வீட்டிலு
ண்ணாதே உலகமெல்லாம்பெற்றாலும் பொய்சொல்லாதே என்பதாம்.
☞ ஒருவன் ஏ-எண்ணற்க-ப-கேட்டை செ-ஒருவன்-எ- உண்ணற்க-
ப-கைத்தை செ ஒருவன் எ உரையற்க ப சொல்லை செ✻ (தருக்கசங்
கிரகம்) [கதிரோன்வளாட்பிற்கட்டணவுடம்பு.] (ய)

பொறையுடைமை முற்றிற்று.

கூ-ட்-அதிகாரம்.

பிறர்மனைநயவாமை.

(அஃதாவது பிறருடைய மனைவியை இச்சியாமையாம்.)

அச்சம்பெரிதாலதற்கின்பஞ்சிற்றளவா.......... ✻
னிச்சநினையுங்காற்கோக்கொலையா-னிச்சலும்... ✻
கும்பிக்கேகூர்த்தவினையாற்பிறன்றார.......... ✻
நம்பற்கநாணுடையார்.................................. ✻

(இ-ள்.) நாணுடையார் நாணமுள்ளோரே—அச்சம் பயம்—பெ
ரிது பெரியது—அதற்கு அப்பயத்திற்கு, இன்பம் இன்பமானது, சி
ற்றளவு சிறியவளவினையுடையது, நிச்சம் நிலைமை, நினையுங்கால்-எண்

னுமிடத்து—கோ-அரசனாலவரும்—கொலையாம்-ஆக்கினையாம்—நி ச்சலும்-தினமும்—குப்பிக்கே-நரகத்திற்கே—கூர்த்த-மிகுந்த—வி னையால்-தீவினைவருமாதலால்—பிறன்-அயலானுடைய—தாரம்-மனை யாளை—நம்பற்க-நம்பாதிருப்பீர்களாக—(எ-று) ❊ இ-ம்-நாணமு டையவர்களே பயம்பெரியது அப்பயத்தால்வரும்இன்பஞ்சிறியதுஇ ராஜசண்டனைவரும் நரகத்துக்கேதுவாம்,பாவம்வருமாகையால்பிறர்ம னையாளை இச்சியாதிருங்களென்பதாம்,ஆள்-மூன்றும்-அஞ்சகன் ☞ நாணுடையார்-எ,அண்மைவிளி-நம்பற்க-ப,பிறன்றாரம்-செ,* [தொ ல்காப்பியம் விளிமரபு-ல-ம்- சூத்திரம்] அண்மைச்சொல்லே யியற் கையாகும். (௧)

* அறம்புகழ்கேண்மைபெருமையிந்நான்கும்... ❊
பிறன்றார நச்சுவார்ச்சேரா-பிறன்றார .... ❊
நச்சுவார்ச்சேரும்பகைபழிபாவமென் .... ❊
றச்சத்தோடிந்நாற்பொருள்................ ❊

(இ-ள்.) பிறன்-அயலானுடைய—தாரம்-மனைவியை—நச்சுவார்-இ ச்சிப்பவர்களை—அறம்-தருமமும்—புகழ்-கீர்த்தியும்—கேண்மை-சி நேகமும்—பெருமை-மேன்மையும்—இந்நான்கும்- இந்தநாற்பொ ருளும்—சேரா-அடையாவாம்—பிறன்-பிறனுடைய—தாரம்-மனைவி யை—நச்சுவார்-இச்சிப்பவர்களை—பகை-விரோதமும்—பழி-இகழ் ச்சியும்—பாவம்-அதருமமும்—என்று-என்றுசொல்லிய — அச்சத் தோடு-பயத்தோடு—இந்நாற்பொருள்-இந்நாற்பொருள்களும்—சே ரும்-அடையும்—(எ-று) ❊ இ-ம்,பிறன்மனைவியைஇச்சிப்பவரை,பு ண்ணியம்,கீர்த்தி,சினேகம்,மேன்மை,இந்நான்குஞ்சேராவாம்,பிறன் மனைவியைஇச்சிப்பவரை,பகை,பழி,பாவம்,பயம்,இந்நான்குஞ்சேரு ம், என்பதாம், ☞ நான்கும்-எ,சேரா-ப, நாற்பொருள்- எ, சேரும் ப, * (தண்டியலங்காரம்) [விரவத்தொடுப்பது சமநிலையாகும்] இது மூவினங்கலந்தசமநிலையணி. (௨)

புக்கவிடத்தச்சம்போதரும்போதச்சந் .... ❊
துய்க்குமிடத்தச்சந்தோன்றாமற்-காப்பச்ச .... ❊
மெக்கானுமச்சந்தருமாலெவன்கொலோ.......... ❊
வுட்கான்பிறனில்புகல்...................... ❊

(இ-ள்.) புக்கவிடத்து- பிறன்மனையாளிடத்திற்போகும்போது— அச்சம்-பயம்—போதரும்போது-வரும்போது—அச்சம்- பயம்— துய்க்குமிடத்து-அநுபவிக்கும்போது—அச்சம்-பயம்— தோன்று மல-புணர்ச்சிதோன்றுமல—காப்பு,காத்தல்—அச்சம்-பயம்—எக்கா லும்-எந்நாளும்— அச்சம்-பயத்தை—தருமால-(கொடுக்கும்) ஆகை யால்—உட்கான்-அஞ்சாதவனாய்—பிறனில-பிறன்மனையாளிடத்து—

புகல்-பிரவேசித்தல்—எவன்கொல்- என்னபலன் குறித்தோ—(எ-று) ❋ இ-ம்- பிறன்மனையாளிடத்துப் போகும்போது பயம். வரும்போது பயம். அநுபவிக்கும்போது பயம். புணர்ச்சி தோன்றாது காத்தலும் பயம். எந்நாளும் பயமாகையால் அஞ்சாது பிறன்மனையாளிடத்துப் பிரவேசித்த லென்னபயன் என்பதாம். ☞ புகல்-எ, எவன்கொல்-ப, பிறனில்-செ. (௩)

காணிற் குடிப்பழியாங் கையுறிற் கால்குறையு ※
மாணின்மை செய்யுங்கா லச்சமா-நீணிரயத் ※
துன்பம் பயக்குமாற் றுச்சாரி நீகண்ட ※
வின்பமெனக் கெனைத்தாற் கூறு ※

(இ-ள்.) துச்சாரி-காமுகனே—காணில் (பிறன்மனையாளைக் கூடுகை யுறிற்) கண்டால்—குடி-தன்குடிக்கு—பழியாம்-இகழ்ச்சியாம்—கையுறில் அகப்படில்—கால்குறையுங்-கால் வெட்டப்படும்—மாண்-பெருமை—இன்மை-இல்லாமை—செய்யுங்கால்-செய்யுமிடத்து, அச்சமாம் பயமாகும்—நீள்-நீண்ட—நிரயத்து-நரகத்தில்—துன்பம் - துயரத்தை—பயக்குமால்-கொடுக்குமாகையால்—நீகண்ட-நீயறிந்த— இன்பம்-இன்பமானது—எனைத்து-எத்தன்மையுடையது—எனக்கு- என்றனுக்கு—கூறு- சொல்லு—(எ-று) ❋ இ-ம். காமுகனே பிறன்மனைவியைக் கூடுகையிற் கண்டால தன்குடிக்குப் பழிப்பாம், அகப்படில் கால்குறைந்துபோம், அநுபவிக்கும்போது பயமாகும்-நரகத்தில் துயரத்தைக் கொடுக்கும் நீகண்ட இன்பம் எத்தன்மை யுடையது எனக்குச் சொல்லு என்பதாம், ☞ நீ-எ- கூறு-ப, இன்பம்-செ-ஆல்-அசை (௪)

செம்மையொன் றின்றிச் சிறியாரினத்தராய்க் ※
கொம்மைவரி முலையாள் தோண்மரீஇ-யும்மை ※
வலியாற் பிறர்மனைமேற் சென்றாரே யிம்மை ※
யலியாகி யாடியுண் பார் ※

(இ-ள்.) செம்மை-செவ்வையான மனம்—ஒன்றின்றி-ஒன்றில்லாது—சிறியவர்-சிறியார்கள்—இனத்தராய்- இனமுடையவராய்—கொம்மை-திரட்சியும்—வரி-தேமலையும் பொருந்திய, முலையாள்-முலைகளையுடைய பெண்ணின்—தோள்-தோள்களை, மரீஇ- பொருந்தி—உம்மை-முற்பிறப்பில—வலியால்-தமது வல்லமையால், பிறர்-அந்நியருடைய, மனைமேல்-மனைவியிடத்தில்—சென்றார்-போனவர்கள்— இம்மை-இப்பிறப்பில்—அலியாகி-பேடிகளாகி—ஆடி-கூத்தாடி—உண்பார்-உண்பார்கள் (எ-று) ❋ இ-ம். நன்மனமில்லாது சிறியவர்கள் இனத்தையுடையவர்களாய் முற்பிறப்பில் தமது வல்லமையால் பிறர்மனைவியைச் சேர்ந்தவர்கள் இப்பிறப்பில் பேடிகளாய்க் கூத்தாடி உண்பார்கள் என்பதாம். ☞ சென்றார்-எ, உண்பார்-, ஏ-அசை. (௫)

பல்லாரறியப்பறையறைந்துநாட்கேட்டுக் ... ... ✻
கல்யாணஞ்செய்துகடிபுக்க — மெல்லியற் ... ... ✻
காதன்மனையாளுமில்லாளாவென்னொருவ ... ... ✻
னேதின்மனையாளைநோக்கு ... ... ✻

(இ-ள்.) நாள்-சுபதினத்தை — கேட்டு-கேட்டு — பல்லார் - பலரும் — அறிய-அறியும்படி — பறையறைந்து - மணப்பறையடித்து — கல்யாணஞ்செய்து-விவாகம்பண்ணி — கடி-காவலில் — புக்க - புகுந்த — மெல்-மெல்லிய — இயல்- இயல்பினையுடைய — காதல்- இச்சிக்கப்பட்ட — மனையாளும்-மனைவியும் — இல்லாளா - மனைவியாக — ஒருவன்-ஒருவன் — ஏதில்-அயலாருடைய — மனையாளை- மனைவியை — நோக்கு- பார்க்கும்பார்வை — என் - யாது — எ-று- ※ இ-ம்- ஒருவன்பிறன்மனையாளைத் தன்மனையாளாகப்பார்க்கும் பார்வையென்ன - என்பதாம். ☞ நோக்கு-எ — என்-ப — ஏதின்மனையாளை-செ. (௬)

அம்பலயலெடுப்பவஞ்சித்தமர்பரீஇ ... ... ✻
வம்பலன்பெண்மரீஇமைந்துற்று-நம்பு ... ... ✻
நிலைமையினெஞ்சத்தான்றுப்புரவுபாம்பின் ... ... ✻
றலைநக்கியன்னதுடைத்து ... ... ✻

(இ-ள்.) அயல்-அயலார் — அம்பலெடுப்ப-புறங்கூற — அஞ்சி-பயந்து — தமர்-உறவினர் — பரீஇ-வருந்த — வம்பலன் - அயலானுடைய — பெண்-மனையாளை — மரீஇ-தழுவி — மைந்து - மயக்கத்தை — உற்று-பொருந்தி — நம்பும்-நம்பியிருக்கிற — நிலைமையில்-நிலையில்லாத — நெஞ்சத்தான்-மனமுடையவன் — துப்புரவு- அநுபவம் — பாம்பின்-பாம்பினது — தலை-தலையை — நக்கியன்னது-நக்கியின்பமடைந்தாற்போலும் — உடைத்து - உடையது — எ-று- ※ இ-ம்-பிறன்மனைவியைத்தழுவிமயக்கமடைந்துநம்புமனமுடையவன் அனுபவம்பாம்பின்தலையை நக்கினாற்போலும்உள்ளது-என்பதாம். ☞ துப்புரவு-எ — உடைத்து-ப. (௭)

பரவாவெளிப்படாபல்லோர்கட்டங்கா ... ... ✻
வுரவோர்கட்காமநோயோஒ-கொடிதே ... ... ✻
விரவாருணாணுப்படலஞ்சியாது ... ... ✻
மொழியாதுள்ளாறிவிடும் ... ... ✻

(இ-ள்.) உரவோர்கள்-விவேகிகள் — காமம்- காமமானது — பரவா-பரவாது — வெளிப்படா-வெளியாகாது — பல்லோர்கண்- பலரிடத்தினும் — தங்கா-தங்காது — நோய்-அக்காமத்தால்வருநோயானது — ஓஓ கொடிது - மிகவுங்கொடிது — விரவாருள் - கலவாதவரிடத்து — நா

னுப்படல்-வெட்கமடைந்து—அஞ்சி-பயந்து—யாதும்-யாதொன்றும்—உணராது சொல்லாது—உள்ளாறிவிடும்-உள்ளுக்குள்ளேதணியும்—என்று. ❊ இ-ம்-அறிவுடையோர்கள் காமமானது பரவாமலும், வெளிப்படாமலும், பலரிடத்துரைத்தங்காமலும், கலவாரிடத்து அஞ்சிச் சொல்லாது உள்ளுக்குள்ளேதணியும், என்பதாம். ☞ நோய் எ—ஆறிவிடும் ப—எ அசை—விரவாருள்என்றது பகைவரிடத்தென்பாருமுளர்— (காக்கைபாடினியார்சூத்திரம்) "குறிநெடிலளபெடைக்குறிப்பாகும்மே.,, இவ்விதியால் ஐஐகொடிது நெடிலளபெடை. (அ)

அம்புமழலுமவிர்கதிர்ஞாயிறும் ... ... ❊
வெம்பிச்சுடினும்புறஞ்சுடும்-வெம்பிக் ... ... ❊
கவற்றிமனத்தைச்சுடுதலாற்காம ... ... ❊
மவற்றினுமஞ்சப்படும் ... ... ❊

(இ-ள்.) அம்பும் அத்திரமும்—அழலும் அக்கினியும்—அவிர் பிரகாசிக்கும்—கதிர் கிரணங்களையுடைய—ஞாயிறும் சூரியனும்—வெம்பி கனன்று—சுடினும் சுட்டாலும்—புறஞ்சுடும் மேலேசுடும்—வெம்பி கனன்று—மனத்தை இதயத்தை—கவற்றி கவலைப்படுத்தி—சுடுதலால் சுடுகின்றபடியால்—காமம் காமமானது—அவற்றினும் அம்பு நெருப்புசூரியனைப்பார்க்கிலும்—அஞ்சப்படும் கொடிதென்று அஞ்சப்படும்—என்று. ❊ இ-ம்-காமமானது அம்பிலும்அக்கினியிலும் சூரியனிலும்கொடிதுஎன்பதாம். காமம் ☞ எ—அஞ்சப்படும் ப.

ஊருளெழுந்தவுருகெழுசெந்தீக்கு ... ... ❊
நீருட்குளித்துமுயலாகு-நீருட் ... ... ❊
குளிப்பினுங்காமஞ்சுடுமேகுன்றேறி ... ... ❊
யொளிப்பினுங்காமஞ்சுடும் ... ... ❊

(இ-ள்.) ஊருள் ஊரில்—எழுந்த எழும்பிய—உரு வெப்பம்—செழு பிரகாசமிகுந்த—செந்தீக்கு செந்நெருப்புக்கு—நீருள் தண்ணீரில்—குளித்தும் மூழ்கியும்—உயலாகும் பிழைக்கலாம்—காமம் காமமானது—நீருள் தண்ணீரில்—குளிப்பினும் குளித்தாலும்—சுடும் சுட்டுவிடும்—காமம் காமமானது—குன்றேறி மலைமேலேறி—ஒளிப்பினும் - ஒளித்தாலும்—சுடும்- சுட்டுவிடும்—என்று. ❊ இ-ம்-தாமத்தீக்குத்தப்பலாம் காமத்தீக்குத்தப்பலாகாது என்பதாம். தூமம் என்பது புகை— ☞ காமம் எ—சுடும் ப—எ அசை. (௯)

பிறர்மனைநயவாமை—முற்றிற்று.

௰-ம்-அதிகாரம்.

ஈகை.

அஃதாவது—கொடுக்குந்திறங்கூறுதலாம்.

இல்லாவிடத்துமியைந்தவளவினா.......................*
லுள்ளவிடம்போற்பெரிதுவந்து-மெல்லக்.............*
கொடையொடுபட்டகுணனுடைமாந்தர்க்..............*
கடையாவாமாண்டைக்கதவு..................................*

(இ-ள்.) இல்லா- தமக்கில்லாத—இடத்தும்- காலத்தும்—இயைந்த- பொருந்திய—அளவினால்- அளவால்—உள்ளவிடம்போல்- இருக்கிற காலம்போல—பெரிது-மிகவும்—உவந்து-மகிழ்ந்து, மெல்ல நேராக—கொடையொடு- கொடுத்தலுக்குடன்—பட்ட- பொருந்திய—குணன்-நற்குணங்கள்—உடை- உடைத்தாகிய—மாந்தர்க்கு-மனிதர்க்கு—ஆண்டை-சுவர்க்கவாசலின்—கதவு-கதவுகள், அடையாவாம்-அடைக்காவாம்— (எ-று) ❋ இ-ம் கொடுத்தவர்கட்குச் சுவர்க்கவாசற்கதவுகளடைக்காவாம் என்பதாம். ☞ கதவு-எழுவாய்-அடையாவாம்-பயனிலை.

முன்னரேசாநாண்முனிதக்கமூப்புள......................*
பின்னரும்பீடழிக்குநோயுள-கொன்னே...................*
பரவன்மின்பற்றன்மின்பாத்துண்மின்யாதுங்..........*
கரவன்மின்கைத்துண்டாம்போழ்து.........................*

(இ-ள்.) சாநாள்- சாகின்றநாள்—முன்னர்- முன்னது—முனிதக்க- வெறுக்கத்தக்க—மூப்புள- விருத்தாப்பியமுண்டு—பின்னரும்- பின்னும்—பீடு- பெருமையை—அழிக்கும்- கெடுக்கும்—நோயுள-வியாதியுண்டு—கொன்னே-பயனில்லாமல்—பரவன்மின்- பரவாதிருங்கள்—கைத்துண்டாம்போழ்து-திரவியமுண்டானகாலத்து—பற்றன்மின்-பற்றாதிருங்கள்—பாத்து-பகுத்து—உண்மின்-உண்ணுங்கள்—யாதும்-யாதொன்றையும்—கரவன்மின்-ஒளியாதுகொடுங்கள் (எ-று) ❋ இ-ம்-பொருளுண்டாங்காலத்து ஒளியாது கொடுத்துண்ணுங்கள் என்பதாம். ☞ நீவிர்-தோன்றாஎழுவாய், பரவன்மின்முதலிய-பயனிலை, ஏகாரம்-அசை. (உ)

நடுக்குற்றுத்தற்சேர்ந்தார் துன்பந்துடையார்..........*
கொடுத்துத்தான்றுய்ப்பினுமீண்டுங்கா-லீண்டி.........*
மிடுக்குற்றுப்பற்றினுநில்லாதுசெல்வம்..................*
விடுக்கும்வினையுலந்தக்கால்..................................*

(இ-ள்.) நடுக்கு-வறுமையால்நடுக்கும்—உற்று-பொருந்தி—தன்-தன்னை—சேர்ந்தார்-சேர்ந்தவரது—துன்பம்-துன்பங்களை—துடை

யார்-நீக்குகின்றிலார்—கொடுத்து-பிறருக்குக்கொடுத்து—தான்-தான் —துய்ப்பினும்-உண்டாலும்—ஊண்டுங்கால்- வளரும்காலமாயின்—ஊண்டும்-வளரும்—இதிக்கு-வலிமை— உற்று- பொருந்தி—பற்றினும்-பற்றினராயினும்—விளை-தான்முன்புசெய்த நல்வினை, உலந்தக்கால்-நீங்கினால்—செல்வம்-செல்வமானது—நில்லாது- நிலையாமல்—விடுக்கும்-விட்டுப்போம்—(எ-று) இ-ம்-கொடாதவர்கள் பிறர்க்குக்கொடுத்துத் தாங்களுண்டாலும் பொருள்வளருங்காலத்தில்வளரும் நல்வினை நீங்கிற் செல்வங்கெடும் என்பதாம், ☞ செல்வம்-எ, விடுக்கும்-ப, (நன்னூல் பொதுவியல்) எற்புழி யெடுத்துடன் கூட்டுறுமடியவும்-யாப்பீறிடைமுத லாக்கினும்பொருளிசை-மாட்சியுமாறு வடியவுமடிமறி இவ்விதியால்இஃது அடிமறிமாற்றுப்-பொருள்கோள். (௩)

இம்மியரிசித்துணையானும்வைகலு.................. *
நும்மிலியைவகொடுத்துண்மி-னும்மைக்.............. *
கொடாஅதவரென்பர்குண்டுநீர்வையத்................. *
தடாஅவடுப்பினவர்.................................. *

(இ-ள்.) இம்மியரிசி-மத்தங்காய்ப்புல்லரிசி—துணையானும்-அளவாயினும்—வைகலும்-நாடோறும்—நும் உம்முடைய—இல் மனையிடத்து—இயைவ- பொருந்தியவைகளை—கொடுத்து- பிறருக்குக்கொடுத்து—உண்மின்-உண்ணுங்கள்—குண்டு- ஆழ்ந்த—நீர்- கடல்சூழ்ந்த வையத்து-பூமியில்—அடாஅ சமையாத—அடுப்பினவர்-அடுப்பினையுடையவராயிருந்துதிரியுமவரை—உம்மை- முற்பிறப்பில்—கொடாஅ, தவர்-வழங்காதவர்—என்பர் என்றுசொல்லுவர் அறிவுடையார், (எ-று) இ-ம்- நாடோறும் அணுவளவாவது கொடுத்துண்ணுங்கள் யாசகரை முற்பிறப்பில் கொடாதவர்களென்றுசொல்லுவார்கள் என்பதாம். ☞ நீவிர்-எ, உண்மின்-ப. (௪)

மறுமையுமிம்மையுநோக்கியொருவ..................... *
குறுமாறியைவகொடுத்தல்-வறுமையா................. *
வீதலிசையாதெனினுமிரவாமை....................... *
யீதலிரட்டியுறும்.................................. *

(இ-ள்.) மறுமையும்-மறுபிறப்பையும்—இம்மையும் - இப்பிறப்பையும்—நோக்கி- ஆராய்ந்து—ஒருவற்கு - ஒருவனுக்கு—இயைவ-பொருந்தியவைகளை—கொடுத்தல- வழங்கல்—உறுமாறு - பொருந்தும்வழி—வறுமையால்-தரித்திரத்தினால்—ஈதல்-கொடுத்தல்—இசையாதெனினும்-கூடாதாயினும்— இரவாமை-யாசியாதிருத்தல்—ஈதல்-கொடுத்தலினும்—இரட்டி-இருமடங்காக, உறும்-அடையும்—(எ-று) இ-ம்-கொடுத்தல்கூடாதிருந்தாலுந்தான்யாசியாதிருத்தல்கொடுத்தலினுமிரண்டுபங்கதிகமென்பதாம், ☞ இரவாமை-எ, இரட்டியுறும்-ப. (௫)

நடுவூருள்வேதிகைச்சுற்றுக்கோட்புக்க... ... ...❋
படுபனையன்னர்பலர்நச்ச-வாழ்வார்... ... ...❋
குடிகொழுத்தக்கண்ணுங்கொடுத்துண்ணாமாக்க... ...❋
இடுகாட்டுளேற்றுப்பனை... ... ...❋

(இ-ள்.) நடுவூருள்-ஊர்நடுவில்—வேதிகை- திண்ணை—சுற்றுக்கோட்புக்க- சூழ்ந்திருக்க—படு- பொருந்திய—பனையன்னர்- காய்த்தபனைமரத்துக்கொப்பானவர்—பலர்நச்ச-பலபேர்விரும்ப—வாழ்வார்-வாழ்வர்கள்—குடி-தங்குடி—கொழுத்தக்கண்ணும்- வளமிகுந்தாலும்—கொடுத்து-வழங்கி—உண்ணா- உண்ணாத—மாக்கள்- மனிதர்கள், இடுகாட்டுள்- சுடுகாட்டிலிருக்கும்—ஏற்றுப்பனை-ஆண்பனையையொப்பவர்—(எ-று) ❁ இ-ம்-பலருமிச்சிக்க வாழ்பவர்கள் நடுவூரிற்காய்த்த பனைமரத்திற்கொப்பாவர் கொடுத்துண்ணாதவர்கள் சுடுகாட்டிலிருக்கும் ஆண்பனைக்கொப்பாவார்கள்-என்பதாம். ☞ படுபனையன்னர்-எ, வாழ்வார்-ப, மாக்கள்-எ, ஏற்றுப்பனையன்னர்-ப. (௬)

பெயற்பான்மழைபெய்யாக்கண்ணுமுலகம்... ... ...❋
செயற்பாலசெய்யாவிடினுங்-கயற்புலால்... ... ... ❋
புன்னைகடியும்பொருகடற்றண்சேர்ப்ப... ... ...❋
வென்னையுலகுய்யுமாறு... ... ...❋

(இ-ள்.) கயல்-கயல்மீனையும்—புலால்-புலால்நாற்றத்தையும்—புன்னை-புன்னைப்பூவின்மணமானது, கடியும்-நீக்கும், பொரு-அலைமோதப்பட்ட—தண்-குளிர்ந்த—கடல்-கடலையும்—சேர்ப்ப- கரையையுமுடையபாண்டியனே—பெயல்- பெய்தல்—பால் - பகுப்பாகிய—மழை- மழையானது—பெய்யாக்கண்ணும்- பெய்யாதவிடத்தும்—உலகம்-உயர்ந்தோர்—செயற்பால-செய்யத்தக்கவைகளை—செய்யாவிடினும்-செய்யாதவிடத்தும்—உலகு-உலகமானது-உய்யுமாறு-பிழைக்கும்வழி—என்னை- என்ன—(எ-று) ❁ இ-ம்-பாண்டியனே மழைபெய்யாமலும்பெரியோர்கள்செய்யத்தக்கவைகளைச்செய்யாமலும்விட்டால் உலகம்பிழைக்கும்வழியில்லை என்பதாம், ☞ உய்யுமாறு-எ, என்னை-ப. (௭)

ஏற்றகைமாற்றாமையென்னுந்தாம்வரையா ... ...❋
தாற்றாதார்க்கீவதாமாண்கட-னாற்றின்... ... ...❋
மலிகடற்றண்சேர்ப்பமாறீவார்க்கீதல்... ... ❋
பொலிகடனென்னும்பெயர்த்து... ... ...❋

(இ-ள்.) ஆற்றின் - யாற்றினால்—மலி - நிறைந்த—தண்- குளிர்ச்சிபொருந்திய—கடல்-கடலையும்—சேர்ப்ப - கரையையுமுடையபாண்டியனே—ஏற்ற-யாசிக்கின்ற—கை-கைக்கு—மாற்றாமை- இல்லையென்றது—என்னும்- யாதாகிலும்—தாம்- தமக்குள்ள—வரையான்-

அளவால்—ஆற்றுதார்க்கு - தரித்திரருக்கு—ஈவதாம் - கொடுப்பதா ம்—ஆண்கடன் - ஆண்டகைமையாவது—மாறீவார்க்கு - கைம்மாறு செய்வார்க்கு—ஈதல்-கொடுத்தல்—பொலி- பிரகாசம்பொருந்திய—கடனென்னும்பெயர்த்து- கடனென்றுசொல்லும்பெயரினையுடையது—(எ-று) ※ இ-ம்-பாண்டியனே வறியவர்க்குக்கொடுத்தலே கொடையாகும்-செல்வர்க்குக்கொத்தலேகடனாகும் என்பதாம். ☞ ஆண்கடன்-எ, ஈவது-ப, கடன்-எ, பெயர்த்து-ப. (அ)

இறப்பச்சிறிதென்னாதில்லென்னாதென்று ...... *
மறப்பயன்யார்மாட்டுஞ்செய்க-முறைப்புகவி ...... *
னையம்புகூஉந்தவசிகடிஞைபோற் ...... *
ஐயநிறைத்துவிடும் ...... *

(இ-ள்.) இறப்ப-மிகவும்—சிறிதென்னாது-சிறியதென்றுசொல்லாது—இல்லென்னாது-இல்லையென்றுசொல்லாது—என்றும்- எப்பொழுதும்—அறப்பயன்-தருமப்பலனை—யார்மாட்டும்- யாவரிடத்தும், செய்க- செய்யக்கடவாய்—முறை- முறையாக—புகவின்- வாயில்கடோறும்—புகூஉம்-புகுந்து—ஐயம்-பிச்சையேற்கும்—தவசி- தவசிகையிலிருக்கும்—கடிஞைபோல்-பாத்திரம்போல்—ஐய-மெல்ல—நிறைத்துவிடும்-நிறைத்துவிடும்—(எ-று) ※ இ-ம்-யாவரிடத்துந் தருமத்தைச்செய்யக்கடவீர் அத்தருமப்பலன் யாசிப்போர்பாத்திரம்போல நிறைவுபெறும்- என்பதாம், ☞ நீவிர் தோன்றா எழுவாய்-செய்க-ப, அறப்பயனை-செ. (கூ)

கடிப்பிடுகண்முரசங்காதத்தோர்கேட்ப ...... *
ரிடித்துமுழங்கியதோர்யோசனையோர்-கேட்ப ...... *
ரடுக்கியமூவுலகுங்கேட்குமேசான்றோர் ...... *
கொடுத்தாரெனப்படுஞ்சொல் ...... *

(இ-ள்.) கடிப்பு-குறுந்தடியினால்—இடு-அடிக்கப்பட்ட—கண்-இடமகன்றவாயினையுடைய—முரசம்-பேரிகைச்சத்தம்—காதத்தோர்-காதவழியிலுள்ளோர்—கேட்பர் - கேட்பார்கள்—இடித்து - இடியிடித்து—முழங்கியது-சத்திப்பது—ஓர்-ஒரு—யோசனையோர்-யோசனைவழியிலுள்ளோர்—கேட்பர்-கேட்பார்கள்—சான்றோர் - பெரியோர்களுக்கு—கொடுத்தாரெனப்படுஞ்சொல் - கொடுத்தாரென்றுசொல்லப்படுஞ்சொல்லானது—அடுக்கிய-ஒன்றன்மேலொன்றாக அடுக்கிய—மூவுலகும்-சுவர்க்க, மத்திய, பாதலம், என்னு மூவுலகிற்கும்—கேட்கும்-கேட்கும்(எ-று) ※ இ-ம்- பெரியோர்களுக்குக் கொடுத்தாரென்று சொல்லப்படுஞ்சொல்லானது-திரிலோகத்திற்குங்கேட்கும் என்பதாம், ☞ சொல்-எ, கேட்கும்-ப, ஏகாரம்-அசை. (ய)

ஈகை—முற்றிற்று.

௰க-ம்-அதிகாரம்.

பழவினை.

அஃதாவது—முற்பிறப்பிற்செய்தவினையாம்.

பல்லாவுளுய்த்துவிடினுங்குழக்கன்று .... *
வல்லதாந்தாய்நாடிக்கோடலைத்-தொல்லைப் ...... *
பழவினையுமன்னதகைத்தேதற்செய்த .... *
கிழவனைநாடிக்கொளற்கு .... *

(இ-ள்.) பல்லாவுள்-பலபசுக்களுள்—குழக்கன்று இளங்கன்றை—உய்த்துவிடினும்-செலுத்திவிடினும்—தாய்- தன்றாயை—நாடி-தேடி—கோடலை-கொள்ளுதலில், வல்லதாம் வல்லமையுடையதாம்—தொல்லை முன்செய்த—பழவினையும்-ஊழ்வினையும்— தன்-தன்னை—செய்த-செய்தற்கு—கிழவனை-உரியவனை—நாடி-ஆராய்ந்து, கொளற்கு-பற்றிக்கொள்ளுதற்கு—அன்னதகைத்தே-அத்தன்மையதாம், (எ-று) இ-ம்- கன்றுபசுவைத்தேடிக்கொள்ளுதல்போல - வினையுஞ்-செய்தவனைதேடிக்கொள்ளும்- என்பதாம். ☞ பழைமவினை-எ, அன்னதகைத்தே-ப. (க)

உருவுமிளமையுமொண்பொருளுமுட்கு ...... *
மொருவழிநில்லாமைகண்டு-மொருவழி ...... *
யொன்றேயுமில்லான்வாழ்க்கையுடம்பிட்டு ...... *
நின்றுவீழ்ந்தக்கதுடைத்து .... *

(இ-ள்.) உருவும்-அழகும், இளமையும்-இளமைப்பருவமும், ஒள்-ஒளிபொருந்திய—பொருளும் திரவியமும்—ஒருவழி - ஒருபிறப்பினும்—நில்லாமை-நில்லாது—உட்கும் கெடுதலை—கண்டும்- பார்த்தும்—ஒன்றேயும்-ஒருநல்வினையும்—இல்லாதான்-செய்யாதவன்—வாழ்க்கை-வாழ்க்கை—உடம்பு-உடம்பினை—இட்டு-எடுத்து— நின்று-நின்றவளவினனாய்—வீழ்ந்தக்கது வீழ்ந்தகுதியை—உடைத்து உடையது—(எ-று) இ-ம்-ஒருபிறப்பினுந்தருமஞ்செய்யான்வாழ்வுகெடும்-என்பதாம். ☞ வாழ்க்கை-எழுவாய்-உடையது-பயநிலை. (உ)

வளம்படவேண்டாதார்யாருமில்லை .... *
யளந்தனபோகமவரவ-ராற்றான் .... *
விளங்காய்திரட்டினாரில்லைக்களங்கனியைக் ...... *
காரெனச்செய்தாருமில் .... *

(இ-ள்.) வளம்-செல்வம்—பட-உண்டாக—வேண்டாதார்-விரும்பாதார்யார்—யாரும்- யாவரும்— இல்லை-இல்லை—அவரவர்-அவரவர்செய்த—ஆற்றால்-வினையால்—போகம்-அவரவர்க்கநுபோகம்—அளந்த

ணைகற்பித்துக்கிடந்தன, விளங்காய்-விளங்கனியை— திரட்டினார்-திரட்டினவர்—இல்லை-இல்லை, களங்கனியை-களவின்கனியை— காரெணக் கறுப்பாக—செய்தாரும்-செய்தவரும்—இல்-இல்லை—(எ-று) ❋ இ-ம். செல்வம்வேண்டாதாரியாவருமில்லை அவரவர்வினையின்படி அமைக்கப்பட்டிருக்கின்றது என்பதாம், ☞ போகம் எ, அளந்தன-ப, (தண்டியலங்காரம்.) [பொருளணியியல்.] [முத்தகச்செய்யுட் டனிநின்று முடியும், இஃது முத்தகச்செய்யுள் இன்னிசைவெண்பா.] (௩)

உறற்பால நீக்கலுறுவர்க்குமாகா ❋
பெறற்பாலனையவுமன்னவாமாரி ❋
வறப்பிற்றருவாருமில்லையதனைச் ❋
சிறப்பிற்றணிப்பாருமில் ❋

(இ-ள்) உறற்பால-உறும்பகுதியானதீவினைகளை— நீக்கல்- நீக்குதல்—உறுவர்க்கும்- தபோதனர்க்கும்—ஆகா-இயலாவாம்— பெறற்பால்-பெறும்பகுதியானநல்வினைகள்—அனையவும்-எல்லாம், அன்னவாம்-அத்தன்மையாம்—(அதுபோல)—மாரி-மழை—வறப்பில்-மழுத்தகாலத்தில்—தருவாரும்-அதனைப்பெய்விப்பாரும்—இல்லை- இல்லை—சிறப்பில்-அம்மழை பெய்யுங்காலத்தில்—அதனை-அதை—தணிப்பாரும்-பெய்யாமனிறுத்தவல்லாரும்—இல்-இல்லை— (எ-று) ❋ இ-ம்-வந்ததுன்பங்களை நீக்குதலும் இருக்கிறவின்பங்களைப் போக்குதலும் பெரியோர்க்குமரிது-என்பதாம் ☞ நீக்கல்-எ, ஆகா-ப. (௪)

திணைத்துணையராகித்தந்தேசுள்ளடக்கிப் ❋
பனைத்துணையார்வைகலும்பாடழிந்து-வாழ்வர் ❋
நினைப்பக்கிடந்ததெவனுண்டாமேலை ❋
வினைப்பயனல்லாற்பிற ❋

(இ-ள்.) திணை-திணையினுடைய—துணையராகி- அளவினையுடையவராய்—தம்-தமது—தேசு-ஒளியை—உள்-உள்ளே—அடக்கி- அடங்கச்செய்து—பனை- பனையினுடைய— துணையார்- அளவினையுடையார்—வைகலும்- நாடோறும்—பாடு-பெருமை—அழிந்து- கெட்டு—வாழ்வர்-வாழாநிற்பர்—நினைப்ப-விசாரிக்க—கிடந்தது- தக்கது—எவன்-என்—உண்டாம்-உளதாம்—மேலை-முன்செய்த—வினைப்பயன்-வினையின்பயன்—அல்லால்-அல்லது, பிற-வேறொன்றுமில்லை,(எ-று) ❋ இ-ம்-வினைவசத்தால்- பனையளவுபெருமையையுடையவரும் - தினையளவுபெருமையினையுடையவராயடங்கிநிற்பர்-என்பதாம். ☞ பனைத்துணையார்-எ, வாழ்வர் ப. (௫)

பல்லான்றகேள்விப்பயனுணர்வார்வீயவுங் ❋
கல்லாதார்வாழ்வதறிதிரேற்-கல்லாதார் ❋

சேதனமென்னுமச்சேறகத்தின்மையார் .... ❊
கோதென்றுகொள்ளாதாங்கூற்று ... ... ❊

(இ-ள்.) பல்-பல நூல்களையும்—ஆன்ற-கற்றமைந்த—கேள்வி- கல்வியால்வரும்—பயன்-பயனை—உணர்வார்-அறிவார்—வீயவும்-இறக்கவும்—கல்லாதார்- கல்லாதவர்—வாழ்வது- உயிர்வாழ்வதும்—அறிதிரோல்-காரணமறிவீராகில்—கல்லாதார்- கல்லாதவர்—சேதனமென்னும்-அறிவென்னும்—அச்சேறு-அச்சாரம்—அகத்து- மனதில்—இன்மையால்-இல்லாமையால்—கூற்று- கூற்றுவனது—கோதென்று- அவனைச்சக்கையென்றெண்ணி— கொள்ளாதாம் - கொள்ளமாட்டாது—(எ-று) ❊ இ-ம். இயமனானவன்கற்றோரைச்சாரமாகவும்,மற்றோரைச்சக்கையாகவும் கொள்வான் என்பதாம். ☞ கூற்று -எ, கொள்ளாதாம்-ப. (சு)

இடும்பைகூர்நெஞ்சத்தாரெல்லாருங்காண ...... ❊
நெடுங்கடைநின்றுழல்வதெல்லா-மடம்பம்பூ ...❊
வன்னங்கிழிக்குமலைதடற்றண்சேர்ப்ப............. ❊
முன்னைவினையாய்விடும்... ... ... ❊

(இ-ள்.) அடம்பம்-அடம்பினுடைய—பூ-பூக்களை—அன்னம்- அன்னங்கள்—கிழிக்கும்-கிழித்துவிளையாடும்—அலை- அலைகள்பொருந்திய—தண்-குளிர்ந்த—கடல்-சமுத்திரத்தையும்—சேர்ப்ப- கரையையுமுடையபாண்டியனே—இடும்பை-துன்பம்—கூர்-மிக்க— நெஞ்சத்தார்-நெஞ்சினையுடையார்—எல்லாரும்-எல்லாரும்—காண- அறிய—நெடும்-நெடிய—கடை-வாயில்கடோறும்—நின்று-இரந்துநின்று—உழல்வது-திரிவது—எல்லாம்-யாவும்—முன்னை-முன்செய்த—வினையாய்விடும்-தீவினைப்பயனாய்விடும்—(எ-று) ❊ இ-ம். பாண்டியனே இப்பிறப்பில்யாசிக்குஞ்செய்கைமுற்பிறப்பிற்செய்வினையாம்,என்பதாம். ☞ எல்லாம்-எ, வினையாய்விடும்-ப, (தண்டியலங்காரம்) [பொதுவணியியல்] "தெளிவெனப்படுவது பொருள்புலப்பாடே," இது தெளிவணி. (எ)

அறியாருமல்லரறிவதறிந்தும் .. .. ❊
பழிபோடுபட்டவைசெய்தல்-வளியோடி ❊
நெய்தனறவுயிர்க்குநீள்கடற்றண்சேர்ப்ப ❊
செய்தவினையான்வரும் .... ❊

(இ-ள்.) வளியோடி-காற்றின்வழியேயோடி—நெய்தல்-நெய்தற்பூவினது—நறவு- வாசனை—உயிர்க்கும்-கமழாநின்ற—நீள்- நீண்ட—தண்-குளிர்ந்த—கடல்-சமுத்திரத்தையும்—சேர்ப்ப - கரையையுமுடையபாண்டியனே—அறியாரும்-அறியாதாரும்—அல்லர்- அல்லர்,

அறிவது-அறியத்தக்க நூல்களின் பலனை-அறிந்தும்- அறிந்திருந்தும்—பழியோடு-பழியுடனே—பட்டவை-பொருந்தியவை— செய்தல்-சிலர்செய்தல்—செய்த- முன்செய்த—வினைபால்- தீவினைப்பயனால், வரும்-வரும்—(எ-று) ※ இ-ம். பாண்டியனே நூற்களையறிந்தும் தீவினைகளைச் செய்தல்முன்செய்வினைவசமாம்-என்பதாம். ☞ செய்தல்-எ, வரும்-ப. (௮)

ஈண்டுநீர்வையத்துளெல்லாருமெத்துணையும் ... ※
வேண்டார்மற்றீயவிழைபய-னல்லவை ....※
வேண்டினும்வேண்டாவிடினுமுறற்பால ... ...※
தீண்டாவிடுதலரிது ... ... ※

(இ-ள்.) ஈண்டுநீர்வையத்துள்-விரிநீர்சூழ்ந்தஉலகத்துள்—எல்லாரும்-யாவரும், எத்துணையும்-தமக்கெவ்வளவும்—தீய-கொடியவை—விழை-கலந்த—பயன்-துன்பங்களை—வேண்டார்-வேண்டியிரார்-நல்லவை-நல்வினைப்பயன்களை—வேண்டினும்- விரும்பினராயினும், வேண்டாவிடினும்-விரும்பாவிட்டாலும்—உறற்பால- வரும்வினைகள், தீண்டா-அவனைத்தீண்டாமல், விடுதல்-நீங்குதல்—அரிது-அரிது, (எ-று) ※ இ-ம். யாவரும்நல்வினைதீவினைகளைவேண்டினும்வேண்டாவிடினும்வரும்வினைகள்வராமலிராவாம்-என்பதாம். ☞ விடுதல்-எ, அரிது-ப, மன்-ஒழியிசை. (௯)

சிறுகாபெருகாமுறைபிறழ்ந்துவாரா ....※
வுறுகாலத்தூற்றாகாவாமிடத்தே-யாகுஞ் ....※
சிறுகாலைப்பட்டபொறியுமதனால் ....※
இறுகாலத்தென்னைபரிவு ....※

(இ-ள்.) சிறுகாலை-முற்காலத்து—பட்ட-உண்டாகிய—பொறியும்-நல்வினைகளும்—சிறுகா-சிறுகாவாம்—பெருகா- பெருகாவாம்—முறை-வரிசை—பிறழ்ந்து-மாறி—வாரா-வாரவாரம், உறுகாலத்து- துன்புறுங்காலத்து—ஊற்றாகா-வந்துதங்காவாம்—ஆமிடத்து-ஆங்காலத்து—ஆகும்-ஆகும், அதனால்- அத்துணையேஆதலால்—இறுகாலத்து-தீவினைப்பயத்தால்(கேடுவருங்காலத்து) பரிவு- வருந்துவது, என்னை-யாது—(எ-று) ※ இ-ம். நல்வினைகள்சிறுகலும் பெருகலும் முறைமாறிவருதலுமில்லை, வரும்போதுவரும்தீவினைகள்வந்தபோதுவருந்துவதென்ன-என்பதாம். ☞ பரிவு-எ, என்னை-ப, (தண்டியலங்காரம்) [பொருளணியியல்] "சொல்லினும்பொருளினுஞ்சுவைப்படவின்பம், இஃது (இன்பவணி.) (௰)

பழவினை - முற்றிற்று.

௰௨-ம் அதிகாரம்.

மெய்ம்மை.

அஃதாவது-உண்மைகூறுதலாம்.

இசையாவொருபொருளில்லென்றல்யார்க்கும் ...
வசையன்றுவையத்தியற்கை-நசையழுங்க ......
நின்றோடிப்பொய்த்தனிரைதொடீஇசெய்ந்நன்றி
கொன்றாரிற்குற்றமுடைத்து ....

(இ-ள்.) நிரைதொடீஇ-வரிசையாகவணிந்தவளையல்களையுடையவளே—இசையா-கிடையாத—ஒருபொருள்-ஒருபொருளை, இல்லென்றல்-இல்லையென்றுசொல்லல்—யார்க்கும்-யாவர்க்கும்—வசையன்று-குற்றமல்ல—வையத்து-பூமியில்—இயற்கை-இயல்பாகும்—நசை-ஆசை—அழுங்க-கெட—நின்றோடி-நெடுங்கால்நின்று—பொய்த்தல்-பொய்சொல்லல்—செய்ந்நன்றி-பிறர்செய்தவுதவியை—கொன்றாரில்-கொன்றவரைப்பார்க்கிலும்—குற்றம்-குற்றம்—உடைத்து-உடையதாம்—(எ-று) ※ இ-ம்-பெண்ணேஒருவனைப்பலகால்திரியவைத்தில்லையென்றுசொல்லல்செய்ந்நன்றிஅழித்ததிலுங்குற்றமுடையது-என்பதாம், ☞ பொய்த்தல்-எ, குற்றமுடைத்து-ப. (௧)

தக்காருந்தக்கவரல்லாருந்தந்நீர்மை ....
யெக்காலுங்குன்றலிலராவ-ரக்காரம் ... ...
யாவரோதின்னினுங்கையாதாங்கைக்குமாந் ... ...
தேவரோதின்னினும்வேம்பு ... ...

(இ-ள்.) தக்காரும்-பெரியோரும்—தக்கவரல்லாரும்-சிறியோரும்—தம்-தமது—நீர்மை-குணங்களில்—எக்காலும்-எந்நாளும்—குன்றல்-குறைதல்—இலராவர்-இல்லாராவர்—அக்காரம் வெல்லத்தை, யாவர்-எவர்—தின்னினும்-தின்றாலும்—கையாது-கசக்காது—வேம்பு-வேம்பை—தேவர்-தேவர்கள்—தின்னினும்-தின்றாலும்—கைக்கும்-கசக்கும்—(எ-று) ※ இ-ம்-பெரியோருஞ்சிறியோருந்தங்கள்குணங்களில்குறைவுபடார்கள்-என்பதாம், ☞ குன்றல்-எ, இலராவர்-ப, ஆம்-உம்-ஏ-உம்-அசைகள். (௨)

காலாடுபோழ்திற்கழிகிளைஞர்வானத்து ... ...
மேலாடுமீனிற்பலராவ-ரேலா ... ...
விடரொருவருற்றக்காலீர்ங்குன்றநாட ... ...
தொடர்புடையேமென்பார்சிலர் ... ...

(இ-ள்.) ஈர்ங்குன்ற-குளிர்ந்தமலையையும்—நாட-நாட்டையுமுடையபாண்டியனே, ஒருவர்-ஒருவர், காலாடுபோழ்தில்-(செல்வமுற்றுச்)

சஞ்சரிக்குங்காலத்து—கழி-மிகுந்த, கிளைஞர்-உறவினர்—வானத்து-ஆகாயத்து—மேலாடு-மேலேசஞ்சரிக்கும்—மீனின்-நட்சத்திரங்களைப்பார்க்கிலும்—பலராவர்-அநேகராவர்—எலா-பொருந்சாத—இடர்-துன்பங்களை—உற்றக்கால்-அடைந்தால், சிலர்-சிலர்மாத்திரம்—தொடர்பு-சம்பந்தம்—உடையோம்-உடையோம்—என்பார்-என்றுசொல்லுவார்கள்—(எ-று) ❁ இ-ம்-பாண்டியனே ஒருவர்நடந்து திரியுங்காலத்துப்பலபேருறவினராவார்கள் துன்பமடைந்தாற்சிலபேருறவினராவார்கள்-என்பதாம், ☞ கிளைஞர்-எ, ஆவர்-ப, சிலர்-எ, என்பார்-ப,

வடுவிலாவையத்துமன்னியமூன்றி ....*
னடுவணதெய்தவிருதலையு-மெய்து ....*
நடுவணதெய்தாதானெய்துமுலைப்பெய் ....*
தடுவதுபோலுந்துயர் ....*

(இ-ள்.) வடுவிலா-குற்றமில்லாத—வையத்து-பூமியில்—மன்னிய-நிலைபெற்ற—மூன்றில்-(அறம்பொருள்இன்பமென்னு) மூன்றனுள், நடுவணது-நடுவாகியபொருள்—எய்த-பொருந்த—இருதலையும்-தருமமுங்காமமும்—எய்தும்-அடையும்—நடுவணது-பொருளை—எய்தாதான்-அடையாதவன்—உலை-உலையில்—பெய்து-போட்டு—அடுவதுபோலும்-(ஆமையைக்) கொல்லுதல்போலும்—துயர்-துன்பத்தை—எய்தும்-அடைவான்—(எ-று) ❁ இ-ம்-பொருளையுடைந்தவன்-புண்ணியத்தையும் இன்பத்தையும் அடைவான்-பொருளையடையாதவன் துன்பத்தையடைவான் என்பதாம். ☞ இருதலை-எ, எய்தும்-ப, பொருளை-செ, எய்தாதான்-எ, எய்தும்-ப, துயரத்தை-செ. (௪)

நல்லாவின்கன்றாயினாகும்விலைபெறூஉங் ....*
கல்லாரேயாயினுஞ்செல்வர்வாய்ச்-சொற்செல்லும் ... *
புல்லீரப்போழ்தினுழவேபோன்மீதாடிச் .. .. *
செல்லாவாநல்கூர்ந்தார்சொல் ....*

(இ-ள்.) நல்-நல்ல—ஆவின்-பசுவின்—கன்றாயின்-கன்றானால்—நாகும்-இளங்கன்றும்—விலைபெறூஉம்-விலைபெறும்—கல்லாரேயாயினும்-கல்லாதவராயினும்—செல்வர்வாய்-ஐசுவரியவான்கள்வாக்கிற்பிறக்கும்—சொற்செல்லும்-சொற்கள்செல்லும்—நல்கூர்ந்தார்சொல்-வறியவர்வாக்கிற்பிறக்குஞ்சொற்கள்—புல்லீரம்-அற்பவீரம்பொருந்தியகாலத்தில்-(உழும்) உழவேபோல்-உழுபடைச்சால்போல—மீதாடி-மேலாடி—செல்லாவாம்-செல்லப்படாவாம்—(எ-று) ❁ இ-ம்-செல்வவான்கள் சொற்கள்செல்லும் தரித்திரர் சொற்கள் செல்லாவாம் என்பதாம். ☞ சொல்-எ, செல்லும்-ப, சொல்-எ, செல்லாவாம்-ப, வி-அனை. (௫)

இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினு மென்று ... .. *
மடங்காதா ரொன்று மடங்கார் - தடங்கண்ணா ... ... *
யுப்பொடு நெய்பால் தயிர்காயம் பெய்தடினுங் .... *
கைப்பறா பேய்ச்சுரையின் காய் ....*

(இ-ள்.) தடங்கண்ணாய் - விசாலம் பொருந்திய கண்களையுடையவளே, உப்பொடு - உப்புடன் — நெய் - நெய்யும் — பால் - பாலும் — தயிர் - தயிரும் — காயம் - பலகாயங்களும் — பெய்து - இட்டு — பேய்ச்சுரையின் காய் - பேய்ச்சுரைக்காயை — அடினும் - சமைத்தாலும் — கைப்பறா - கசப்பு நீங்காது — (அதுபோல) மெய்ஞ்ஞானம் - உண்மைஞான நூற்களை, என்றும் - எந்நாளும் — இடம்பட - விரிவாக — கற்பினும் - கற்றாலும் — அடங்காதார் - அடங்காதவர்கள் — என்றும் - எந்நாளும் — அடங்கார் - அடங்கார் — (எ-று) ※ இ-ம் - பெண்ணே அடங்காதவர்கள் எக்காலமு மடங்கார் - என்பதாம், ☞ அடங்காதார் - எ, அடங்கார் - ப, (அவிநயர் சூத்திரம்) "குறட்பா விரண்டவை நால்வகைத் தொடையாய் - முதற்பாதனிச் சொலினடிமூ உயிருவகை - விகற்பினடப்பது நேரிசை வெண்பா,, இஃதிவ்விதியால் நேரிசை வெண்பா. (௬)

தம்மை யிகழ்வாரைத் தாமவரின் முன்னிகழ்க ..... *
வென்னை யவரோடு பட்டது - புன்னை .... *
விறற்பூங் கமழ்கானல் வீங்குநீர்ச் சேர்ப்ப .... *
வுறற்பால யார்க்கு முறும் .. .. *

(இ-ள்.) புன்னை - புன்னையினது — விறல் - மிக்க — பூ - பூக்களின் மணம் — கமழ் - பரிமளிக்கின்ற — கானல் - சோலையையும் — வீங்கு - நிறைந்த — நீர் - நீரினையும் — சேர்ப்ப - கடற்கரையையுமுடைய பாண்டியனே — உறற்பால - வருபவை — யார்க்கும் - யாவருக்கும் — உறும் - வருமாதலால் — தம்மை - தங்களை — இகழ்வாரை - இகழ்பவர்களை — தாம் - தாங்கள் — அவரின் முன்னிகழ்க - அவர்களின் முன்பாயிகழக்கடவர்கள் — அவரோடு பட்டது - அவர்கள் பின்னுமிகழப்பட்ட தன்மை — என்னை - என்ன — (எ-று) ※ இ-ம் - பாண்டியனே தங்களையிகழ்ந்தவர்கள் முன்பாகத் தாங்களிகழக்கடவர்கள். அவர்கள் பின்னிகழ்வதென்ன - என்பதாம், ☞ தாம் - எ, இகழ்க - ப. (௭)

ஆவே றுருவின வாயினு மாபயந்த .... *
பால்வே றுருவின வல்லவாம் - பால்போ .... *
லொருதன்மைத் தாகுமற நெறியாபோ .... *
லுருவு பலகொளலீங்கு .... *

(இ-ள்.) ஆ - பசுக்கள் — வேறு - வேறுபட்ட — உருவின வாயினும் - உருவங்களையுடையனவாயினும் — ஆ - அப்பசுக்கள் — பயந்த - கொடுத்த பால் - பாலெல்லாம் — வேறு - வேறுபட்ட — உருவின - உருவங்களையு

டையன—அல்லவாம்-அல்லனவாம்—பால்போல்-அப்பால்போல—அறம்-அறத்தினது—நெறி-வழி—ஒருதன்மைத்து-ஒருதன்மையையுடையது—ஆகும்-ஆம்—ஆபோல-அப்பசுக்கள்போல—ஈங்கு-ஈங்குண்டாகியசமயங்களும்—பல-பல—உருவு-வேடங்களை—கொளல்-கொண்டிருக்கும்—(எ-று) ❊ இ-ம்-பசுக்களெல்லாம்வேறுருவானாலும்பாலெல்லாமோருருவே அதுபோலயார்செய்யினுந்தருமமெல்லாமொருவழியாகும்இப்படியேசமயங்கள்-என்பதாம், ☞ அறநெறி-எ, ஆகும்-ப, சமயங்கள்-எ, கொளல்-ப, வேடங்களை-செ, (அகத்தியச்சூத்திரம்) முதலுமூன்று நாற்சீராகி-யிரண்டிமீறு முச்சீராகியுந்-தனிச்சொற்சீர்கொளு நேரிசைவெண்பா. (௮)

யாஅருலகத்தோர்சொல்லில்லார்தேருங்கால் ... ❊
யாஅருபாயத்தின்வாழாதார்-யாஅ............ ❊
ரிடையாகவின்னாதெய்தாததார்யாஅர்...... ❊
கடைபோகச்செல்வமுய்த்தார்.................. ❊

(இ-ள்.) தேருங்கால்-ஆராயுமிடத்து—உலகத்து-உலகில்—சொல்-புகழ்—இல்லார்-இல்லாதவர்—யாஅர்-யாவர்தாம்—உபாயத்தின்-முற்பிறப்பிற்றவஞ்செய்தவுபாயத்தால்—வாழாதார்-இப்பிறப்பில்வாழாதார்—யாஅர்-யாவர்தாம்—இடையாக-இறக்குமுன்—இன்னாது-துன்பத்தை—எய்தாதார்-அடையாதவர்—யாஅர்-யாவர்தாம்—கடைபோகமுடிவளவும்—செல்வம்-செல்வத்தை—உய்த்தார்-செலுத்தினவர்—யாஅர்-யார்தாமொருவருமில்லை, (எ-று) ❊ இ-ம்-புகழிலார்யார் வாழாதார்யார்-யார்துன்பமடையாதார்-யார்முற்றுஞ்செல்வம்பெற்றார்-என்பதாம், ☞ யார்-எ, யார்-ப. (௯)

தாஞ்செய்வினையல்லாற்றம்மொடுசெல்வதுமற்... ❊
றியாங்கணுந்தேறிற்பிறிதில்லை-யாங்குத்தாம்......... ❊
போற்றிப்புனைந்தவுடம்பும்பயனின்றே............... ❊
கூற்றங்கொண்டோடும்பொழுது...................... ❊

(இ-ள்.) ஆங்கு-அவ்விடத்து—தாம்-தாங்கள்—போற்றி-காத்து—புனைந்த-அழகுசெய்த—உடம்பும்-உடம்பாலும்—கூற்றம்-கூற்றுவன்—கொண்டு-தமதுயிரைக்கொண்டு—ஓடும்-போங்காலத்தில், பயன்-பிரயோசனமும்—இன்று-இல்லை—தாம்-தாங்கள்—செய்-செய்த—வினை-இருவினையும்—அல்லால்-அல்லாது—தம்மொடு-தம்முடனே—செல்வது-கூடப்போவது—யாங்கணும்-எக்காலத்தாயினும், தேறில்-ஆராய்ந்தால்—பிறிதில்லை-வேறொன்றுமில்லை—(எ-று) ❊ இ-ம்-தாங்கள்செய்தநல்வினைதீவினையேதங்களோடுகூடவரும்-என்பதாம், ☞ வினை-எ, பிறிதில்லை-ப. (௰)

மெய்ம்மை-முற்றிற்று.

௰௩-ம் - அதிகாரம்.

தீவினையச்சம்.

அஃதாவது-தீவினைக்கு அஞ்சுதலாம்.

துக்கத்துட் டூங்கித் துறவின்கட் சேர்கலா
மக்கட்பிணத்தசுடுகாடு - தொக்க
விலங்கிற்கும் புள்ளிற்குங் காடே புலன்கெட்ட
புல்லறிவாளர்வயிறு.

(இ-ள்.) துக்கத்துள்-துன்பத்திடத்து—தூங்கி-மயங்கி—துறவின்கண்-துறவறவிடத்து, சேர்கலா-அடையாத—மக்கள்-மக்களின்—பிணத்த-பிணங்களையுடையன—சுடுகாடு-சுடுகாடுகள்—தொக்க-நெருங்கிய—விலங்கிற்கும்-மிருகங்களிற்கும்—புள்ளிற்கும்-பறவைகளுக்கும்—காடு-காடுகளாவன—புலன்கெட்ட-அறிவுகெட்ட—புல்லறிவாளர்-அறிவீனருடைய—வயிறு-வயிறுகள்—எ-று. (இ-ம்) மிருகங்கள்-பறவைகளுக்கும்அறிவீனர்களுடைய வயிறுகளே - சுடுகாடுகளாம். ☞ வயிறு-எ-காடு-ப. (௧)

இரும்பார்க்குங்காலராயேதிலார்க்காளாய்க்
கரும்பார்கழனியுட்சேர்வர்—சுரும்பார்க்கும்
காட்டுளாய்வாழுஞ்சிவலுங்குறும்பூழுங்
கூட்டுளாய்க்கொண்டுவைப்பார்.

(இ-ள்.) சுரும்பு-வண்டுகள்—ஆர்க்கும்-சத்திக்கும்—காட்டுளாய்-காட்டிடமாய்—வாழும்-வாழுகின்ற—சிவலும்-கவுதாரியையும்—குறும்பூழும்-காடையையும், கூட்டுளாய்-கூட்டிடமாய், கொண்டுவைப்பார்-கொண்டடைப்பவர்கள்—இரும்பு-இரும்புவிலங்கு—ஆர்க்கும்-சத்திக்கும், காலராய்-கால்களையுடையவராய்—ஏதிலார்க்கு-பகைவருக்கு—ஆளாய்-அடிமையாய்—கரும்பார்-இருட்பூமியாகிய—கழனியுள்-வயலிடத்தில், சேர்வர்-அடைவார்கள். (எ-று) இ-ம். இப்பிறப்பில்காடை கவுதாரிமுதலானவற்றைக்கூட்டிலடைப்பவர் மறுபிறப்பில்விலங்குபூண்டு நரகத்திலடைவார்கள்-என்பதாம். ☞ வைப்பார்-எ-சேர்வர்-ப. (௨)

அக்கேபோலங்கையொழியவிரலழுகித்
துக்கத்தொழுநோயெழுபவே-யக்கா
லலவனைக்காதலித்துக்கான்முரித்துத்தின்ற
பழவினைவந்தடைந்தக்கால்.

(இ-ள்) அக்கால்-முற்பிறப்பில்—அலவனை-நண்டுகளை—காதலித்து-இச்சித்து—கான்முரித்து-கால்களைமுறித்து—தின்ற-உண்ட—பழவினை-பழையவினை, வந்தடைந்தக்கால்-வந்தால்—அக்கேபோல்-சங்குமணிபோல—அங்கை-அகங்கை—ஒழிய-தவிர—விரல்-விரல்

கள், அழுகி-அழுகி—தொழுநோய்-குஷ்டநோயில்—துக்கம்-துன்பமடைந்து—எழுப-திரிவார்கள்—(எ-று) ✲ இ-ம். முற்பிறப்பில் நண்டுகளைத்தின்னவர்கள் இப்பிறப்பில் குஷ்டவியாதிகொண்டுதிரிவார்கள்-என்பதாம் ☞ தொழுநோய்-எ, எழுப-, ஏ-அஸை, நன்னூல் "அகமுனைர்ச்செவிகைவரினிடையனகெடும்" இவ்விதியால் அகங்கைஅங்கையாயிற்று. (௩)

நெருப்பழற்சேர்ந்தக்கானெய்போல்வதூஉ ✲
மெரிப்பச்சுட்டெவ்வநோயாக்கும்-பரப்பக் ✲
கொடுவினையராகுவர்கோடாருங்கோடிக் ✲
கடுவினையராகியார்ச்சார்ந்து ✲

(இ-ள்.) நெருப்பு-நெருப்பினது—அழல்-வெம்மையை—சேர்ந்தக்கால்-சேர்ந்தால்—நெய்போல்வதூஉம்-நெய்போலக் குளிர்ச்சியையுடையதும், எரிப்ப-எரிக்கும்படி—சுட்டு-கொளுத்தி—எவ்வம்-துன்பமாகிய—நோய்-நோயை—ஆக்கும்-உண்டாக்கும், (அதுபோல) கோடாரும்-நன்னடைபிறழாதவர்களும் — கடுவினையராகியார்-கொடியவர்களை—சார்ந்து-சேர்ந்து—கோடி-நன்னடை பிறழ்ந்து, பரப்ப-மிகவும்—கொடு-கொடிய—வினையராகுவர்-வினையுடையவராவார்கள்—எ-று. ✲ இ-ம். துன்மார்க்கரைச் சேர்ந்த நன்மார்க்கரும் துன்மார்க்கராவார்கள்-என்பதாம். ☞ கோடார்-எ, ஆகுவர் ப, (வீரசோழியமேற்கொள்சூத்திரம்) "காசுநாண்மலர் பிறப்பெனநான்கும்-வெண்பாவீற்றின்மேவும்வாய்பாடே" இவ்விதியால் (இதுகாசு என்னும்வாய்பாடு.) (௪)

பெரியவர்கேண்மைபிறைபோலநாளும் ✲
வரிசைவரிசையாநந்தும்-வரிசையால் ✲
வானூர்மதியம்போல்வைகலுந்தேயுமே ✲
தானேசிறியார்தொடர்பு ✲

(இ-ள்.) பெரியவர்-பெரியோர்கள்—கேண்மை-சிநேகம், பிறைபோல-இளம்பிறைபோல்—நாளும்-எந்நாளும்—வரிசைவரிசையாய்-கிரமங்கிரமமாக—நந்தும்-வளரும்—சிறியார்-சிறியோர்கள்—தொடர்பு சிநேகம், வான்-ஆகாயத்திலே, ஊர்-செல்லும்—மதியம்போல-பூரணச்சந்திரன்போல—வைகலும்-தினந்தோறும்—வரிசையால்-கிரமமாய்—தானே-தனக்குத்தானே—தேயும் - குறைந்துபோகும்—(எ-று) ✲ இ-ம். பெரியோர்கள்சிநேகம்பிறைபோல்வளரும், சிறியோர்கள்சிநேகம் நிறைசந்திரன் குறைதல் போற் குறையும். என்பதாம் ☞ கேண்மை எ, நந்தும், ப, தொடர்பு, எ, தேயும், ப, ஏகாரம். அசை (௫)

சான்றோரெனமதித்துச்சார்ந்தாய்மற்சார்ந்தாய்க்குச் ✲
சான்றாண்மைசார்ந்தார்கணில்லாயிற்-சார்ந்தோம்கேள் ✲

சாந்தகத் துண்டென்று செப்புத்திறந்தொருவன் … …※
பாம்பகத்துக் கண்டதுடைத்து…………………※

(இ-ள்.) சான்றோனை-பெரியோனை—மதித்து-எண்ணி—சார்ந்தாய்-சேர்ந்தவனே—சார்ந்தாய்க்கு சேர்ந்தவுனக்கு, சான்றாண்மை-பெருந்தன்மை—சார்ந்தார்கண்-நீசேரப்பட்டவரிடத்து— இல்லாயின்-இல்லாவிடில்— சார்ந்தோய்-சேர்ந்தவனே, கேள்-கேட்பாயாக—சாந்து-கல்வைச்சாந்து—அகத்து-உள்ளிடத்து—உண்டென்று- இருக்கின்றதென்று—செப்பு-செப்பை—திறந்து-திறந்து—ஒருவன்- ஒருவன்—அகத்து- உள்ளே—பாம்பு-பாம்பை—கண்டதுடைத்து- கண்டதுபோலும்—(எ-று)※ இ-ம்-நன்மார்க்கமுண்டென்று நீசேரப்பட்டவரிடத்துத் துன்மார்க்கமுண்டாயிருத்தல் எதுபோலெனில்-ஒருவன்செப்பினுள்ளேசாந்துண்டென்று திறந்து பாம்பைக்கண்டாற்போலும்-என்பதாம். ☞ ஒருவன்-எ, உடைத்து-ப, தன்மையை-செ, மன்-அசை-(அகத்தியச்சூத்திரம்)முதற்பாமுதலடிக்கெழுத்துமொழியிற்-பதின்மூன்றும்பன்னிரண்டும் பகர்வதீற்றடிக் - கெட்டுமேழுங் குற்றுகரமின்றியாம். (௬)

யாஅரொருவரொருவர்தம்முள்ளத்தைத்… … …※
தேருந்துணைமையுடையவர்-சாரற்…. … ……※
கனமணிநின்றிமைக்குநாடகேண்மக்கள்………※
மனம்வேறுசெய்கையும்வேறு………… ……※

(இ-ள்.) சாரல்-மலைச்சாரலிலே—கனம்-பொன்னும்—மணி-அரதநங்களும்—நின்று-இருந்து—இமைக்கும்-பிரகாசிக்கும்— நாட-நாட்டையுடையபாண்டியனே, கேள்-கேட்பாயாக—மக்கள்-மனிதர்கள்—மனம்- மனத்திலெண்ணுவதும்—வேறு-வேறு—செய்கையும்- நடக்கையும்—வேறு-வேறு—(ஆதலால்) ஒருவர்-ஒருவர்—ஒருவர்தம்-மற்றொருவர்-தம்முடைய—உள்ளத்தை-மனதை—தேரும்-அறியும்—துணைமையுடையவர்-அளவினையுடையவர்—யாஅர்-யாவர்— (எ-று)※ இ-ம்-பாண்டியனே ஒருவர்மனதை மற்றொருவரறியார் - என்பதாம். ☞ உடையவர்-எ, யாஅர்-ப. (௭)

உள்ளத்தானள்ளாதுறுதித்தொழிலராய்……※
கள்ளத்தானட்டார்கழிகேண்மை-தெள்ளிப்…… ※
புனற்செதும்புநின்றலைக்கும்பூங்குன்றநாட……※
மனத்துக்கண்மாசாய்விடும் ……………………※

(இ-ள்.) தெள்ளி-மணிகளைக்கொழித்து, புனல்-அருவிநீரானது—செதும்புநின்று-சேறுபொருந்தி—அலைக்கும்-ஒதுக்கும்—பூ-அழகிய—குன்றம் - மலையையும், நாட-நாட்டையுமுடையபாண்டியனே—

உள்ளத்தால்-மனதால்—நள்ளாது-சிநேகியாது, உறுதித்தொழிலராய்-பலம்பொருந்தியசெய்கையையுடையராய்— கள்ளத்தால்- வஞ்சத்தால்—நட்டார்-சிநேகித்தவரது—கழி-மிகுந்த— கேண்மை-சிநேகம்—மனத்துக்கண்- மனதினிடத்தில்— மாசாய்விடும்- குற்றமாய்விடும்—(எ-று) ※இ-ம்-பாண்டியனேமனங்கலந்துஉறவுசெய்யாதுவஞ்சகமாக உறவுசெய்தல் மனத்திடத்திற்குற்றமாம் என்பதாம். ☞கேண்மை-ஏ, மாசாய்விடும்-ப. (௮)

ஒக்கியவொள்வாடன்றெவ்வர்கைப்பட்டக்கா...※
லூக்கமழிப்பதூஉமெய்யாகு-மாக்க...... ... ※
மிருமையுஞ்சென்றுசுடுதலானல்ல - ... .※
கருமமேகல்லார்கட்டீர்வு .... ※

(இ-ள்.) ஒக்கிய-ஓங்கிய—ஒள்-ஒளிபொருந்திய—வாள்-தன்வாளாயுதம்—தன்றெவ்வர்-தன்சத்துருக்கள்—கை-கையில், பட்டக்கால்-அகப்பட்டால்—ஊக்கம்-மனத்தைரியத்தை—அழிப்பதூஉம்- கெடுப்பதும்—மெய்யாகும்-உண்மையாகும்—ஆக்கம்-தீவினைப்பலன், இருமையும்-இம்மையுமறுமையும்—சென்று-தன்னுடன்சென்று—சுடுதலால்-வருத்துதலால்—கல்லார்கண்- தீவினையாளரிடத்து, தீர்வு-சிநேகநீங்குதல்—நல்லகருமமே-நல்லகாரியமே— (எ-று)※இ-ம்-தீவினையாளரிடத்துச்சிநேகநீங்குதல்நல்லது என்பதாம். ☞தீர்வு-எ, கருமம்-ப, ஏ-அசை-(நன்னூல்) "வலித்தன்மெலித்தனீட்டல்குறுக்கல்- விரித்தறொகுத்தலும்வருஞ்செய்யுள்வேண்டுழி,, இவ்விதியால்-ஓங்கிய-என்றது-ஒக்கியஎனவலித்தல்விகாரமாயிற்று. (௯)

மனைப்பாசங்கைவிடாய்மக்கட்கென்றேங்கி ... .. ※
யெனைத்தூழிவாழ்தியோநெஞ்சே-யெனைத்துஞ் ※
சிறுவரையேயாயினுஞ்செய்தநன்றல்லா....... .. ※
லுறுபயனோவில்லையுயிர்க்கு........ ....※

(இ-ள்.) நெஞ்சே-மனமே—மனை-இல்வாழ்க்கையின்—பாசம்- ஆசையை—கைவிடாய்-விட்டுவிடாய்—மக்கட்கென்று- மக்களுக்கென்று—ஏங்கி-இரங்கி—எனைத்தூழி-எவ்வளவுகாலம்— வாழ்தியோ-வாழ்வாயோ—சிறுவரை-சிறுபொழுது, ஆயினும்-ஆனாலும்—செய்த-தான்செய்த—நன்று-தருமப்பலன்—அல்லால்-அல்லது—எனைத்தும்-எவ்வளவும்—உயிர்க்கு-நம்முயிர்க்கு, உறுபயன்- பொருந்தியபலன்—இல்லை-இல்லை—(எ-று)※இ-ம்-மனமே நம்முயிர்க்குத்தருமத்தையன்றிப்பலனில்லை, என்பதாம் ☞உறுபயன்-எ, இல்லை-ப, ஏ-ஓ, அசைகள்.

தீவினையச்சம்-முற்றிற்று.

அதிகாரம்-௰௩-க்கு-செய்யுள்-௱௩௰.

அறத்துப்பால்- முற்றிற்று.

இரண்டாவது,

பொருட்பால்.

அஃதாவது, பொருளினுடைய பகுப்பாம்.

௪௰-ம்-அதிகாரம்.

கல்வி.

அஃதாவது, கல்வியைப்பற்றிச்சொல்லியது.

குஞ்சியழகுங்கொடுந்தானைக்கோட்டழகு.............. ✻
மஞ்சளழகுமழகல்ல-நெஞ்சத்து.............. ✻
நல்லம்யாமென்னுநடுவுநிலைமையாற்.............. ✻
கல்வியழகேயழகு.............. ✻

(இ-ள்.) குஞ்சி-மயிரினையுடைய—அழகும்-அழகும்—கொடுங்-கொடிய—தானை-ஆடையினுடைய—கோடு-கரைக்கோட்டினது—அழகும்-அழகும்—மஞ்சள்-மஞ்சளினுடைய—அழகும்-அழகும்—அழகல்ல-அழகல்லவாம்—நெஞ்சத்து-மனதில், நடுவுநிலைமையால்-நடுநிலைபால்—நல்லம்-நன்மையுடையோம்—யாமென்னும்-யாமென்று சொல்லும்—கல்வி-வித்தையினுடைய, அழகே-அழகே—அழகு-ஒருவர்க்கழகாகும்—(எ-று) ✻ இ-ம்- ஒருவர்க்குக்கல்வி யழகேயழகாகும், மற்றையழகுகள் அழகல்லவாம்-என்பதாம், ☞ அழகு-எ, கல்விஅழகு-ப, "ஒருவனொன்பதுயிருபாற்றுட்ப-பன்மைவினைகொளும் பாங்கிற்றென்ப,, இவ்விதியால் ஒருவனொன்றது ஆண்பாற்கும் பெண்பாற்குங்கொள்க மஞ்சள்-பெண்பாற்கும்-மஞ்சள்கலந்தசந்தனம்ஆண்பாற்குமாம், கல்விபெண்பாற்கும்-வேண்டுமென்றதாயிற்று.

இம்மைபயக்குமாலீயக்குறைவின்றாற்.............. ✻
றம்மைவிளக்குமாற்றாமுளராக்-கேடின்றா.............. ✻
லெம்மையுலகத்தும்யாங்காணேன்கல்விபோன்.............. ✻
மம்மரறுக்குமருந்து.............. ✻

(இ-ள்) இம்மை-இப்பிறப்பில்—பயக்கும்-பயன்கொடுக்கும்—ஈய-பிறர்க்குக்கொடுக்க—குறைவின்றி-குறைதலில்லை—தம்மை-கற்றவர்தங்களை—விளக்கும்-விளங்கச்செய்யும்—தாமுளரா-தாமறியாத—கேடின்று-கேடில்லை—எம்மையுலகத்தும்-எவ்வுலகத்தும்—யாம்-நாம்—

கல்விபோல்-வித்தையைப்போல—மம்மர்-மயக்கத்தை—அறுக்கும்-தீர்க்கும்—மருந்து-மருந்தை—காணேம்-கண்டறியோம்—(எ-று) ❋ இ-ம்- கல்விக்குமேலானதொன்றில்லை- என்பதாம், ☞ யாம்-எ,காணேம்-ப,மருந்து-செ. (௨)

களர்நிலத்துப்பிறந்தவுப்பினைச்சான்றோர்............ *
விளைநிலத்துநெல்லின்விழுமிதாக்-கொள்வர்......... *
கடைநிலத்தோராயினுங்கற்றுணர்ந்தோரைத்.......... *
தலைநிலத்துவைக்கப்படும்................................ *

(இ-ள்.) களர்நிலத்து-உவர்நிலத்தில்—பிறந்த-உண்டான—உப்பினை-உப்பை—சான்றோர்-பெரியோர்—விளை-விளைகின்ற—நிலத்து- வயநிலத்துப்பிறந்த—நெல்லின்- நெல்லைப்பார்க்கிலும்— விழுமிதா-சிறப்பாக—கொள்வர்-கொள்வார்கள்—(அதுபோல) கடை-கடையான—நிலத்தோராயினும்-சாதியிற்பிறந்தாராயினும்—கற்றறிந்தோரை-கற்றுணர்ந்தவரை—தலைநிலத்து- முதன்மையானவிடத்து—வைக்கப்படும் - வைக்கத்தகும்—(எ-று) ❋ இ-ம்-தாழ்ந்தநிலத்திற்பிறந்தவுப்பை உயர்ந்தநிலத்திற்பிறந்த நெல்லினுஞ் சிறப்பாகக்கொள்வர் அதுபோலக் கீழ்குலத்தோராயினுங் கற்றோரைமேலிடத்து வைக்கத்தகும்-என்பதாம். ☞ சான்றோர்-எ, கொள்வர்-ப. (௩)

வைப்புழிக்கோட்படாவாய்த்தீயிற்கேடில்லை............. *
மிக்கசிறப்பினரசர்செறின்-வவ்வா....................... *
எச்சமெனவொருவன்மக்கட்குச்செய்வன.............. *
விச்சைமற்றல்லபிற.. *

(இ-ள்.) வைப்புழி-வைத்தவிடத்தில்—கோட்படா-பிறரால்கொள்ளப்படாது—வாய்த்து-பொருந்தி—ஈயில்- கொடுத்தால், கேடில்லை-குறைவில்லை—மிக்க-மிகுந்த—சிறப்பின்-சிறப்புடைய—அரசர்-அரசர்கள்—செறின்-கோபித்தால்—வவ்வார்-கவரார்—(ஆகையால்)ஒருவன்- ஒருவன்—மக்கட்கு- தன்புதல்வர்க்கு—எச்சமென- (தேடியிடும்) பிள்ளையென—செய்வன-செய்யத்தகுவன—விச்சை-கல்விகளே—பிற-பிறவெல்லாம்—அல்ல-தேடிவைக்குஞ்செல்வங்களல்ல—(எ-று) ❋ இ-ம்-ஒருவன் தன்பிள்ளைக்குத்தேடியிடும் பிள்ளையாகக் கல்வியொன்றே கற்பிக்கவேண்டும் என்பதாம், ☞ விச்சை-எ, செய்வன-ப, மற்று-அசை (சங்கையாப்புச்சூத்திரம்) "காய்முன்னேருப்விளைமுன்னேருமாமுன்னிரையும் வரும்வெள்ளைக்கே" இவ்விதியாற்றளையறிக. (௪)

கல்விகரையில்கற்பவர்நாள்சில................................ *
மெல்லநினைக்கிற்பிணிபல-தெள்ளிதி..................... *

னாராய்ந்தமைவுடையகற்பவேநீரொழியப் ※
பாலுண்குருகிற்றெரிந்து. ※

(இ-ள்.) கல்வி கல்விகள்—கரையில்-அளவில்—கற்பவர்-கற்பவர்களுக்கு, நாள்-வாழ்நாள்கள்—சில-சிலவுள, மெல்ல-மெதுவாக—நினைக்கில-ஆராய்ந்தால்—பிணி-நோய்கள்—பல-பலவுள—தெள்ளிதின்-தெளிவுள்ளவறிவால், ஆராய்ந்து-விசாரித்து—அமைவுடைய நிறைவுடைய நூல்களை—நீரொழிய-சலநீங்க—பால்-பாலை—உண்-உண்ணும்—குருகில்-அன்னம்போல—தெரிந்து-அறிந்து—கற்ப-(அறிவுடையோர்கள்) கற்பார்கள்—(எ-று) ※ இ-ம். அன்னம்நீரை நீக்கிப்பாலைக் கொள்ளுதல்போல அறிவுடையோர்கள் பொய்ந்நூலைத்தள்ளி மெய்ந்நூலைக்கற்பார்கள்-என்பதாம். ☞ அறிவுடையோர்-தோன்றாவெழுவாய்-கற்ப-ப, அமைவுடைய-பெ-எ-அசை. (ரு)

தோணியியக்குவான்றொல்லைவருணத்துக் ※
காணிற்கடைப்பட்டானென்றிகழார்-காணா ※
யவன்றுணையாவாறுபோயற்றேநூல்கற்ற ※
மகன்றுணையாநல்லகொளல் ※

(இ-ள்.) தொல்லை-பழைய—வருணத்து-சாதிகளுள்—காணில்-ஆராயில்—தோணி-தோணியை—இயக்குவான்-ஓட்டுவான்-கடை-கீழ்ச்சாதியில்—பட்டானென்று-பிறந்தவனென்று—இகழார்-இகழார்களே—அவன்-அவனையே—துணையா-துணையாக—ஆறு-ஆற்றை—போயற்றே-கடந்துபோவதுபோலும்—காணாய்-பாராய்—நூல்-நூல்களை—கற்றமகன்-கற்றவனிழிவானவனாகினும்—துணையா-அவனே துணையாக—நல்ல-நல்ல நூற்பொருள்களை—கொளல்-(ஒருவன்)கற்றுக்கொள்ளவேண்டும்-(எ-று) ※ இ-ம். ஒருவன் இழிந்தோனிடத்துங் கல்வியைக் கற்கவேண்டும் என்பதாம். ☞ ஒருவன் - தோன்றாவெழுவாய்-கொளல்-ப, நல்ல-பெ. (சு)

தவலருந்தொல்கேள்வித்தன்மையுடையா ※
ரிகலிலரெஃகுடையார்தம்முட்குழீஇ ※
நகலினினிதாயிற்காண்பாமகல்வானத் ※
தும்பருறைவார்பதி ※

(இ-ள்.) தவலரும்-கேடில்லாத—தொல்-பழைய—கேள்வி-கல்விகளால்வரும்—தன்மை-குணங்களை—உடையார்-உடையவர்கள்—இகலிலர்-பகையில்லாதவர்கள்—எஃகுடையார்-கூரியபுத்தியுடையார்—தம்முள்-தங்களிடத்தில்—குழீஇ-கூடியிருந்து—நகலின்-மகிழ்தலைப்பார்க்கிலும்—அகல்-அகன்ற—வானத்து-வானத்தில்—உம்பர்-தேவர்கள்—உறை-வாசஞ்செய்யும்—வார்பதி-நெடும்பதி—இனிதாகல்-இனிதாயிருந்தால், காண்பாம்-காணக்கடவோம்—(எ-று) ※ இ-ம். அறிவுடை

கல்வி.

யோரிடத்துக் கூடிமகிழ்தலைப்பார்க்கிலும், தேவருலகமினிதா யிருந்
ஞமாறுற்காண்போம்-என்பதாம். ☞ யாம்-எ, காண்பாம்-ப. (எ)

கனைகடற்றண்சேர்ப்பகற்றறிந்தார்கேண்மை ... ... ❊
நுனியிற்கரும்புதின்றற்றே-நுனிநீக்கித் ... ... ❊
தூரிற்றின்றன்னதகைத்தரோபண்பிலா... ... ❊
ஈரமிலாளர்தொடர்பு... ... ... ❊

(இ-ள்.) கனை-சத்திக்கும்—தண்-குளிர்ந்த—கடல்-கடலினது—சேர்ப்ப-கரையையுடையபாண்டியனே, கற்றறிந்தார்-கற்றுணர்ந்தோர், கேண்மை-சிநேகமானது—கரும்பு-கரும்பை—நுனியில்- நுனியிலிருந்து—தின்றற்று-தின்றாற்போலும்—பண்பிலா-நற்குணங்களில்லாத—ஈரமிலாளர்- அன்பில்லாதவர்கள்—தொடர்பு- சிநேகமானது—நுனி கரும்பினுனியை—நீக்கி- விட்டு—தூரில்- அடியிலிருந்து—தின்றன்ன-தின்றாற்போலும்—தகைத்து- தன்மையுடையது—(எ-று) ❊ இ-ம்- கற்றோர்சிநேகம் கரும்பை நுனியிலிருந்து தின்றாற்போலும், மற்றோர்சிநேகங்கரும்பைஅடியிலிருந்து தின்றாற்போலும், என்பதாம். ☞ கேண்மை-எ, தின்றற்று- ப, தொடர்பு-எ, தகைத்து-ப, ஏ-அரோ-அசைகள். (அ)

கல்லாரேயாயினுங்கற்றாரைச்சேர்ந்தொழுகி ... ❊
னல்லறிவுநாளுந்தலைப்படுவர்-தொல்சிறப்பி......❊
னொண்ணிறப்பாதிரிப்பூச்சேர்தலாற்புத்தோடு... ❊
தண்ணீர்க்குத்தான்பயந்தாங்கு ... ...❊

(இ-ள்.) ஒள்-ஒள்ளிய—நிறம்- நிறமுடைய—பாதிரிப்பூ- பாதிரிப்பூவின்—புத்தோடு-புதியவிதழ்களானவை—சேர்தலால்- அடைதலால்—தண்ணீர்க்கு-சலத்திற்கு—தான்-வாசனைதான்—பயந்தாங்கு-பயன்பட்டாற்போலும்— கல்லாராயினும்- கற்றிலராயினும்— கற்றாரை-கற்றவரை—சேர்ந்து-சார்ந்து—ஒழுகின்- நடப்பாராயின்—தொல்-பழைய—சிறப்பின்-சிறப்புடைய—நல்- நல்ல—அறிவு-அறிவில், நாளும் - நாடோறும்—தலைப்படுவர் - முதன்மையடைவர்—(எ-று) ❊ இ-ம்-பாதிரிப்பூக்களி னிதழ்களானவை தண்ணீர்க்கு வாசம்தந்தாற்போலும், கல்லாதவருங் கற்றோரைச்சார்ந்தா லறிவின்முதன்மையாவர்-என்பதாம், ☞ ஒருவர்-எ, தலைப்படுவர்-ப, ஏ-அசை. (கூ)

அலகுசால்கற்பினறிவுநூல்கல்லா... ... ... ❊
துலகநூலோதுவதெல்லாங்-கலகல... ... ❊
கூஉந்துணையல்லாற்கொண்டுதடுமாற்றம் ... ... ❊
போஒந்துணையறிவாரில் ... ... ❊

(இ-ள்.) அலகு-அளவு-சால்-மிக—கற்பின்- நூல்களைக்கற்றல்—அறிவுநூல்-ஞானநூல்களை—கல்லாது-கற்காமல்—உலகநூல்-உலகத்திற்

ரிய நூல்களை, ஓதுவதெல்லாம்-கற்பதெல்லாம்—கல்கல்-கல்கலென்றுமோசையாய்—கூஉந்துணை-கூவுமளவு—அல்லால்-அல்லது—தடுமாற்றம்-பிறவித்துன்பத்தைவிட்டு—கொண்டு-நல்வழியைக்கொண்டு—போஒந்துணை-போகுமளவை—அறிவார்-அறியவல்லவர்— இல்-இல்லை—(எ-று) ※ இ-ம், ஞானத்திற்குரிய நூல்களைக்கற்காமல் உலகத்திற்குரிய நூல்களைக்கற்குங்கல்வீண்-என்பதாம், ☞ அறிவார்-எ, இல்-ப.

கல்வி-முற்றிற்று.

௯௬-ம்- அதிகாரம்.

குடிப்பிறப்பு

அஃதாவது- நற்குடியிற்பிறத்தலாம்.

உடுக்கையுலறியுடம்பழிந்தக்கண்ணுங் ※
குடிப்பிறப்பாளர்தங்கொள்கையிற்குன்றா ※
ரிடுக்கண்டலைவந்தக்கண்ணுமரிமா ※
கொடிப்புற்கறிக்குமோமற்று ※

(இ-ள்.) குடிப்பிறப்பாளர்-நற்குலத்திற்பிறந்தோர்—உடுக்கை- ஆடை—உலறி-கெட்டு—உடம்பு-உடலானது—அழிந்தகண்ணும்- அழிந்தாலும்—தம்-தங்களுடைய—கொள்கையில்-நன்னடக்கையில்—குன்றார்-குறைவுபடார்—அரிமா-சிங்கமானது—இடுக்கண்-(பசித்)துன்பம்—தலைவந்தக்கண்ணும்-முதன்மையாகவந்தாலும்— கொடிப்புல்-கொடிகளையுடையபுல்லை—கறிக்குமோ-தின்னுமோ, (எ-று) ※ இ-ம், நற்குடியிற் பிறந்தார் துன்பம்வந்தாலும் நன்னடக்கையிற் குறையார், சிங்கம்பசித்தாலும் புல்லைத்தின்னாது-என்பதாம், ☞ குடிப்பிறப்பாளர்-எ, குன்றார்-ப, மற்று. (௧)

சான்றாண்மைசாயலொழுக்கமிவைமூன்றும் ※
வான்றோய்குடிப்பிறந்தார்க்கல்லது-வான்றோயு ※
மைதவழ்வெற்படாஅபெருஞ்செல்வ ※
மெய்தியக்கண்ணும்பிறர்க்கு ※

(இ-ள்.) வான்-ஆகாயத்தை—தோயும்-அளாவும்—மை-மேகம்—தவழ்- தவழும்—வெற்ப - மலையையுடையபாண்டியனே— சான்றாண்மை-பெருந்தன்மை—சாயல்- மென்மை—ஒழுக்கம்- நன்னடக்கை—இவைமூன்றும்-இம்முக்குணங்களும், வான்-பெருமை—தோய்-நிறைந்த—குடிப்பிறந்தார்க்கு-நற்குடியிற்பிறந்தார்க்கு—அல்லது-அல்லா

மல்—பிறர்க்கு-நற்குடியிற்பிறவாதார்க்கு—பெருஞ்செல்வம்-பெரிய
செல்வம்—ஐசுவரியங்களும்-வந்தாலும்—படாஅ-அம்மூக்குணங்களு
முண்டாகாவாம்—(எ-று) ❁ இ-ம், பாண்டியனே பெருந்தன்மைமே
ன்மை நன்னடக்கை இவைநற்குடியிற்பிறந்தார்க்கல்லது அக்குடியிற்
பிறவாதாருக்கில்லை-என்பதாம். ☞ இவை-எ, படாஅ-ப. (௨)

இருக்கையெழுவுமெதிர்செலவுமேனை...... ❁
விடுப்பவொழிதலோடின்ன-குடிப்பிறந்தார்...... ❁
குன்றாவொழுக்கமாக்கொண்டார்கயவரோ......... ❁
டொன்றாவுணரற்பாற்றன்று - .... ❁

(இ-ள்.) குடிப்பிறந்தார்-நற்குடியிற்பிறந்தார்—இருக்கையெழு
கை-(பெரியோரைக்கண்டு) இருக்குமிடத்துவிட்டெழுதலும்— எதிர்செ
லவும்- எதிராகப்போதலும்—ஏனை-இவைநீங்க, விடுப்ப-வழிவிடுதலு
ம்—ஒழிதல்-நீங்கலும்—ஓடு-இவற்றுடன்—இன்ன-இவைபோல்வனவு
பசாரங்களை— குன்றா- குறையாத—ஒழுக்கமா- நன்னடக்கையாக—
கொண்டார்- கொண்டார்கள்—கயவரோடு கீழ்மக்களோடு—ஒன்றா-
அக்குணங்கள்பொருந்தாவாம்—உணரற்பாற்று-அறியுந்தன்மை—அ
ன்று-கீழோர்க்கல்ல—(எ-று.) ❁ இ-ம், நற்குடியிற்பிறந்தோர் ஆசார
வுபசாரங்களைவிடார் அக்குடியிற்பிறவாதார்க்கு ஆசாரவுபசாரங்களி
ல்லை என்பதாம். ☞ குடிப்பிறந்தார்-எ, கொண்டார்-ப. (௩)

நல்லவைசெய்யினியல்பாகுந்தீயவை.......... ...❁
பல்லவர்தூற்றும்பழியாகு-மெல்லா... .... ❁
முணருங்குடிப்பிறப்பினூதியமென்றே........ ❁
புணருமொருவர்க்கெனின்........................... ❁

(இ-ள்.) நல்லவை-நன்மைகளை—செயின்-செய்தால்— இயல்பாகு
ம்-இயற்கையாம்—தீயவை-துன்பங்களைச்செய்தால்—பல்லவர்-பலரு
ம்— தூற்றும்- தூற்றத்தக்க—பழியாகும்-பழிப்பாகும்—எல்லாம்- ந
ற்குணமெல்லாம்— உணரும்-அறியும்—குடிப்பிறப்பு- நற்குடிப்பிற
ப்பு—ஒருவர்க்கு-ஒருவருக்கு—இன்-இனிதாக—புணருமெனின்-கூடு
மாறல்—ஊதியமென்-இதிலும் லாபமியாது—(எ-று) ❁ இ-ம், ஒருவ
ருக்கு நற்குடிப்பிறப்புப் பொருந்துமாறு விதைவிட லாபமென்ன-
என்பதாம். ☞ ஊதியம்-எ, என்-ப, ஓ-அசை. (௪)

கல்லாமையச்சங்கயவர்தொழிலச்சஞ்............ ❁
சொல்லாமையுள்ளுமோர்சோர்வச்ச-மெல்லா... ❁
மிரப்பார்க்கொன்றீயாமையச்சமரத்தாரிம் ... ...❁
மாறாக்குடிப்பிறந்தார்.................... ...... ❁

(இ-ள்.) கல்லாமை-கற்காதிருக்கை—அச்சம்-அச்சம், கயவர்- கீழ்மக்
கள்-தொழில்- தொழில்செய்தல்—அச்சம் - அச்சம்—சொல்லாமை

யன்னும்-பொய்சொல்லாமையிடத்தும்—ஓர்-ஒரு—சோர்வு-சோற்சோர்வுபடல்—அச்சம்- அச்சம்—எல்லாம்- யாவும்—இரப்பார்க்கு-யாசிப்பவர்க்கு—ஒன்று-ஒருபொருள்—ஈயாமை-கொடாமை, அச்சம்-அச்சம்—(ஆதலால்) இம்மூன்றுங்குடி-பெருமையில்லாத இக்குடியிற்பிறந்தார்—மரத்தார்-மரத்தோடொத்தவர்—(எ-று) ❊ இ-ம்-கல்லாமையும்இழிதொழிலும்சொற்சோர்வும்ஈயாமையும்உடையவர்கள் மரத்திற்குஒப்பானவர்-என்பதாம். ☞ குடிப்பிறந்தார்-எ,மரத்தார் ப.

இனநன்மையின்சொலொன்றீதன்மற்றேனை ...*
மனநன்மையென்றிவையெல்லாங்-கனமணி .....*
முத்தோடிமைக்குமுழங்குவரித்தண்சேர்ப்ப ... *
விற்பிறந்தார்கண்ணேயுள .... *

(இ-ள்.) கனம்-பொன்னையும்—மணி-இரத்நங்களையும்—முத்தோடு, முத்துக்களுடன்—இமைக்கும்-பிரகாசிக்கச்செய்யும்— முழங்கு-சத்திக்கின்ற—தண்-குளிர்ந்த—உவரி-கடலையும் —சேர்ப்ப-கரையையுமுடையபாண்டியனே, இனநன்மை-இனநன்மையும்—இன்சொல்-இனியசொற்களும்—ஒன்று-ஒருபொருளை—ஈதல்-கொடுத்தலும்—ஏனை-ஒழிந்த—மனநன்மை-மனத்தினன்மையும்—என்றிவையெல்லாம்-என்னுமிவையெல்லாம்— இற்பிறந்தார் - நற்குடியிற்பிறந்தார்—கண்ணே-இடத்தே,உள-இருக்கின்றன—(எ-று) ❊ இ-ம்- பாண்டியனே நல்லினம்நற்சொல்-ஈகை-நன்மனம்-இவையெல்லாங்குடிப்பிறந்தார்க்கேவுளவாம்-என்பதாம், ☞ எல்லாம்-எ,உள-ப,மற்று-அசை. (௬)

செய்கையழிந்துசிதன்மண்டிற்றாயிம்... ... ...*
பெய்யாவொருசிறைபேரி-லுடைத்தாகு ....*
மெவ்வமுழந்தக்கடைத்துங்குடிப்பிறந்தார் ......*
செய்வர்செயற்பாலவை ... ...*

(இ-ள்.) செய்கை- செய்கைகள்—அழிந்து- கெட்டு—சிதல்-கறையான்—மண்டிற்றாயினும்- பற்றியதாயினும்—பெய்யா- ஒழுகாத—ஒருசிறை-ஓரிடமுள்ள—பேரில்-பெரியவீடு—உடைத்தாகும்- உண்டாயிருக்கும்—(அதுபோல)எவ்வம்-துன்பம்—உழந்தக்கடைத்தும்-வருத்தினும்—குடிப்பிறந்தார்-நற்குடியிற்பிறந்தோர் — செயற்பாலவை-செய்யத்தக்கவைகளை—செய்வர்-செய்வார்கள்—(எ-று) ❊ இ-ம்.நற்குடியிற்பிறந்தோர் துன்பத்தால்வருந்தினுஞ் செய்யத்தக்கதருமங்களைச்செய்வர்-என்பதாம். ☞ குடிப்பிறந்தார்-எ, செய்வர்-ப, செயற்பாலவை-செ. (௭)

ஒருபுடைபாம்புகொளினுமொருபுடை ... ...*
யங்கண்மாஞாலம்விளக்குறூஉந்-திங்கள்போற் ...*

குடிப்பிறப்பு.

ஒருபுடை பாம்பு கொளினும் ஒருபுடை
அங்கண்மா ஞாலம் விளக்குறூஉம் திங்கள்போற்
செல்லாமைசெவ்வனேர்நிற்பினுமொப்புரவிற்
கொல்கார்குடிப்பிறந்தார்

(இ-ள்.) ஒருபுடை-ஒருபக்கம், பாம்பு-பாம்பு—கொளினும்-பற்றிக்கொள்ளினும்—ஒருபுடை-ஒருபக்கம்—அம் அழகிய—கண்-இடமகன்ற—மா-பெரிய—ஞாலம்-பூமியை—விளக்குறூஉம் விளக்கும்—திங்கள்போல் சந்திரன்போல—குடிப்பிறந்தார் நற்குடியிற்பிறந்தார்—செல்லாமை வறுமை—செவ்வனேர் செவ்வையாக—நிற்பினும் நின்றாலும்—ஒப்புரவிற்கு தருமஞ்செய்தற்கு—ஒல்கார் தளரார்—(எ-று) இ-ம். நற்குடியிற்பிறந்தார் வறுமை யடைந்தாலும் தருமஞ்செய்தற்குத்தளரார் என்பதாம். ☞ குடிப்பிறந்தார் எ. ஒல்கார் ப. (அ)

செல்லாவிடத்துங்குடிப்பிறந்தார்செய்வன
செல்விடத்துஞ்செய்யார்சிறியவர்-புல்வாய்
பருமம்பொறுப்பினும்பாய்பரிமாபோற்
பொருமுரணாற்றுதலின்று

(இ-ள்.) குடிப்பிறந்தார் நற்குடியிற்பிறந்தார்—செல்லாவிடத்தும் வறுமையிடத்தும்—செய்வன செய்தருமங்களை—சிறியவர் கீழ்மக்கள்—செல்லிடத்தும் செல்வமுள்ளவிடத்தும்—செய்யார் செய்யார்கள்—புல்வாய் கலைமான்—பருமம் கல்லணையை—பொறுப்பினும் சுமந்தாலும்—பாய் பாயும்—பரிமாபோல குதிரையைப்போல—பொரும் தாக்கும்—முரண் சண்டையை—ஆற்றுதல் செய்தல்—இன்று இல்லை—(எ-று) இ-ம். மேன்மக்கள் வறுமையிடத்துஞ் செய் தருமங்களைக்கீழ்மக்கள்செல்வத்திடத்துஞ் செய்யார்கள் என்பதாம். ☞ சிறியவர் எ. செய்யார் ப. (௯)

எற்றொன்றுமில்லாவிடத்துங்குடிப்பிறந்தா
ரற்றுத்தற்சேர்ந்தார்க்கசைவிடத்-தூற்றுவ
ரற்றக்கடைத்துமகல்யாறகழ்ந்தக்காற்
றெற்றெனத்தெண்ணீர்படும்

(இ-ள்.) அகல் அகன்ற—ஆறு ஆறானது—அற்றக்கடைத்தும் நீர்வற்றினாலும்—அகழ்ந்தக்கால்-தோண்டினால்—தெற்றென - அலைப்பொழு—தெண்ணீர்-தெளிந்தநீர்—படும் தரும்—(அதுபோல) குடிப்பிறந்தார் நற்குடியிற்பிறந்தார்— எற்றொன்றும் யாதொன்றும்—இல்லாவிடத்தும் இல்லாதிருந்தும்—அற்று பொருளிழந்து — தற்சேர்ந்தார்க்கும் தம்மையடுத்தார்க்கு—அசைவிடத்து தளர்ந்தவிடத்து—ஊற்றுவர் உதவியாவார்—(எ-று) இ-ம். நற்குடியிற்பிறந்தார் வறுமையிலும் தம்மை யடுத்தவர்க் குதவி செய்வார்கள் என்பதாம் ☞ குடிப்பிறந்தார்- எ. ஊற்றுவர்-ப. (௰)

குடிப்பிறப்பு-முற்றிற்று.

௧௬-ம்-அதிகாரம்.

மேன்மக்கள்.

அஃதாவது-மேன்மக்கள்தன்மையைச் சொல்லுதலாம்.

அங்கண்விசும்பினகனிலாப்பாரிக்குந் ❋
திங்களுஞ்சான்றோருமொப்பர்மற்-றிங்கண் ❋
மறுவாற்றுஞ்சான்றோரஃதாற்றார்தெருமந்து ❋
தேய்வரொருமாசுறின் ❋

(இ-ள்.) அம்-அழகிய—கண்-இடமகன்ற—விசும்பின்-ஆகாயத்தில்—அகல்-விரிவான—நிலா-கிரணங்களை—பாரிக்கும்-பரப்பும்—திங்களும்-சந்திரனும்—சான்றோரும்-பெரியோர்களும்—ஒப்பர்-தம்மிலொப்பாவார்—திங்கள்-சந்திரன்—மறு-களங்கத்தை—ஆற்றும்-பொறுத்துக்கொள்வான்—சான்றோர்-பெரியோர்கள்—அஃது-அக்களங்கத்தை—ஆற்றார்-பொறுத்துக்கொள்ளார்—ஒரு தடக்கொரு—மாசு குற்றம்—உறின்-வந்தால்—தெருமந்து-மயக்கமடைந்து—தேய்வர் மாய்வர்—(எ-று) ❋ இ-ம்- சந்திரன்களங்கத்தைச்சகிக்கினும் பெரியோர்கள் அக்களங்கத்தைச்சகியார்-என்பதாம். ☞ சான்றோர்-எ. தேய்வர்-ப. மன்-அசை (நன்னூல்) திணைபால்பொருள்பலவிரவினசிறப்பினு மிகவினுமிழிபினுமொருமுடிபினவே இவ்விதியாற்சந்திரனாகிய அஃறிணை உயர்திணைமுடிபெற்றது. (௧)

இசையுமெனினுமிசையாதெனினும் ❋
வசைதீரவெண்ணுவர்சான்றோர்-விசையி ❋
னரிமாவுளங்கிழித்தவம்பினிற்றீதோ ❋
வரிமாப்பிழைப்பெய்தகோல் ❋

(இ-ள்.) இசையுமெனினும் கூடுமாகிலும்—இசையாதெனினும் கூடாதாகிலும்—வசை குற்றம்—தீர நீங்க—எண்ணுவர் நினைப்பார்கள்—சான்றோர் பெரியோர்கள்—விசையின் விசையால—நரிமா நரியை—உளம் நெஞ்சம்—கிழித்த பிளந்த—அம்பினில் கணையைப்பார்க்கிலும்— அரிமா சிங்கத்தை—பிழைப்பு பிழைக்க—எய்த தொடுத்த—கோல் கணையானது—தீதோ பொல்லாதோ—(எ-று) ❋ இ-ம்- பெரியோர்கள்பிறராற்பொருள்கிடைத்தாலுங்கிடையாவிட்டாலுங் குற்றநினையார்கள்என்பதாம். ☞ சான்றோர் எ. எண்ணுவர் ப. நரிமேலெய்தஅம்பினும்அரிமேலெய்தஅம்புவுயர்வு. (௨)

நரம்பெழுந்துநல்கூர்ந்தாராயினுஞ்சான்றோர் ❋
குரம்பெழுந்துகுற்றங்கொண்டேறா-ருரங்கவறு ❋

வுள்ளமெனு நாரினாற்கட்டியுளவரையாற் .... *
செய்வர்செயற்பாலவை . ... *

(இ-ள்.) சான்றோர் பெரியோர்கள்—நரம்பு நரம்புகள்—எழுந்து-தோன்றி—நல்கூர்ந்தாராயினும் வறுமைப்பட்டாராயினும்—குரம்பு வரம்பு—எழுந்து கடந்து— குற்றங்கொண்டு குற்றத்தைக்கொண்டு—ஏறார் (யாசிக்கச்) சொல்லார்—உரம் அறிவே—கவறாக கவறாகக்கொண்டு—உள்ளமெனும் முயற்சியென்கிற— நாரினால் நாரால்—கட்டி மனதைக்கட்டி—உளவரையால் தமக்குள்ளபொருளளவால், செயற்பாலவை செய்யத்தக்கதருமங்களை — செய்வர் செய்வார்கள்—(எ-று) ❊ இ-ம்- பெரியோர்கள் வறுமையடைந்தாராலும் யாசிக்கார்கள் உள்ளமட்டுந் தருமஞ்செய்வார்கள்- என்பதாம். ☞ சான்றோர்-எ, செய்வர்-ப, செயற்பாலவை-செ, கவறென்றது- இருபிளவாகிய பனையின் அடிமட்டை இம்மட்டைமரத்தைக் கவியப்பற்றியதுபோல மனத்தை அறிவுகவியப்பற்றுதலாம். (௩)

செல்வழிக்கண்ணொருநாட்காணினுஞ்சான்றவர் ... ... *
தொல்வழிக்கேண்மையிற்றோன்றப்புரிந்-தியாப்பர் .. *
நல்வரைநாட சிலநாளடிப்படிற் ... ... *
கல்வரையுமுண்டாநெறி ... ... *

(இ-ள்.) நல் நல்ல—வரை மலையையும்—நாட நாட்டையுமுடைய பாண்டியனே—செல் போகின்ற—வழிக்கண் வழியிடத்து—ஒருநாள் (ஒருவரை) ஒருநாள்—காணினும் கண்டாலும்— சான்றவர் பெரியோர்கள்—தொல் பழைய—வழி வழியில்வந்த—கேண்மையில்- உறவைப்போல—தோன்ற விளங்க—புரிந்து விரும்பி—இயாப்பர் சிநேகஞ்செய்வர்—கல்வரையும் கன்மலையும்—சிலநாள் சிலகாலம்—அடிப்படில் காலடிப்பட்டால்—நெறி வழி—உண்டாம் உண்டாகும்—(எ-று) ❊ இ-ம்- பாண்டியனே பெரியோர்கள்- புதியவரைக்கண்டாலும் பழையவரைப்போலவே சிநேகஞ்செய்வர் - என்பதாம். ☞ சான்றவர்-எ, யாப்பர்-ப. (௪)

புல்லாவெழுத்திற்பொருளில்வறுங்கோட்டி ... ... *
கல்லாவொருவனுரைப்பவுங்-கண்ணோடி ... ... *
நல்லார்வருந்தியுங்கேட்பரேமற்றவன் ... . *
பல்லாருணநாணல்பரிந்து ... ... *

(இ-ள்.) புல்லா இலக்கணம்பொருந்தாத—எழுத்தில் எழுத்தினையுடைய—பொருளில பொருளறிவில்லாத—வறும் வீணாகிய—கோட்டி சபையில—கல்லாவொருவன் கற்காதவொருவன்—உரைப்பவும் ஒன்றைச்சொல்லவும் — நல்லார் மேன்மக்கள்—கண்ணோடி தாட்சணியங்கொண்டு — வருந்தியும் வருத்தமடைந்தும், அவன் அவ்வறிவில்

லான், பல்லாருள் பலர்முன்—நாணல் நாணுதற்கு—பரிந்து இரங்கி, கேட்பர் கேட்பார்கள்—(எ-று) ❁இ-ம், பெரியோர்கள் கல்லார்சபையில்விவேகசூனியனென்றசொல்லினும்அவனுணுதலுக்குஇரங்கிக் கேட்பார் என்பதாம், ☞நல்லார்-எ, கேட்பர்-ப, ஏ,மற்று அசைகள். (௫)

கடித்துக்கரும்பினைக்கண்டகர நூறி ... ...*
யிடித்துநீர்கொள்ளினுமின்சுவைத்தே-யாகும்... *
வடுப்படவைதிறந்தக்கண்ணுங்குடிப்பிறந்தார் .. *
கூறார்தம்வாயிற்சிதைந்து... ... ... *

(இ-ள்.) கரும்பினை கரும்பை—கடித்து தரித்து—கண் கணுக்கள், தகர உடைய—நூறி நெறித்து—இடித்து (ஆலையில்)ஆடி—நீர் இரசத்தை—கொள்ளினும் கொண்டாலும்—(அக்கரும்பு) இன் இனிய—சுவைத்தே மதுரமுடையதே, ஆகும் ஆம்—(அதுபோல) வடுப்பட குற்றமுண்டாக—வைது ஒருவர்வைது—இறந்தக்கண்ணும் போனாலும்—குடிப்பிறந்தார் நற்குடியிற்பிறந்தார்— தம் தம்முடைய—வாயில் வாயினாலே—சிதைந்து சிதைய—கூறார் சொல்லார், (எ-று) ❁இ-ம்.கரும்பைவருத்தினும்இனியசாற்றைக்கொடுக்கும் அதுபோல ஒருவர்வைதாலும்நற்குடியிற்பிறந்தார்கூடவையமாட்டார்என்பதாம். ☞ குடிப்பிறந்தார்-எ, கூறார்-ப. (௬)

கள்ளார்கள்ளுண்ணார்கடிவகடிந்தொரீஇ ... ...*
யெள்ளிப்பிறரையிகழ்ந்துரையார்-தள்ளியும் ... *
வாயிற்பொய்கூறார்வடுவறுகாட்சியார்... ... *
சாயிற்பரிவதிலர்... ... ... *

(இ-ள்.) வடு குற்றம்—அறு அற்ற—காட்சியார் அறிவுடையார்—கள்ளார் திருடார்—கள்ளுண்ணார் கள்ளைக்குடியார்—கடிவ நீக்கத்தக்கவைகளை—கடிந்து நீக்கி—ஒரீஇ தீமையினீங்கி—பிறரை அயலாரை—எள்ளி அவமதித்து—இகழ்ந்து நிந்தித்து—உரையார் சொல்லார், தள்ளியும் தவறியும்— வாயில் வாயால்— பொய்கூறார் பொய்சொல்லார்—சாயில் துன்பம்வந்தால்—பரிவதிலர் விசனப்படார்—(எ-று) ❁ இ-ம். மேன்மக்கள் திருடார் கள்ளுண்ணார் பிறரையிகழார் பொய்சொல்லார் வறுமைவந்தால்விசனப்படார்.என்பதாம், ☞ காட்சியார் எ, பரிவதிலர்-ப. (௭)

பிறர்மறையின்கட்செவிடாய்த்திறனறிந் ... .. *
தேதிலாரிற்கட்குருடனாய்த்-தீய ... ... *
புறங்கூற்றின்மூகையாய்நிற்பானேல்யாது ... .. *
மறங்கூறவேண்டாவவற்கு ... ... *

(இ-ள்.) பிறர்-அயலாருடைய—மறையின்கண் இரகசியச்செடத்து—செவிடாய் செவிடனாகவும்— திறமறிந்து நல்லொழுக்கமறிந்து—ஏதிலார் அயலாருடைய, இல் மனையாள்—கண்

குருடனாய்க் குருடனாகவும் — தீய கொடிய — புறங்கூற்றின் பொரு
ளைச் சொல்லிடத்து — ஊமையாய் ஊமையனாகவும் — நிற்பானேல் இ
ருப்பானானால் — அவற்கு அவனுக்கு — யாதும் யாதொரு — அறம் த
ருமம் — கூறவேண்டா சொல்லவேண்டா — (எ-று) ✽ இ-ம், பிறரக
சியத்திற் செவிடனாகவும், பிறமனையாளிடத்துக் குருடனாகவும், பொரு
ளைச் சொல்வோனிடத்தூமையனாகவும், ஒருவனிருந்தானானால் அவனுக்
கிதுவே பெரியதருமம் என்பதாம், ☞ ஒருவன் - எ, கூறவேண்டா-ப.

பன்னாளுஞ் சென்றக்காற் பண்பிலார் தம்முழை ✽
யென்னாளும் வேண்டுபவென் றிகழ்ப - வென்னாளும்
வேண்டினு நன்றுமற் றென்றுவிழுமியோர் .. ✽
காண்டொறுஞ் செய்வர் சிறப்பு ... ... ✽

(இ-ள்.) பண்பிலார் நற்குணமில்லார் — தம்முழை தம்மிடத்து — ப
ன்னாளும் பலநாளும் — சென்றக்கால் சென்றால் — என்னாளும் யாதா
னும் — வேண்டுப வேண்டுவார்கள் — என்று என்றுசொல்லி — இகழ்
ப இகழ்வார்கள் — விழுமியோர் மேன்மக்கள் — என்னாளும் யாதாகி
லும் — வேண்டினும் வேண்டினாலும் — நன்று நல்லது — என்று என்
றுசொல்லி — காண்டொறும் காணுந்தோறும் — சிறப்பு சிறப்பை —
செய்வர் செய்வார்கள் — (எ-று) ✽ இ-ம், கீழ்மக்கள் தங்களிடத்து ஒருவ
ர்வந்தாலி யாதாவதொன்றைக் கேட்பார்களென்றிகழ்வார்கள். மேன்மக்
கள் தங்களிடத்து வந்தவருக்குக் காணுந்தோறுஞ் சிறப்புச்செய்வார்க
ள் என்பதாம், ☞ பண்பிலார் எ, இகழ்ப ப, விழுமியோர் எ, செய்வர்
ப, சிறப்பினை செ. மற்று அசை. (௯)

உடையாரிவரென் றொருதலையாப் பற்றிக் ... ... ✽
கடையாயார் பின்சென்று வாழ்வர் - உடைய ... ... ✽
பிலந்தலைப்பட்டது போலாதே நல்ல ... ... ✽
குலந்தலைப்பட்டவிடத்து ... ... ✽

(இ-ள்.) உடையார் செல்வமுள்ளார் — இவரென்று இவர்களென்று,
ஒருதலையா ஒருதுணிவாக — பற்றி பிடித்து — கடையாயார் கீழ்மக்க
ள், பின்சென்று பின்போய் — வாழ்வர் சிலர் வாழ்வார்கள் — நல்ல நல்
ல — குலம் குலத்திற்பிறந்தாரை — தலைப்பட்ட முதன்மையாகச் சேரப்
பட்ட — இடத்து இடத்திலே — உடைய எல்லாப்பொருளுமுடைய, பி
லம் குகையை — தலைப்பட்டது போலாதே தலைப்பட்டதும் போலுமல்ல
வோ — (எ-று) ✽ இ-ம், கீழ்மக்கள் பின்சென்று சிலர் வாழ்ந்திருப்பர்.
மேன்மக்களைச் சேர்தல் எப்பொருளுமுள்ள குகையகப்பட்டது போ
லும் என்பதாம், ☞ சிலர் - தோன்றா எழுவாய் - வாழ்வர் - ப. (௰)

மேன்மக்கள் - முற்றிற்று.

௯௰-ம்-அதிகாரம்.

பெரியாரைப்பிழையாமை.

அஃதாவது - பெரியோர்களைப்பிழைசொல்லாமையாம்.

பொறுப்பரென்றெண்ணிப்புரைதீர்ந்தார்மாட்டும் ... ※
வெறுப்பனசெய்யாமைவேண்டும்-வெறுத்தபின் ...... ※
ஆர்க்குமருவியணிமலைநன்னாட ... ... ※
பேர்க்குதல்யார்க்குமரிது ... ... ※

(இ-ள்.) ஆர்க்கும் சத்திக்கும், அருவி வையையாற்றையும்—அணி அழகிய—மலை பொதியமலையையும்—நல் நல்ல—நாட பாண்டிநாட்டையுமுடையபாண்டியனே—பொறுப்பரென்று குற்றம்பொறுப்பாரென்று—எண்ணி-நினைந்து—புரைதீர்ந்தார் குற்றமற்றவர், மாட்டும் இடத்தும்—வெறுப்பன வெறுக்கத்தக்கவைகளை — செய்யாமைவேண்டும் செய்யாதிருக்கவேண்டும்—வெறுத்தபின் வெறுத்தபின்பு—பேர்க்குதல் (அவர்கோபத்தை)நீக்கல்—யார்க்கும் யாவருக்கும்—அரிது அருமை—(எ-று) ※ இ-ம். பாண்டியனேகுற்றமற்றவரிடத்தும்குற்றஞ்செய்யாதிருப்பாயாக அவர்கள்கோபித்தபின் கோபத்தைநீக்குதல்யார்க்குமரிது என்பதாம். ☞ பேர்க்குதல், எழுவாய் அரிது பயனிலை. (௧)

பொன்னேகொடுத்தும்புணர்தற்கரியாரைக் ... ※
கொன்னேதலைக்கூடப்பெற்றிருந்து-மன்னோ ... ※
பயனில்பொழுதாக்கழிப்பரேநல்ல ...... ※
நயமிலறிவினவர் ... ... ※

(இ-ள்.) பொன் பொன்னை—கொடுத்தும் ஈந்தும்—புணர்தற்கு சேர்தற்கு—அரியாரை அரியபெரியோரை—கொன் பயனில்லாமல்—தலைக்கூட வந்து-பொருந்த—பெற்றிருந்தும் பெற்றும்— அன்னோ-ஐயோ—நல்ல நல்ல—நயமில் நயமில்லாத—அறிவினவர் அறிவுடையார்—பயனில் பிரயோசனமில்லாத—பொழுதா- காலமாக—கழிப்பர் போக்குவர்—(எ-று) ※ இ-ம் அறிவிலார் அறிவுடையாரைப் பெற்றிருந்தும்வீண்காலங்கழிப்பர் என்பதாம் ☞ நயமிலறிவினவர் ன கழிப்பர் ப,எ மூன்றும் அசைகள். (௨)

அவமதிப்புமான்றமதிப்புமிரண்டு ... ※
மிகைமக்களான்மதிக்கற்பால-நயமுணராக் ... ※
கையறியாமாக்களிழிப்புமெடுத்தேத்தும் ... ※
வையவார்வடித்தநூலார் ... ... ※

(இ-ள்.) அவமதிப்பும் இகழ்வாகமதித்தலும்—ஆன்றமதிப்பும் புகழ்வாகமதித்தலும்—இரண்டும்-இவ்விரண்டும், மிகைமக்களால் மேலன்

மாக்களால்—மதிக்கற்பாத- மதிக்கத்தக்கனவல்ல— நயம் நீதியை—உணரா அறியாத—கை ஒழுக்கத்தை—அறியா தெரியாத—மாக்கள் மனிதர்கள்—இழிப்பும்-பழிப்பும்—எடுத்து எடுத்து—ஏத்தும் புகழ்தலும்—வடித்த நூலார் ஆராய்ந்த நூலறிவுள்ளார்—வையார் மனதில் வையார்—(எ-று)❋இ-ம்.ஒருவனை இகழ்தலும்புகழ்தலும்பெரியோர்க்கில்லைபிறரிகழினும்அவர்க்குமனக்குறைவில்லை என்பதாம்.☞நூலார் எ,வையார்-ப,(இலக்கணத்திரட்டு) "எதிர்மறைப்பெயரெச்சத்திசைவ வியியல்பு-மீறுகெடுங்கான்மிகுதலுமியல்பாம்,இவ்விதியால்உணராத என்னும்எதிர்மறைப்பெயரெச்சமீறுகெட்டுஒற்றுமிக்கது. (௩)

விரிநிறநாகம்விடருளதேனு .... ❋
உருமின்கடுஞ்சினஞ்சேணின்று-முட்கு .... ❋
அருமையுடையவரண்சேர்ந்துமுய்யார் .... ❋
பெருமையுடையார்செறின் .... ❋

(இ-ள்.) விரி மிக்க—நிறம் நிறமுள்ள—நாகம் பாம்பானது—விடர்-மலைப்பிளப்பில்—உளதேனும் உள்ளதானாலும்—உருமின் இடியின்—கடும் கடிய—சினம்-உக்கிரம்—சேணின்றும்-ஆகாயத்திருந்தும்—உட்கும் பயப்படும்—(அதுபோல) பெருமையுடையார் பெரியோர்கள்—செறின் கோபித்தால்—அருமையுடைய அரிய—அரண் சேர்ந்தும் கோட்டையைச்சேர்ந்தும், உய்யார்-(பகைவர்) பிழையார் (எ-று)❋இ-ம்-பாம்புபிளப்புள்ளிருப்பினும் இடிகண்டஞ்சும் அதுபோல பகைவர் பெரியோர்கோபிக்கல்கோட்டையைச் சார்ந்தும் பிழையார் என்பதாம் ☞பகைவர் தோன்றாஎழுவாய்உய்யார்பயனிலை.

எம்மையறிந்திலிரெம்போல்வாரில்லென்று .... ❋
தம்மைத்தாங்கொள்வதுகோளன்று-தம்மை ...... ❋
அரியாராநோக்கியறனறியுஞ்சான்றோ .... ❋
பெரியராக்கொள்வதுகோள் .... ❋

(இ-ள்.)எம்மை எங்களை—அறிந்திலிர் அறியீர்—எம்போல்வார்-எங்களை நிகர்த்தவர்—இல்லென்று இல்லையென்று—தம்மைத்தாம் தங்களைத்தாமே—கொள்வது உயர்த்திக்கொள்வது—கோளன்று கொள்கையன்று, தம்மை-தங்களை—அரியரா எளியராக—நோக்கி-பார்த்து—அறன் தருமத்தை—அறியும் உணரும்—சான்றோர் மேன்மக்கள்—பெரியரா பெரியோராக— கொள்வது மதித்துக்கொள்வது—கோள் கொள்கை—(எ-று)❋இ-ம். தங்களைத்தாங்களேபுகழ்ந்துகொள்வது கொள்கையல்ல தங்களையெளியவராகத் தாழ்த்திக்கொள்வது பெரியோர்கொள்கை என்பதாம்.☞கொள்வது எ,கோள்-ப. (௫)

நளிகடற்றண்சேர்ப்பநாணிழற்போல .... ❋
விளியுஞ்சிறியவர்கேண்மை-விளிவின்றி ...... ❋

அல்குநிழற்போலகன்றகன்றோடுமே ... ... *
தொல்புகழாளர்தொடர்பு ... ... *

(இ-ள்.) நளி அகன்ற—கடல் கடலையும்—தண் குளிர்ந்த—சேர்ப்ப கரையையுமுடையபாண்டியனே—சிறியவர் சிறியோர்கள்—கேண்மை சிநேகம்—நாள் முற்பகல்—நிழற்போல நிழலைப்போல—விளியும் குறையும்—தொல் பழைய—புகழாளர் - பெரியோர்கள்—தொடர்பு சிநேகம்—விளிவின்றி கேடில்லாது—அல்கு பிற்பகல்—நிழற்போல் நிழலைப்போல—அகன்றகன்று வளர்ந்துவளர்ந்து—ஓடும் செல்லும்—(எ-று) ※இ-ம்-பாண்டியனே சிறியவர் சிநேகம் முற்பகல் நிழலைப்போற் குறையும் பெரியவர்சிநேகம் பிற்பகல் நிழலைப்போலவளரும் என்பதாம். ☞ கேண்மை-எ, விளியும் ப, தொடர்பு-எ, ஓடும்-ப,எ-அசை. (௬)

மன்னர்திருவுமகளிரெழினலமுந் ... ... *
துன்னியார்துய்ப்பர்தகல்வேண்டா-துன்னிக் ... *
குழைகொண்டுதாழ்ந்தகுளிர்மரமெல்லா ... *
முழைதங்கட்சென்றார்க்கொருங்கு ... ... *

(இ-ள்.) துன்னி நெருங்கி—குழைகொண்டு தளிர்கொண்டு—தாழ்ந்த தாழ்ந்த—குளிர் குளிர்ந்த—மரமெல்லாம் மரங்களெல்லாம்—தங்கண் தம்மிடத்து—சென்றார்க்கு வந்தவர்க்கு, ஒருங்கு ஒருமிக்க—உழை புகலிடமாவதுபோல, மன்னர் அரசர், திருவும் செல்வமும், மகளிர் பெண்களுடைய, எழில அழகின், நலமும் நன்மையும், துன்னியார் சேர்ந்தவர், தகல்வேண்டா தடையில்லாமல், துய்ப்பர்-அநுபவிப்பர், (எ-று) ※இ-ம்-அரசர் செல்வத்தையும் பெண்கள் நலத்தையும் அருகிருந்தோரநுபவிப்பர் என்பதாம். ☞ துன்னியார்-எ, துய்ப்பர்-ப (௭)

தெரியத்தெரியுந்தெரிவிலார்கண்ணும் ... ... *
பிரியப்பெரும்படர்நோய்செய்யும்-பெரிய ... *
வுலவாவிருங்கழிச்சேர்ப்பயார்மாட்டுங் ... *
கலவாமைகோடியுறும் ... ... *

(இ-ள்.) பெரிய பெரிதாகிய—உலவா வற்றாத—இரும் மிக்க—கழி கழியையும்—சேர்ப்ப கரையையுமுடையபாண்டியனே—தெரிவிலார்கண்ணும் தெளிவில்லாரிடத்தும்—தெரிய (சிநேகஞ்செய்) தறிய—தெரியும் (அவர்குணகுணந்) தெரியும்—பிரிய (அவர்சிநேகம்) பிரிய, பெரும் பெரிய, படர்நோய் துன்பநோய், செய்யும் செய்யும், (ஆதலால்) யார்மாட்டும் யாவரிடத்தும், கலவாமை சிநேகியாமையே, கோடியுறும் கோடிபங்கதிகம்—(எ-று) ※இ-ம்-பாண்டியனே தெளிவிலார் நட்புச்சிநேகஞ் செய்தறியத்தெரியும் யாவரிடத்துஞ் சிநேகஞ்செய்யாதிருக்கை நல்லது என்பதாம். ☞ கலவாமை-எ, கோடியுறும்-ப. (௮)

கல்லாதுபோகியநாளும்பெரியவர்கட் ... ...*
செல்லாதுவைகியவைகலு-மொல்வ ... ... *
கொடாஅதொழிந்தபகலுமுரைப்பிற் ... ... *
படாஅவாம்பண்புடையார்கண் ... ... *

(இ-ள்.) பண்புடையார்கண் நற்குணமுடையாரிடத்து—கல்லாது நூலைக்கற்காது—போகிய கழிந்த—நாளும் நாள்களும்— பெரியவர்கண் பெரியோரிடத்து—செல்லாது போகாது—வைகிய இருந்த—வைகலும் நாள்களும்—ஒல்வ பொருந்தியவற்றை,கொடாஅது கொடுக்காது—ஒழிந்த கழிந்த—பகலும் நாள்களும்— உரைப்பிற் சொல்லில்—படாஅவாம் இவைபொருந்தாவாம்— (எ-று)*இ-ம்- பெரியோர்களிடத்தில் கற்காதகாலமும் தம்மிற் பெரியோரிடத்திற் செல்லாதகாலமும் கொடாதகாலமும் உண்டாகாவாம்-என்பதாம். ☞நாள்-வைகல்-பகல்-மூன்றும்ஒருபொருள். படாஅவாம்-ப. (௯)

பெரியார்பெருமைசிறுதகைமையொன்றிற் .....*
குரியாருரிமையடக்கந்-தெரியுங்காற் ... ... *
செல்வமுடையாருஞ்செல்வரேதற்சேர்ந்தா ... *
ரல்லல்*களைபவெனின் ... ... *

(இ-ள்.) பெரியார் பெரியோர்க்கு, பெருமை பெருமையாவது— சிறுதகைமை பணிந்துநடக்குதல்—ஒன்றிற்கு ஒருகல்விக்கு—உரியார் உரியவர்களுக்கு—உரிமை தகுதியாவது— அடக்கம் அடங்கியிருக்கை—தெரியுங்கால் ஆராய்ந்தால்—தற்சேர்ந்தார் தன்னைச்சேர்ந்தவர்கள்—அல்லல் துன்பங்களை— களைப நீக்குவர்— எனின் என்றால்—செல்வமுடையாரும் செல்வமுள்ளவரும்— செல்வரே செல்வமுள்ளவர்களே (எ-று)*இ-ம்- பெரியோர்க்குப்பணிவும்கற்றோர்க்கடக்கமும்செல்வர்க்கீகையும்வேண்டும்- என்பதாம். ☞ செல்வமுடையார்-எ, செல்வர்-ப,எ-அசை*(இலக்கணத்திரட்டு) "அர் ஆர்பமார் பல்லோர் படர்க்கை" (௰)

பெரியாரைப்பிழையாமை- முற்றிற்று.

௰அ-ம்- அதிகாரம்.

நல்வினைசேர்தல்.

அஃதாவது, நன்மையாகிய வினைத்தைச்சேர்தல்.

அறியாப்பருவந்தடங்காரோபொன்றி......... ...*
நெறியல்லசெய்தொழுகியவ்வு-நெறியறிந்த...... *

நற்சார்வுசாரக்கெடுமேவெயின்முறுகப் ... ... ※
புற்பனிப்பற்றுவிட்டாங்கு ... ... ※

(இ-ள்.) வெயில்-வெயிலானது—முறுக- அதிகரிக்க—புல்- புல்லை—பனிப்பற்று-பனியின்பற்று—விட்டாங்கு- விட்டாற்போல—அறியாப்பருவத்து- சிறுவயதில்—அடங்காரோடு- அடக்கமில்லாருடன்—ஒன்றி- பொருந்தி—நெறியல்ல- தீமைகளை—செய்தொழுகியவ்வும்- செய்துநடந்தவையும்—நெறியறிந்த-நன்மார்க்கமறிந்த—நற்சார்வு- நல்வினங்களை-சார-சேர—கெடும்-கெட்டுவிடும்—(எ-று) ※ இ-ம்- வெயிலைக்கண்டு பனிநீங்கினாற்போல துன்மார்க்கரைச்சேர்ந்த துர்நடக்கை நன்மார்க்கரைச்சேரக்கெடும்- என்பதாம், ☞ ஒழுகியவ்வும்-எ, கெடும்-ப, ஏ அசை. (க)

அறிமினறநெறியஞ்சுமின்கூற்றம் ... ... ※
பொறுமின்பிறர்கடுஞ்சொற்போற்றுமின்வஞ்சம் ... ... ※
வெறுமின்வினைதீயார்கேண்மையெஞ்ஞான்றும் ... ... ※
பெறுமின்பெரியார்வாய்ச்சொல் ... ... ※

(இ-ள்.) அறம்-தருமத்தின்—நெறி-வழியை—அறிமின்- அறியுங்கள்—கூற்றம்-இயமனுக்கு—அஞ்சுமின்- பயப்படுங்கள்—பிறர்- அயலாருடைய—கடுஞ்சொல்- கொடுஞ்சொல்லை—பொறுமின்- பொறுத்துக்கொள்ளுங்கள்—வஞ்சம்-வஞ்சத்தை, போற்றுமின்-வாராதுபோற்றுங்கள்—வினை- தீவினையுள்ள—தீயார்- கொடியவர்—கேண்மை-சினேகத்தை—வெறுமின்- வெறுத்துவிடுங்கள்—எஞ்ஞான்றும்- எந்நாளும்—பெரியார்-பெரியோர்கள், வாய்ச்சொல்-வாயிற்பிறக்குஞ்சொல்லை—பெறுமின்-பெறுங்கள்—(எ-று) ※ இ-ம்- தருமத்தையறியுங்கள் இயமனுக்கஞ்சுங்கள் கொடுஞ்சொல்லைப் பொறுங்கள் வஞ்சனைவாராது காத்துக்கொள்ளுங்கள் தீயவர் நட்பை விடுங்கள் பெரியோர் சொல்லைப்பெறுங்கள்-என்பதாம். ☞ நீங்கள்-தோன்றாஎழுவாய்-பெறுமின்-ப. (உ)

அடைந்தார்பிரிவுமரும்பிணியுங்கேடு ... ... ※
முடங்குடம்புகொண்டார்க்குறலாற்-றொடங்கிப் ... ... ※
பிறப்பின்னாதென்றுணரும்பேரறிவினாரை ... ... ※
புறப்புணர்க ※ வம்மாவென்னெஞ்சு ... ... ※

(இ-ள்.) அடைந்தார்-அடைந்தவரை—பிரிவும்-பிரிதலும்—அரும்-அரிய—பிணியும்- நோய்களும்—கேடும்-மரணமும்—உடம்பு-உடம்பை—கொண்டார்க்கு-கொண்டவர்க்கு, உடங்கு-உடனே—உறலால்-வரலால்—தொடங்கி-வினைதொடங்கி—பிறப்பு- வரும்பிறப்பு—இன்னாதென்று- துன்பமென்று, உணரும்-அறியும்—பேரறிவினாரை-பெரியோரை—என்னெஞ்சு-என்மனம்—உறுசிக்கென, புணர்க-பிணிப்

பதாக— (எ-று) ❁ இ-ம்- பெரியோரை என்மனம்பிணிக்கக்கடவது என்பதாம். ☞ நெஞ்சு-எ, புணர்க ப, பேரறிவினாரை-செ, ※ (இலக்கணத்திரட்டு, "அம்மவுரையசைமேக்ளென்றுகும்.," (௫)

இறப்பநினையுங்காலின்னாதெனினும் ... ... ※
பிறப்பினையாருமுனியார்-பிறப்பினுட் ... ... ※
பண்பாற்றுநெஞ்சத்தவர்களோடெஞ்ஞான்று ... ... ※
நண்பாற்றிநட்கப்பெறின் ... ... ※

(இ-ள்.) பிறப்பினுள்-பிறப்புள்—பண்பு- நற்குணங்களை—ஆற்றும்-சுமந்திருக்கும்—நெஞ்சத்தவர்களோடு- மனமுள்ள நல்லோருடன்—எஞ்ஞான்றும்-எந்நாளும்— நண்பாற்றி-சிநேகஞ்செய்து—நட்கப்பெறின்-சிநேகிக்கப்பெற்றால், இறப்ப- மிகவும்—நினையுங்கால்-நினைந்தால்—இன்னாதெனினும்- துன்பமானாலும்—பிறப்பினை- பிறவியை—யாரும்-யாவரும்—முனியார்-வெறுக்கார்—(எ-று) ❁ இ-ம்-பிறப்புத்துன்பமாயினும் பெரியோரைச்சிநேகித்தால அப்பிறப்பைவெறுக்கார் என்பதாம், ☞ யாரும்-எ, முனியார்-ப, பிறப்பினை-செ. (௬)

ஊரங்கணநீருரவுநீர்ச்சேர்ந்தக்கால் ... ... ※
பேரும்பிறிதாகித்தீர்த்தமா-மோருங் ... ... ※
குலமாட்சியில்லாருங்குன்றுபோனிற்பர் ... ...※
நலமாட்சிநல்லாரைச்சார்ந்து ... ...※

(இ-ள்.) ஊர்-ஊரின்—அங்கணநீர்-சலதாரைநீர்—உரவுநீர்-மிகுந்தநீரை—சேர்ந்தக்கால்- சேர்ந்தால்—பேரும்- பெயரும்—பிறிதாகி-வேறாகி—தீர்த்தமாம் தீர்த்தமாகும்—(அதுபோல) குலமாட்சி-குலப்பெருமை—இல்லாரும்-இல்லாதவரும்— நலமாட்சி-நற்பெருமையுள்ள—நல்லாரை-நல்லோரை—சார்ந்து-சேர்ந்து—குன்றுபோல்-மலைபோல், நிற்பர்-உயர்ந்துநிற்பர்—(எ-று) ❁ இ-ம்-சலதாரைநீர் பெருவெள்ளத்தைச்சேர்ந்து தீர்த்தமாகும் அதுபோல உயர்ந்தோரைச்சேர்ந்த தாழ்ந்தோரும் உயர்ந்தோராவர்- என்பதாம், ☞ குலமாட்சியிலார்-எ, நிற்பர்-ப, ஓரும்-அசை. (௭)

ஒண்கதிர்வாண்மதியஞ்சேர்தலாலோங்கிய ... ... ※
வங்கண்விசும்பின் முயலுந்-தொழப்படூஉங் ... ... ※
குன்றியசீர்மையராயினுஞ்சீர்பெறுவர் ... ... ※
குன்றன்னார்கேண்மைகொளின் ... ... ※

(இ-ள்.) ஒண்-ஒள்ளிய—கதிர்-கிரணங்களையுடைய—வாள்- பிரகாசிக்கும்—மதியம்-சந்திரனை—சேர்தலால்-அடைதலால்— ஓங்கிய-உயர்ந்த, அம்-அழகிய, கண்-இடமுடைய, விசும்பின்-ஆகாயத்துள்ள, முயலும்-முசலும், தொழப்படூஉம்-வணங்கப்படும் (அதுபோல) குன்றிய-

குறைந்த—சீர்மையராயினும்-சிறப்புடையரானாலும்—குன்றன்னார்-மலைநிகர்பெருமையோர்—கேண்மை-சிநேகத்தை—கொளின்-கொண்டால்—சீர்பெறுவர்-சிறப்படைவர்—(எ-று) ❁ இ-ம்- சந்திரனைச் சேர்ந்தகளங்கமுந்தொழப்படும்-அதுபோல் பெரியோரைச்சேர்ந்த சிறியோருஞ்சிறப்படைவர்-என்பதாம், ☞ கேண்மை-கொள்பவர் தோன்று எழுவாய், பெறுவர்-ப, நிலை-செ. (சா)

பாலோடளாயநீர்பாலாகுமல்லது ... ... ❋
நீராய்நிறந்தெரிந்துதோன்றாதாந்-தேரின் ... ... ❋
சிறியார்சிறுமையுந்தோன்றாதாநல்ல ... ... ❋
பெரியார்பெருமையைச்சார்ந்து ... ... ❋

(இ-ள்.)பாலோடு-பாலுடன்—அளாய-கலந்த—நீர்-நீரானது—பாலாகும்-பால்போலாம்—அல்லது-அல்லாமல்—நீராய்-நீர்போலாய்—நிறம்-நிறம்—தெரிந்து-விளங்கி—தோன்றாது-தெரியாது—(அதுபோல) தேரில்-ஆராயில்—நல்ல-நல்ல—பெரியார்-பெரியோர்—பெருமையை-பெருந்தன்மையை—சார்ந்து-சேர்ந்து—சிறியார்-சிறியோருடைய—சிறுமையும்-பெருந்தன்மையின்மையும்—தோன்றாது-தெரியாது(எ-று)❁இ-ம்.பாலைச்சேர்ந்தநீரும்பால்போலாம்-அதுபோல்பெரியோரைச்சேர்ந்தசிறியோரிழிவுந்தோன்றாது என்பதாம் ☞ சிறுமை-எ, தோன்றாது-ப, ஆம்-இரண்டும்-அசைகள். (எ)

கொல்லையிரும்புனத்துக்குற்றியடைந்தபுல் ... ... ❋
ஒல்காவேயாகுமுழவ-ருழுபடைக்கு ... ... ❋
மெல்லியரேயாயினுநற்சார்வுசார்ந்தார்மேற் ... ❋
❋ செல்லாவாஞ்செற்றார்சினம் ... ... ❋

(இ-ள்.)கொல்லை-கொல்லையில்—இரும்-பெரிய—புனத்து-புனத்திலே—குற்றி-மரக்கட்டையை—அடைந்த-சேர்ந்த—புல்-புல்லானது—உழவர்-பயிர்செய்வோர்—உழு-உழுகிற—படைக்கு-கலப்பைக்கு—ஒல்காவாம்-அசையாவாகும்—(அதுபோல) மெல்லியராயினும்-மெல்லியவரானாலும்—நற்சார்வு-நல்லசார்வை—சார்ந்தார்மேல்-சேர்ந்தவரிடத்து—செற்றார்-பகைவருடைய—சினம்-கோபங்கள்—செல்லா-செல்லமாட்டாவாம்—(எ-று) ❁ இ-ம்-மரக்கட்டையைச்சார்ந்த புல் கலப்பைக்கசையாது-அதுபோல வலியாரைச்சேர்ந்தமெலியாரிடத்துப்பகைவர்கோபஞ்செல்லாது- என்பதாம். ☞ சினம்-எ, செல்லா-ப, ஏ-இரண்டும்-ஆம்- ஒன்றும்-அசை. ❋ (இலக்கணத்திரட்டு) [ஆவென்விகுதி பன்மைமூன் றெதிர்மறை.] (அ)

நிலநலத்தானந்தியநெல்லேபோற்றந்தம் ... ... ❋
குலநலத்தாலாகுவர்சான்றோர்-கலநலத்தைத் ... ❋

தீவளிசென்றுசிதைத்தாங்குசான்றாண்மை ※
தீயினஞ்சேரக்கெடும் ※

(இ-ள்.) நிலம்-நிலத்தின்—நலத்தால்-நன்மையால்—நந்திய- வளர்ந்த, நெல்லேபோல்-நெல்லைப்போல—தத்தம்-அவரவருடைய—குலம்-குலத்தின்—நலத்தால்-நன்மையால்—சான்றோர்- பெரியோர்—ஆகுவர்-ஆவர்—கலம்-கப்பலின்—நலத்தை-நன்மையை—தீவளி- தீக்காற்று—சென்று-போய்—சிதைத்தாங்கு-கெடுத்தாற்போல—சான்றாண்மை-பெரியோர்தன்மை—தீயினம்-தீயவினத்தை—சேர-அடைய—கெடும்- கெட்டுவிடும்—(எ-று) ※ இ-ம். கடுங்காற்றுக்கப்பலைக்கெடுத்தாற்போல நல்லினந் தீயினத்தைச்சேரக்கெடும்-என்பதாம். ☞ சான்றோர்-எ, ஆகுவர்-ப, சான்றாண்மை-எ, கெடும்-ப. (௯)

மனத்தான்மறுவிலரேனுந்தாஞ்சேர்ந்த ※
வினத்தாலிகழப்படுவர்-புனத்து ※
வெறிகமழ்சந்தனமும்வேங்கையும்வேமே ※
யெறிபுனந்தீப்பட்டக்கால் ※

(இ-ள்.) எறிபுனம்-வெட்டப்பட்டவனம்—தீப்பட்டக்கால்-தீப்பட்டால்—புனத்து-வனத்தில்—வெறி- வாசனை—கமழ்- வீசும்—சந்தனமும்-சந்தனமரமும்—வேங்கையும்-வேங்கைமரமும்—வேம்-வேகும், (அதுபோல) மனத்தால்- மனதால்—மறுவிலரேனும்- குற்றமிலராயினும்—தாஞ்சேர்ந்த-தாங்கள்சேரப்பட்ட—இனத்தால்-தீயவினத்தால் இகழப்படுவர்- இகழப்படுவார்கள்—(எ-று) ※ இ-ம். காடுதீப்பட்டால்அதைச்சார்ந்தமரங்கள் வேகும், அதுபோலக் குற்றமற்றவராயினும்தீயவினத்தைச்சேர்ந்தால், இகழப்படுவார்கள் என்பதாம். ☞ மறுவிலர்-எ, இகழப்படுவர்-ப, ஏ-அசை. (௰)

நல்லினஞ்சேர்தல்-முற்றிற்று.

௰௯-ஆம்-அதிகாரம்.

பெருமை.

அஃதாவது-பெருந்தன்மையைச்சொல்லுதலாம்.

ஈதலிசையாதிளமைசேணீங்குதலாற் ※
காதலவருங்கருத்தல்லர்-காதலித் ※
தாதுநாமென்னுமவாவினைக்கைவிட்டுப் ※
போவதேபோலும்பொருள் ※

(இ-ள்.) ஈதல் - கொடுத்தல்—இசையாது - பொருந்தாது— இளமை-இளமைப்பருவம்—சேண்-தூரத்தில்—நீங்குதலால்-நீங்கலால்—காதல்வரும்-இச்சையுள்ளபெண்களும்—கருத்தல்லர்- கருத்துள்ளவரல்லர்—காதலித்து - இச்சித்து— ஆதுநாமென்னும்- நாம்வாழ்க்கடவோமென்னும்—அவாவினை-ஆசையை, கைவிட்டு-லகவிட்டு—போவது-துறந்துபோவது—பொருள்-பொருளாம்—(எ-று) ❋ இ-ம்- ஆசையைவிட்டுத்துறப்பதே பொருளாகும்-என்பதாம். ☞ பொருள்-எ, போவது-ப, போலும்-எ-அசைகள். (௧)

இற்சார்வினேமாந்தேமீங்கமைந்தேமென்றெண்ணிப் ❋
பொச்சாந்தொழுகுவர்பேதையா-ரச்சார்வு............❋
நின்றனபோன்றுநிலையாவெனவுணர்ந்தா... ... ...❋
ரொன்றும்பரிவதிலர் ....❋

(இ-ள்.) இற்சார்வின்-இல்வாழ்க்கையில்—ஏமாந்தேம்- மகிழ்ச்சியடைந்தோம்—ஈங்கு-இவ்விடத்து—அமைந்தேமென்று- யாவும்நிறைவுற்றோமென்று—எண்ணி-நினைத்து—பொச்சாந்து -மறந்து—ஒழுகுவர்-நடப்பர்—பேதையார்-அறிவில்லார்—அச்சார்வு- அவ்வில்வாழ்க்கை—நின்றனபோன்று-நின்றனபோலானவை— நிலையாவென-நில்லாவென—உணர்ந்தார் அறிந்தார்—என்றும்-எந்நாளும், பரிவதிலர்-விசனப்படார்—(எ-று) ❋ இ-ம்- அறிவீனர்இல்வாழ்க்கையையிச்சித்துநடப்பார்அறிவுளோர்அவ்வாழ்க்கையையிச்சித்துத் துன்பமடையார்-என்பதாம். ☞ பேதையார் - எ, ஒழுகுவர் - ப, உணர்ந்தார் - எ, பரிவதிலர்-ப. (௨)

மறுமைக்குவித்துமயலின்றிச்செய்து..................❋
சிறுமைப்படாதேநீர்வாழ்மி-னறிஞராய்......... ......❋
நின்றுழிநின்றேநிறம்வேறுங்காரண .. ..❋
மின்றிப்பலவுமுள ... ... ❋

(இ-ள்.) மறுமைக்கு- மறுபிறப்பிற்கு—வித்து - வித்தானதருமங்களை, மயலின்றி-மயக்கமில்லாமல்—செய்து-செய்து—சிறுமை- துன்பம்—படாது-உண்டாகாமல்—நீர்-நீங்கள்—வாழ்மின்- வாழுங்கள்—அறிஞராய்-விவேகிகளாய்—நின்றுழி நின்று-நின்றநிலையிலேநின்று—நிறம்-குணம்—வேறுங்காரணம்- வேறுபடுங்காரணம்—இன்றி-இல்லாமல்—பலவுமுள-பலவுமுள்ளன—(எ-று) ❋ இ-ம்- நீங்கள்தருமத்தைச் செய்துவாழுங்கள் - அறிவாளிகளாயிருந்துதருமஞ்செய்யாதுகுணம் வேறுபடுதல்பலவிருக்கின்றன - என்பதாம். ☞ நீர்-எ, வாழ்மின்-ப, பலவும்-எ, உள-ப, எ, உம்-அசைகள். (௩)

உறைப்பருங்காலத்துமூற்றுநீர்க்கேணி... ....❋
யிறைத்துணினுமூராற்று மென்பர்-கொடைக்கடனும்❋

சாஅஅயக்கண்ணும்பெரியார்போன்மற்றையா ....*
ராஅஅயக்கண்ணுமரிது ....*

(இ-ள்.) உறைப்பு-மழை—அருங்காலத்து-இல்லாக்காலத்து—ஊற்றுநீர்-ஊற்றுநீருள்ள—கேணி-குளமானது—இறைத்து-நீரைஇறைத்து—உணினும்-உண்டாலும்—ஊராற்றும்-ஊரைக்காப்பாற்றும்—என்பர்-என்றுசொல்வர்—(அதுபோல)கொடை-தியாகத்தின்—கடனும்-முறைமையும்—சாஅஅயக்கண்ணும்-தளர்ந்தவிடத்தும்—பெரியார்போல்-பெரியோர்களைப்போல—மற்றையார்-சிறியோர்கள்—ஆஅஅயக்கண்ணும்-செல்வமுண்டாயினும்—அரிது-செய்தல்அரிது—(எ-று) ※ இ-ம்-பெரியோர்செய்தல்போல சிறியோர்செய்தல் அரிது-என்பதாம்- ☞ செய்தல்-தோன்றாஎழுவாய், அரிது-ப. (௪)

உறுபுனறந்துலகூட்டியறுமிடத்துங் ....*
கல்லூற்றுழியூறுமாறேபோற்-செல்வம் ....*
பலர்க்காற்றிக்கெட்டுலந்தக்கண்ணுஞ்சிலர்க்காற்றிச் ...*
செய்வர்செயற்பாலவை ....*

(இ-ள்.) உறு-மிக்க—புனல்-நீரை—தந்து-கொடுத்து—உலகு-உலகத்தை—ஊட்டி-உண்பித்து—அறுமிடத்தும்-நீரற்றகாலத்தும்—கல்-தோண்டின—ஊற்றுழி-ஊற்றுக்குழியிடத்து—ஊறும்-ஊறுகின்ற,ஆறேபோல்-ஆறுபோல—செல்வம்-பாக்கியத்தை—பலர்க்கு-பலருக்கும்—ஆற்றி-கொடுத்து—கெட்டு-கெட்டு—உலந்தக்கண்ணும்-அழிந்தாலும்—சிலர்க்கு-சிலருக்கு—ஆற்றி-கொடுத்து—செயற்பாலவை-செய்யத்தக்கதருமங்களை—செய்வர்-பெரியோர்செய்வர்—(எ-று) ※ இ-ம்-மழையில்லாதநாளிலும்ஆறுஊற்றுநீர்கொடுக்கும்-(அதுபோல) செல்வமழிந்தாலும் பெரியோர்செய்யுந் தருமங்களைச் செய்வரென்பதாம். ☞ பெரியோர்-தோன்றாவெழுவாய், செய்வர்-ப, செயற்பாலவை-செ, ஏகாரம்-அசை. (௫)

பெருவரைநாடபெரியார்கட்டீமை ....*
கருநரைமேற்சூடேபோற்றோன்றுங்-கருநரையைக் ...*
கொன்றன்னவின்னாசெயினுஞ்சிறியார்மே ....*
லொன்றானுந்தோன்றாகெடும் ....*

(இ-ள்.) பெரு-பெரிய,வரை-மலையையும்—நாட-நாட்டையுமுடையபாண்டியனே—பெரியார்கண்-பெரியோரிடத்துண்டாம்—தீமை-குற்றம்—கரும்-பெரிய—நரை-இடபத்தின்—மேல்-முதுகின்மேலிருக்கும்—சூடேபோல்-திமிலைப்போல, தோன்றும்-காணப்படும்—கரும்-பெரிய—நரையை-இடபத்தை—கொன்றன்ன-கொன்றதுபோலும், இன்னா-குற்றங்களை, செயினும்-செய்தாலும், சிறியார்மேல்-சிறியவரிடத்து, ஒன்றானும்-ஒருகுற்றமும், தோன்றா-தோன்றாமல், கெ

டும்-கெட்டுவிடும், (எ-று) ✻ இ-ம். பாண்டியனே பெரியோர்கள்செய்த குற்றம்பிரகாசமாய்க்காணப்படும் - சிறியோர்கள்செய்தகுற்றம் காணப்படாது என்பதாம், ☞ தீமை-எ, தோன்றும்-ப, குற்றம்-தோன்றாவழுவாய்-கெடும்-ப. (௬)

இசைந்தசிறுமையியல்பிலாதார்கட் ... ... ✻
பசைந்ததுணையும்பரிவா-மசைந்த ... ... ✻
நகையேயும்வேண்டாதநல்லறிவினார்கட் ... ... ✻
பகையேயும்பாடுபெறும் ... ... ✻

(இ-ள்.) சிறுமை-அற்பமும்—இசைந்த-பொருந்திய—இயல்பு-நற்குணம்—இல்லாதார்கண்-இல்லாதாரிடத்து—பசைந்த- நட்புக்கொண்ட— துணையும்-அளவும்—பரிவாம்-துன்பமாகும், அசைந்த-தளர்ந்த—நகையேயும்-மகிழ்ச்சியிலும்—வேண்டாத-(தீமையை) விரும்பாத—நல்லறிவினார்கண்-நல்லறிவாளிடத்து—பகையேயும்-பகையாகிலும்—பாடுபெறும்-பெருமையடையும்—(எ-று) ✻ இ-ம். சிறியவர்களிடத்திற்கொண்ட சினேகம் துன்பந்தரும் - பெரியவர்களிடத்திற்கொண்டபகையும்பெருமைதரும்-என்பதாம். ☞ பசைந்ததுணை-எ, பரிவாம்-ப, பகை-எ, பெறும்-ப. (௭)

மெல்லியநல்லாருண்மேன்மையதுவிறந் ... ... ✻
தொன்னாருட்கூற்றுட்குமுட்குடைமை- யெல்லாஞ்
சலவருடசாலச்சலமேநலவரு ... ... ✻
ணன்மைவரம்பாய்விடல் ... ... ✻

(இ-ள்.) மெல்-மெல்லிய—இயல்-நற்குணமுடைய— நல்லாருள்-பெண்களிடத்து—மேன்மை-மேன்மைசெலுத்துக—அதுவிறந்து-அஃதொழிந்து—ஒன்னாருள்-பகைவரிடத்து—கூற்று- இயமன்—உட்கும்-அஞ்சத்தகும்—உட்குடைமை-அச்சத்தைச்செலுத்துக—எல்லாம்-முற்றும்—சலவருள்-பொய்யாரிடத்து—சால-மிகவும்—சலமே-பொய்யேசெலுத்துக—நலவருள்-நல்லவரிடத்து—நன்மை-நன்மையை—வரம்பாய்-அளவாய்—விடல்-செலுத்துக (எ-று) ✻ இ-ம், பெண்களிடத்துமேன்மையையும், பகைவரிடத்து அச்சத்தையும், பொய்யாரிடத்துப்பொய்மையையும், நல்லவரிடத்துநன்மையையும், செலுத்தக்கடவாய்-என்பதாம். ☞ நீவிர், தோன்றாஎழுவாய், செலுத்துக, ப. (௮)

கடுக்கியொருவன்கடுங்குறளைபேசி ... ... ✻
மயக்கிவிடினுமனப்பிரிப்பொன்றின்றித் ... ... ✻
துளக்கமிலாதவர்தூயமனத்தார் ... ... ✻
விளக்கினுளொண்சுடரேபோன்று ... ... ✻

(இ-ள்.) கடுக்கி-கடுமையாகி—ஒருவன்-ஒருவன்—கடுங்குறளை-பொல்லாதசொற்களை, பேசி-சொல்லி—மயக்கி- விடினும்-மயக்கினாலும், மனம்-தம்மனத்து—பிரிப்பு-வேறுபாடு—ஒன்றின்றி- ஒன்றில்லாமல்—விளக்கினுள்-தீபத்துள்—ஒள்- ஒள்ளிய—சுடரேபோன்று- தீபம்போலாகி—துளக்கமிலாதவர்-அசைவில்லாதவர்—தூயமனத்தார்-பரிசுத்தமனமுடையார்—(எ-று) ❊ இ-ம்.ஒருவன்கொடுஞ்சொற்களைச்சொல்லிமயக்கினாலும்வேறுபடாமல்நிற்பவரே பரிசுத்தமனமுடையவர்-என்பதாம். ☞ துளக்கமிலாதவர்-எ, தூயமனத்தவர்-ப. (௯)

முற்றுத்துந் துத்தினை நாளுமறஞ்செய்து ......❊
பிற்றுத்துத் துத்துவர்சான்றவ-ரத்துத்து...... . ❊
முக்குற்றநீக்கிமுடியுமளவெல்லாந் .... ❊
துக்கத்துணீக்கிவிடும் ....., ...❊

(இ-ள்.) முற்றுத்தும்-முன்புன்னுளும்—துத்தினை-உணவை— நாளும்-எந்நாளும்—அறம்-தருமம்— செய்து-செய்து—பிற்றுத்து-பின்புண்ணுமுணவை—துத்துவர்-உண்ணுவர்—சான்றவர்-பெரியோர்—அத்துத்து- அவ்வுணவு, முக்குற்றம்-மூன்றுகுற்றங்களும்— நீக்கி-தள்ளி—முடியுமளவெல்லாம்- கிடைக்குமளவெல்லாம்— துக்கத்துள்-துன்பத்திலிருந்து—நீக்கிவிடும்-நீக்கும்—(எ-று) ❊ இ-ம். முக்குற்றமற்றுவந்தஉணவுதுக்கத்தைவிட்டுநீக்கும்-என்பதாம், குற்றம்(௩) களவுசெய்தல்-வஞ்சித்தல்யாசித்தல் ☞ அத்துத்து-எ, நீக்கிவிடும் ப.(௰)

பெருமை-முற்றிற்று.

௨௰-ம்-அதிகாரம்.

தாளாண்மை.

அஃதாவது-முயற்சி செய்தலாம்.

கோளாற்றக்கொள்ளாக்குளத்தின்கீழ்ப்பைங்கூழ்போற்❊
கேளீவ்துண்டுகிளைகளோ-துஞ்சுக...... .... ❊
வாளாடிகூத்தியர்கண்போற்றடுமாறுந்...... ... ...❊
தாளாளர்க்குண்டோதவறு... ....❊

(இ-ள்.) கோள்-நீர்கொள்ளுதல்-ஆற்ற-மிகவும்— கொள்ளா-கொள்ளாத—குளத்தின்கீழ்-குளத்தின்கீழே—பைங்கூழ்போல்-பசியபயிர்போல—கேள்-இனத்தார்—ஈவது- கொடுப்பதை—உண்டு- புசித்து, கிளைகள்-இனத்தார்—துஞ்சுக-இறக்கக்கடவர்கள்—வாளாடு-வாள்கொண்டுசுழற்றும், கூத்தியர்-கூத்தாடுவோர், கண்போல்-கண்ணைப்போல, தடுமாறும்- புடைபெயர்ந்துநிற்கும்—தாளார்க்கு- முயற்சிசெய்

வார்க்குத்தவறு-பொருண்முட்டுப்பாடு, உண்டோ-இல்லை—(எ-று) ❊ இ-ம்-முயற்சிசெய்வார்க்கு யாதொருகுறையுமில்லை என்பதாம். ☞ தி ளைகள்-எ, துஞ்சுக-ப, தவறு-எ, உண்டோ-ப, ஓ-அசை. (௧)

ஆடுகோடாகியதரிடைநின்றதூஉங் ... ... ❊
காழ்கொண்டகண்ணேகளிறணைக்குங்-கந்தாகும் ... ... ❊
வாழ்தலுமன்னதகைத்தேயொருவன்றான் ... ... ❊
றாழ்வின்றித்தன்னைச்செயின் ... ... ❊

(இ-ள்.) ஆடு-அசைகின்ற—கோடாகி-கொம்பாகி—அதரிடை-வழியிடத்து—நின்றதூஉம் நின்றதுவும்—காழ்-வைரம், கொண்ட-கொண்ட—கண்ணே-இடத்தே—களிறு-யானையை—அணைக்கும்-சேர்த்துக்கட்டும்—கந்தாகும்-தறியாகும்—ஒருவன்-ஒருவன், தாழ்வு-தாழ்ச்சி—இன்றி-இல்லாமல்—தன்னைச்செயின்-(முயற்சியில்) தன்னை யாக்கிக்கொண்டால்—வாழ்தலும்-செல்வமுடையனாதலும், அன்னதகைத்தே-அந்தன்மையாம்—(எ-று) ❊ இ-ம்-இளையமரமுற்றினால் யானை கட்டலாம், ஒருவன் முயற்சிசெய்வானானால் வாழ்கலாம், என்பதாம். ☞ வாழ்தல்-எ, தகைத்து-ப, தான்-அசை, வைரத்தின்பகுதி-, வைரம், (வீரசோழியத்திற்காண்க.) (௨)

உறுபுலியூனிரையின்றியொருநாட் ... ... ❊
சிறுதேரைபற்றியுந்தின்னு-மறிவினாற் ... ... ❊
காற்றொழிலென்றுகருதற்கக்கையினான் ... ... ❊
மேற்றொழிலுமாங்கேமிகும் ... ... ❊

(இ-ள்.) உறு-பலமுற்ற—புலி-புலி—ஊன்-இறைச்சி-இரை- உணவு—இன்றி-இல்லாமல்—ஒருநாள்- ஒருதினம்—சிறுதேரை- சிறியதவளையை, பற்றியும்-பிடித்தும்—தின்னும்-உண்ணும்—(ஆதலால்) அறிவினால்-அறிவால்—காற்றொழிலென்று-அற்பதொழிலென்று—கருதற்க-நினையாதொழிக—கையினால்-முயற்சியால், மேற்றொழிலும்-மேலானதொழிலும்—மிகும்-மிகும்—(எ-று) ❊ இ-ம்-புலி-இரை- இல்லாவிடில்-சிறுதவளையையுந்தின்னும், ஆகையால்- அற்பதொழிலென்றெண்ணாதே-அதுவேபெரியதொழிலாகும்-என்பதாம். ☞ மேற்றொழில்-எ, மிகும்-ப, ஆங்கு-எ, அசைகள்- (௩)

இசையாதெனினுமியற்றியோராற்றா ... ... ❊
லசையாதுநிற்பதாமாண்மை-யிசையுங்காற் ... ... ❊
கண்டற்றிரையலைக்குங்கானலந்தண்சேர்ப்ப ... ... ❊
பெண்டிரும்வாழாரோமற்று ... ... ❊

(இ-ள்.) கண்டல்-முள்ளிச்செடியை—திரை-அலைகள்—அலைக்கும்-ஒதுக்கும்—கானலம்-உப்பளத்தையும்—தண்-குளிர்ந்த—சேர்ப்ப-கடற்கரையையுமுடைய பாண்டியனே—இசையாதெனினும்- முயற்சி

பொருந்தாவிடினும்—இயற்றி-முயற்சிசெய்து—ஊராற்றால்-ஒருவழியால்—அசையாது-தளராமல்—நிற்பதாம்-நிற்பதாகும், ஆண்மை-ஆண்மைத்திறம்—இசையுங்கால்-முயற்சிபொருந்துமாகில்—பெண்டிரும்-பெண்பிள்ளைகளும்—வாழாரோ-வாழ்வார்கள்—(எ-று) ❋ இ-ம், பாக்கியமே முயற்சிபொருந்தாவிடினும் மேன்மேலுமுயற்சிசெய்துவாழ்தல் ஆண்மைத்திறம் முயற்சிபொருந்துமானால் பெண்பிள்ளைகளும் வாழ்வார்கள்-என்பதாம். ☞ ஆண்மை-எ, நிற்பதாம்-ப, மற்று-அசை. (௪)

நல்லகுலமென்றுந்தீயகுலமென்றுஞ் ... ... *
சொல்லளவல்லாற்பொருளில்லைத்-தொல்சிறப்பி ... ... *
னொண்பொருளொன்றோதவங்கல்வியாள்வினை ... ... *
யென்றிவற்றானாகுங்குலம் ... ... *

(இ-ள்.) நல்லகுலமென்றும்-நல்லகுலமென்றும்—தீயகுலமென்றும்-கெட்டகுலமென்றும்—சொல்லளவல்லால்-சொல்லுமளவல்லாமல்—பொருளில்லை-யாதொருபொருளுமில்லை—தொல்-பழைய—சிறப்பின்-சிறப்புடைய—ஒண்-ஒள்ளிய, பொருள்-பொருளும்—தவம்-தவமும்—கல்வி-கல்வியும்—ஆள்வினை-முயற்சியும்—என்றிவற்றான்-என்றுசொல்லியவிவைகளால்—குலம்-குலம்—ஆகும்-ஆம்—(எ-று) ❋ இ-ம்-பொருள்-தவம்-கல்வி-தொழில்-இவற்றாற்குலமாகும்-என்பதாம். ☞ குலம்-எ, ஆகும்-ப, ஒன்றோ-இடைச்சொல். (௫)

ஆற்றுந்துணையுமறிவினையுள்ளடக்கி ... ... *
யூக்கமுரையாருணர்வுடையா-ரூக்க ... ... *
முறுப்பினாலாராயுமொண்மையுடையார் ... ... *
குறிப்பின்கீழ்ப்பட்டதுலகு ... ... *

(இ-ள்) ஆற்றும்-செய்யுங்(காரியம்)—துணையும்-முடியுமளவும்—அறிவினை-அறிவை—உள்ளடக்கி-தன்னுள்ளடக்கி—ஊக்கம்-தன்வலிமையை—உணர்வுடையார்-அறிவுடையார்—உரையார்-பிறரறியச்சொல்லார்—ஊக்கம்-பிறர்வலிமையை—உறுப்பினால்-அவயவத்தால்—ஆராயும்-விசாரிக்கும், ஒண்மையுடையார்-அறிவுடையவர்—குறிப்பிற்கீழ்-அவர்குறிப்பினிடத்து—உலகு-உலகமானது—பட்டது-தங்கியது—(எ-று) ❋ இ-ம். அறிவுடையோர்— தமதுகாரியமுடியுமளவுந் தமதுவலிமையைச்சொல்லார்கள், உலகு-அறிவுடையோர்குறிப்பிற்றங்கியது-என்பதாம், ☞ உணர்வுடையார்-எ, உரையார்-ப, ஊக்கம்-செ- (௬)

சிதலைதினப்பட்டவாலமரத்தை ... *
மதலையாய்மற்றதன்வீழூன்றி-யாங்குக் ... *
குதலைமைதந்தைகட்டோன்றிற்றான்பெற்ற ... *
புதல்வன்மறைப்பக்கெடும் ... ... *

(இ-ள்.) சிதலை-செல்——தினப்பட்ட- தின்னப்பட்ட——ஆலமரத்தை-
ஆலமரத்தை——அதன்-அம்மரத்தில்——வீழ்-வீழ்ந்த வீழ்——மதலையாய்
பற்றுக்கோடாய்——ஊன்றியாங்கு- தாங்கினாற்போல——தந்தைகண்- த
ன்பிதாவிடத்து——குதலைமை- தளர்ச்சி——தோன்றில்- தோன்றினால்——
தான்பெற்ற-தானீற்ற——புதல்வன்-பிள்ளை——மறைப்ப-தன்முயற்சியா
ல்மறைக்க——கெடும்-கெட்டுவிடும்——(எ-று) ❁ இ-ம். ஆலமரத்தைவீழ்
தாங்கினாற்போலப் பிதாவிடத்துத் தளர்ச்சிதோன்றில் பிள்ளை தாங்கு
வான் என்பதாம். ☞ குதலைமை-எ, கெடும்-ப, மற்று-அசை. (எ)

ஈனமாயில்லிருந்தின்றிவிளியினு ... ... ❋
மானந்தலைவருவசெய்பவோ-யானை ... . ❋
வரிமுகம்புண்படுக்கும்வள்ளுகிர்நோன்றா ... ... ❋
ளரிமாமதுகையவர் ... ...❋

(இ-ள்.) யானை-யானையினது——வரிமுகம்-புள்ளியுடையமுகத்தை——
புண்படுக்கும்-புண்செய்யும்——வள்-கூரிய——உகிர்-நகத்தையும்——நோ
ன்றாள்-வலியகாலையுமுடைய——அரிமா-சிங்கத்தினது——மதுகையவர்-
வலியுள்ளவர்——ஈனமாய்-இழிவாய்——இல்லிருந்து-வீட்டிலிருந்து——
இன்றி-முயற்சியில்லாது——விளியினும்-இறந்தாலும்——மானம்-குற்ற
ம்——தலை-தம்மிடத்து——வருவ-வருங்காரியங்களை——செய்பவோ- செய்
வாரோ, (எ-று) ❁ இ-ம்-சிங்கம்போலும் வலிமையுள்ளவர் முயற்சியில்
லாதுவீட்டிலிருந் தழியினும் குற்றமுள்ள காரியங்களைச்செய்யார்க
ள்-என்பதாம். ☞ மதுகையவர்-எ, செய்பவோ-ப. (அ)

தீங்கரும்பீன்றதிரள்காலுளையலரி ... ... ❋
தேங்கமழ்நாற்றமிழந்தாஅங்-கோங்கு... ... ❋
முயர்குடியுட்பிறப்பினென்னும்பெயர்பொறிக்கும்
பேராண்மையில்லாக்கடை ... ... ❋

(இ-ள்.) தீங்கரும்பு-மதுரக்கரும்பு——ஈன்ற-தந்த——திரள்-திரண்ட,
கால்-தாளினையும்——உளை-வெண்மயிர்போற் கற்றையையுமுடைய, அ
லரி-பூ——தேங்கமழ்- இனியபரிமளமாகிய——நாற்றம்- வாசனையை——இ
ழந்தாஅங்கு-இழந்தாற்போல——பெயர்-தன்பெயரை——பொறிக்கும்
எங்குநாட்டும், பேராண்மை——பெரியமுயற்சி——இல்லாக்கடை-இல்லா
விடில், ஓங்கும் ஓங்கி——உயர்-உயர்ந்த——குடியுள்-நற்குடியில்——பிறப்
பின்-பிறந்தால்——என்-என்ன——ஆம்-பயனுண்டாம்——(எ-று) ❁ இ-ம்-
முயற்சியினால் தன்பெயரை யெங்குநாட்டாதவன் உயர்ந்தகுடியிற்பி
றந்து என்னபலனே-என்பதாம், ☞ என்-எ, ஆம்-ப. (கூ)

பெருமுத்தரையர்பெரிதுவந்தீயுங் ... ...❋
கருனைச்சோறார்வர்கயவர்-கருனையைப் ... ... ❋

பேருமறியார்நனிவிரும்புதாளாண்மை ... ... ❊
நீருமமிழ்தாய்விடும்... ... ... ❊

(இ-ள்.) பெரும்- பெரிய—முத்தரையர்- முத்தையொத்தபரிசுத்த முள்ளவர்கள்—பெரிது-மிகவும்—உவந்து-மகிழ்ந்து—ஈயும்- இடும், கருணை-பொரிக்கறியையும், சோறு-சோற்றையும், ஆர்வர்-புசிப்பார், கயவர்-கீழ்மக்கள்—கருணையை-பொரிக்கறியை—பேரும்- பெயரும், அறியார்-அறியாதவர்—நனி-மிகவும்—விரும்பு இச்சிக்கத்தக்க—தாளாண்மை-முயற்சியில்வரும்நீரும், (புல்லரிசிக்கூழ்) நீரும் அமிழ்தாய் விடும்-தமக்கமிர்தமாம்—(எ-று) ❊ இ-ம்-கீழ்மக்கள் பிறரிடத்துண்பர் மேன்மக்கள்முயற்சிசெய்துண்பர்-என்பதாம், ☞ கயவர்-எ, ஆர்வர் ப, சோறு-செ-நீர்-எ, அமிழ்தாய்விடும்-ப. (௰)

தாளாண்மை-முற்றிற்று.

உக-ம்-அதிகாரம்.

சுற்றந்தழால்.

அஃதாவது-தன்னினத்தைத்தழுவிக்கொள்ளுதலாம்.

வயாவும்வருத்தமுமீன்றக்கானோவுங் ... ... ❊
கவாஅன்மகற்கண்டுதாய்மறந்தாஅங்... ... ...❊
கசாஅத்தானுற்றவருத்தமுசாஅத்தன் ... ...❊
கேளிரைக்காணக்கெடும் .. .. ❊

(இ-ள்.) வயாவும் (கருக்கொண்ட) நோவும்—வருத்தமும்- அக்கருவைச்சுமக்கும்நோவும்—ஈன்றக்கால்-பெற்றால்—நோவும் - (சம்பவிக்கு) நோவும், கவாஅன்-தொடையில்—மகற்கண்டு- பிள்ளையைக்கண்டு, தாய்-தாயானவள்—மறந்தாஅங்கு- மறந்தாற்போல—அசா தளர்ச்சியால்—தானுற்ற-தான்பெற்ற—வருத்தம் - நோவு—உசா- சூழ்ச்சியுடைய—தன்கேளிரை-தன்னினத்தானை—காண பார்க்க—கெடும்-நீங்கும்—(எ-று) ❊ இ-ம்-தொடைமேற் பிள்ளையைக்கண்டு தாய்வருத்தத்தை மறந்தாற்போல ஒருவர்சுற்றத்தாரைக்காணத் தானடைந்தவருத்த நீங்கும் என்பதாம், ☞ வருத்தம்-எ, கெடும் ப. (௧)

அழன்மண்டுபோழ்தினடைந்தவர்கட்கெல்லா .. ..❊
நிழன்மரம்போனேரொப்பத்தாங்கிப்பழுமரம்போற்...❊
பல்லார்பயன்றுய்ப்பத்தான்வருந்திவாழ்வதே ... ❊
நல்லாண்மகற்குக்கடன் ... ... ❊

(இ-ள்.) அழல்-உஷ்டணம்—மண்டு-நெருங்கும்—போழ்தின் கோடைகாலத்தில்—அடைந்தவர்கட்கெல்லாம்-தன்னைச்சேர்ந்தவர்க்கெல்லாம்—நிழல்-நிழலைத்தரும்—மரம்போல் விருட்சம்போல—நேரொப்ப- ஒருசமமாக—தாங்கி- காத்து—பழுமரம்போல் - பழுத்தமரம்போல—பல்லார்- பலரும்—பயன்-பலனை—துய்ப்ப- அநுபவிக்க—தான்வருந்தி தான்வருத்தமடைந்து—வாழ்வது வாழுவது—நல்- நல்ல—ஆண்மகற்கு-ஆண்மகனுக்கு—கடன்-கடமை—(எ-று)※இ-ம்-தன்னைச்சார்ந்தவர்க்கு நிழலைக்கொடுக்குமரம்போலப் பலர்க்கும்பயன்படவாழ்தல் ஆண்மகனுக்குக்கடமை என்பதாம். பழுமரம் ஆலமரமாம். ☞வாழ்வது-எ, கடன்-பு, எ-அசை. (௨)

அடுக்கன்மலைநாடதற்சேர்ந்தவரை ※
யெடுக்கலமென்னார்பெரியோ-ரடுத்தடுத்து ※
வன்காய்பலபலகாய்ப்பினுமில்லையே ※
தன்காய்பொறுக்கலாக்கொம்பு ※

(இ-ள்.) அடுக்கல்-அணி அணியான—மலை-மலைகளையும்—நாட- நாட்டுகளையுமுடையபாண்டியனே—பெரியோர்-பெரியோர்கள்—தற்சேர்ந்தவரை-தம்மைச்சேர்ந்தாரை, எடுக்கலமென்னார்-தாங்கோமென்று சொல்லார்—(எதுபோலெனில்) அடுத்தடுத்து- பின்மேலும்—வன்காய்-வலியகாய்கள்—பலபல-பற்பலவாக—காய்ப்பினும்- காய்த்தாலும்—தன்காய்-தன்காய்களை—பொறுக்கலா தாங்காத—கொம்பு கொம்புகள்—இல்லை இல்லை—(எ-று)※இ-ம் பாண்டியனே மரக்கொம்புகள் பற்பலகாய்களைக்காய்த்தாலும்தாங்கும் அதுபோலப் பெரியோர்கள் தம்மையடுத்தவர்களைத்தாங்குவார்களென்பதாம். ☞பெரியோர்-எ, என்னார் பு, சேர்ந்தவரை செ எ, அசை. (௩)

உலகறியத்தீரக்கலப்பினுநில்லா ※
சிலபகலாஞ்சிற்றினத்தார்கேண்மை-நிலைதிரியா ※
நிற்கும்பெரியோர்நெறியடையநின்றனைத்தா ※
லொற்கமில்லாளர்தொடர்பு ※

(இ-ள்.) சிற்றினத்தார் கீழ்மக்கள், கேண்மை சிநேகங்களானவை—உலகறிய உலகமறிய—தீர முற்றாக—கலப்பினும் கலந்தாலும்—நில்லா நில்லாவாம்—சிலபகலாம் பலநாளளவாம், ஒற்கமிலாளர் வறுமையில்லாதவர்—தொடர்பு சிநேகம்—நிலைதிரியா தன்னிலைதவறாமல்—நிற்கும்பெரியோர் நிற்கின்றபெரியோர்கள்—நெறியடைய நல்வழியடைய, நின்றனைத்து நின்றபோதும்—(எ-று)※இ-ம் கீழ்மக்கள் சிநேகஞ்சிலகாலமிருக்கும்மேன்மக்கள்சிநேகம்பலகாலமிருக்கும் எ-ம். ☞ கேண்மை எ, சிலபகலாம் பு, தொடர்பு எ, நின்றனைத்து பு, ஆல்-அசை. (௪)

இன்னரிணையரெமர்பிறரென்னுஞ்சொ..........*
லென்னுமிலராமியல்பினாற்-றுன்னித்.........*
தொலைமக்கடுன்பந்தீர்ப்பாரேயார்மாட்டுந்......*
தலைமக்களாகற்பாலார்.............................*

(இ-ள்.) இன்னர் நல்லவர்—இனையர் தீயவர்—எமர் உறவினர்—பிறர் அயலார்—என்னுஞ்சொல் என்றுசொல்லுஞ்சொல், என்னும் யாதாகினும்—இலராம் இல்லாதவர்களாகும்—இயல்பினால் இயற்கையால் துன்னி சேர்ந்து—தொலை தளர்ந்த—மக்கள் மனிதர்களுடைய—துன்பம் துன்பங்களை— தீர்ப்பார் நீக்குவார்— யார்மாட்டும் யாவரிடத்தும்— தலைமக்கள் மேன்மக்கள்— ஆகற்பாலார் ஆகுந்தன்மையுடையார் (எ-று) * இ-ம் மேன்மக்கள்யாவர் துன்பங்களையுநீக்குவார்கள் என்பதாம். ☞ தலைமக்கள் எ, தீர்ப்பார் ப, துன்பம் செ ஏகாரம் அசை.

பொற்கலத்துப்பெய்தபுலியுகிர்வான்புழுக்க.....*
லக்காரம்பாலோடமரார்கைத்துண்டலி..........*
னுப்பிலிப்புற்கையுயிர்போற்*கிளைஞர்மாட்.....*
டெக்கலத்தாயினுமினிது.............................*

(இ-ள்.) பொற்கலத்து பொன்னின்கலத்தில்—பெய்த இட்ட— புலியுகிர் புலிநகம்போன்ற—வான்புழுக்கல் வெண்சோற்றை— அக்காரம் சருக்கரையும்—பால் பாலும்—ஓடு இவற்றோடு—அமரார் பகைவர்—கைத்து பொருளை—உண்டலின் உண்பதைப்பார்க்கினும்— உப்பிலி உப்பில்லாத—புற்கை புல்லரிசிக்கூழை— உயிர்போல் தன்னுயிர்போலும்—கிளைஞர்மாட்டு இனத்தாரிடத்து—எக்கலத்தாயினும் எந்தக்கலத்திலாயினும் —(உண்டல்)இனிது இன்பம்—(எ-று) * இ-ம் பகைவரிடத்துப் பொற்கலத்திற்பாலுஞ்சோறுண்பதினு முயிர்போலு மினத்தாரிடத்துப் புல்லரிசிக்கூழுண்ணுதலின்பம் என்பதாம். ☞ உண்டல் எ, இனிது ப, *(தொன்னூல்)குறவிடைப்படுபதநண்ணலுநெறியே. (கூ)

நாள்வாய்ப்பெறினுந்தந் நள்ளாதாரில்லத்து......*
வேளாண்மைவெங்கருனைவேம்பாகுங்-கேளா.....*
யபரானப்போழ்திளடக்கிடுவரோனுந்...........*
தமராயார்மாட்டேயினிது.........................*

(இ-ள்.) கேளாய் (மனதே) கேட்பாயாக — நாள்வாய் காலத்திலே—தம் தமது, நள்ளாதார் பகைவர்—இல்லத்து வீட்டில்—வேளாண்மை உபகாரமாக—வெங்கருனை விருப்பந்தரும்பொரிக்கறி(சோற்றை—பெறினும் பெற்றாலும்—வேம்பாகும் வேம்புக்காய்பாகும், அபரானப்போழ்தில் அகாலத்தில், அடகு இலைக்கறியை—இடுவரோனும் இடுவராதலும், தமராயார்மாட்டே-சுற்றத்தாரிடத்துண்ணல்—இனி

து-இன்பமாம்(எ-று) ❁ இ-ம் - காலத்திற்பகைவரிடத்தில் பொறிக்கறி சோற்றைப்பெற்றாலும்வேம்பாகும்அகாலத்தில் இலைக்கறிசோறிவோ ராகிலும் இனத்தாரிடத்திலுண்டலின்பம் என்பதாம், ☞ கருணை-எ, வே ம்பாகும்-ப, உண்டல்-தோன்றாஎழுவாய், இனிது, ப. (எ)

முட்டிகைபோன்முனியாதுவைகலுங் .... ✻
கொட்டியுண்பாருங்குறடுபோற்கைவிடுவர் ...... ✻
சுட்டுக்கோல்போலவெரியும்புகுவரே .... ✻
நட்டாரெனப்படுவார் .... ✻

(இ-ள்.) முட்டிகைபோல-கொல்லன்சம்மட்டிபோல—முனியாது-வெறுக்காது—வைகலும்-நாடோறும்—கொட்டி-அடித்து — உண்பாரும்-உண்பவரும்—குறடுபோல்-அவன்குறட்டைப்போல — கைவிடுவர் விட்டுநீங்குவர்—நட்டார்-உறவினர்— எனப்படுவார் - என்று சொல்லப்படுவார்—சுட்டுக்கோல்போல-உலையாணிக்கோல்போல—எரியும்-துன்பநெருப்பிலும்—புகுவர்-பிரவேசிப்பர்—(எ-று) ❁ இ-ம். சம்மட்டிபோலடித்துண்ணு நட்பில்லார்குறட்டைப்போற் கைவிடுவர் உறவினரென்றுசொல்லப்படுவோர்உலையாணிக்கோல்போலத் துன்பத்திலுமுடனிருப்பார்-என்பதாம். ☞ உண்பார்-எ, கைவிடுவர்-ப, நட்டார்-எ, புகுவர்-ப, ஏ, அசை. (அ)

நறுமலர்த்தண்கோதாய்நட்டார்க்குநட்டார் ..... ✻
மறுமையுஞ்செய்வதொன்றுண்டோ-விறுமளவு ✻
மின்புறுவவின்புற்றெழீஇயவரொடு ....✻
துன்புறுவதுன்புறுக்கால் ....✻

(இ-ள்.) நறுமலர்-வாசம்வீசுமலராற்றொடுத்த—தண் - குளிர்ந்த, கோதாய்-மாலையையுடையவளே—நட்டார்க்கு-உறவினர்க்கு — நட்டார்-உறவினர்—இறுமளவும்-சாமளவும்—இன்புறுவ-இன்பமடைவனவற்றில்—இன்புற்று-இன்பமடைந்து—எழீஇ-நல்வழியினடந்து — அவரொடு-அவருடன்—துன்புறுவ-துன்பமடைவனவற்றில்—துன்புறுக்கால் -துன்பமடையாவிடில்—மறுமையும் மறுபிறப்பிலும்— செய்வது-செய்யத்தக்கது—ஒன்றுண்டோ- ஒருதவியுண்டோ—(எ-று) ❁ இ-ம், மாலையையுடையவளே உறவினர்க்குறவினர் மரணபரியந்தம் இன்பங்களையுந் துன்பங்களையும் அநுபவிக்காவிட்டால்மறுபிறப்பிலுஞ்செய்யத்தக்கஓருதவிக்கடனுண்டோ-என்பதாம். ☞ ஒன்று-எ, உண்டு-ப.

விருப்பிலாரில்லத்துவேறிருந்துண்ணும் ....✻
வெருக்குக்கண்வெங்கருனைவேம்பாம்-விருப்புடைத்
தன்போல்வாரில்லுட்டயங்குநீர்த்தண்புற்கை ... ✻
யென்போடியைந்தவமிழ்து ....✻

(இ-ள்.) விருப்பிலார்-தம்மிலாசையில்லாதவர்—இல்லத்து-வீட்டி ல்—வேறிருந்து-வேறாகவிருந்து—உண்ணும்-உண்கிற— வெருக்குக் கண்- பூனைக்கண்போலுநிறமுடைய—வெங்கருணை- விருப்பந்தரும், பொறிக்கறி-போசனம்—வேப்பாம்-வேம்புக்கொப்பாம்— விருப்பு டை-தன்மேலாசையுடைய—தன்போல்வார்-தன்னைநிகர்த்தவர்—இல் லுள்-வீட்டில்—தயங்கு-தெளிந்த—நீர்-நீரையுடைய—தண்-குளிர்ந் த—புற்கை - புல்லரிசிக்கூழானது—என்பொடு-எலும்புடனே—இ யைந்த-பொருந்திய —அமிழ்து - அமுதுக்கொப்பாம்—(எ-று) ※ இ-ம்.விருப்பில்லார்வீட்டிலுண்ணும்பொறிக்கறியனைவு வேம்புக்கொ ப்பாகும் விருப்புள்ளார்வீட்டிலுண்ணும் புல்லரிசிக்கூழ் அமிழ்துக் கொப்பாகும்-என்பதாம். ☞ கருணை - எ, வேம்பாம் - ப, புற்கை-எ, அமிழ்து-ப. (௰)

சுற்றந்தழான்-முற்றிற்று.

உ௨-ம்- அதிகாரம்.

நட்பாராய்தல்.

அஃதாவது-சிநேகத்தையாராய்தலாகும்.

கருத்துணர்ந்துகற்றறிந்தார்கேண்மையெஞ்ஞான்றுங் ※
குருத்திற்கரும்புதின்றற்றே-குருத்திற்...... .... ※
கெதிர்செலத்தின்றதகைத்தாரோவென்று... ... .※
மதுரமிலாளர்தொடர்பு.... ... .※

(இ-ள்.) கருத்து-கருத்தால்—உணர்ந்து-அறிந்து— கற்றறிந்தார்- பலநூலையறிந்தவர்—கேண்மை- நட்பானது—எஞ்ஞான்றும்- நா ளும், கரும்பு-கரும்பை—குருத்தின்- குருத்திலிருந்து—தி ன்றாற்போலும்—மதுரமிலாளர்-கல்விமதுரமில்லாதவர்— -நட்பானது—என்றும்-எந்நாளும்—குருத்திற்கு- கரு ற்கு—எதிர்செல-எதிராகியவடியிலிருந்து— தின்றதகைத்து- துபோலும்—(எ-று)※ இ-ம்.கற்றோர்சிநேகங் கரும்பை நுனியிலிரு ந்துதின்றாற்போலும்மற்றோர்சிநேக மக்கரும்பையடியிலிருந்துதி ன்றாற்போலும்என்பதாம். ☞ கேண்மை-எ,தின்றற்று-ப, தொடர்பு- எ,தின்றதகைத்து-ப,அரோ,எ,அசைகள். (க)

இற்பிறப்பெண்ணியிடைதிரியாரென்பசோர் ...※
நற்புடைக்கொண்டடையல்லது-பொற்கேழ் ...※
புனலொழுகப்புள்ளிரியும்பூங்குன்றநாட......※
மனமறியப்பட்டதொன்றன்று...... ....※

(இ-ள்.) பொற்கேழ் பொன்னிறம்போலும், புனல் அருவிச்சலம்; இழூக விழூக—புள் பறவைகள்—இரியும் பறக்கும்—பூ அழகிய—குன்றம் மலையையும்—நாட நாட்டையுமுடையபாண்டியனே—இற்பிறப்பு நற்குடிப்பிறப்பை—எண்ணி நினைத்து—இடை நடுவில்—திரியார் வேறுபடார்—என்பது என்றுசொல்வது—ஓர் ஒரு—நற்புடை நல்லிடம்பற்றி—கொண்டமை நட்புக்கொண்டமை—அல்லது அல்லாமல்—மனம் அவர்மனமானது—அறியப்பட்டது பிறரால் அறியப்பட்டது—ஒன்றன்று ஒன்றல்ல—(எ-று) ☼ இ-ம் பாண்டியனே நற்குடிப்பிறப்பை நினைத்து நடுவிலேவேறுபடாரென்று ஒருவனைச் சிநேகஞ்செய்ததல்லாது அவர்மனநிலையறியப்பட்டதல்ல என்பதாம், ☞ மனம் எ, பட்டதன்று ப. (௨)

யானையனையவர் நண்பொரீஇ நாயனையார் ... ... *
கேண்மைதழீஇக்கொளல்வேண்டும்-யானை ... ... *
யறிந்தறிந்தும்பாகனையேகொல்லுமெறிந்தவேல் ...... *
மெய்யதாவால்குழைக்குநாய் .... *

(இ-ள்.) யானை யானையை—அனையவர் ஒப்பானவர்—நண்பு சிநேகத்தை—ஒரீஇ நீக்கி—நாய் நன்றியறியுநாயை—அனையார் ஒப்பானவர்—கேண்மை நட்பை—தழீஇக்கொளல் தழுவிக்கொள்ளுதல்—வேண்டும் வேண்டும்—யானை யானையானது, அறிந்தறிந்தும் (இவன் தருவோனென்) றறிந்தும்—பாகனையே பாகனை—கொல்லும் கொலைசெய்யும்—நாய் நாயானது—எறிந்த எசமானெறிந்த—வேல் வேலானது—மெய்யதா தன்னுடலிலிருக்க—வால் வாலை—குழைக்கும் ஆட்டும்—(எ-று) ☼ இ-ம், யானைக்கொப்பானவர் சிநேகத்தைவிட்டு நாய்க்கொப்பானவர் சிநேகத்தைக்கொள்ளவேண்டும் எ-ம், ☞ நீவிர் தோன்றாவெழுவாய், கொளல்வேண்டும் - ப, கேண்மையை - செ-எ, அசை. (௩)

பலநாளும்பக்கத்தராயினுநெஞ்சிற் .... *
சிலநாளுமொட்டாரோடொட்டார்-பலநாளு .... *
நீத்தாரெனக்கைவிடலுண்டோதந்நெஞ்சத் .... *
தியாத்தாரோடியாத்ததொடர்பு .... *

(இ-ள்.) பலநாளும் எந்நாளும்—பக்கத்தாராயினும்- அருகிலிருந்தாராயினும்—நெஞ்சில் மனநிலை—ஒட்டாரோடு பொருத்தமில்லாருடன்—சிலநாளும் சிலநாளும்—ஒட்டார் சிநேகியார்—தம் தமது—நெஞ்சத்து மனதில்—இயாத்தாரோடு சம்பந்தப்பட்டாருடன்—இயாத்த கட்டுப்பட்ட—தொடர்பு சிநேகத்தை—பலநாளும் பலநாளும்—நீத்தாரென நீக்கினரென்று—கைவிடலுண்டோ கைவிடக்கடவதோ—(எ-று) ☼ இ-ம், பலகாலும் பழகினவராகிலு மனப்பொருத்தமில்லாருடன் சிலகாலமுஞ் சிநேகஞ்செய்யார் - மனப்பொருத்தமு

ஞ்என்பதாம். ☞ பக்கை-சாதல்-கோறல்-வைதல்-எ, நன்று-ப, ஆல்-எ, மற்று அசைகள். (அகத்தியச்சூத்திரம்) [பலவெழுவாயு மொருபயனிலை பெறும்.] (௯)

மரீஇப்பலரோடுபன்னாண் முயங்கிப் ✽
பொரீஇப்பொருட்டக்கார்க்கோடலே-வேண்டும் ✽
பரீஇயுயிர்செகுக்கும்பாம்பொடுமின்னா ✽
மரீஇப்பின்னைப்பிரிவு ✽

(இ-ள்.) பலரோடு-பலருடன்—மரீஇ-மருவி, பன்னாள்-பலநாள்—முயங்கி-கலந்து, பொரீஇ-(இருவர் குணமு)மொப்பாகி—பொருள்-பொருளாக—தக்கார்-பெரியோரை—கோடல்வேண்டும்-சிநேகமாகக் கொள்ளவேண்டும்—மரீஇ-ஒருவரைச்சிநேகித்து—பின்னை-பின்பு—பிரிவு-(அவரைவிட்டுப்)பிரிதல்—பரீஇ-பல்லாற்கடித்து—உயிர்-உயிரை—செகுக்கும்-நீக்கும்—பாம்பொடும்-பாம்பொடுகொண்ட நட்பினும்—இன்னா-துன்பமாம்—(எ-று) ✽ இ-ம்-ஒருவர்பெரியோரைச் சிநேகமாகக்கொள்ளவேண்டும், சிநேகங்கொண்டுபிரிதல் துன்பம்-எ-ம், ☞ ப, ஒருவர்-எ, கோடல்வேண்டும்-ப, தக்கார்-செ, பிரிவு-எ, இன்னா-ப, ஏ, அசை. (௰)

நட்பாராய்தல்-முற்றிற்று.

௨௩-ம்-அதிகாரம்.

நட்பிற்பிழைபொறுத்தல்.

அஃதாவது - நட்பால்வருங்குற்றங்களைப் பொறுத்துக்கொள்ளலாம்.

நல்லாரெனத்தாநனிவிரும்பிக்கொண்டாரை ✽
யல்லாரெனினுமடக்கிக்கொளல்வேண்டு ✽
நெல்லுக்குமியுண்டுநீர்க்குநுரையுண்டு ✽
புல்லிதழ்பூவிற்குமுண்டு ✽

(இ-ள்.) நல்லாரென-நல்லவரென்று—தாம்-தாம்—நனி-மிகவும், விரும்பி-இச்சித்து—கொண்டாரை-நட்புக்கொள்ளப்பட்டவரை—அல்லாரெனினும்-பொல்லாதவராகினும், அடக்கி-குற்றத்தையடக்கி, கொளல்வேண்டும்-கொள்ளவேண்டும்—நெல்லுக்கு-நெல்லுக்கு—உமியுண்டு-உமியுண்டு—நீர்க்கு-சலத்திற்கு—நுரையுண்டு-நுரையுண்டு—புல்லிதழ்-புறவிதழ்—பூவிற்கும்-மலருக்கும்—உண்டு-உண்டு, (எ-று) ✽ இ-ம்-நல்லவரென்று சிநேகிக்கப்பட்டவரைப் பொல்லாதவரானாலும் குற்றத்தைநீக்கிச் சிநேகித்துக்கொள்ளவேண்டும்-என்பதாம். ☞ ஒருவர்தோன்றாஎழுவாய்-கொளல்வேண்டும்-ப, கொண்டாரை-செ. (௧)

செறுத்தோறுடைப்பினுஞ்செம்புனலோடூடார் ... ... ✻
மறுத்துஞ்சிறைசெய்வர்நீர்நசைவாழ்நர் ... ... ✻
வெறுப்பவெறுப்பச்செயினும்பொறுப்பரே ... ✻
தாம்வேண்டிக்கொண்டார்தொடர்பு ... ... ✻

(இ-ள்.) செறுத்தோறு- அடைக்குந்தோறும்— உடைப்பினும்- உடைத்தாலும்— செம்- நல்ல— புனலோடு-நீருடன்— ஊடார்-பிணங்கார்— மறுத்தும்- மீண்டும்— சிறைசெய்வர்- அணைகட்டுவர்— நீர்- சலத்தை— நசை-இச்சித்து— வாழ்நர்-வாழ்பவர்—(அதுபோல) தாம்-தாங்கள்— வேண்டி-விரும்பி— தொடர்பு-நட்பு— கொண்டார்- கொள்ளப்பட்டவர்— வெறுப்ப - வெறுக்கத்தக்கவைகளை— செயினும்- செய்தாலும்— பொறுப்பர்-பொறுத்துக்கொள்வர்—(எ-று) ✻ இ-ம். சிநேகிக்கப்பட்டவர் வெறுப்பானவைகளைச்செய்தாலும் சிநேகித்தவர்பொறுத்துக்கொள்வர் - என்பதாம். ☞ கொண்டார்-எ, பொறுப்பர்-பு, ஏ- அசை. (உ)

இறப்பவேதீயசெயினுந்தந்நட்டார் ... ... ✻
பொறுத்தறகுவதொன்றன்றோ-நிறக்கோங் ... ... ✻
குருவவண்டார்க்குமுயர்வரைநாட ... ... ✻
வொருவர்பொறையிருவர்நட்பு ... ... ✻

(இ-ள்.) நிறம்-நிறமுடைய— கோங்கு- கோங்குமலரில்— உருவம்-வடிவுள்ள— வண்டு- வண்டினங்கள்— ஆர்க்கும்- சத்திக்கும்— உயர்வரை-உயர்ந்தமலையையும்— நாட-நாட்டையுமுடையபாண்டியனே— தம்-தம்மொடு— நட்டார்-சிநேகித்தவர்— இறப்ப- மிகவும்— தீய- பொல்லாங்குகளை— செயினும்-செய்தாலும்— பொறுத்தல்- பொறுத்துக்கொள்ளுதல்— தகுவது-தக்கது— ஒன்றன்றோ-ஒன்றல்லவா— ஆதலால்-ஒருவர்— பொறை-ஒருவர்பொறுத்துக்கொள்ளுதல்— இருவர்நட்பு-இருவர்க்குச்சிநேகமாம்—(எ-று) ✻ இ-ம். பாண்டியனே தம்முடைய சிநேகர் மிகவுங் குற்றங்களைச் செய்தாலும் பொறுத்துக்கொள்ள வேண்டும்-ஒருவர்பொறுத்தல்- இருவருக்குஞ்சிநேகமாம்- என்பதாம். ☞ நட்பு-எ, ஆம் என்னும்பயனிலைதொக்கியது, ஏகாரம்-அசை.

மடிதிரைதந்திட்டவான்கதிர்முத்தங் ... ... ✻
கடுவிசைநாவாய்கரையலைக்குஞ்-சேர்ப்ப ... ... ✻
விடுதற்கரியாரியல்பிலரேனெஞ்சஞ் ... ... ✻
சுடுதற்குமூட்டியதீ ... ... ✻

(இ-ள்.) மடி-மடிந்த— திரை-அலைகள்— தந்திட்ட- ஒதுக்கிய— வான்-வெள்ளிய— கதிர்- கிரணங்களையுடைய— முத்தம்-முத்துக்களையும்— கடுவிசை-மிகுந்தவேகமுடைய— நாவாய்-கப்பலையும்— கரை-கரையிலே— அலைக்கும்- ஒதுக்கும்— சேர்ப்ப - கரையையுடையபாண்டியனே— விடுதற்கு-சிநேகம்விடுதற்கு— அரியார்- அரிதானவர்கள், இயல்

பிலரோல்- நற்குணமில்லாரேயாகுல்—நெஞ்சம்- மனதை—சுடுதற்கு- சுடுகிறதற்கு—மூட்டிய- மூட்டப்பட்ட—தீ-நெருப்புக்கொப்பாவர்—(எ-று) ❁ இ-ம். பாண்டியனே சிநேகஞ்செய்யப்பட்டவர் நற்குணமில்லாதவராகுல் சிநேகித்தவர் மனதைச் சுடுநெருப்புக் கொப்பாவார்-என்பதாம். ☞ அரியார்-ஏ,தீயாவர்-ப. (௪)

இன்னாசெயினும்விடற்பாலரல்லாரைப்... ... ... ❋
பொன்னாகப்போற்றிக்கொளல்வேண்டும்-பொன்னொடு ❋
நல்லிற்சிதைத்ததீநாடொறுநாடித்தம்... ... ... ❋
மில்லத்திலாக்குதலால்... ... ...❋

(இ-ள்.) பொன்னோடு-பொன்னுடன், நல்லில்-நல்வீட்டை—சிதைத்த-சுட்ட—தீ-நெருப்பை—நாடொறும்- நாள்தோறும்—நாடி- தேடி—தம்- தமது—இல்லத்தில்- வீட்டில்—ஆக்குதலால்-(சமையற்கு) வளர்த்தலால்—இன்னா- துன்பங்களை, செயினும் செய்தாலும்—விடற்பாலரல்லாரை-விடத்தகுதியல்லாதவர்களை—பொன்னாக-பொன்னைப்போல—போற்றி- காப்பாற்றி—கொளல்வேண்டும்- நட்புக்கொளல்வேண்டும்—(எ-று) ❁இ-ம்-வீட்டைச்சுட்டதீயை வீட்டிலேதேடிவைத்துக்கொள்ளுதலால் துன்பஞ்செயினும் விடத்தகுதியில்லாதவர்களைச் சிநேகித்துக் கொள்ளவேண்டும்-என்பதாம். ☞ ஒருவர்-ஏ, கொளல்வேண்டும்-ப. (௫)

இன்னசெயினும்விடுதற்கரியாரைத்... ... ...❋
துன்னார்துறத்தறகுவதோ-துன்னருஞ்சீர்... ... ❋
விண்குத்துநீள்வரைவெற்பகளைபவோ... ... ... ❋
கண்குத்திற்றென்றுதங்கை ... ...❋

(இ-ள்.) துன்னரும்-நெருங்குதற்கரிய—சீர்- சிறப்பையுடைய—விண்-ஆகாயத்தை—குத்தும்-அளாவிய—நீள்- நீண்ட—வரை- மூங்கிலைப் பொருந்திய—வெற்ப- மலையையுடையபாண்டியனே—இன்னா- குற்றங்களை—செயினும்-செய்தாலும்—விடுதற்கு-விட்டுவிடுதற்கு—அரியாரை-அரியசிநேகரை—துன்னா-சிநேகியாமல்—துறத்தல்-கைவிடுதல்—தகுவதோ-தக்கதோ—தம்-தம்முடைய —கை-கையானது—கண்-தங்கண்ணை—குத்திற்றென்று-குத்தியதென்று—களைபவோ-தறிப்பாரோ—(எ-று) ❁இ-ம், பாண்டியனே குற்றங்களைச்செய்தாலும் விடுதற்கரிய சிநேகிதனைச்சிநேகியாது விடுதல்தகாது என்பதாம். ☞ துறத்தல்-எழுவாய்-தகுவதோ-ப. (௬)

இலங்குநீர்த்தண்சேர்ப்பவின்னசெயினும்... ... ❋
கலந்துபழிகாணார்சான்றோர்-கலந்தபின்... ... ❋
றீமையெடுத்துரைக்குந்திண்ணறிவில்லாதார்... ... ❋
தாமுமவரிற்கடை... ... ...❋

(இ-ள்.) இலங்கு-விளங்கும்—நீர்-நீரையும்—தண்- குளிர்ச்சியையும்பொருந்திய—சேர்ப்ப-கரையையுடையபாண்டியனே; இன்னா- குற்றங்களை—செயினும்-(ஒருவர்) செய்தாலும்—சான்றோர்-பெரியோர்—கலந்து-சிநேகித்து—பழி-குற்றங்களை—காணார்-பாரார்;— கலந்தபின்-சிநேகித்தபின்—தீமை-குற்றங்களை — எடுத்துரைக்கும்-எடுத்துச்சொல்லும்—திண் - வலிய—அறிவிலாதார்- அறிவிலாதவர்—தாமும்-தாங்களும்— அவரின்-அவரைப்பார்க்கிலும்—கடை- கடையானவர்—(எ-று) ✲ இ-ம்,பாண்டியனே பெரியோர்கள் தம்முடையசிநேகர் குற்றங்களைச் செய்தாலும் அவர்குற்றங்களைப்பாரார் - குற்றங்களைச் சொல்பவர்குற்றஞ் செய்தவரினுங்கடையாவார்- என்பதாம். ☞ சான்றோர்-எ,காணார்-ப,பழி-செ, அறிவில்லாதார்-எ,கடையாவர்-ப. (எ)

ஏதிலார் செய்வதிறப்பவேதீதெனினு ✲
நோதக்கதென்னுண்டாநோக்குங்காற்- காதல் ✲
கழுமியார்செய்தகறங்கருவிநாட ✲
விழுமிதாநெஞ்சத்துணின்று ✲

(இ-ள்.) கறங்கு-சத்திக்கும்— அருவி- யாற்றையும் — நாட- நாட்டையுமுடையபாண்டியனே—ஏதிலார்- அயலார்—செய்தது-செய்த குற்றம், இறப்ப-மிகவும்—தீதெனினும்-குற்றமாகிலும்—நோக்குங்கால்-பார்க்குமிடத்தில—நோதக்கது-நோவத்தக்கது— என்னுண்டாம்-என்னவுண்டாம்—காதல் -தம்மிலாசையுடைய—கழுமியார்- சிநேகர்—செய்த-செய்தகுற்றம், நெஞ்சத்துள்-மனதுள், நின்று-இருந்து, விழுமிதாம்-சிறப்பையுடையதாம், (எ-று) ✲ இ-ம்,பாண்டியனே அரிய சிநேகர்செய்தகுற்றம்மனதிலிருந்துசிறப்புடையதாகும் அயலார்செய்ததுமிகவுங்குற்றமாயினும்வருந்தத்தக்கதென்ன-என்பதாம். ☞ குற்றம்-எ,விழுமிதாம்-ப. (அ)

தமரென்றுதாங்கொள்ளப்பட்டவர்தம்மைத் ✲
தமரன்மைதாமறிந்தாராயி-னவரைத் ✲
தமரினுநன்குமதித்துத்தமரன்மை ✲
தம்முளடக்கிக்கொளல் ✲

(இ-ள்.) தமரென்று-உறவென்று—தாம்-தாம்— கொள்ளப்பட்டவர்-சிநேகிக்கப்பட்டவர்—தம்மை-தம்மை— தமரன்மை- உறவில்லாமையை —தாமறிந்தாராயின்-தாங்கண்டாராகில்— அவரை-அவர்களை—தமரினும்-உறவினும்— நன்கு-நன்றாக—மதித்து-எண்ணி—தமரன்மை-உறவில்லாமையை—தம்முள்-தமக்குள்ளே— அடக்கிக்கொளல்-அடக்கிக்கொள்ளவேண்டும்—(எ-று) ✲ இ-ம்,சிநேகிக்கப்பட்டவரிடத்துச்சிநேகமில்லாமையைக்கண்டாலவரைசிநேகிதரினும் அதி

கமாகக்கொள்ளவேண்டும்-என்பதாம். ☞ ஒருவர்-எ, அடக்கிக்கொள்ளல்-ப, தமரன்மை-செ. (௯)

குற்றமுமேனைக்குணமுமொருவனை ... ... ❊
நட்டபினாடித்திரிவேனே-னட்டான் .... ❊
மறைகாவாவிட்டவன்செல்வுழிச்செல்க .... ❊
அறைகடல்சூழ்வையநக ... . ❊

(இ-ள்.) குற்றமும்-குற்றத்தையும்—ஏனை மற்ற—குணமும்-குணத்தையும்—ஒருவனை-ஒருவனை—நட்டபின்-சிநேகித்தபின்—நாடி-தேடி, திரிவேனேல்-திரிவேனாகில், நட்டான் சிநேகித்தவன்—மறை-இரகசியத்தை—காவாவிட்டவன்-வெளிப்படுத்தினவன்—செல்வுழி-செல்லுநரகத்தில்—அறை-சத்திக்கும்—கடல்சூழ்-கடலாற்சூழப்பட்ட—வையம்-உலகம், நக-(என்னை) நகைக்க—செல்க-நான்போவேனாக—(எ-று) ❊ இ-ம். ஒருவன்குற்றத்தையுங்குணத்தையுஞ்சிநேகித்தபின் ஆராய்வேனாகில்சிநேகன்இரகசியத்தைச்சொன்னவன்போகுநரகத்திற்போவேனாக-என்பதாம். ☞ யான்-எ, செல்க-ப. (௰)

நட்பிற்பிழைபொறுத்தல்-முற்றிற்று.

௨௪-ம்- அதிகாரம்.

கூடாநட்பு

அஃதாவது-பொருந்தாத சிநேகமாம்.

செறுப்பில்பழங்கூரைசேறணையாக .... ❊
விறைத்துநீரேற்றுங்கிடப்பர்-கறைக்குன்றம் ... ❊
பொங்கருவிதாழும்புனல்வளநன்னாட .. .. ❊
தங்கருமமுற்றுந்துணை .... ❊

(இ-ள்.) கறை-இருண்ட—குன்றம்-மலையில்—பொங்கு-மிகுந்த—அருவி-யாறு-தாழும்-வீழும்—புனல்-நீரையுடைய—நல-நல்ல—வளநாட-மலைமீதுநாட்டையுடையபாண்டியனே—செறுப்பில்-கட்டவிழ்ந்த, பழம்-பழைய, கூரை-கூரையையுடையவீட்டில், சேறு-சேற்றை, அணையாக-அணைகட்டி—இறைத்தும்-அணையுள்வீழ்நீரையிறைத்தும், நீர்-ஒழுகுநீரை—ஏற்றும்-மேலேதாங்கியும்—தம்-தமது—கருமம்-காரியம்—முற்றுந்துணை-முடியுமளவும்—கிடப்பர்-இருப்பார்—(எ-று) ❊ இ-ம். பாண்டியனேமழைவிடுமளவும் ஒழுக்குவீட்டிலிருப்பார்போலக்காரியமுடியுமளவும் சிலர்சிநேகித்திருப்பர்-என்பதாம். ☞ சிலர், தோன்றாஎழுவாய்-கிடப்பர்-பயனிலை. (௧)

சீரியார்கேண்மைசிறந்தசிறப்பிற்றாய் ... ...*
மாரிபோன்மாண்டபயத்ததா-மாரி ... ... *
வறந்தக்காற்போலுமேவாலருவிநாட ... ...*
சிறந்தக்காற்சீரிலார்நட்பு ... ... *

(இ-ள்.) வால்-வெள்ளிய, அருவி ஆற்றையும், நாட-நாட்டையுமுடையபாண்டியனே, சீரியார் நல்லவர், கேண்மை-சிநேகமானது—சிறந்த-மிகுந்த—சிறப்பிற்றாய்-சிறப்புடையதாய்—மாரிபோல்மழைபோல, மாண்டமாட்சிமைப்பட்ட —பயத்ததாம் பயனையுடையதாம்—சீரிலார்-கெட்டவர்கள்—நட்பு சிநேகமானது—சிறந்தக்கால் மிக்கவிடத்து, மாரி அம்மழை — வறந்தக்காற்போலும் பெய்யாவிட்டாற்போலும், (எ-று)※இ-ம். பாண்டியனே நல்லவர்சிநேகம் மழைபெய்தாற்போற் பயனுடையதாம்கெட்டவர்சிநேகம் அம்மழைபெய்யாவிட்டாற்போற்பயனில்லாதாம்-என்பதாம், ☞ கேண்மை-எ, பயத்ததாம்-ப, நட்பு-எ வறந்தக்காற்போலும்-ப. (௨)

நுண்ணுணர்வினாரொடுகூடி நுகர்வுடைமை .. ...*
விண்ணுலகேயொக்கும்விழைவிற்று-நுண்ணூ *
லுணர்விலராகியவூதியமில்லார்ப் ... .*
புணர்தனிரயத்துளொன்று .. .. *

(இ-ள்.) நுண் நுட்ப—உணர்வினாரொடு அறிவுளாருடன்— கூடி-சேர்ந்து—நுகர்வுடைமை அநுபவிக்குமநுபவம்—விண்ணுலகு தேவருலகை—ஒக்கும் நிகர்க்கும், விழைவிற்று பயனுடையது—நுண்-நுட்ப—நூல் நூலை—உணர்விலராகிய அறியாதவராகிய—ஊதியம் பயன்—இல்லார் இல்லாதவரை—புணர்தல் சிநேகித்தல் — நிரயத்துள் நரகங்களுள்ளே—ஒன்று ஒருநரகத்துக்கொப்பாம்(எ-று)※இ-ம், அறிவுள்ளாரோடுசிநேகித்தல்சுவர்க்கத்துக்கொப்பாம்-, அறிவிலலாரோடுசிநேகித்தல்நரகத்துக்கொப்பாம்-என்பதாம், ☞ நுகர்வுடைமை-எ விழைவிற்று-ப, புணர்தல்-எ, ஒன்று-ப, ஏ-ஆல்-அசைகள். (௩)

பெருகுவதுபோலத்தோன்றிவைத்தீப்போ... ...*
லொருபொழுதுஞ்செல்லாதேநந்து-மருகெல்லாஞ்
சந்தனநீள்சோலைச்சாரன்மலைநாட ... .*
பந்தமிலாளர்தொடர்பு ... ...*

(இ-ள்.) அருகு பக்கம்—எல்லாம் யாவும்—நீள் நீண்ட— சந்தனச்சோலை சந்தனச்சோலைகளையும்—சாரல் குளிர்காற்றையுமுடைய—மலைநாட மலைநாட்டையாளும்பாண்டியனே— பந்தமிலாளர் உட்சிநேகமில்லாதவர்—தொடர்பு சிநேகமானது— பெருகுவதுபோல வளர்வதுபோல— தோன்றி தோற்றி — வை வைக்கோல்—தீப்போல் தீயைப்போல—ஒருபொழுதும் ஒருநாளும்— செல்லாது செல்லாமல்

—நந்தும் கெடும்—(எ-று) ❊ இ-ம் - பாண்டியனே உள்ளன்பிலார் சிநேகம் வைக்கோலின் தீயைப்போலத்தோன்றியழியும்-என்பதாம், ☞ தொடர்பு-எ, நந்தும்-பு, ள-அசை. (௪)

செய்யாதசெய்துநாமென்றலுஞ்செய்வதனைச் ... ❊
செய்யாதுதாழ்த்துக்கொண்டோட்டலு- மெய்யாக
வின்புறூஉம்பெற்றியிகழ்ந்தார்க்குமந்நிலையே ... ❊
துன்புறூஉம்பெற்றிதரும் ... ... ❊

(இ-ள்:) செய்யாத-செய்யத்தகாத காரியத்தைசெய்து—நாமென்றலும் நாம்செய்வோமென்றுசொல்லலும்—செய்வதனை செய்யுங்காரியத்தை—செய்யாதுசெய்யாமல், தாழ்த்துக்கொண்டு-நீட்டிக்கவிட்டு, ஓட்டலும் வைத்தலும்—மெய்யாக உண்மையாக— இன்புறூஉம் இன்படைடயத்தக்க, பெற்றி பெருமையை, இகழ்ந்தார்க்கும் இகழ்ந்தவர்களுக்கும்—அந்நிலையே அப்பொழுதே — துன்புறூஉம் துன்படையத்தக்க—பெற்றி பெருமையை—தரும் கொடுக்கும் (எ-று) ❊ இ-ம், செய்யாதகாரியத்தைச் செய்வோமென்றுசொல்லுதலும் செய்யுங்காரியத்தைச்செய்யாதுவிடுதலுந் துன்பம்- என்பதாம், ☞ காரியங்கள்-எ, தரும்-பு, பெற்றி-செயப்படுபொருள். (௫)

ஒருநீர்ப்பிறந்தொருங்குநீண்டக்கடைத்தும் ... ❊
விரிநீர்க்குவளையையாம்பலொக்கல்லா ... ... ❊
பெருநீரார்கேண்மைகொளினுநீரல்லார் ... ... ❊
கருமங்கள்வேறுபடும் ... ... ❊

(இ-ள்) ஒருநீர் ஒருகுளத்துநீரில்—பிறந்து தோன்றி— ஒருங்கு ஒருவழிப்பட— நீண்டக்கடைத்தும் வளர்ந்தாலும்— விரி மலர்ந்த— நீர் குணமுடைய—குவளையை செங்கழுநீரை— ஆம்பல் அல்லி—ஒக்கல்லா ஒவ்வாது—(அதுபோல)பெரு மிகவும் — நீரார் நற்குணமுடையார்—கேண்மை நட்பை—கொளினும் கொண்டாலும் — நீரல்லார் நற்குணமில்லார் — கருமங்கள் செய்காரியங்கள் —வேறுபடும் விகற்பமாகப்படும் — (எ-று) ❊ இ-ம்- செங்கழுநீரை அல்லி ஒவ்வாதுபோல நற்குணமுடையாரது நட்பைக்கொண்டாலும் துற்குணமுடையார்செய்காரியங்கள்வேறுபடும் - என்பதாம், ☞ கருமங்கள்- எ, வேறுபடும்-ப. (௬)

முற்றற்சிறுமந்திமுற்பட்ட தந்தையை ... ... ❊
நெற்றுக்கண்டன்னவிரலான்-றெமிர்த்திட்டுக் ... ❊
குற்றிப்பறிக்குமலைநாடவின்னாதே ... ... ❊
யொற்றுமைகொள்ளாதார்நட்பு ... ... ❊

(இ-ள்.) முற்றல் முதிர்ச்சியல்லாத—சிறுமந்தி சிறுகுரங்கு—முன் முன்—பட்ட வரப்பட்ட—தந்தையை- (இளைகொண்டுவந்த) தந்

றைதனை—நெற்று-பயற்றநெற்றை—கண்டன்ன-கண்டதொத்த—விரலால்-விரல்களால்—ஞெமிர்த்திட்டு-ஒடித்து—குற்றி-குத்தி—பறிக்கும்-இனையைப்பிடுங்கும், மலைநாட-மலையையுநாட்டையுமுடையபாண்டியனே—ஒற்றுமை-மனவுரிமை—கொள்ளாதார்-கொள்ளாதவரது—நட்பு-சிநேகமானது, இன்னாது-பொல்லாது—(எ-று) ❊ இ-ம்-பாண்டியனே மனவுரிமையில்லாதார் சிநேகம்பொல்லாது என்பதாம்- ☞ நட்பு-எ, இன்னாது-ப, ஏகாரம்-அசை. (௭)

முட்டுற்றபோழ்தின்முடுகியென்னாருயிரை ... ... ❊
நட்டானொருவன்கைநீட்டேனேல்-நட்டான் ... ... ❊
கடிமனைகட்டழித்தான்செல்வுழிச்செல்க ... ... ❊
நெடுமொழிவையநக ... ... ❊

(இ-ள்.) முட்டு-துன்பம்—உற்றபோழ்தில்-வந்தபோது—முடுகி-விரைவாக—என்-எனது—ஆருயிரை-நிறைந்தவுயிரை—நட்டானொருவன்-சிநேகஞ்செய்தவொருவன்—கை-கையில், நீட்டேனேல்-கொடேனாகில்—நட்டான்-சிநேகனுடைய—கடி-காவல்பொருந்திய—மனை-மனையவளை—கட்டு-கற்பு—அழித்தான்-அழித்தவன்—செல்வுழி-போகுநரகத்தில்—நெடு-மிக்க—மொழி-புகழையுடைய—வையம்-உலகம்—நக-என்னைநகைப்பதாக—செல்க-யான்போகக்கடவேன்—(எ-று) ❊ இ-ம், சிநேகனுக்கு ஆபத்துவந்தபோது என்னுயிரை அவன்கையிற்கொடேனாகில் சிநேகன்பெண்சாதிகற்பை அழித்தவன்போகு நரகத்திற்போகக்கடவேன்-என்பதாம், ☞ யான்-தோன்றாவெழுவாய்-செல்க-ப. (௮)

ஆன்படுநெய்பெய்கலனுளதுகளைந்து ... ... ❊
வேம்படுநெய்பெய்தனைத்தரோ-தேம்படு ... ... ❊
நல்வரைநாடநயமுணர்வார்நண்பொரீஇப் ... ... ❊
புல்லறிவினாரொடுநட்பு ... ... ❊

(இ-ள்.) தேம்-தேன்—படு-பொருந்திய—நல்-நல்ல—வரை-மலையையும்—நாட-நாட்டையுமுடையபாண்டியனே—நயம்-நீதியை—உணர்வார்-அறிபவராது—நண்பு-சிநேகத்தை—ஒரீஇ-விட்டு—புல்-அற்ப—அறிவினாரொடு-அறிவாளருடன்—நட்பு (கொண்ட) நட்பானது—ஆன்-பசுவால்—படு-உண்டான—நெய்-நெய்யை—பெய்-வார்த்திருந்த—கலனுள்-கலசத்துள்—அது-அந்தநெய்யை—களைந்து-எடுத்து—வேம்படு-வேம்பிலுண்டான—நெய்-நெய்யை, பெய்தனைத்து-வார்த்துவைத்தாற்போலும்—(எ-று.) ❊ இ-ம், பாண்டியனே அறிவுடையார் சிநேகத்தைவிட்டு அறிவில்லார் சிநேகத்தைக்கொள்ளுதல் கலசத்தில் பசுவின்நெய்யைநீக்கி வேம்பின்நெய்யைவிட்டாற்போலும் என்பதாம். ☞ நட்பு-எ, அனைத்து-ப, அரோ-அசை. (௯)

உருவிற்கமைந்தான்கணூராண்மையின்மை ... ...❋
பருகற்கமைந்தபானீர-ளாயற்றே ... ... ❋
தெரிவுடையார்தீயினத்தாராகுதனாகம் ... . ❋
விரிபெடையோடாடிவிட்டற்று... ... ... ❋

(இ-ள்.) உருவிற்கு-மடிவினுக்கு—அமைந்தான்கண்-(அழகு)பொருந்தியவனிடத்து—ஊராண்மை-சிநேகத்தன்மை—இன்மை- இல்லாமையானது—பருகற்கு- குடித்தற்கு—அமைந்த-பொருந்திய—பால்-பாலில்—நீர்-சலத்தை—அளாயற்று-கலந்தாற்போலும், தெரிவுடையார்-அறிவுடையார்—தீயினத்தார்- கொடியகூட்டத்தார்— ஆகுதல்-ஆதல்—நாகம்-நாகமானது, விரி-விரியன்பாம்பின்—பெடையோடு-பெட்டையுடன் — ஆடிவிட்டற்று - கூடிப்புணர்ந்தாற்போலும்— (எ-று) ❋இ-ம், அழகுள்ளவனிடத்துச் சிநேகமில்லாமையானது பாலிலே நீர்கலந்தாற்போலும், நல்லவர்கள் கெட்டவர்களாகுதல்-நாகம்-விரியன் பெட்டையோடுசேர்ந்தாற்போலும் - என்பதாம், ☞ இன்மை-எ, அளாயற்று-ப, நாகம்-எ, ஆடிவிட்டற்று-ப. (௰)

கூடாநட்பு-முற்றிற்று.

உ௫-ம் - அதிகாரம்.

அறிவுடைமை.

அஃதாவது-அறிவுடையதாயிருக்குந் தன்மையாம்.

பகைவர்பணிவிட நோக்கித்தகவுடையார்... ... ... ❋
தாமேயுநாணித்தலைச்செல்லார்-காண ... ... ❋
யிளம்பிறைபாயக்காற்றிங்களைச்சேரா ... .❋
தணங்கருந்துப்பினரா ... ... ❋

(இ-ள்.) இளம்பிறை-இளயபிறை—ஆயக்கால்-ஆனால்—திங்களை-சந்திரனை—அணங்கு-வருத்தஞ்செய்யும்—அரும்-அரிய, துப்பின்-வலியுடைய—அரா-பாம்பானது, சேராது-அடையாது—(அதுபோல) பகைவர்-பகையாளிகள்—பணிவிடம்-தளர்ந்தவிடம்—நோக்கி- பார்த்து, தகவுடையார்-அறிவுடையார்—தாமேயும்-தாங்கள், நாணி-அவர்க்கிரங்கி, தலைச்செல்லார்-(கொடுக்க)முதன்மையாகப்போகார், காணாய்-பாராய் (எ-று)❋இ-ம், இளம்பிறையாகிற் சந்திரனை பாம்புசேராது-அதுபோலப் பகைவர்தளர்ந்தவிடத்து அறிவுடையோர் அவரைவெல்லச்செல்லார்-என்பதாம். ☞ தகவுடையார்-எ, செல்லார்-ப. (க)

நளிகடற்றண்சேர்ப்பநல்கூர்ந்தமக்கட் ※
கணிகலமாவதடக்கம்-பணிவில்சீர் ※
மாத்திரையின்றிநடக்குமேல்வாழுமூர் ※
கோத்திரங்கூறப்படும் ※

(இ-ள்.) நளி-பெரிய—தண் குளிர்ந்த—கடல்-கடலையும்—சேர்ப்ப-கரையையுமுடையபாண்டியனே—நல்கூர்ந்த-வறுமையடைந்த—மக்கட்கு-மனிதர்க்கு, அணிகலமாவது-ஆபரணமாவது—அடக்கம்-அடங்கியிருத்தல்—பணிவில் அடக்கமில்லாத, சீர்-சிறப்பையுடைய—மாத்திரையின்றி-அளவுகடந்து—நடக்குமேல்-நடப்பானாகில்—வாழும்-தான்வாழும்— ஊர்-ஊரோரால்—கோத்திரம்- தன்குலத்திற்குக்குற்றம்—கூறப்படும்-சொல்லப்படுவான்—(எ-று) ※ இ-ம்-பாண்டியனே தரித்திரர்களுக்கு ஆபரணமடக்கமாம்-ஒருவன் அளவுகடந்துநடப்பானாகில் ஊரோரால் பழிக்கப்படுவான்-என்பதாம், ☞ அணிகலம்-எ, அடக்கம்-ப, (நன்னூல்) [பல்லோர்படர்க்கை முன்னிலைதன்மையிற் செல்லாதாகுஞ்செய்யுமென்முற்றே] இவ்விதியால்-செய்யுமென்னும் வாய்ப்பாட்டு-முற்றுபடுவனென்றாயிற்று. (௨)

எந்நிலத்துவித்திடினுங்காஞ்சிரங்காழ்தெங்காகா ※
தென்னாட்டவருஞ்சுவர்க்கம்-புகுதலாற் ※
றன்னாற்றானாகுமறுமைவடதிசையுங் ※
கொன்னாளர்சாலப்பலர் ※

(இ-ள்) எந்நிலத்து-எந்தநிலத்தில்— வித்திடினும்-விதைபோட்டாலும்—காஞ்சிரம்-எட்டியின்—காழ்-விதை— தெங்காகா-தென்னமரமாகாது—தென்னாட்டவரும்- தெற்கிலுள்ளவரும்— சுவர்க்கம்புகுதலால்-(தருமஞ்செய்து)சுவர்க்கத்திற்பிரவேசித்தலால்—தன்-தனது— ஆற்றான்-(தரும) வழியால்—மறுமை-மறுபிறப்பு— ஆகும்- ஆம்—வடதிசையும்-வடதிக்கிலும்—கொன்னாளர்- தருமப்பலனில்லாதார்—சாலப்பலர்-மிகவும்பலர்—(எ-று) ※ இ-ம்- எட்டிவிதைநடத்தென்னமரமாகாது-தெற்குள்ளவருஞ் சுவர்க்கத்திற்போவர்-வடக்குள்ளவரும்நரகத்திற்போவர்-என்பதாம் ☞ மறுமை-எ, ஆகும்-ப, [தெற்கு -யமதிசை வடக்கு-தெய்வதிசைஉயர்ந்தவிடத்திருப்பினும்பாவிகள்புண்ணியர்களாகார்-தாழ்ந்தவிடத்திருப்பினும்புண்ணியர்கள்பாவிகளாகார்.]

வேம்பினிலையுட்கனியினும்வாழைதன் ※
தீஞ்சுவையாதுந்திரியாதே-மாங்கே ※
யினந்தீதெனினுமியல்புடையார்கேண்மை ※
மனந்தீதாம்பக்கமரிது ※

(இ-ள்.) வேம்பின்-வேம்பினுடைய—இலையுள் இலையில்— வாழை-வாழைக்காய்—கனியினும் பழுத்தாலும், தன் தனது, தீஞ்சுவை-இனிய

மந்திரம் — யாதும் எவ்வளவும் — திரியாது வேறுபடாது — ஆங்கு அதுபோல — இனம் தன்னினம் — தீவதனிலும் குற்றமாகிலும் — இயல்புடையார் நற்குணமுடையார் — மேன்மை உறவாம் — மனம் இருதயம் — தீதாம் குற்றமாகும் — பக்கம் பட்சம் — அறிந்து அருமை, (எ-று) ❋ இ-ம் வாழை வேம்பின் பிறப்புற்றதாலும் மதுரங்கெடாது அதுபோல நல்லவர் தீயவருடன் சேரினும் அவர்மனங்கெடாது என்பதாம். ☞ மனம் எ, அறிந்து பது ஆம் ஏ அசை. (௪)

கடல்சார்ந்து மின்னீர் பிறக்கு மலைசார்ந்து ... ❋
முப்பீண் டுவரி பிறத்தலாற் - றத்த ... ❋
மினத்தனைய ரல்ல ரெறிகடற்றண் சேர்ப்ப ... ❋
மனத்தனையர் மக்களென் பார் ... ❋

(இ-ள்.) எறி அலைகளெறியும் — கடல் கடலையும் — தண் குளிர்ந்த — சேர்ப்ப இறங்குதுறையையுமுடைய பாண்டியனே — கடல் சமுத்திரம், சார்ந்தும் சார்ந்தவிடத்தும் — இன்னீர் இனியநீரானது — பிறக்கும் உண்டாம் — மலை மலை — சார்ந்தும் சார்ந்தவிடத்தும் — உப்பு உப்பு — ஈண்டு மிகுந்த — உவரி உவர்நீர் — பிறத்தலால் உண்டாதலால் — மக்களென்பார் மக்களென்று சொல்லப்படுவார் — தத்தம் தந்தம் — இனத்து கூடினவினத்தின் — அனையரல்லர் ஒப்பானவரல்லர் — மனத்து மனத்தின் — அனையர் ஒப்பானவராவர் — (எ-று) ❋ இ-ம் பாண்டியனே கடல்சார்ந்தவிடத்திலும் நல்லநீருண்டாம் மலைசார்ந்த விடத்திலும் உப்புநீருண்டாம், ஆதலால் அறிவுளோர் மனத்தாலொத்தவரல்லாது இனத்தாலொத்தவரல்லர் என்பதாம். ☞ மக்களென்பார் எ, மனத்தனையர் ப. (௫)

பராஅரைப் புன்னைபடுகடற்றண் சேர்ப்ப ... ❋
வொராஅலு மொட்டலுஞ் செய்பவோ - நல்ல ... ❋
மரூஉச் செய்தியார் மாட்டுந் தங்குமனத்தார் ... ❋
விராஅஅய்ச் செய்யாமை நன்று ... ❋

(இ-ள்) பராஅரை பருத்தவடியினையுடைய — புன்னை புன்னைமரங்கள் — படு பொருந்திய — தண் குளிர்ந்த — கடற்சேர்ப்ப கடற்கரையையுடைய பாண்டியனே — தங்கும் (சுத்தந்) தங்கும் — மனத்தார் மனமுடையவர் — நல்ல நன்மைகள் — மரூஉ மருவிய — செய்தியார்மாட்டும் ஒழுக்கமுடையாரிடத்தும் — ஒராஅலும் நீங்கலும் — ஒட்டலும் கூடுதலும் — செய்பவோ செய்வார்களோ — விராஅஅய் ஒருவருடன் கலந்து — செய்யாமை சிநேகியாதிருத்தல், நன்று நல்லது, (எ-று) ❋ இ-ம் பாண்டியனே சுத்தமனமுள்ளோர், நல்லவரிடத்து நட்புக்கொள்ளலும் நட்புவிடுதலுஞ் செய்யார் யாவரிடத்துஞ் சிநேகியாமை நல்லது என்பதாம். ☞ செய்யாமை எ, நன்று ப. (௬)

உணரவுணரு முணர்வுடையாரைப் ... ...*
புணரப்புணருமா மின்பம்-புணரிற் ... ... *
றெரியத்தெரியுந் தெரிவிலாதாரைப் ... ...*
பிரியப்பிரியுமா நோய் ... ... *

(இ-ள்.) உணர (சிநேகஞ்)செய்தறிய—உணரும் (சிநேக) நிலையறியும்—உணர்வுடையாரை அறிவுடையாரை—புணர சிநேகிக்க—இன்பம் இன்பமானது—புணரும் பொருந்தும்—புணரில் சிநேகிக்கில்—தெரிய சிநேகஞ்செய்தறிய—தெரியும் சிநேகநிலைதெரியும்—தெரிவிலாதாரை அறிவிலாதவரை—பிரிய சிநேகம்விட்டுப்பிரிய—நோய் துன்பமானது—பிரியும் நீங்கும்—(எ-று) ※ இ-ம் அறிவுடையாரைச்சிநேகித்தாலின்பமுண்டாகும், அறிவில்லாசிநேகத்தைவிட்டாலின்பமுண்டாகும்,என்பதாம், ☞ இன்பம்-எ,புணரும், நோய்-எ,ப பிரியும்-ப,ஆம்-இரண்டும்-அசைகள். (எ)

நன்னிலைக்கட்டன்னை நிறுப்பானுந் தன்னை ... ...*
நிலைகலக்கிக்கீழிடுவானு-நிலையினு ... ... *
மேன்மேலுயர்த்து நிறுப்பானுந் தன்னைத் .. ...*
தலையாகச்செய்வானுந் தான் .. .. *

(இ-ள்.) நல் நல்ல—நிலைக்கண் நிலையிடத்து—தன்னை தன்னை—நிறுப்பானும் நிறுத்திக்கொள்பவனும்—தன்னை தன்னை—நிலைகலக்கி அந்நிலைகெடுத்து,கீழிடுவானும் கீழாக்கிக்கொள்பவனும், நிலையினும் முன்னிருந்தநிலையினும்—மேன்மேல் (தன்னை) மேலும்மேலும்—உயர்த்து உயரப்பண்ணி—நிறுப்பானும் நிறுத்திக்கொள்பவனும்—தன்னை தன்னை—தலையாக தலைமையாக—செய்வானும் செய்துகொள்பவனும்,தான் தானே—(எ-று) ※ இ-ம், ஒருவன்தன்னை நல்நிலையினிறுத்திக்கொள்ளலும் அந்நிலைக்குக்கீழாக்கிக்கொள்ளலும்முன்னிருந்த நிலையினும்மேலாக்கிக்கொள்ளலும்தலையாக்கிக்கொள்ளலும்தன்னாலேதான்-என்பதாம், ☞ தான்-எ,நிறுப்பான்முதலிய-பயநிலை. (அ)

கருமவரிசையாற்கல்லாதார்பின்னும் .. .. *
பெருமையுடையாருஞ்சேற-லருமரபி ... ... *
னோதமாற்றுமொலிகடற்றண்சேர்ப்ப ... .. *
பேதமையன்றததறிவு ... ... *

(இ-ள்.) ஓதம் அலைகள்—அரற்றும் சத்திக்கும்—ஒலி சத்தத்தையுடைய—தண் குளிர்ந்த—கடற்சேர்ப்ப கடற்கரையுடையபாண்டியனே—கருமவரிசையால் காரியமுறைமையால்—கல்லாதார்கற்காதவர், பின்னும் பின்னாகவும்—அரும் அரிய—மரபின் குலமுள்ள—பெருமையுடையாரும் பெருமையுடையவறிவாளிகளும்—சேறல் செல்லுதல்—பேதைமையன்று அறியாமையல்ல—அதறிவு அஃதறிவுடைமை

(எ-று) ※ இ-ம். பாண்டியனே கல்லாதவர்பின்னுங் கற்றவருஞ் செல்லு
தல் அறியாமையல்லகாரியமாகுமறிவுடைமையாம்-என்பதாம், ☞ அ
து-எ, அறிவ ப. (௯)

கருமமு முட்படாப்போகமுந் துவ்வாத் ... ... *
தருமமுந் தக்கார்க்கேசெய்யா-வொருநிலையே ... *
முட்டின்றி மூன்று முடியுமேலஃதென்ப ... ... *
பட்டினம்பெற்றகலம் ... ... *

(இ-ள்.) கருமமும் காரியங்களும்—உட்படா உட்பட்டு—போகமு
ம் போகத்தையும்—துவ்வா அநுபவித்து—தருமமும் தருமத்தையு
ம்—தக்கார்க்கே பெரியோர்க்கே—செய்யா செய்து—ஒருநிலையே
ஒருபிறப்பில்—முட்டின்றி தடையில்லாமல்—இப் மூன்றும் இம்மூச்
செய்கைகளும்—முடியுமேல் ஒருவனுக்குவாய்க்குமாகில்—அஃது
அம்முடிவு—பட்டினம் தன்பட்டினத்தை—பெற்ற அடைந்த—கல
ம் (பொருள்கொண்டுவந்த) மரக்கலம்—என்ப என்பார்கள்—(எ-று)
※ இ-ம். ஒருவனுக்குக்காரியங்களும் போகமுந்தருமமுங் கைகூடுமா
கில் அது பொருள்கொண்டுவந்த கப்பலுக்கொப்பாம் - என்பதாம்,
☞ அஃது-எ, கலமென்ப-ப. (௰)

அறிவுடைமை-முற்றிற்று.

௨௬-ம்-அதிகாரம்.

அறிவின்மை.

அஃதாவது- அறிவில்லாமையைச்சொல்லுதலாம்.

நுண்ணுணர்வின்மைவறுமையஃதுடைமை ... *
பண்ணப்பணைத்தபெருஞ்செல்வ-மெண்ணுங்காற் *
பெண்ணவாயாணிழந்தபேடியணியாளோ ... ... *
கண்ணவாத்தக்ககலம் ... ... *

(இ-ள்.) நுண் நுட்பமாகிய—உணர்வின்மை அறிவில்லாமையே—
வறுமை தரித்திரமாம், அஃதுடைமை அவ்வறிவுடைமையே, பண்ண
செய்ய—பணைத்த வளர்ந்த—பெரும் பெரிய, செல்வம் செல்வமாம்,
எண்ணுங்கால் ஆராயுமிடத்து—பெண் பெண்ணின்வடிவை, அவாய்
இச்சித்து—ஆண் ஆணின்வடிவை—இழந்த நீங்கிய, பேடி பேடியா
னவள்—கண் கண்ணுக்கு, அவாத்தக்க இச்சிக்கத்தக்க, கலம் ஆபரண
ங்களை—அணியாளோ தரியாளோ (எ-று) ※ இ-ம். அறிவில்லாமைய

தரித்திரம் அறிவுடைமையே செல்வம் ஆகையால் பெண்ணுமைக இச்சித்து ஆணுமைகவிட்டபேடி ஆபரணங்களை அணியாளோ-என்பதாம். ☞ உணர்வின்மை-எ, வறுமை-ப, உணர்வுடைமை-எ, செல்வம்-ப. (௧)

பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் பாடழிந் ... *
தல்லலுழப்பதறிதிரோ-தொல்சிறப்பி... .. ..*
னாவின் கிழத்தியுறைநலாற் சேராளே... ....*
பூவின் கிழத்திபுலந்து .. .. *

(இ-ள். பல்லான்ற பலவிதமாக நிரம்பிய—கேள்விப்பயன் கல்விப்பயனை—உணர்வார் அறிபவர்—பாடு தம்பெருமை, அழிந்து கெட்டு—அல்லல்-துன்பத்தில்—உழப்பது வருந்துவது, அறிதிரோ அறியீரோ—தொல் பழைய—சிறப்பின் சிறப்புடைய— நாவின்கிழத்தி சரஸ்வதி—உறைநலால் வாசம்பண்ணலால்— பூவின்கிழத்தி இலக்குமி, புலந்து பிணங்கி—சேராள் அடையாள்—(எ-று) ❋ இ-ம், சரஸ்வதி வாசப்பணணுமிடத்தில் இலக்குமி வாசம்பண்ணாள் என்பதாம். ☞ பூவின்கிழத்தி-எ, சேராள்-ப, எ-அ௬க. (௨)

கல்லென்றுதந்தைகழறவதனையோர் ... ... *
சொல்லென்றுகொள்ளாதிகழ்ந்தவன்-மெல்ல ...*
வெழுத்தோலைபல்லார்முன் னீட்டவிளியா ..... *
வழுக்கோலைக்கொண்டுவிடும் ... ... *

(இ-ள்.) தந்தை பிதாவானவன்—கல்லென்று (நூல்களைக்) கற்றுக்கொள்ளென்று—கழற சொல்ல—அதனை அச்சொல்லை— ஓர்சொல்லென்று ஒருசொல்லென்று—கொள்ளாது கொள்ளாமல்— இகழ்ந்தவன் பழித்தவன்—மெல்ல மெதுவாக—எழுத்தோலை (ஒருவ)னெழுதியவோலையைவாசியென்று—பல்லார்முன் பலபேர்முன்— நீட்ட கொடுக்க—இளியா அவமதித்து—வழு கெடுதியாக—கோலை அடிப்பதற்குக்கோலை—கொண்டுவிடும் ஏற்றுக்கொள்வான்— (எ-று) ❋ இ-ம், பிதாபடியென்றுசொல்ல, அச்சொல்லைக்கொள்ளாதுபழித்தவன் கையில்வேறொருவன்எழுத்தோலைவாசியென்றுபலர்முன் கொடுக்கஅவன் இகழ்ந்து அடிக்கத்தடிபெடுத்துக்கொள்வான் என்பதாம். ☞ இகழ்ந்தவன்-எ, கொண்டுவிடும்-ப, கோலை-செ. (௩)

கல்லாதுநீண்டவொருவனுலகத்து... ... ... *
நல்லறிவாளரிடைப்புக்கு-மெல்ல... .... *
விருப்பினுநாயிருந்தற்றேயிராஅ ... . *
துரைப்பினுநாய்குரைத்தற்று.... ... ... *

(இ-ள்) கல்லாது கற்காது—நீண்ட வளர்ந்த—ஒருவன் ஒருத்தன்—உலகத்து உலகத்தில்— நல்லறிவாளர் நல்லறிவுடையார்—இடை நடுவே—புக்கு பிரவேசித்து —மெல்ல மெல்ல—இருப்பினும்- இருந்

நாளும்—நாயிருந்தற்று நாயிருந்தாற்போலும்—இராஅது இருக்கா
மல்—உரைப்பினும் ஒன்றைச்சொன்னாலும்— நாய்குரைத்தற்று நா
ய்குரைத்தாற்போலும்—(எ-று)❋இ-ம்.கற்றவர் சபையில் கல்லாதவ
னிருந்தாலு நாயிருந்தாற்போலும்அவன் ஒன்றைச்சொன்னாலு நாய்கு
ரைத்தாற்போலும் என்பதாம்.☞இருப்பு- உரைப்பு-எ, இருந்தற்று-
குரைத்தற்று-ப,எ-அளக. (௪)

புல்லாப்புன்கோட்டிப்புலவரிடைப்புக்குக்... ...❋
கல்லாதசொல்லுங்கடையெலாங்-கற்ற...........❋
கடாஅயினுஞ்சான்றவர் சொல்லார்பொருண்மேற்
படாஅவிடுபாக்கறிந்து ... ... ❋

(இ-ள்.) கடை கடையானவன்—புல்லா இலக்கணத்தோடுபொருந்
தாத—புன் அற்ப—கோட்டி சபைகூடியிருக்கும்—புலவர் புன்புல
வர்—இடை நடுவே—புக்கு பிரவேசித்து—கல்லாத கற்காதவைற்றை
—சொல்லும் சொல்வான்—சான்றவர் பெரியோர்—எலாம் எல்லாம்
—கற்ற கற்றவற்றை—கடாஅயினும் பிறர்கேட்பினும்— பொருண்
மேல் சொல்லும்பொருண்மேல்—படாஅ அவர்புத்திசாராமல்—வி
டுபாக்கு விடும்பொருட்டு—அறிந்து தெரிந்து—சொல்லார் சொல்
லார்—(எ-று)❋இ-ம். கடையானவன் கல்லார்சபையிற்கல்லாதனவற்
றைச்சொல்லுவான்கற்றோர்பிறர்கேட்பினுங்கற்றவற்றைச்சொல்லார்
என்பதாம்.☞கடை-எ,சொல்லும்-ப,கல்லாத-செ,சான்றவர்-எ, சொ
ல்லார்-ப, கற்ற-செ. (௫)

கற்றறிந்தநாவினார்சொல்லார்தஞ்சோர்வஞ்சி ...❋
மற்றையராவார்பகர்வர்-பனையின்மேல் .. ..❋
வற்றியவோலைகலகலக்குமெஞ்ஞான்றும்... ...❋
பச்சோலைக்கில்லையொலி ... ... ❋

(இ-ள்.) பனையின்மேல் பனைமரத்தின்மேல்—வற்றியவோலை உலர்
ந்தவோலை—கலகலக்கும் கலகலவென்றுசத்திக்கும், எஞ்ஞான்றும் எ
ந்நாளும்—பச்சோலைக்கு பசியவோலைக்கு—ஒலி சத்தம்—இல்லை இ
லலை—(அதுபோல)கற்று நூல்களைக்கற்று—அறிந்த உணர்ந்த—நா
வினார் நாவுடையார்— தம் தமது—சோர்வு சொற்சோர்வுக்கு— அ
ஞ்சி பயந்து—சொல்லார் ஒன்றுஞ்சொல்லார், மற்றையராவார் கல்
லாதவர், பகர்வர் ஆராயாது சொல்வார்—(எ-று)❋இ-ம்.காய்ந்தவோ
லைசத்திக்கும்பச்சைஓலைசத்திக்காது அதுபோலக்கற்றோர்சொற்சோ
ர்வுக்கஞ்சி ஒன்றுஞ்சொல்லார், மற்றோர் சொற்சோர்வு படாமற்
சொல்லுவர்என்பதாம்.☞நாவினார்-எ,சொல்லார்-ப,மற்றையராவார்
-எ,பகர்வர்-ப. (௬)

பன்றிக்கூழ்ப்பத்தரிற்றேமாவடித்தற்று.........❋
ஒன்றறியாமாந்தர்க்கறத்தா-றுரைக்குங்கால்......❋

குன்றின்மேற்கொட்டுந்தறிபோற்றலைதகர்ந்து ... ... ✻
சென்றிசையாவாகுஞ்செவிக்கு ... ... ✻

(இ-ள்.) பன்றி-பன்றிக்கு—கூழ்-கூழ்வார்க்கும்—பத்தரில்-தொட்டியில்—தேமா-மதுரமாங்கனியை—வடித்தற்று-பிழிந்தாற்போலும்—நன்று-நன்மையை—அறியா-அறியாத, மாந்தர்க்கு-மனிதர்க்கு—அறத்து-தருமத்தினது—ஆறு-வழியை—உரைக்குங்கால்-சொல்லுமிடத்து—குன்றின்மேல்-மலைமேல்—கொட்டும்-அடிக்கும்—தறிபோல்-கட்டுத்தறிபோல்—தலைதகர்ந்து-தலைசிதறி—செவிக்கு-காதுக்கு—சென்று-போய்—இசையாவாகும்-ஏறுவாகும்—(எ-று) ❋ இ-ம். நன்மையறியாதமனிதர்களுக்கு தருமத்தின்வழியைச்சொல்லுதல பன்றித்தொட்டியில் மாங்கனியைப்பிழிந்தாற்போலும் மலைமேலடிக்குந்தறிபோல்வர் காதுக்கேறாது- என்பதாம். ☞ அறத்தாறு-எ, இசையாவாகும்-ப, ஆல்-அசை. (எ)

பாலாற்கழீஇப்பலநாளுணக்கினும் ... ... ✻
வாலிதாம்பக்கமிருந்தைக்-கிருந்தன்று ... ... ✻
கோலாற்கடாஅய்க்குறினும்புகலொல்லா ... ... ✻
நோலாவுடம்பிற்கறிவு ... ... ✻

(இ-ள்.) பலநாள்-பலகாலமும்—பாலால்-பாலினால்—கழீஇ-கழுவி—உணக்கினும்-உணத்தினாலும்—வாலிதாம்-வெள்ளிதாகிய—பக்கம்-தன்மை—இருந்தைக்கு-கரிக்கு—இருந்தன்று-இருந்ததில்லை—(அதுபோல)கோலால்-கோலினால்—கடாய்-அடித்து, குறினும்-கூறினாலும்—நோலா-முற்பிறப்பிற்றவஞ்செய்யாத, உடம்பிற்கு-உடலிற்கு—அறிவு-உணர்வு, புகலொல்லா-பிரவேசியாது—(எ-று) ❋ இ-ம், கரியைப் பாலிற்கழுவி யுலர்த்தினாலும் வெள்ளையாகாது அதுபோல முன்செய் தவமில்லார்க்குச்சொல்லினு மறிவுபிரவேசியாது என்பதாம், ☞ அறிவு-எ, புகலொல்லா-ப, குறினும்என்றது-குறுக்கல்விகாரம். (அ)

பொழிந்தினிதுநாறினும்பூமிசைதல்செல்லா ... ... ✻
திழிந்தவைகாமுறூஉமீப்போ-லிழிந்தவை ... ... ✻
தாங்கலந்தநெஞ்சினார்க்கென்னாகுந்தக்கார்வாய்த் ... ✻
தேன்கலந்ததேற்றச்சொற்றேர்வு ... ... ✻

(இ-ள்.) பொழிந்து-தேன்பொழிந்து—இனிது-இனிதாக—நாறினும்-பரிமளித்தாலும்—பூ-பூவிற்றேனை, மிசைதல்-உண்ணுதற்கு—செல்லாது-போகாது—இழிந்தவை-இழிவானமலங்களை—காமுறூஉம்-இச்சிக்கும்—ஈப்போல்-ஈயைப்போல—இழிந்தவை-இழிந்தசெய்கைகள்—கலந்த-பொருந்திய—நெஞ்சினார்க்கு-மனமுடையார்க்கு—தக்கார்-பெரியோர்—வாய்-வாயில்—தேன்-தேனை—கலந்த-கலந்தாற்போலும்—தேற்ற-தெளிந்த—சொல்-சொற்களுடைய—தேர்வு-

ஆராய்ச்சி, என்றாகும்-என்னபயனாகும்—(எ-று) ※ இ-ம், இழிவானமலங்களை இச்சிக்கும் ஈயைநிகர்த்தவர்களுக்குப்பெரியோர்சொல்லும்வாக்கியம் என்னபலன்பெறும் என்பதாம். ☞ தேர்வு-என, என்றாகும்-பு, தாம்-அசை. (௯)

கற்றாருரைக்குங்கசடறுநுண்கேள்வி... ... ... ※
பற்றாதுதன்னெஞ்சுகைத்தலான்-மற்றுமோர்... ... ※
தன்போலொருவன்முகநோக்கித்தானுமோர் ... ※
புன்கோட்டிகொள்ளுமாங்கீழ்... ... ... ※

(இ-ள்.) கற்றார்-கற்றோர்—உரைக்கும்-சொல்லும்—கசடு-குற்றம்—அறு-அற்ற—நுண்-நுட்பமான—கேள்வி-சொற்களை, பற்றாது-கொள்ளாது—தன்னெஞ்சு-தன்மனது, உகைத்தலால்-உதைத்துட்போதலால்—மற்றும்-பின்னும்—தன்போலொருவன்-தன்னைப்போலொருவன—முகம்நாக்கி-முகத்தைப்பார்த்து—தானுமோர்-தானொரு—புன்-அற்ப—கோட்டி-சபையை—கொள்ளும்-கொண்டிருப்பான்—கீழ்-கீழ்மகன்—(எ-று) ※ இ-ம், கீழானவன் கற்றோர்சொல்லு நுட்பசொற்களைக் கொள்ளாமல் தன்போலொருவனுடன் சேர்ந்து அற்பசபையிற்சேருவான்- என்பதாம். ☞ கீழ்-எ, கொள்ளும்-பு, புன்கோட்டி-செ, ஆல-ஓர்-ஆம்-அசைகள். (௰)

அறிவின்மை- முற்றிற்று.

௨௭-ம்- அதிகாரம்.

நன்றியில்செல்வம்.

அஃதாவது- நன்மையில்லாத செல்வமாம்.

அருகலாகிப்பலபழுத்தக்கண்ணும்... ... ... ※
பொரிதாள்விளவினைவாவல்-குறுகா... ... ...※
பெரிதணியராயினும்பீடிலார்செல்வங் .. .. ※
கருதுங்கடப்பாட்டதன்று ... ... ※

(இ-ள்.) அருகலதாகி-தானிருக்குமிடத்திற்கயலாகி—பல-அனேகம், பழுத்தக்கண்ணும்-பழுத்தாலும், பொரி-பொரிந்த, தாள்-தாள்களையுடைய—விளவினை விளாமரத்தை—வாவல்-வௌவால்கள்—குறுகா-சேரா—(அதுபோல)பெரிது-மிகவும்—அணியராயினும்-சமீபராயினும்—பீடு)பெருமை—இலார்-இல்லாதவர்—செல்வம்-ஐசுவரியம், கருதும்-நினைக்கத்தக்க—கடப்பாட்டதன்று- முறைமையுடையதன்று, (எ-று) ※ இ-ம், வௌவால்கள் விளாமரம்பழுத்தாலும் சேராவாம்,

அதுபோல்பெருமையிலார் பக்கலிலிருப்பாராயினும் அவர்செல்வம் பயன்படாது என்பதாம். ☞ செல்வம்-எ, கடப்பாட்டதன்று-ப. (௪)

அள்ளிக்கொள்வன்னகுறுமுகிழவாயினும் ... ...*
கள்ளிமேற்கைநீட்டார்சூடும்பூ-வன்மையாற் ... *
செல்வம்பெரிதுடையராயினுங்கீழ்களை ... ...*
நள்ளாரறிவுடையார் ... ...*

(இ-ள்.) அள்ளிக்கொள்வன்ன-அள்ளிக்கொள்வதுபோலும்—குறுகிய—முகிழவாயினும் அரும்புகளையுடையவாயினும்—சூடும்- அணியத்தகும்—பூவன்மையால்-மலரல்லாமையால்—கள்ளிமேல்-கள்ளியின்மேல்—கைநீட்டார்-கைகளைநீட்டார்—(அதுபோல) செல்வம்-பாக்கியம் — பெரிது-மிகவும், உடையராயினும்-உடையாராகிலும்—கீழ்களை- கீழ்மக்களை — அறிவுடையார்- விவேகமுடையார்— நள்ளார்-சேரார்—(எ-று) ❁ இ-ம்-கள்ளிப்பூவைப்பறிக்கமாட்டார்-அதுபோல அறிவுடையோர்கீழ்மக்களைச்சேரமாட்டார்-என்பதாம். ☞ அறிவுடையார்-எ, நள்ளார் பயனிலை-கீழ்களை-செ. (௨)

மல்குதிரையகடற்கோட்டிருப்பினும் ... ...*
வல்லூற்றுவரிக்கிணற்றின்கட்-சென்றுண்பர் ... *
செலவம்பெரிதுடையராயினுஞ்சேட்சென்று .. *
நல்குவார்கட்டேநசை ... ... *

(இ-ள்.) மல்கு-மிக்க—திரைய-அலைகளையுடைய—கடல்-சமுத்திரத்தின்—கோடு-கரையில—இருப்பினும்-இருந்தாலும்— வல்லூற்று-வலியவூற்றையுடைய—உவரில-உப்பில்லாத—கிணற்றின்கண்- கிணற்றினிடத்து— சென்று-போய்— உண்பர்-நீரையுண்ணுவார்— (அதுபோல) செல்வம்-(அருகிருந்தோர்) பாக்கியம்—பெரிது-மிகவும்—உடையராயினும்- உடையவராகினும்— சேண்-தூரத்தில— சென்று-போய்—நல்குவாரகட்டே-கொடுப்பவரிடத்தே— நசை- ஒருவர்க்கிச்சையிருக்கும்—(எ-று) ❁ இ-ம், நல்லநீர்க்கிணறு கடற்கரையிலிருந்தாலும் அவ்விடத்திற்சென்று நீரைக்குடிப்பார்கள்-அதுபோலக் கொடுப்பவர் தூரத்திலிருந்தாலும் அவரிடத்தே யொருவர்க்கு இச்சையிருக்கும் என்பதாம். ☞ நசை-எ, இருக்கும்-தோன்றாப்பயனிலை. (௫)

புணர்கடல்சூழ்வையத்துப்புண்ணியமோவேறே *
யுணர்வதுடையாரிருப்ப-வுணர்விலா ... *
வட்டும்வழுதுணையும்போல்வாரும்வாழ்வரே ... *
பட்டுந்துகிலுமுடுத்து ... ... *

(இ-ள்.) உணர்வதுடையார்-அறிவுடையார்—இருப்ப- தரித்திரராயிருக்க—உணர்விலா-அறிவில்லாத—வட்டும்-பனைவட்டும், வழுதுணையும்-வழுதுணைக்காயும்—போல்வாரும்-ஒத்தவரும்— பட்டும்-பட்டா

டையும், துகிலும்-வஸ்திரத்தையும்—உடுத்தி-தரித்து—வாழ்வர்-வாழ்வார்கள்—(ஆதலால்) புணர்-பொருந்திய—கடல்-சமுத்திரம்—சூழ்-சூழ்ந்த—வையத்து-பூமியில்—புண்ணியம்-புண்ணியமானது—வேறு-வேறுபட்டிருக்கும்—(எ-று) ※ இ-ம், கற்றோர்வருந்தியிருப்பமற்றோர் செல்வத்தையநுபவிப்பர் அதுபுண்ணியவசமென்பதாம். ☞ புண்ணியம்-எ, வேறு-ப, ஏ-உ-ம்-ஓ-உ-ம்-அசைகள். (௬)

நல்லார்நயவரிருப்பநயமிலாக் ... ... ※
கல்லார்க்கொன்றாகியகாரணந்-தொல்லை ... ※
வினைப்பயனல்லதுவேனெடுங்கண்ணாய் ... ※
நினைப்பவருவதொன்றில் ... ... ※

(இ-ள்.) வேல்-வேலைப்போலும்—நெடும்-நீண்ட—கண்ணாய்-கண்களையுடையவளே—நல்லார்-நல்லவர்கள்—நயவர்- நீதியையுடையவர்கள்—இருப்ப - தரித்திரராயிருக்க—நயமிலா-நன்மையில்லாத—கல்லார்க்கு-விவேகமில்லார்க்கு—ஒன்றாகிய-ஒருபொருளுண்டாகிய, காரணம்-முகாந்தரம்— (என்னவெனில்) தொல்லை-பழைய—வினை-நல்வினையினது—பயனல்லது-பயனல்லாமல்— நினைப்ப ஒருவநினைக்க, வருவது-வரத்தக்கது, ஒன்று-ஒன்று, இல்-இல்லை, (எ-று) ※ இ-ம், பெண்ணே நல்லவர்களும் நீதியுள்ளவர்களுந் தரித்திரப்பட்டிருக்கக்கல்லாதவர்களுக்குச்செலவமுண்டானகாரணம் என்னவெனில் முன்செய்தநல்வினைப்பலனும்—என்பதாம். ☞ ஒன்று—எ, இல்-ப. (௭)

நாறுத்தகடேபோனன்மலர்மேற்பொற்பாவாய் ※
நீறாய்நிலத்துவிளியரோ-வேறாய ... ... ※
புன்மக்கள்பக்கம்புகுவாய்நீபொன்போலு ... ※
நன்மக்கள்பக்கந்துறந்து ... ...※

(இ-ள்.) நாறு-பரிமளியாத—தகடு- புறவிதழ்களையுடைய, நன்மலர்மேல்-நல்லபொற்றாமரைமலர்மேலிருக்கும், பொற்பாவாய்-இலக்குமியே—பொன்போலும்-பொன்னை நிகர்த்த—நன்மக்கள்- நல்லமனிதர்கள்—பக்கம்-இடத்தை—துறந்து-விட்டு—வேறாய- குணம்வேறான, புன்மக்கள்பக்கம்-புல்லியமனிதர்களிடத்து—புகுவாய்-பிரவேசிப்பாய்—(ஆகையால்) நீறாய்-பொடியாய்—நிலத்து-பூமியில்—நீ-நீ— விளி-கெடுவாயாக—(எ-று) ※ இ-ம், இலக்குமியே நன்மக்களைவிட்டு நீங்கிப் புன்மக்களிடத்திற்பிரவேசிக்கிறாய்-ஆகையால் நீ நீறாய் வெந்துபோகக்கடவாய்-என்பதாம். ☞ நீ-எ, விளி-ப, அரோ-போல-அசைகள்.

நயவார்கணல்குரவுநாணின்றுகொல்லோ ... ※
பயவார்கட்செல்வம்பரம்பப்-பயின்கொல் ... ※
வியவாய்காண்வேற்கண்ணாயிவ்விரண்டுமாங்கே ... ※
நயவாதுநிற்குநிலை ... ... ※

(இ-ள்.) வேற்கண்ணாய்- வேல்போன்றகண்களையுடையவளே—நய வார்கண்-நன்மையுள்ளவரிடத்திருக்கும்—நல்குரவு- வறுமைக்கு—நாண்-வெட்கம்—இன்றே-இல்லையோ—பயவார்கண்-கொடாதவரிடத்திருக்கும்—செல்வம் - செல்வமானது—பறம்ப - அதிகரிக்க—பயின்கொல்-(ஓட்டும்)பிசினோ—இவ்விரண்டும்- இந்தவிரண்டும்—ஆங்கே-அங்கங்கே—நயவாது-(தராதரம்)விரும்பாது—நிற்குநிலை- நிற்கின்றநிலையை—வியவாய்-அதிசயமாய்—காண்-நீயறி—(எ-று) ※இ-ம்-பெண்ணே நல்லோரிடத்துத்தரித்திரமும், உதவியில்லோரிடத்துச்செல்வமும், தராதரமறியாது நிற்கின்றநிலையை நீயறி-என்பதாம்- ☞ நீ-எ, காண்-ப, நிலை-செ-கொல்-அசை. (எ)

வலவைகளல்லாதார்காலாறுசென்று ... ... ※
கலவைகளுண்டுகழிப்பர்-வலவைகள் ... ... ※
காலாறுஞ்செல்லார்கருணையாற்றுய்ப்பவே ... ... ※
மேலாறுபாயவிருந்து ... ... ※

(இ-ள்.) வலவைகளல்லாதார் வல்லமைகளில்லாதவர்கள்—காலாறுசென்று-தூரதேயங்களிற்போய்—கலவைகள்-பலவகைப்போசனங்களை, உண்டு-சாப்பிட்டு—கழிப்பர்-காலம்போக்குவார்—வலவைகள் - வல்லமையுடையவர்கள்—காலாறுஞ்செல்லார்-தூரதேயங்களிற்போகார்—மேல்-உடலில்—ஆறுபாய-வியர்வுநீர்வர—இருந்து - உள்ளூரிலிருந்து—கருணையால்- பொறிக்கறியுடன்போசனத்தை— துய்ப்ப-உண்பார்கள்—(எ-று) ※இ-ம்- வல்லமையில்லார் தூரதேயங்களிற்சென்று இரந்துண்பர்வல்லமையுள்ளார்உள்ளூரிலிருந்துமுயற்சிசெய்துஉண்பர்-என்பதாம், ☞ அல்லாதார்-எ, கழிப்பர்-ப, வலவைகள்-எ, துய்ப்ப-ப, ஏ-அசை.

பொன்னிறச்செந்நெற்பொதியொடுபீள்வாட ... ※
மின்னொளிர்வானங்கடலுள்ளுங்-கான்றுகுக்கும் ※
வெண்மையுடையார்விழுச்செல்வமெய்தியக்கால் ※
வண்மையுமன்னதகைத்து ... ... ※

(இ-ள்.) பொன்னிறம்-பொன்போலுநிறமுடைய—செந்நெல்-செந்நெற்பயிர்—பொதியொடு-பொதிதலுடன்—பீள்வாட-கருவாட—மின்-மின்னல்—ஒளிர்-பிரகாசிக்கும்—வானம்-மேகமானது—கடலுள்ளும்-கடலிடத்தும்—கான்று-கக்கி—உகுக்கும்- நீரைச்சொரியும்—வெண்மையுடையார்-அறிவில்லார்—விழுச்செல்வம்- சிறந்தசெல்வம்—எய்தியக்கால்-பெற்றால்—வண்மையும்-(அவர்க)ளுபகாரமும்—அன்னதகைத்து-அத்தன்மையதாம்—(எ-று) ※இ-ம்- மேகமானது நெற்பயிர்வாடச்சமுத்திரத்திலே நீரைச்சொரியும் அதுபோலஅறிவில்லார்செல்வம்பெற்றால்நன்மார்க்கர்வருத்தப்படத் துன்மார்க்கருக்குக்கொடுப்பார்கள்-என்பதாம், ☞ வண்மை-எ, அன்னதகைத்து-ப, (க)

ஓதியுமோதா ருணர்விலா ரோதாது ... ... *
மோதியனையா ருணர்வுடையார் - தூய்தாக ... *
நல்கூர்ந்துஞ் செல்வ ரிரவாதார் செல்வரு ... *
நல்கூர்ந்தா ரீயா ரெனின் ... ... *

(இ-ள்.) உணர்விலார்-அறிவிலார்—ஓதியும்-பல நூலைப்படித்தும்—ஓதார்-படியாதாராவர்—உணர்வுடையார்- அறிவுடையார்—ஓதாதும்-படியாதிருந்தும்—ஓதியனையார்-படித்தவராவர்—இரவாதார்-யாசியாதவர், தூய்தாக-பரிசுத்தமாக—நல்கூர்ந்தும்-தரித்திரப்பட்டிருந்தும், செல்வர்-செல்வராவார்கள்—செல்வரும்- செல்வமுடையாரும்—ஈயாரெனின்-கொடாராகில்—நல்கூர்ந்தார்-தரித்திரராவர்—(எ-று) ❁ இ-ம், அறிவிலார் படித்தும் படியாதவரே அறிவுடையார் படியாதிருந்தும் படித்தவரே இரவாதார் வறுமையடைந்துஞ் செல்வர்களே, செல்வருங் கொடாராகில் வறியவர்களே-என்பதாம். ☞ உணர்விலார் உணர்வுடையார் இரவாதார் செல்வர்-எ, ஓதார்-ஓதியனையார் செல்வர் நல்கூர்ந்தார்-ப.

நன்றியில்செல்வம் - முற்றிற்று.

௨௮-ம்- அதிகாரம்.

ஈ யா மை.

அஃதாவது - கொடாமலிருக்குந் தன்மையாம்.

நட்டார்க்கு நள்ளாதவர்க்கு முளவரையா ... ... *
லட்டது பாத்துண்டலட்டுண்டல்-லட்ட ... ... *
தடைத்திருந்துண்டொழுகுமாவதின் மாக்கட் ... ... *
கடைக்குமாமாண்டைக்கதவு ... ... *

(இ-ள்.) அட்டுண்டல்-சமைத்துண்டு வாழ்தலாவது— நட்டார்க்கும்-சிநேகர்க்கும்—நள்ளாதவர்க்கும்-சிநேகியாதவர்க்கும்—உள-தமக்குள்ள, வரையால்-அளவால்—அட்டது-சமைத்ததை—பாத்துண்டல்- பகுத்துண்ணல்—அட்டது-சமைத்ததை—அடைத்திருந்து- கதவையடைத்திருந்து—உண்டு-புசித்து—ஒழுகும்- நடக்கும்—ஆவது- செல்வம், இல்-இல்லாத—மாக்கட்கு-மனிதர்க்கு—ஆண்டைக்கதவு-சுவர்க்கவாயிற்கதவுகள்—அடைக்கும்-அடைத்திருக்கும்—(எ-று) ❁ இ-ம், சிநேகருக்குஞ் சிநேகியாதவருக்கும் இருக்குமளவாலிட்டுண்ணுதலே உண்ணுதலாம் இட்டுண்ணாதவர்க்குச் சுவர்க்கவாயிற் கதவுகளடைக்கும்-என்பதாம். ☞ அட்டுண்டல்-எ, பாத்துண்டல்-ப, கதவு-எ, அடைக்கும்-ப, ஆம்-அசை.

(௧)

எத்துணையானுமியைந்தவளவினாற் ....*
சிற்றறஞ்செய்தார்தலைப்படுவர்-மற்றைப்.........*
பெருஞ்செல்வமெய்தியக்காற்பின்னறிதுமென்பா*
ரழிந்தார்பழிகடலத்துள்... *

(இ-ள்.) எத்துணையானும்-எவ்வளவாகிலும்—இயைந்த- பொருந்திய, அளவினால்-அளவால்—சிற்றறம்-சிறியதருமத்தை — செய்தார்-செய்தவர்கள்—தலைப்படுவர்-முதன்மையடைவர்— பெரும்-பெரிய, செல்வம்-ஐசுவரியத்தை—எய்தியக்கால்-அடைந்தால்—பின்- பின்பு, அறிதும்-(தருமஞ்)செய்வோம்—என்பார்-என்றுசொல்வோர் —பழி பழிக்கப்பட்டு—கடலத்துள்-கடல்சூழ்ந்தபூமியில்— அழிந்தார்-கெட்டார்.(எ-று) ❊ இ-ம்.எவ்வளவாகிலுஞ்சிறியதருமத்தைச்செய்தவர்சுவர்க்கத்தையடைவர் பெருஞ் செல்வங் கிடைத்தாற் தருமஞ்செய்வோமென்பவர்அழிந்தவர்களே-என்பதாம். ☞ செய்தார்-எ, தலைப்படுவர் ப, அறிதுமென்பார்-எ,அழிந்தார் ப,மற்று ஐ அசைகள். (௨)

துய்யக்கழியான்றுறவோர்க்கொன்றீகலான் ... ...*
வைத்துக்கழியுமடவோனை-வைத்த..............*
பொருளுமவனைநகுமேயுலகத்.............. ...*
தருளுமவனைநகும்...... ...*

(இ-ள்.) துய்த்து-உண்டு—கழியான் - நாளைக்கழியாதவனாகவும்—துறவோர்க்கு-துறவிகளுக்கு—ஒன்று-ஒருபொருளையும்— ஈகலான்-கொடாதவனாகியும்—வைத்து-பொருளைத்தேடிவைத்து—கழியும்-இறக்கும்,மடவோனை- அறிவில்லாதவனை—வைத்த-தேடிவைத்த—பொருளும்-திரவியமும்— அவனை-அவனை—நகும்-சிரிக்கும்— உலகத்து-உலகத்தில்—அருளும்-கிருபையும்—அவனை-அவனை—நகும்- சிரிக்கும்—(எ-று) ❊ இ-ம். தானுண்ணாது பொருளைத்தேடி வைத்தவனைப் பொருளுஞ்சிரிக்கும்,உலகத்தருளுஞ்சிரிக்கும்-என்பதாம்- ☞ பொருள் அருள்-எ,நகும்-ப,மடவோனை-செ-ஏ.அசை. (௩)

கொடுத்தலுந்துய்த்தலுந்தேற்றாவிடுக்குடை ... *
யுள்ளத்தான்பெற்றபெருஞ்செல்வ-மில்லத் ...*
துருவுடைக்கன்னியரைப்போலப்பருவத்தா......*
லேதிலான்றுய்க்கப்படும்... *

(இ-ள்.) கொடுத்தலும்-ஈதலும்— துய்த்தலும்-உண்டலும்— தேற்றா-தெளியாத—இடுக்குடை-உலுத்தகுணமுள்ள—உள்ளத்தான்-மனமுடையவன்—பெற்ற-அடைந்த—பெருஞ்செல்வம்- பெரியசெல்வமானது,இல்லத்து-மனையிடத்து—உருவுடை-வடிவுற்ற—கன்னியரை பெண்களைப்போல—பருவத்தால்-அநுபவிக்குங்காலத்து — ஏதிலான்-அயலானால்— துய்க்கப்படும்-அநுபவிக்கப்படும்—(எ-று) ❊ இ-ம்

வீட்டிற்பிறந்தபெண்ணை அயலான் அநுபவிப்பதுபோலக்கொடாதவன் பொருளைப்பிறன் அநுபவிப்பான்-என்பதாம். ☞ செல்வம்-எ, துய்க்கப்படும்-ப. (௪)

எறிநீர்ப்பெருங்கடலெய்தியிருந்து ... ... *
மறுநீர்ச்சிறுகிணற்றூறல்பார்த்-துண்பர் ... ... *
மறுமையறியாதாராக்கத்திற்சான்றோர் ... ... *
கழிநல்குரவேதலை ... ... *

(இ-ள்.) எறி-அலைகளையெறியும்—நீர்-நீரையுடைய—பெரும்-பெரிய, கடல்-சமுத்திரத்தை—எய்தியிருந்தும்-அடைந்திருந்தும்—அறுநீர்-நீரற்ற—சிறு-சிறிய—கிணறு-கிணற்றின்— ஊறல்-நீரூற்றை, பார்த்து-கண்டு—உண்பர்-உண்ணுவார்கள்—(அதுபோல) மறுமை-மறுபிறப்பிற்குரியதருமங்களை—அறியாதார்-செய்யாதவர்களின்—ஆக்கத்தின்-செல்வத்திலும்—சான்றோர்-பெரியோர்களுடைய—கழி-மிக்க—நல்குரவே-தரித்திரமே—தலை-முதன்மையுடையது—(எ-று) ❊ இ-ம். தருமஞ்செய்யாதார்செல்வத்தைப்பார்க்கிலும் பெரியோர்கள்தரித்திரமேலானது-என்பதாம். ☞ நல்குரவு எ, உடைத்து ப. (௫)

எனதெனதென்றிருக்குமேழைபொருளை ... ... *
யெனதெனதென்றிருப்பன்யானுந்-தனதாயிற் . *
றானுமதனைவழங்கான்பயன்றுவ்வான் ... ... *
யானுமதனையற்று ... ... *

(இ-ள்.) ஏழை அறிவில்லான்—பொருளை-திரவியத்தை—எனதெனதென்று-என்னுடையதென்னுடையதென்று—இருக்கும்-நினைந்திருப்பான்—யானும்-நானும்—எனதெனதென்று-என்னுடையதென்னுடையதென்று—இருப்பன்-நினைந்திருப்பேன்—தனதாயின்-அப்பொருள்தன்னுடையதாகில், தானும்-அவ்வேழைதானும்— அதனை அப்பொருளை—வழங்கான்-கொடான்—பயன்-அதனால்வரும்பலனை—துவ்வான்-அநுபவியான்—யானும்-நானும்—அதனை-அப்பொருளை—அற்று-அப்படிக்கொடேனனுபவியேன்—(எ-று) ❊ இ-ம், அறிவிலான்பொருளைத் தன்னுடையதென்றிருப்பான் யானும்என்னுடையதென்றிருப்பேன்தன்னுடையதாகிற்கொடுக்கானநுபவிக்கான்என்னுடையதாகில்யானுங்கொடேனநுபவியேன்-என்பதாம். ☞ யான்-எ, அடிப., அதனை-செ. (௬)

வழங்காதசெல்வரினல்கூர்ந்தாருய்ந்தா ... ... *
ரிழந்தாரெனப்படுதலுய்ந்தா-ருழந்ததனைக் ... *
காப்புய்ந்தார்கலுழ்தலுய்ந்தார்தங்கைந்நோவ ... *
யாப்புய்ந்தாருய்ந்தபல ... ... *

(இ-ள்.) வழங்காத-கொடாத—செல்வரின்-செல்வரிலும்— நல்கூர்ந்தார்-தரித்திரர், உய்ந்தார்-பிழைத்தார், இழந்தாரெனப்படுதல்-பொ

ருளையிழந்தாரென்று சொல்லப்படுதலினும்—உய்ந்தார் - பிழைத்தார், உழந்து-வருந்தி—அதனை-அப்பொருளை—காப்ப- காத்தலினும், உய்ந்தார்-பிழைத்தார்—கல்லுதலும்- தோண்டிப்புதைத்தலினும்— உய்ந்தார்-பிழைத்தார், தங்கை-தங்கைகள்—நோவ-வருந்த, யாப்பு - கட்டுதலினும், உய்ந்தார்-பிழைத்தார், உய்ந்தபல-பல்முறையாலும் பிழைத்தார் (எ-று) ❃ இ-ம். கொடாத செல்வர்களைப்பார்க்கிலுந்தரித்திரர்கள்பலமுறையாலும்பிழைத்தார்கள்-எ-ம், ☞ நல்கூர்த்தார்-எ, உய்ந்தார்-ப.

தனதாகத்தான்கொடான்றாயத்தவருந் ... ... ✻
தமதாயபோழ்தேகொடாஅர்-தனதாக ... ... ✻
முன்னேகொடுப்பினவர்கடியார்தான்கடியான் ... ✻
பின்னையவர்கொடுக்கும்போழ்து ... ... ✻

(இ-ள்.) தனதாக-தன்னுடையதாக—தான்- தான், கொடான்-(பொருளைக்)கொடான்—தாயத்தவரும்-தாயாதிகளும்—தமதாயபோழ்தே-(பொருள்)தங்களுடையதான காலத்தே—கொடாஅர்-கொடுக்கார்—தனதாக-தன்னுடையதாக—முன்னே- தானிறக்குமுன்—கொடுப்பின்-கொடுத்தால்—அவர்-அத்ததாயாதிகள்—கடியார்-கோபியார், பின்னை தானிறந்தபின்—அவர்-அத்தாயாதிகள்—கொடுக்கும்போழ்து-கொடுக்குங்காலத்தில்—தான்கடியான் -தான்கோபியான்—(எ-று) ❃ இ-ம்-பொருள்தன்னுடையதாகத்தான்கொடான்-அதுஉறவினர்க்கான காலத்தவர்கொடார்-இறக்குமுன்னேதான்கொடுத்தாலுறவினர்கோபியார் இறந்தபின்னுறவினர் கொடுத்தாற்றான்கோபியான் என்பதாம். ☞ தான்-எ, கொடான்-ப, தாயத்தவர் எ, கொடார்-ப, அவர்-எ, கடியார்-ப, தான் எ, கடியான்-ப. (அ)

இரவலர்கன்றாகவீவாராவாக ... ... ✻
விரகிற்சுரப்பதாம்வண்மை-விரகின்றி ... ... ✻
வல்லவரூன்றவடியாபோல்வாய்வைத்துக் ... .. ✻
கொல்லச்சுரப்பதாங்கீழ் ... ... ✻

(இ-ள்.) இரவலர்-யாசகரே—கன்றாக கன்றாகவும்—ஈவார்-கொடுப்பவரே—ஆவாக-பசுவாகவும்—விரகில- சீக்கிரத்தில், சுரப்பது-கொடுப்பது—வண்மை-கொடையாகும்—விரகின்றி-மெதுவாக—வல்லவர் வலிமையையுடையோர்—ஊன்ற சிதைய—அடி-அடிக்கும், ஆபோல் பசுப்போல—வாய் (அவயவங்க)ளிடத்து—வைத்து- கருவிகளை வைத்து—கொல்ல வருத்த—சுரப்பதாம்-கொடுப்பான்—கீழ்-கீழ்மகன்—(எ-று) ❃ இ-ம் - யாசகர்கன்றாகவுங்கொடுப்பவர் பசுவாகவும் விரைவிற்சொரிப்பதே கொடைகீழ்மகனைவருத்தினாற்கொடுப்பான்-என்பதாம், ☞ வண்மை-எ, சுரப்பது-ப, கீழ்-எ, சுரப்பது-ப, ஆம்-அசை. (௯)

ஈட்டலுந்துன்பமற்றீட்டியவொண்பொருளை ... ✻
காத்தலுமாங்கேகடுந்துன்பங்- காத்த ... ... ✻

குறைபடிற் றுன்பங்கெடிற் றுன்பந்துன்பக் ..... *
குறைபதிமற்றைப்பொருள் ... .*

(இ-ள்.) ஈட்டலும் (பொருளைத்) தேடலும் — துன்பம்-துயரம், ஈட்டிய-தேடிய — ஒண்பொருளை-ஒள்ளியபொருளை, காத்தலும்-காப்பாற்றுதலும் — கடும்-மிகவும் — துன்பம்-துயரம் — காத்த- காக்கப்பட்ட பொருள் — குறைபடில்-குறைபட்டால் — துன்பம்- துயரம் — கெடில்-கெட்டால் — துன்பம்- துயரம் — மற்றைப்பொருள் மேற்சொல்பொருள் — துன்பக்கு துயரத்திற்கெல்லாம் — உறைபதி - இருப்பிடமாம் — (எ-று) ※ இ-ம். பொருளைத்தேடலும்வருத்தம், காத்தாலும் வருத்தம், அது குறைபட்டால்வருத்தம், கெட்டால்வருத்தம்-என்பதாம், ☞ பொருள் எ, உறைபதி-ப, மற்று-ஆங்கு எ, அசைகள். (௰)

ஈயாமை- முற்றிற்று.

உ௯-ம்-அதிகாரம்.

இன்மை.

அஃதாவது- இல்லாததன்மையைச் சொல்லுதலாம்.

அத்திட்டகூறையரைச்சுற்றிவாழினும் ....*
பத்தெட்டுடைமைபலருள்ளும்-பாடெய்தும் ... .. *
ஒத்தகுடிப்பிறந்தக்கண்ணுமொன்றில்லதார் - *
செத்தபிணத்திற்கடை ....*

(இ-ள்.) அத்து-சிவப்பு — இட்ட-சாயியிட்ட — கூறை-ஆடையை, அரை-இடையில் — சுற்றி-உடுத்தி — வாழினும்-வாழ்ந்தாலும் — பத்தெட்டுடைமை- பத்துப்பொன்னாகிலும் எட்டுப்பொன்னாகிலுமுடையவனென்று — பலருள்ளும் பலரிடத்தும் — பாடு- பெருமை — எய்தும்- அடைவான் — ஒத்த-நலமொத்த — குடி-குலத்தில் — பிறந்தக்கண்ணும் பிறந்தாலும் — ஒன்றில்லாதார்- ஒருபொருளில்லாதவர் — செத்தபிணத்தின்-செத்தபிணத்தைப்பார்க்கிலும் — கடை-கடையாவார் (எ-று) ※ இ-ம்- ஒருவன் நல்லாடையுடுத்திவாழ்ந்தால்பொருளுடையவனென்று மதிக்கப்படுவான்-உயர்குலத்திற்பிறந்தாலும் பணமில்லாவிடில் பிணமாவார்-என்பதாம். ☞ ஒருவன்-தோன்றா-எ, எய்தும்-ப, இலாதார்-எ, கடையாவர்-ப. (௧)

நீரினுநுண்ணிதுநெய்யென்பர்நெய்யினும் ..... *
யாருமறிவர்புகைநுட்பந்-தேரின் ... ... *
நிரப்பிடும்பையாளன்புகுமே*புகையும் ...... *
புகற்கரியபூழைநுழைந்து .... *

(இ-ள்.) நீரினும்-நீரைப்பார்க்கினும்—நெய் நெய்யை— நுண்ணி து-நுட்பமுடையது—என்பர்-என்றுசொல்வர்—நெய்யினும்-நெய் யைப்பார்க்கினும்—புகை- புகையானது— நுட்பம்- நுட்பமுடைய தென்று—யாரும்-யாவரும்—அறிவர்-அறிவார்கள்—தேரின்-ஆராயி ல்—புகையும்-புகைதானும்,புகற்கு-புகுதற்கு,அரிய-அரிதான,புழை- வாயில்களை,நுழைந்து- நுழைந்து—இரப்பிடும்மையாளன்-தரித்திர முடையவன்—புகும்-புகுவான்—(எ-று) இ-ம்-நீரினுநெய் நுட்ப ம்-நெய்யினும்புகைநுட்பம்- புகைநுழையாவாயில்களினுந் தரித்திர னுழைவான்-என்பதாம். ☞ இடும்மையாளன்-எ, புகும்-ப,வ- அசை, ❋(அகத்தியம்) [புகையுமாவியு மேலேறுக்குப்பொருள்.] (௨)

கல்லோங்குயர்வரைமேற்காந்தண்மலராக்காற் ... ❋
செல்லாவாஞ்செம்பொறிவண்டினங்-கொல்லைக் ❋
கலாஅற்கிளிகடியுங்கானகநாட ... ... ❋
இலாஅஅர்க்கில்லைத்தமர் ... ... ❋

(இ-ள்.) கொல்லை- கொல்லைகளில்—கிளி-கிளிகளை—கலாஅல்- கல் லால்—கடியும்-ஓட்டும்—கானகம்- காட்டையும்—நாட நாட்டையுமு டையபாண்டியனே—கல்-கற்கள்— ஓங்கு மிகுந்த—உயர் உயர்ந்த, வரைமேல்-மலைமேல்—காந்தள்-காந்தட்பூ— மலராக்கால்-மலராவிடி ல்—செம்பொறி-சிவந்தபுள்ளிகளையுடைய—வண்டினம்-வண்டுக்கூட் டங்கள்— செல்லாவாம்- போகாவாம்—(அதுபோல) இலாஅஅர்க்கு- பொருளில்லாதவர்க்கு—தமர்-உறவினர்—இல்லை-இல்லை—(எ-று) ❋ இ-ப்.- பாண்டியனே காந்தள்மலராவிடில் வண்டுகள்சேராவாம் - அது போலப் பொருளில்லாதவர்க்கு உறவினரில்லையென்பதாம். ☞ தமர்-எ, இல்லை-ப. (௩)

உண்டாயபோழ்திலுடைந்தூழிக்காகம்போற் ... ❋
றொண்டாயிரவர்தொகுபவே-வண்டாய்த் ... ❋
திரிதருங்காலத்துத்தீதிலிரோவென்பா ... ...❋
ரொருவருமிவ்வுலகத்தில் ... ... ❋

(இ-ள்.) உண்டாய- செல்வமுண்டான—போழ்தின்-காலத்து— உ டைந்தூழி-தேகமழியில்—காகம்போல்-காக்கைபோல— தொண்டு- அடிமையாக—ஆயிரவர்- ஆயிரம்பேர்—தொகுப-கூடுவார்கள்— வ ண்டாய்-வண்டுபோல—திரிதருங்காலத்து-திரியும்போது, தீதிலிரோ- (வறுமைக்)குற்றமற்றீரோ—என்பார்-என்றுகேட்பார்—ஒருவரும்-ஒ ருவரும்—இவ்வுலகத்து- இவ்வுலகில்—இல்- இல்லை—(எ-று) ❋ இ-ம்- பொருளுண்டானகாலத்திற் காக்கைக்கூட்டம்போலனேகர்வந்துகூடு வார்கள்-பொருளில்லாக்காலத்தொருவரும்வரமாட்டார்கள்-என்பதாம் ☞ ஆயிரவர்-எ, தொகுப-ப,ஒருவர்-எ-இல்-ப. (௪)

(எ-று) ❊ இ-ம் பெண்ணேவறுமையுடையப்பட்டவர்குணங்களையும், புத்தியையு மற்றுள்ளவற்றையுமிழப்பார்கள்—என்பதாம். ☞ அடையப்பட்டார்-எ, இழப்பர் ப. (எ)

இட்டாற்றுப்பட்டொன்றிரந்தவர்க்காற்றாது ... ❊
முட்டாற்றுப்பட்டுமுயன்றுள்ளூர்-வாழ்தலி ... ❊
னெட்டாற்றுச்சென்றுநிரைமனையிற்கைந்நீட்டுங் ❊
கெட்டாற்றுவாழ்க்கையேநன்று ... ... ❊

(இ-ள்.) இட்டாற்றுப்பட்டு முன்கொடுத்துவழிபட்டு— ஒன்றிரந்தவர்க்கு பின்னொருபொருளிழந்தவற்கு—ஆற்றாது உதவிசெய்யாது—முட்டாற்றுப்பட்டு வறுமைவழியிற்பொருந்தி—முயன்று- முயற்சிசெய்து—உள்ளூர்வாழ்தலின் உள்ளூரில்வாழுகிறதினும்— நெட்டாற்றுச்சென்று தூரதேசங்களிற்போய்—நிரைமனையில் வரிசையாகியவீடுகளில்—கைந்நீட்டும் பிச்சைக்குக்கையைநீட்டும்— கெட்டாற்றும்வாழ்க்கையே கெடுவழியானவாழ்க்கையே—நன்று நல்லது —(எ-று) ❊ இ-ம். முன்கொடுத்துவழிபட்டுப் பின்கொடுப்பதற்கில்லாமலுள்ளூரில்வாழ்வதிலும்பிறவூரிற்போய்ப்பிச்சையெடுப்பது நலம்-என்பதாம். ☞ வாழ்க்கை எ, நன்று ப. (அ)

கடகஞ்செறிந்ததங்கைகளால்வாங்கி...... ...... ❊
யடகுபறித்துக்கொண் டட்டுக்- குடைகலனா .... ❊
வுப்பிலிவெந்தைதின் றுள்ளற்றுவாழ்பவே .. ...❊
துப்புரவுசென்றுலந்தக்கால்... ....❊

(இ-ள்.) துப்புரவு செல்வமெல்லாம்—சென்று (பலவழியிற்)போய், உலந்தக்கால் கெட்டால்—கடகஞ்செறிந்த பொற்கடகநெருங்கிய —தங்கைகளால் தங்கள்கைகளால்—வாங்கி வணங்கி, அடகு இலைகளை —பறித்துக்கொண்டு பறித்துக்கொண்டு—அட்டு சமைத்து—குடைகலனா நுங்கெடுக்கப்பட்ட பனங்காய்பாத்திரமாக — உப்பிலி உப்பில்லாத—வெந்தை வெந்ததை—தின்று புசித்து—உள் மனம்—அற்று உடைபட்டு—வாழ்ப வாழ்வார்கள்—(எ-று) ❊ இ-ம். செல்வமெல்லாங்கெட்டால் இலைகளைப்பறித்துப் பனங்காயைப்பாத்திரமாகவைத்துச்சமைத்துண்பர் என்பதாம். ☞ இல்லார்-தோன்றாவெழுவாய் வாழ்ப ப, ஏ அசை [வெந்தை நடுக்குறை.] (௯)

ஆர்த்தபொறியவணிகிளர்வண்டினம் ....❊
பூத்தொழிகொம்பின்மேற்செல்லா- நீர்த்தருவி ❊
தாழாவுயர்சிறப்பிற்றண்குன்றநன்னாட... .. ...❊
வாழாதார்க்கில்லைத்தமர்...... .... ❊

(இ-ள்.) நீர்த்து நீர்மையுடையதாகிய—அருவி ஆறானது—தாழா தாழும்— உயர்சிறப்பின் உயர்ந்தசிறப்பைப்பொருந்திய— தண்-

(எ-று) ※ இ-ம் பெண்ணேவறுமையுடையப்பட்டவர்குணங்களையும், பத்தியையுமற்றுள்ளவற்றையுமிழப்பார்கள்—என்பதாம். ☞ அடையப்பட்டார்-எ, இழப்பர் ப. (எ)

இட்டாற்றுப்பட்டொன்றிரந்தவர்க்காற்றாது ... ※
முட்டாற்றுப்பட்டுமுயன்றுள்ளூர்-வாழ்தலின் ... ※
நெட்டாற்றுச்சென்றுநிரைமனையிற்கைந்நீட்டும் ※
கெட்டாற்றுவாழ்க்கையேநன்று ... ... ※

(இ-ள்.) இட்டாற்றுப்பட்டு முன்கொடுத்துவழிபட்டு— ஒன்றிரந்தவர்க்கு பின்னொருபொருளிரந்தவர்க்கு—ஆற்றாது உதவிசெய்யாது—முட்டாற்றுப்பட்டு வறுமைவழியிற்பொருந்தி—முயன்று- முயற்சிசெய்து—உள்ளூர்வாழ்தலின் உள்ளூரில்வாழுகிறதினும்— நெட்டாற்றுச்சென்று தூரதேசங்களிற்போய்—நிரைமனையில் வரிசையாகியவீதிகளில்—கைந்நீட்டும் பிச்சைக்குக்கையைநீட்டும்— கெட்டாற்றும்வாழ்க்கையே கெடுவழியானவாழ்க்கையே—நன்று நல்லது —(எ-று) ※ இ-ம். முன்கொடுத்துவழிபட்டுப் பின்கொடுப்பதற்கில்லாமலுள்ளூரில்வாழ்வதினும்பிறவூரிற்போய்ப்பிச்சையெடுப்பது நலம்-என்பதாம். ☞ வாழ்க்கை எ, நன்று ப. (அ)

கடகஞ்செறிந்ததங்கைகளால்வாங்கி...... ...... ※
யடகுப்பறித்துக்கொண்டட்டுக்- குறைகொண் ... ※
டுப்பிலிவெந்தைதின்றற்றுவாழ்பவே .. ...※
துப்புரவுசென்றுலந்தக்கால்... ....※

(இ-ள்.) துப்புரவு செல்வமெல்லாம்—சென்று (பலவழியிற்)போய், உலந்தக்கால் கெட்டால்—கடகஞ்செறிந்த பொற்கடகம்நெருங்கிய—தங்கைகளால் தங்கள்கைகளால்—வாங்கி வணங்கி, அடகு இலைகளை—பறித்துக்கொண்டு பறித்துக்கொண்டு—அட்டு சமைத்து—குறைகொண்டு நுங்கெடுக்கப்பட்ட பனங்காயேபாத்திரமாக—உப்பிலி உப்பில்லாத—வெந்தை வெந்ததை—தின்று புசித்து—உள் மனம்—அற்று உடைபட்டு—வாழ்ப வாழ்வார்கள்—(எ-று) ※ இ-ம். செல்வமெல்லாங்கெட்டால் இலைகளைப்பறித்துப் பனங்காயைப்பாத்திரமாகவைத்துச்சமைத்துண்பர் என்பதாம். ☞ இல்லார்-தோன்றாஎழுவாய் வாழ்ப ப, ஏ அசை [வெந்தை நடுக்குறை.] (கூ)

ஆர்த்தபொறியவணிகிளர்வண்டினம் ....※
பூத்தொழிகொம்பின்மேற்செல்லாவா- நீர்த்தருவி ※
தாழாவுயர்சிறப்பிற்றண்குன்றநன்னாட... .. ...※
வாழாதார்க்கில்லைத்தமர்...... .... ※

(இ-ள்.) நீர்த்து நீரையுடையதாகிய—அருவி ஆறானது—தாழா தாழும்— உயர்சிறப்பின் உயர்ந்தசிறப்பைப்பொருந்திய— தண்-

ளிர்ந்த—குன்றம் மலையையும்—நல் நல்ல, நாட நாட்டையமுடை யபாண்டியனே—ஆர்த்த நிரம்பிய—பொறிய புள்ளிகளையுடைய—அணி அழகு—கிளர் பிரகாசிக்கும்—வண்டினம் வண்டுக்கூட்டங்கள்—பூத்து மலர்ந்து—ஒழி நீங்கிய—கொம்பின்மேல் கொப்புகளின் மேல்—செல்லாவாம்போகாவாம்—(அதுபோல)வாழாதார்க்கு-பொருள்பெற்றுவாழாதவர்க்கு—தமர் இனத்தார்—இல்லை இல்லை. (எ-று) ※ இ-ம். பாண்டியனே மலர்ந்தொழிந்த மரங்களில்வண்டுகள்செல்லாவாம் அதுபோல வறியவரிடத்திலுறவினர்செல்லார்கள் என்பதாம். ☞ தமர் எ, இல்லை ப. (௰)

இன்மை- முற்றிற்று.

௩௰-ம்-அதிகாரம்.

மானம்.

அஃதாவது - மானங்கெடாதுவாழ்தலைச் சொல்லுதலாம்.

திருமதுகைபாகத்திறனிலார்செய்யும் .... ※
பெருமிதங்கண்டக்கடைத்து-மெரிமண்டிக் .... ※
கானந்தலைப்பட்டதீப்போர்கனலுமே ... . ※
மானமுடையார் ※ மனம் ... ... ※

(இ-ள்.) திரு செல்வம்—மதுகையாக உறுதியாக—திறம் திண்மை—இலார் இல்லாதவர்—செய்யும் செய்கின்ற—பெருமிதம் மேன்மையை, கண்டக்கடைத்தும் கண்டவிடத்தும்—எரி தீ—மண்டி நெருங்கி—கானம் காட்டில்—தலைப்பட்ட முதன்மையாகவுண்டான—தீப்போல் தீயைப்போல—மானம் மானத்தை—உடையார் உடையவரது—மனம்-மனது—கனலும் கொதித்துநிற்கும் (எ-று) ※ இ-ம். மானமுடையவர் மனமானது செல்வமிகுதியால் அறிவிலார் செய்யுமேன்மையைக்காணிற்றீப்போலெரியும் என்பதாம். ☞ மனம் எ, கனலும்-ப, ஏ-அசை ※ (அகத்தியம்) ஐந்தறிவின்மேல்-லதிகமானமே.

என்பாயுகினுமியல்பிலார்பின்சென்று .... ※
தம்பாடுரைப்பரோதம்முடையார்-தம்பா .... ※
லுரையாமைமுன்னுணருமொண்மையுடையார்க் ※
குரையாரோதாமுற்றநோய் .... ※

(இ-ள்.) என்பாய் எலும்பாகி—உகினும் உடல்கெடினும்—இயல்பிலார் நற்குணமில்லார் (பின்சென்று பின்போய்—தம்பாடு தமது

றையை— உரைப்பரோ சொல்லுவாரோ—தம்முடையார் - மானமு டையார், தம்பாடு தமதுகுறையை, உரையாமை முன்சொல்லுமுன், உணரும் அறியும்—ஒண்மையுடையார்க்கு அறிவுடையார்க்கு,சாமுற் று-தாமடைந்த, நோய் வறுமைநோயை— உரையாரோ சொல்லாரோ (எ-று)☼இ-ம்- மானமுடையவர் நற்குணமில்லார்பின்சென்று தமது வருத்தத்தைச்சொல்லார் தமதுவருத்தத்தைச்சொல்லுமுன்னறியும் அறிவுடையார்க்குச்சொல்லுவார்-என்பதாம். ☞தம்முடையார்-எ,உரை யாரோ-ப,நோயை-செ. (௨)

யாமாயினெம்மில்லங்காட்டுதுந்தாமாயிற் ... ...※
காணவேகற்பழியு மென்பார்போ-ணாணிப்... ... ※
புறங்கடைவைத்தீவர்சோறுமதனான்.. .... ※
மறந் ※ திடுகசெல்வர்தொடர்பு... ....※

(இ-ள்.) யாமாயின் நாமானால்—எம்மில்லம் எமதுமனையை—காட் டுதும் காட்டுவோம்—தாமாயின் தாமானால்—காணவே பிறர்காணவே, கற்பு கற்பானது—அழியும் கெடும், என்பார்போல் என்றுசொல்வா ர்போல—நாணி வெட்கி, புறங்கடைவைத்து தலைவாயிலில்வைத்து— சோறு சோற்றை—ஈவர் இடுவர், அதனால் அதனாலே—செல்வர் செ ல்வருடைய, தொடர்பு சிநேகத்தை—மறந்திடுக மறந்துவிடக்கடவா ய்,(எ-று)☼இ-ம்,செல்வர்கள்வறியவர்க்குத்தலைவாயிலில்வைத்துச்சோ றிடுவர் அவர்சிநேகத்தைவிட்டுவிடக்கடவாய் என்பதாம்.☞நீவிர்தோ ன்றுளழுவராய் மறந்திடுக-ப,தொடர்பு-செ. ※ (அகத்தியப்) கடவுது கயவுட் டிரவ்விறுவியங்கோள். (௩)

இம்மையுநன்றாமியனெறியுங்கைவிடா..............※
தும்மையுநல்லபயத்தலாற்-செம்மையி... ... ...※
னானங்கமழுங்கதுப்பினாய்நன்றேகாண் .. ..※
மானமுடையார்மதிப்பு - .... ※

(இ-ள்.) செம்மையின் செம்மையுடைய—நானம் புழுகு—கமழு ம் மணக்கும்—கதுப்பினாய் கூந்தலையுடையவளே—மானமுடையார்- மானமுடையோர்—மதிப்பு மதிக்குந்தன்மையானது— இம்மையும் இப்பிறப்பிலும்—நன்றாம் நன்மையுண்டாம்—இயல் இயல்பாகிய— நெறியும் ஒழுக்கவழியும்—கைவிடாது நீங்காதுநிற்கும்— உம்மையு ம் மறுபிறப்பிலும்—நல்ல நன்மைகளை—பயத்தலால் கொடுத்தலால், நன்று நன்மை (எ-று)☼இ-ம், பெண்ணே மானமுள்ளவர் மதிப்பா னது இருபிறப்பிலு நன்மையைத்தரும்-என்பதாம்.☞மதிப்பு-எ,நன் று-ப,ஏ-அசை-காண்-முன்னிலை. (௪)

பாவமும்மேனைப்பழியும்படவருவ... ... .※
சாயினுஞ்சான்றவர்செய்கலார்-சாத... ....※

லொருநாளொருபொழுதைத்துன்பமவைபோ... *
லருநவையாற்றுதலின்று..................... *

(இ-ள்.) பாவமும் பாவமும்—எனை மற்ற—பழியும் பழியும்—படு உண்டாக—வருவ வருவனவற்றை—சாயினும் தாமிறப்பினும், சான்றவர் பெரியோர்—செய்கலார் செய்யார்—சாதல் இறத்தல்—ஒருநாள் ஒருநாளில்—ஒருபொழுது ஒருபொழுது—துன்பம் துன்பமாம், அவைபோல் அவற்றைப்போல்—அரும் அரிய—நவை துன்பத்தை, ஆற்றுதல் செய்தல்—இன்று வேறொன்றில்லை—(எ-று) ❋ இ-ம். பெரியோர்பாவமும் பழியுஞ்செய்யார் மரணமொருநாளொருபொழுது துன்பமாம், பாவமும் பழியும் பலநாளுந் துன்பமாம், என்பதாம். ☞ சான்றவர்-எ, செய்கலார்-ப, வருவ-செ, ஐ-சாரியை. (௫)

மல்லன்மாஞாலத்துவாழ்பவருளெல்லாஞ் .... *
செல்வரொன்றுங்கொடாதவர்-நல்கூர்ந்தார் .... *
நல்கூர்ந்தக்கண்ணும்பெருமுத்தரையரே......... *
செல்வரைச்சென்றிரவாதார்...... .... *

(இ-ள்.) மல்லல் வளப்பமுடைய—மாஞாலத்து பெரியஉலகத்து, வாழ்பவருளெல்லாம் வாழ்பவரெல்லாருள்ளும், செல்வரெனினும் செல்வமுள்ளவராயினும்—கொடாதவர் கொடாதவர்—நல்கூர்ந்தார் தரித்திரமுடையவரே—நல்கூர்ந்தக்கண்ணும் தரித்திரமடைந்தும், செல்வரை செல்வமுடையாரிடத்து—சென்று போய், இரவாதார் யாசியாதவர்—பெருமுத்தரையரே பரிசுத்தமுடையவரே—(எ-று) ❋ இ-ம், செல்வர்களாகினுங்கொடாதவர்கள் தரித்திரர்களே தரித்திரப்பட்டுமிரவாதவர்கள் செல்வமுடையவர்களே-என்பதாம். ☞ கொடாதவர்-எ, நல்கூர்ந்தார்-ப, இரவாதார்-எ, பெருமுத்தரையர்-ப. (௬)

கடையெலாங்காய்பசியஞ்சுமற்றேனை............ *
யிடையெலாமின்னுமையஞ்சும்-புடைபரந்த ... *
விற்புருவவேனெடுங்கண்ணாய்தலையெலாஞ் .... *
சொற்பழியஞ்சிவிடும் .... *

(இ-ள்.) புடை பக்கங்களில்—பரந்த பரவியிருக்கின்ற—வில் வில்லொத்த—புருவம் புருவங்களையும்—வேல் வேலொத்த, நெடும்-நீண்ட—கண்ணாய் கண்களையுமுடையவளே—எலாம் முற்றும்—கடை கடையானவன்—காய் வருத்தும்—பசி பசிக்கு—அஞ்சும் பயப்படுவான்—ஏனை ஒழிந்த—எலாம் முற்றும்—இடை இடையானவன்—இன்னுமை தின்பத்திற்கு—அஞ்சும் பயப்படுவான்—எலாம் முற்றும், தலை தலையானவன்—சொற்பழி சொற்குற்றத்திற்கு, அஞ்சிவிடும் பயப்படுவான்(எ-று) ❋ இ-ம். கண்ணே கடையானவன் பசிக்கஞ்சுவான் இடையானவன் துன்பத்திற்கஞ்சுவான் தலையானவன் சொற்குற்றத்திற்

அஞ்சுவான் என்பதாம், ☞ கடை-இடை-தலை-ஏ, அஞ்சும்-ப, மற்று-இடைச்சொல். ※ (நன்னூல்) "பல்லோர்படர்க்கைமுன்னிலைதன்மையிற்-செல்லாதாகுஞ்செய்யுமென்முற்றே", இவ்விலக்கணமறியாது-செய்யு-மென்னும்-வாய்பாட்டு-வினைமுற்றைப்பல்லோர்- படர்க்கைக்குணையிட்டவர்விதியறியார்போலும். (எ)

நல்லர்பெரிதளியர்நல்கூர்ந்தாரென்றெள்ளிச் ... ※
செல்வர்சிறுநோக்குநோக்குங்காற்-கொல்ல ... ...※
னுலைமூதுந்தீயேபோலுள்கனலுங்※ கொல்லோ ... ※
தலையாயசான்றோர்மனம் ... ... ※

(இ-ள்) நல்லர்-இவர் நல்லவர்—பெரிது-மிகவும்—அளியர்-கொடுத்தவர்—நல்கூர்ந்தாரென்று - தரித்திரமடைந்தாரென்று—எள்ளி- இகழ்ந்து, செல்வர்- செல்வமுடையவர்—சிறுநோக்கு- குறும்பார்வை—நோக்குங்கால்- பார்க்கும்போது—தலையாய-தலைமையாகிய, சான்றோர்-பெரியோர்—மனம் - மனமானது—கொல்லன் கருமானுடைய—உலை உலைக்களத்து—ஊதும் ஊதுகின்ற— தீயேபோல் தீயைப்போல—உள் உள்ளுக்குள்ளே—கனலும் எரியும்—(எ-று) ※ இ-ம்-செல்வர்கள் நல்லவர்களை இகழ்ந்து வறுமையடைந்தாரெனக்குறும்பார்வை பார்க்கும்போது அவர்கள்மனமுலைக்களத்துத்தீயைப்போலெரியுமென்பதாம்-☞ மன்னும் ஏ, கனலும் ப, கொல் ஓ அசைகள், ※ (அகத்தியம்) [கொல்கருமன்றொழிலசைநிலையையம்.] (அ)

நச்சியார்க்கீயாமைநாணன்றுநாணூஉ ... ... ※
மச்சத்தாநாணுதலுணன்று-மெச்சத்தின் ... ... ※
மெல்லியராகித்தம்மேலாயார்செய்தது ... ... ※
சொல்லாதிருப்பதுநாண் ... ... ※

(இ-ள்.) நச்சியார்க்கு விரும்பியவர்க்கு—ஈயாமை கொடாமை—நாணன்று நாணமல்ல— நாணூஉம் நாணுநாணும்—அச்சத்தால் பயத்தால்—நாணுதல் நாணுதல்— நாணன்று நாணமல்ல— எச்சத்தின் குறைவினையுடைய— மெல்லியராகி எளியவராகி— தம்மேல் தம்மிடத்து—ஆயார் விரோதமானவர்—செய்தது செய்ததை—சொல்லாதிருப்பது சொல்லாமலிருப்பது— நாண் நாணமுடைமை— (எ-று.) ※ இ-ம் சத்துருக்கள் செய்தகுறையைச்சொல்லாதிருப்பதே மனிதர்க்கு நாணம் என்பதாம், ☞ நாண் ஏ, சொல்லாதிருப்பது ப, செய்தது செய்யும் அசை. (௯)

கட்மாதொலைச்சியகானுறைவேங்கை ... ... ※
யிடம்வீழ்ந்ததுண்ணுதிறக்கு-மிடமுடைய் ... ... ※
வானகங்கையுறினுஞ்வேண்டார்விழுமியோர் ... ...※
மானமிழுங்கவரின் ... ... ※

(இ-ள்.) கடமா கடமாவை—தொலைச்சிய கொன்ற—கான் காட்டில், உறை வாசஞ்செய்யும்—வேங்கை புலியானது—இடம் இடதுபக்கத்தில, வீழ்ந்தது வீழ்ந்ததை, உண்ணாது தின்னாது—இறக்கும் போய்விடும் (அதுபோல) விழுமியோர் பெரியோர்—இடமுடைய இடத்தையுடைய, வானகம் தெய்வலோகம்—கையுறினும் கைவசப்படினும், —மானமழுங்கவரின் மானங்கெடவந்தால்—வேண்டார் விரும்பார் (எ-று) ❀ இ-ம் புலியானது இடதுபக்கத்தில்வீழ்ந்த கடமாவைத்தின்னாதுபோய்விடும், அதுபோலப்பெரியோர்கள்வானுலகம்கைவசமாயினும்மானங்கெடவந்தால்விரும்பார் என்பதாம், ☞ விழுமியோர் ஏ, வேண்டார் ப. மானம்-முற்றிற்று. (௰)

௱௧-ம்-அதிகாரம்.

இரவச்சம்.

அஃதாவது யாசித்தலால்வரும் அச்சத்தைச்சொல்லுதலாம்.

நம்மாலேயாவரிந்நல்கூர்ந்தாரென்ஞான்றுந் ... ... ❋
தம்மாலாமாக்கமிலரென்று-தம்மை ... ... ❋
மருண்டமனத்தார்பின்செல்பவோதாமுந் ... ... ❋
தெருண்டவறிவினவர் ... ... ❋

(இ-ள்.) இந்நல்கூர்ந்தார் இந்தவறுமையையடைந்தவர்—நம்மாலே நம்மாலே—ஆவர் செல்வமுடையராவர்— எஞ்ஞான்றும் என்னாளும்—தம்மால் தம்மாலே—ஆம் உண்டாகும்— ஆக்கம் செல்வம்—இலரென்று இல்லாரிவரென்று— தம்மை தம்மில்—மருண்ட மயங்கிய— மனத்தார் மனதுடையவர்— பின்செல்பவோ பின்சென்றிரப்பார்களோ—தாமும் தாமும்— தெருண்ட தெளிந்த— அறிவினவர் அறிவினையுடையவர்— (எ-று) ❀ இ-ம் தெளிந்தவறிவினையுடையவர் தெளிவிலாவறிவினரிடத்துச்சென்றிரவாரென்பதாம், ☞ அறிவினவர் எ, செல்பவோ ப. (௧)

இழித்தக்க செய்தொருவனுரவுணவிற் ... ... ❋
பழித்தக்கசெய்யான்பசித்த-றவன்று ... ... ❋
விழித்திமைக்குமாத்திரை ❋ யன்றேயொருவ ... ... ❋
னழித்துப்பிறக்கும்பிறப்பு ... ... ❋

(இ-ள்.) ஒருவன் ஒருவன்—அழித்து செத்து—பிறக்கும் பிறக்கின்ற, பிறப்பு சன்னம்—விழித்து கண்விழித்து—இமைக்கும் இமைக்கின்ற—மாத்திரையன்றே அளவல்லோ, (ஆதலால்) ஒருவன் ஒருவன், இழித்தக்க இழிவானயாசகங்கள், செய்து செய்து, ஆர வயிறுநிறைய, உணவில் உண்ணுதலினும்—பழித்தக்க பழிக்கத்தக்கவைகளை—செய்

மான் செய்யாதவன்—பசித்தல் பசித்திருத்தல்—தவறோ குற்றமோ—(எ-று) ✲ இ-ம் ஒருவன் யாசகஞ்செய்துண்ணுதலைப் பார்க்கிலும் மத்துருஷன்மானத்தோடு யாசகஞ்செய்யாது பசித்திருத்தல் குற்றமோ என்பதாம். ☞ பசித்தல் எ, தவறோ ப, ✲(அகத்தியம்) [அன்றுமுன்னு வசையெதிர்மறைக்கிளவி.] (௨)

இல்லாமைகந்தாவிரவுதுணிந் ✲ தொருவர்......✲
செல்லாருமல்லர்சிறுநெறி-புல்லா............ ✲
வகம்புகுமினுண்ணுமினென்பவர்மாட்டல்லான் ✲
முகம்புகுதலாற்றுமோமேல்.................. ✲

(இ-ள்.) இல்லாமை வறுமையே—கந்தா பற்றுக்கோடாக— இரவு யாசகத்தை—துணிந்து துணிந்து, ஒருவர் ஒருவர்— சிறுநெறி-யாசகவழியில்—செல்லாரும் போகாதவரும்—அல்லர் அல்லர்—புல்லா-தழுவி, அகம் எம்மனையில்—புகுமின் பிரவேசியுங்கள்— உண்ணுமின் உண்ணுங்கள்—என்பவர்மாட்டல்லால் என்றுஉபசரிப்பவரிடத்தல்லது, முகம் மற்றவரிடத்து—புகுதல் செல்லல்—ஆற்றுமோ செய்வானோ—மேல் மேன்மகன்—(எ-று) ✲ இ-ம். இல்லாமையாற் பிச்சைக்குச்செல்லாமையிருந்தவரில்லை, மேலானவன் உபசரித்தழைப்பவர்வீட்டிற்சென்றுண்பான் என்பதாம். ☞ மேல் எ, ஆற்றுமோ ப, ✲(அகத்தியம்) [ஒருவருயர்திணையிருபாற்கிளவி.] (௩)

திருத்தன்னைநீப்பினுந்தெய்வஞ்செறினு........ ✲
முருத்தமனத்தோடுயர்வுள்ளினல்லா............✲
லருத்தஞ்செறிக்குமறிவிலார்பின்சென்... ....✲
றெருத்திறைஞ்சிநில்லாதாமேல்....................✲

(இ-ள்.) மேல் மேன்மகனானவன்—திரு இலக்குமி—தன்னை தன்னைவிட்டு—நீப்பினும் நீங்கினும்—தெய்வம் தெய்வம்—செறினும் கோபிக்கினும்—உருத்த கோபித்த—மனத்தோடு மனதினால்—உயர்வு உயர்வை—உள்ளினல்லால் நினைப்பதல்லது—அருத்தம் திரவியத்தை—செறிக்கும் புதைக்கும்—அறிவிலார் அறிவில்லாதவர்— பின்சென்று பின்போய்—எருத்திறைஞ்சி தலையிறக்கங் கொண்டு— நில்லாது நிற்கான்—(எ-று) ✲ இ-ம். மேன்மகனானவன் அறிவிலார் பின்போய்த்தலைவணங்கிநிற்கான்என்பதாம். ☞ மேல்-எ, நில்லாது ப. (௪)

கரவாததிண்ணன்பிற்கண்ணன்னார்கண்ணு....... ✲
மிரவாதுவாழ்வதாம்வாழ்க்கை-யிரவினை .... ✲
யுள்ளுங்காலுள்ளமுருகுமாலென்கொலோ... ....✲
கொள்ளுங்காற்கொள்வார்குறிப்பு ... . ✲

(இ-ள்.) கரவாத (பொருளை) யொளியாத—திண் வலிய—அன்பின் அன்புடைய, கண்ணன்னார்கண்ணும் கண்ணிற்கொப்பானவரிடத்

தும்—இரவாது யாசியாமல், வாழ்வதாம் வாழும்வாழ்க்கையே—வாழ்க்கை ஒருவர்க்குவாழ்வாம்—இரவனை யாசகத்தை—உள்ளுங்கால்- நினைக்கும்போது—உள்ளமுருகுமால் மனமுருகுமாகையால்—கொள்ளுங்கால் எற்கும்பொழுது—கொள்வார் எற்பவர்—குறிப்ப(மனக்)குறிப்பு—என்கொலோ என்னமோவா—(எ-று) ※இ-ம். கண்ணற்கண்ணனவரிடத்தும்யாசியாதுவாழ்தலேவாழ்வாம் என்பதாம். ☞ வாழ்க்கை எ, வாழ்வதாம் ப, குறிப்பு எ, என்கொலோ ப. (௫)

இன்னாவிளையகவினிகவொழி ※கென்று ....※
தன்னையேதானிரப்பத்தீர்வதற்-கென்னைகொல் .. ※
காதல்கவற்றுமனத்தினாற்கண்பாழ்பட் ....※
டேதிலவரையிரவு ... ... ※

(இ-ள்) இன்னா துன்பங்கள்—இயைக பொருந்தியிருக்க—இனிய இன்பங்கள்—ஒழிகென்று நீங்குகவென்று—தன்னையேதான் தன்னைத்தானே—இரப்ப இரந்துகொள்க—தீர்வதற்கு வறுமைநீங்குதற்கு—காதல் பொருளாசை—கவற்றும் கவலைப்படுத்தும்— மனத்தினால் மனதால், கண்பாழ்பட்டு கண்கள்பாழடைந்து—ஏதிலவரை அந்நியரிடத்திற்சென்று—இரவு யாசித்தல்— என்னைகொல் என்னமோ—(எ-று) ※இ-ம். ஒருவன் அந்நியனிடத்திற்போய் யாசித்தலென்னபயன்குறித்தோ என்பதாம். ☞ இரவு எ, என்னைகொல் ப, ※ (அகத்தியம்) [குச்சரியைச்செயுட்கண்ணேவினைக்குறும்.] (௬)

என்றும்புதியார்பிறப்பினுமிவ்வுலகத் ....※
தென்றுமவனேபிறக்கலான்-குன்றின் ....※
பரப்பெலாம்பொன்னொழுகும்பாயருவிநாட ...※
விரப்பாரையெள்ளாமகன் ... ...※

(இ-ள்.) குன்றின்- மலையின்—பரப்பெலாம்- அகன்றவிடமெல்லாம்—பொன் பொன்னானது—ஒழுகும் சொரியும்—பாய் பாயும்—அருவி யாற்றையும்—நாட நாட்டையுமுடைய பாண்டியனே— இரப்பாரை-யாசிப்பவரை—எள்ளாமகன் இகழாதமகன்— என்றும் எந்நாளும்—புதியார் புதியவர்கள்—பிறப்பினும் பிறந்தாலும்— இவ்வுலகத்து இந்தவுலகத்தில்—என்றும் எந்நாளும்—அவனே அந்தமகனே—பிறக்கலான் பிறவான்—(எ-று) ※இ-ம்-பாண்டியனே இரப்பவரை இகழாதவன்எக்காலும்பிறவான்என்பதாம். ☞ மகன் எ, பிறக்கலான்-ப.

புறத்துத்தன்னின்மைநலியவகத்துத்தன் .... ※
னன்றான நீக்கிநிறீஇ-யொருவனை ....※
※ யீயாயெனக்கென்றிரப்பானேலந்நிலையே .. ※
மாயாமோமாற்றிவிடின் ....※

(இ-ள்.) தன் தனது, இன்மை தரித்திரம்—புறத்து புறம்பானவுடலை—நலிய-வருத்த—தன்-தனது—அகத்து- மனதுள்—நல்-நல்ல—

ஞானம்-அறிவை—நீக்கி- தள்ளி—நிறீஇ- அறிவில்லாமையைநிறுத்தி, ஒருவனை-ஒருவனைக்குறித்து—எனக்கு-எனக்கு—ஈயாரென்று-(பொருள்)கொடுப்பாரென்று—இரப்பானேல்- யாசிப்பானாகில்—மாற்றிவிடின்- அவனில்லையென்றுசொல்லில்—அந்நிலையே-அவ்விடத்தே—மாயானோ-இறவானோ—(எ-று) ※ இ-ம். கொடுப்பவனில்லையென்று சொல்லில் இரப்பவனிறந்தான் என்பதாம். ☞ அவன்-எ, மாயானோ-ப * (அகத்தியம்)[ஈயென்கிளவியிழிந்தோனிரப்புரை.] (௮)

ஒருவரொருவரைச்சார்ந்தொழுகலாற்றி... ... ...*
வழிபடுதல்வல்லுதலல்லாற்-பரிசழிந்து... ... ..*
செய்யீரோவென்னானுமென்னுஞ்சொற்கின்னாதே*
பையத்தான்செல்லுநெறி.. ....*

(இ-ள்.) ஒருவர்-ஒருவர்—ஒருவரை-மற்றொருவரை—சார்ந்து-சேர்ந்து—ஒழுகல்-நடத்தல்—ஆற்றி-செய்து—வழிபடுதல்-வழிபட்டிருத்தல்—வல்லுதல்-முறைமை—அல்லால்-அல்லது—பரிசு-குணம்—அழிந்து-கெட்டு—என்னானும்- யாதாகிலுமுதவி—செய்யீரோ-செய்யமாட்டீரோ—என்னும்-என்றுசொல்லும்—சொற்கு-சொல்லப்பார்க்கிலும்—பைய-மெல்ல—தாம்-தாம்—செல்லும்- தவம்பண்ணப்போகும்—நெறி-வழியானது—இன்னாதே- துன்பமுடையதோ—(எ-று) ※ இ-ம். யாசிப்பதைப்பார்க்கிலுந் தவம்பண்ணும்வழி துன்பமுடையதோ-என்பதாம். ☞ நெறி-எ, இன்னாதே-ப. (௯)

பழமைகந்தாகப்பசைந்தவழியே...... .... *
கிழமைதான்யாதானுஞ்செய்க-கிழமை... ... ..*
பொறாஅரவரென்னிற்பொத்தித்தந்நெஞ்சத் ... *
தறாஅச்சுடுவதோர்தீ... ....*

(இ-ள்.) பழமை-பழமையை, கந்தாக-பற்றுக்கோடாக, பசைந்த-விரும்பிய, வழி-வழியில், கிழமை-உரிமையாக, தான்-தான், யாதானும்-யாதாவதோருதவி, செய்க-செய்யக்கடவாய், கிழமை-அவ்வுரிமையை, அவர்-அவர், பொறாரென்னில்-பொறாரானால், தம்-தமது, நெஞ்சத்து-மனதில், பொத்தி-பொதிந்து, அறா-நீங்காமல், சுடுவது-எரிவது, ஓர்-ஒரு, தீ-நெருப்பு—(எ-று) ※ இ-ம், பழைமையை ஆதாரமாகச்சிநேகித்தவருக்கு யாதானுமோருதவி செய்யக்கடவாய், அவ்வுதவியை அவர் பொறாவிடில் மனதைச்சுடுநெருப்பாகும், என்பதாம், ☞ தீ-தோன்றா எழுவாய்-செய்க-ப, ஏ-அசை. (௰)

இரவச்சம்-முற்றிற்று.

௱௨-ம்-அதிகாரம்.

அவையறிதல்.

அஃதாவது, சவையையறிந்து நடக்குதலாம்.

மெய்ஞ்ஞானக்கோட்டியுறழ்வழி விட்டாங்கோ ... *
ரஞ்ஞானந்தந்திட்ட துவாங் கறத்துழாய்க் ...... *
கைஞ்ஞானங்கொண்டொழுகுங்காரறிவாளர்முன் *
சொஞ்ஞானஞ்சோரவிடல் ... . *

(இ-ள்.) மெய்ஞ்ஞானம்- மெஞ்ஞானநூல்களையறிந்த—கோட்டி—சவையில்—உறழ்வழி கலந்தவழியை—விட்டு நீங்கி—ஆங்கு அவ்விடத்து—ஓர் ஞானம் அறிவில்லாவொன்றை—தந்திட்டு சொல்லி—அது அதனை—ஆங்கு அவ்விடத்தில்—அற மிகவும்—துழாய் பரட்டி—கை கையாற்றத்தி—ஞானங்கொண்டு தனதஞ்ஞானத்தைக்கொண்டு—ஒழுகும் நடக்கும்—காரறிவாளர்முன் மயங்கியவறிவாளர்முன்—சொல் சொல்லும்—ஞானம் அறிவை—சோரவிடல் தளரவிடுக. எ-று ※இ-ம், கற்றோர்சவையைவிட்டறிவீனமாய்நடப்பவர்முன் நல்லறிவைச்சொல்லாதிருப்பாயாக, என்பதாம். ☞நீவிர்-தோன்றுஎழுவாய், சோரவிடல் ப, ஞானம் செ (அகத்தியம்) [இட்டுவிட்டிரண்டும் வினையிடைக்கிளவி.] (௧)

நாப்பாடஞ்சொல்லி நயமுணர்வார்போற்செறிக்குந்
தீப்புலவற்சேரார்செறிவுடையார்-தீப்புலவன் ... *
கோட்டியுட்குன்றக்குடிப்பழிக்குமல்லாக்காற் .. *
றோட்புடைக்கொள்ளாவெழும் .... *

(இ-ள்.) செறிவுடையார் அடக்கமுடையார்—நா நாவிற்கு—பாடம் வந்தபாடங்களை, சொல்லி சொல்லி—நயம் நீதியை—உணர்வார்போல் அறிவார்போல்—செறிக்கும் கோபிக்கும்—தீப்புலவன் பொல்லாவறிவினையுடையவனை—சேரார் சேரமாட்டார்—தீப்புலவன் கெட்டவறிவினையுடையவன்—கோட்டியுள் சபையிடத்து—குன்ற குறைய, குடி குடியை—பழிக்கும் பழிப்பான்—அல்லாக்கால் அல்லாவிட்டால்—தோள் தோள்களை—புடை தட்டி—கொள்ளா கொண்டு—எழும் சண்டைக்கெழுந்திருப்பான்—(எ-று) ※இ-ம், அடக்கமுடையவரறிவிலாதவனைச்சேரார்கள், அறிவிலாதவன்சவையிலிகழ்ந்துபேசுவான், இல்லாவிடில் சண்டைக்கெழுவான், என்பதாம். ☞செறிவுடையார் எ, சேரார் ப, தீப்புலவன் செ, தீப்புலவன் எ, எழும் ப. (௨)

சொற்றுற்றல்கொண்டுகணைத்தெழுதல்காழுறுவர் *
கற்றுற்றல்வன்மையுந்தாந்தேறுர்-கற்ற ....

செலவுக்குமாறறியார்தோற்பதறியார்..............*
பல்வுரைக்குமாந்தர்பலர் ....*

(இ-ள்.) கற்றாற்றல்வன்மையும்-மிக்ககற்றவல்லமையும்—தாந்தேறா ர்-தாமறியாதவர்— சொற்றாற்றல்கொண்டு- சொற்றிரத்தைக்கொண்டு, சுளைத்தெழுதல்-அறிவின்மையைச்சொரிந்து (வெற்றிகொண்) டெழு தற்கு—காமுறுவர்-இச்சிப்பார்—கற்ற- கற்றவற்றை —செலவுரைக்கு ம் - (அவையிற்) செல்லும்படிசொல்லும்—ஆறறியார்-வழியையறியா ர்—தோற்பதறியார்-தோல்வியுமறியார்— பலருரைக்கும்-பலவற்றைச் சொல்லும்—மாந்தர்-மனிதர்—பலர்-அநேகர்—(எ-று) ✲ இ-ம்-தாங்க ற்றகல்விவன்மையையறியாதவர் அறிவில்லாமையைச்சொல்லிவெற்றி கொள்ளுக்கிச்சிப்பார்வெல்வியுந்தோல்வியுமறியாதவர்பலருள்-என்ப தாம், ☞ தேறார்-எ, காமுறுவர்-ப, மாந்தர்-எ, பலர்-ப. (௩)

கற்றதூஉமின்றிக்கணக்காயர்பாடத்தாற் .... *
பெற்றாம்பேதையோர்சூத்திர-மற்றதனை ..... *
நல்லாரிடைப்புக்குநாணாதுசொல்லித்தன் ....*
புல்லறிவுகாட்டிவிடும் .... *

(இ-ள்.) கற்றதூஉமின்றி-கற்றதொன்றில்லாமல்—கணக்காயர்பாடத் தால்-பள்ளியிலோதுவோர்பாடத்தால்—பேதை-அறிவிலான்— ஓர்சூ த்திரம்-ஓர்சூத்திரத்தை—பெற்றாம் பெற்றான்—அதனை-அச்சூத்தி ரத்தை—நல்லார்-அறிவுடையோர்—இடை-நடுவே—புக்கு - புகுந்து, நாணாது- வெட்காது—சொல்லி-சொல்லி—தன்- தனது—புல்லறிவு- அற்பவறிவை—காட்டிவிடும்- காட்டுவான்—(எ-று) ✲ இ-ம்-அறிவில் லாதவன்பள்ளிப்பாடத்தாலோர்சூத்திரத்தைக்கற்றதனையறிவுடையோ ர் சபையிற்சொல்லித் தன்னறிவின்மையைக்காட்டுவான் - என்பதாம், ☞ பேதை-எ, காட்டிவிடும்-ப, புல்லறிவு-செ-மற்று-ஆம்-அசைகள். (௪)

வென்றிப்பொருட்டால் விலங்கொத்து மெய்கொள்
கன்றிக்கறுத்தெழுந்துகாய்வரோ-டொன்றி... [ளார்
யுரைவித்தகமெழுவார்காண்பரோகையுட் .... *
சுரைவித்தாப்போலுந்தம்பல் .... *

(இ-ள்.) வென்றிப்பொருட்டால்-வெற்றிகொள்ளுங்காரணத்தால்— விலங்கொத்து- மிருகங்களைநிகர்த்து—மெய்கொள்ளார்- உண்மைப் பொருளைக்கொள்ளாதவராய்—கன்றி- மனம்புழுங்கி—கறுத்து- கோ பித்து—எழுந்து- எதிராகவெழுந்து—காய்வரோடு- கோவிப்பாரோடு —ஒன்றி-பொருந்தி—உரை-தன்சொல்லை—வித்தகம்-ஞானமாக— எழுவார்-காட்டவெழுவார்—சுரை-சுரையினது—வித்துப்போலும்-வி தையைப்போலும்—தம்பல்-தம்முடையபற்களை, கையுள்-தம்முடைய கையுள், காண்பர்-காண்பார்—(எ-று) ✲ இ-ம்-வெல்விகாரணமாகவுங்

மைப்பொருளைக்கொள்ளாது கோபிப்பவருடனெதிர்த்துத்தமது சொல்லை ஞானமாகக்காட்ட வெழுபவர்கள் பழியுடைபடுவர் - என்பதாம். ☞ எழுவார் - என, காண்பர் - ப, பல் - செ, ஆல் - எ, அசைகள். (௫)

பாடமேயோதிப்பயன்றெரிதறேற்றாத ... ... ※
மூடர்முனிதக்கசொல்லுங்காற்-கேடருஞ்சீர்ச ... ※
சான்றோர்சமழ்த்தனர்நிற்பவேமற்றவனை ... ... ※
யீன்றாட்கிறப்பப்பரிந்து .... ※

(இ-ள்.) பாடமேயோதி - பாடங்களைப்படித்து — பயன் - அவற்றின் பொருளை — தெரிதல் - அறிதல் — தேற்றாத - கூடாத — மூடர் - அறிவிலார் — முனிதக்க - வெறுக்கத்தக்கவைகளை — சொல்லுங்கால் - சொல்லும்போது — கேடரும் - கேடில்லாத — சீர் - சிறப்புடைய — சான்றோர் - அறிவுடையோர் — சமழ்த்தனர் - வருத்தமுடையவராய் — அவனை - அவ்வறிவில்லானை — ஈன்றாட்கு - பெற்றவளுக்காக — இறப்ப - மிகவும் — பரிந்து - இரங்கி — நிற்ப - நிற்பார்கள், (எ-று) ※ இ-ம் - கல்வியறியா மூடர் வெறுக்கத்தக்கவைகளைச் சொல்லும்போது அறிவுடையோர் மூடனைப்பெற்றதாய்க்காகவிரக்கங்கொள்வர் - என்பதாம். ☞ சான்றோர் - எ, நிற்ப - ப, எ, மற்று - அசைகள். (௬)

பெறுவதுகொள்பவர்தோள்போனெறிபட்டுக் ... ※
கற்பவர்க்கெல்லாமெளியநூன் - மற்றம் ....※
முறிபுரைமேனியருள்ளம்போன்றியார்க்கு ... ... ※
மறிதற்கரியபொருள் .... ※

(இ-ள்.) பெறுவது - பெறுவதை — கொள்பவர் - கொள்ளும்விலைமாதர் — தோள்போல் - தோளைப்போல் — நெறிபட்டு - வழிபட்டு — கற்பவர்க்கெல்லாம் - கற்பவர்களுக்கெல்லாம் — நூல் - நூல்கள் — எளிய - எளியனவாம், முறிபுரை - தளிரைநிகர்த்த — அம்மேனியர் - அந்தவிலைமாதர் — உள்ளம்போன்று - மனம்போன்று, யார்க்கும் - எவர்க்கும் — பொருள் - நூற்பொருள்கள் — அறிதற்கு - உணர்தற்கு — அரிய - அரியனவாம் — (எ-று.) ※ இ-ம் - நூல்கள் வேசையர்கள் தோளைப்போலவெளிப்பட்டுநிற்பனவாம் அந்நூற்பொருள்கள் அவ்வேசையர்மனங்களைப்போலவறிதற்கரியனவாம் - என்பதாம். ☞ நூல் - எ, எளிய - ப, பொருள் - எ, அரிய - ப, மற்று - அசை. (௭)

புத்தகமேசாலத்தொகுத்தும்பொருடெரியா ... ※
துய்த்தகமெல்லாநிரைப்பினு - மற்றவற்றைப் ... ...※
போற்றும்புலவரும்வேறேபொருடெரிந்து ......※
தேற்றும்புலவரும்வேறு ....※

(இ-ள்.) புத்தகம் - புத்தகங்களை, சால - மிகவும், தொகுத்தும் - சேர்த்து வைத்தும், பொருள் - அவற்றின்பொருள்களை, தெரியார் - அறியார், உய்த்

து-ஆராய்ந்து, அகமெல்லாம்-வீடெல்லாம், நிறைப்பினும்-நிறைத்து
வைத்தாலும்—அவற்றை-அப்புத்தகங்களை—போற்றும்- காப்பாற்று
ம்—புலவரும்-வித்துவான்களும்—வேறு- வேறுவர்—பொருள்-அவ
ற்றின்பொருள்களை — தெரிந்து - அறிந்து — தேற்றும் - போதிக்
கும்—புலவரும்-வித்துவான்களும்—வேறு-வேறுவார், (எ - று) ※
இ-ம். புத்தகங்களை மிகுதியாகச்சேர்த்து மவற்றின்பொருள்களை யறி
யார்—அப்புத்தகங்களைக்காப்பாற்றும் - புலவர்களும் வேறுவர் அப்
பொருள்களையறிந்து போதிக்கும்புலவர்களும்வேறுவர். என்பதாம்,
☞ போற்றும்புலவர்-எ, வேறு-ப, அவற்றை-செ, தேற்றும்புலவர்- எ,
வேறு-ப, எ, மற்று அசை. (அ)

பொழிப்பகலநுட்பநூலெச்சமின்நான்கிற் ...... ※
கொழித்தகலங்காட்டாதார்சொற்கள்-பழிப்பி ... ※
னிரையாமாசேர்க்குநெடுங்குன்றநாட .... ※
வுரையாமோநூலிற்குநன்கு .... ※

(இ-ள்.) நிரை-வரிசையாக—ஆமா-காட்டுப்பசுக்களை—சேர்க்கும்-
சேர்ப்பிக்கும்—நெடும்-நீண்ட—குன்றம்-மலையையும்—நாட- நாட்
டையுமுடையபாண்டியனே — நூலிற்கு- நூலுக்கு—பொழிப்பு-
பொழிப்புரையும்—அகலம்-விருத்தியுரையும், நுட்பம்- விருவிடை
யும்— நூலெச்சம் - வருவித்தவுரையும்— இந்நான்கின் - இந்நான்கா
ல்—கொழித்து - ஆராய்ந்து—அகலங்காட்டாதார்- விரிவாகவிளக்கா
தார்—சொற்கள்-சொற்கள்—பழிப்பில்-பழிப்பில்லாத— நன்கு-நல்
ல—உரையாமோ-உரையாகுமோ— (எ-று) ※ இ-ம், பாண்டியனே
பொழிப்புரை-அகலவுரை-நுட்பவுரை-வருவித்தவுரை- இந்நான்காலு
நூற்பொருளை விளக்காதார்சொல்லுரைநல்லுரையாகாது என்பதாம்.
☞ சொற்கள்-எ, உரையாமோ-ப, (இலக்கணக்கொத்து) செயப்படுபொருள்
வினையுட்செய்வினைசிலவே. இவ்விதியால்சேர்ப்பிக்குங்குன்றமெனப்பி
றவினையாகக்கொள்என்றுஇப்பாடலைஉதாரணங்கொடுத்தார். (க)

இற்பிறப்பில்லாரெனைத்து நூல்கற்பினுஞ் ...... ※
சொற்பிறரைக்காக்குங்கருவியரோ-விற்பிறந்த ... ※
நல்லறிவாளர்நவின்றநூற்றேற்றுதார் ... . ※
புல்லறிவுதாமறிவதில் ... ... ※

(இ-ள்.) இற்பிறப்பில்லார்-நற்குடியிற்பிறவாதார், எனைத்து நூல்கற்
பினும்-எவ்வளவு நூலைக்கற்றாலும்—சொற்பிறரை - பிறர்சொல்லுஞ்
சொல்லை—காக்கும்-காப்பாற்றும்—கருவியரோ- அறிவுடையவரோ
—இற்பிறந்த-நற்குடியிற்பிறந்த— நல்லறிவாளர்-நல்லறிவுடையார்—
நவின்ற-முன்னோர்சொன்ன — நூல்- நூலின்பொருளை— தேற்றாதா
ர்-தெளியாதவர், புல்லறிவு-அற்பவறிவை— தாமறிவதில்-அவர்தாமறிந்து
கொள்வதில்லை—(எ-று) ※ இ-ம், நற்குலத்திற்பிறவாதாரெவ்வளவுநூ

லக்கற்றாலும் பிறர்சொல்லைக்காக்கு மறிவினையுடையவரல்லர் நற்குலத்திற்பிறந்தவர் அறிவில்லார் புல்லறிவைத்தாங்கொள்வதிலர் என்பதாம், ☞ இற்பிறப்பில்லார்-எ, கருவிபரோ-ப, நல்லறிவாளர்-எ, அறிவதில்-ப அவையறிதல்-முற்றிற்று.

௩௩-ம்-அதிகாரம்.

புல்லறிவாண்மை.

அஃதாவது- அற்பவறிவையாளுந்தன்மையாம்.

அருளினறமுரைக்குமன்புடையார்வாய்ச்சொற் *
பொருளாகக்கொள்வர்புலவர்-பொருளல்லா *
வேழையதனையிகழ்ந்துரைக்கும்பாற்கூழை *
மூழைசுவையுணராதாங்கு *

(இ-ள்.) புலவர்-அறிவுடையோர்—அருளின்-கிருபையால்— அறம் தருமவழியை—உரைக்கும்-சொல்லும்—அன்புடையார் - அன்புடையவர்கள்—வாய்ச்சொல் வாயின் சொல்லை—பொருளாக-நற்பொருளாக—கொள்வர்-கொள்ளுவார்கள்—பொருளல்லா-பொருளாகாத—ஏழை-அறிவிலான்—அதனை-அச்சொல்லை—பாற்கூழை-பாற்சோற்றை—மூழை-அகப்பை—சுவை-அச்சோற்றின்சுவையை—உணராதாங்கு-அறியாததுபோல—இகழ்ந்துரைக்கும்-இகழ்ந்து சொல்லுவான்—(எ-று) ※ இ-ம், அறிவுடையோர் தருமவழியைச் சொல்லுவோர் சொல்லைப்பொருளாகக்கொள்வார் அகப்பையாற்சோற்றின்மதுரமறியாதும்போல் அறிவிலான் அச்சொல்லைக்கொள்ளான் என்பதாம். ☞ புலவர்-எ, கொள்வர்-ப, ஏழை-எ, இகழ்ந்துரைக்கும் ப, அதனை செ. (௧)

அவ்வியமில்லாரறத்தாறுரைக்குங்கால் *
செவ்வியரல்லார் செவிகொடுத்துங்-கேட்கலார் *
கவ்வித்தோல்தின்னுங்குணுங்கர் நாய்ப்பாற்சோற்றின்
செவ்விகொளறேற்றாதாங்கு *

(இ-ள்.) தோல்-தோலை—கவ்வி-கடித்து—தின்னும்-தின்னும்—குணுங்கர்-பறையருடைய—நாய்- நாயானது—பாற்சோற்றின் - பாற்சோற்றினது—செவ்வி-சுவையை—கொளல்-கொள்ளுதல்—தேற்றாதாங்கு-தெளியாததுபோலும்—அவ்வியம்-பொறாமை, இல்லார்- இல்லாதவர்—அறத்தாறு-தருமவழியை—உரைக்குங்கால்-சொல்லும்போது—செவ்வியரல்லார்-நல்லவரல்லாதவர்—செவிகொடுத்தும் - காது கொடுத்தும்—கேட்கலார், கேட்கமாட்டார் (எ-று) ※ இ-ம், நல்லவர்கள்

தரும்மே யிவைச்சொல்லும் போது பொல்லாதவர்கள் காது கொடுத்துங் கேளார்கள் என்பதாம் ☞ செல்வியரல்லார்- எ, கேட்கலார்- ப, அற
த்தாறு-செ: (௨)

இமைக்குமளவிற்றம்மின்னுயிர்போமார்க்க ... ... ✻
மெய்னைத்தானுந்தாங்கண்டிருந்துந்-தினைத்துணையு ✻
நன்றிபுரிகல்லா நாணின்மடமாக்கள் ... ... ✻
பொன்றிலென்பொன்றக்காலென் ... ... ✻

(இ-ள்.) இமைக்கும்-விழிக்கும்—அளவில்-அளவில்—தம்-தமது,இ
ன்னுயிர்-இனியவுயிரானது—போம் போகும்—மார்க்கம்-வழியை—
எனைத்தானும்-எவ்வகையாலும், தாங்கண்டிருந்தும்- தாமறிந்திருந்து
ம்—தினைத்துணையும்-தினையளவும்,நன்றி- தருமத்தை—புரிகல்லா-செ
ய்யாத—நாணில்- வெட்கமில்லாத—மடமாக்கள்- அறிவில்லாமனிதர்க
ள்—பொன்றிலென்-செத்தாலென்ன—பொன்றக்காலென்-வாழ்ந்தா
லென்ன—(எ-று)❋இ-ம், தினையளவுந்தருமஞ்செய்யாதமனிதர்கள்
இறந்தாலென்ன இறவாதிருந்தாலென்ன-என்பதாம். ☞ மாக்கள்-எ,
பொன்றிலென்பொன்றக்காலென்-ப. (௩)

உளநாள்சிலவாலுயிர்க்கேமமின்றாற் ... ... ✻
பலர்மன்னுந்தூற்றும்பழியாற்-பலருள்ளும் ... ✻
கண்டாரோடெல்லாநகாஅதேவொருவன் ... ✻
தண்டித்தனிப்பகைகோள் ... ... ✻

(இ-ள்.) உளநாள்-தான்வாழுநாட்கள்—சிலவால்- சிலவாதலால்—உ
யிர்க்கு-தன்னுயிர்க்கு—ஏமம்-காவல்—இன்றால்-இல்லாமையால்—ப
லர்-பலரும்—தூற்றும்-தூற்றத்தக்க—பழியால்-பழியால்—பலருள்ளு
ம்-பலபேர்களுள்ளும்—கண்டாரோடெல்லாம்-கண்டவர்களெல்லோரொ
டும்,நகாஅது-மகிழாது—ஒருவன் ஒருவன், தனி-ஒன்றியாகவிருந்து,
தண்டி-வலிய—பகை-பலர்பகைகளை—கோள்-கொள்ளுதல்—எவன்-
என்ன—(எ-று)❋இ-ம். ஒருவன் கண்டவருடனெல்லாஞ் சிநேகஞ்செ
ய்யாமல்தனித்துப்பகையைக்கொள்வதென்ன-என்பதாம், ☞ ஒருவன்
எ,என்ன-ப,மன்-உ-ம்-அசைகள். (௪)

எய்தியிருந்தவவைமுன்னர்ச்சென்றெள்ளி ... ✻
வைதாரொருவரொருவனை-வைய ... ... ✻
வயப்பட்டான்வாளாவிருப்பானேல்வைதான் ... ✻
வியத்தக்கான்வாழுமெனின் ... ... ✻

(இ-ள்.) எய்தியிருந்த-கூடியிருந்த—அவைமுன்னர்-சபைக்குமுன்
னே—சென்று-போய்—ஒருவன்-ஒருவன், ஒருவனை-மற்றொருவனை,
எள்ளி-இகழ்ந்து—வைதான்- வைதவன்—வைய- அவன் வையத்தக்கதா
க,வயப்பட்டான்-வையப்பட்டவன்,வாளா-பேசாமல்—இருப்பானேல்
இருப்பானானால்—வைதான்-வைதவன்—வாழுமெனின்-வாழ்வானாகில்

வியக்கத்தக்கான்-அதிசயப்படத்தக்கவன்—(எ-று) ※ இ-ம். ஒருவன்மற்றொருவனை வைய-வையப்பட்டவன் பேசாதிருப்பானாகில், வைதவன் வாழ்வானேயாகில் அதிசயிக்கப்படத்தக்கவன்-என்பதாம், ☞ வைதான்-எ வியத்தக்கான்-ப. (௫)

> மூப்புமேல்வாராமைமுன்னே யறவினையை ... ※
> யூக்கியதன்கண் முயலாதா ஞூக்கிப் ... ...※
> புறத்திருபோ கென்னுமின்னாச்சொலில்லுட் ... ※
> டொழுத்தையாற்கூறப்படும் ... ...※

(இ-ள்.) மூப்பு-விருத்தப்பிராயம்—மேல்-மேலாக—வாராமைமுன், னே-வருமுன்னே—அறம்-தருமத்தினது—வினையை-செய்கையை, ஊக்கி-மேற்கொண்டு—அதன்கண்-இளமையில்—முயலாதான்-செய்யாதவன்—இல்லுள்-வீட்டிலிருக்கிற, தொழுத்தையால்-வெள்ளாட்டியால், ஊக்கி-உறுதிகொண்டு, புறத்து-வீட்டின்புறம்பே, இருபோகென்னும்-இருபோவென்றுசொல்லும், இன்னாச்சொல்-கொடுஞ்சொல்கூறப்படும்-சொல்லப்படுவான்—(எ-று) ※ இ-ம். இளமையிலே தருமத்தைச் செய்யாதவன் வீட்டுவெள்ளாட்டியால் இகழப்படுவான்-என்பதாம், ☞ முயலாதான்-எ, படும்-ப. (௬)

> தாமேயுமின்புறார் தக்கார்க்கு நன்றாற்றா ... ... ※
> ரேமஞ்சார் நன்னெறியுஞ்சேர்கலார்-தாமயங்கி ... ※
> யாக்கத்துட்டூங்கியவத்தமேவாழ்நாளைப் ... ...※
> போக்குவார்புல்லறிவினார் ... ... ※

(இ-ள்.) புல்லறிவினார்-அறிவில்லார்—தாமேயும்-தாங்களாகிலும், இன்புறார்-இன்படைமையார்— தக்கார்க்கு-பெரியோர்க்கு—நன்று-நன்மையை—ஆற்றார்-செய்யார்—ஏமம்-(தமக்குக்)கோட்டையாக, சார்-அமைந்த—நன்னெறியும்-நல்லவழியையும்—சேர்கலார்-சேரார்—தாமயங்கி-தாங்களறிவுகெட்டு—ஆக்கத்துள்-செல்வத்தில்—தூங்கி-தங்கி, அவத்தமே-பயனில்லாமல்—வாழ்நாளை-ஆயுள்களை—போக்குவார்-நீக்குவார்—(எ-று) ※ இ-ம். அறிவில்லார்தாங்களுமின்படைமையார் பெரியோர்க்குமுதவிசெய்யார் நல்வழியையுமடையார் செல்வத்திலேமகிழ்ந்துவாழ்நாளிழப்பர்-என்பதாம், ☞ புல்லறிவினார்-எ, போக்குவார்-ப, வாழ்நாளை-செ. (௭)

> சிறுகாலையேதமக்குச்செல்வுழிவல்சி ... ...※
> யிறுகிறுகத்தோட்கோப்புக்கொள்ளா-திறுகிறுகிப் ※
> பின்னறிவாமென்றிருக்கும்பேதையார்கைகாட்டும் ※
> பொன்னும்புளிவிளங்காயாம் ....※

(இ-ள்.) சிறுகாலையே-இளமைப்பருவத்திலே, தமக்கு-தங்களுக்கு, செல்வுழி-செல்லுமிடத்திற்கு, வல்சி-(தரும்மாகிய)சோற்றை, இறுகிறுக-உறுதிபொருந்த, தோட்கோப்பு-தோட்சுமையாக, கொள்ளார்-

கொள்ளாதவராய்,இறுகிறுகி-சிக்கெனப்பிடித்து,பின்னறிவாமென்று (தருமத்தைப்) பின்செய்வோமென்று,இருக்கும்-(எண்ணி)யிருக்கும், பேதையார்-அறிவில்லார்,கைகாட்டும்-கையாற் காட்டும்,பொன்னும்-பொன்முடிப்பும்,புளிவிளங்காய்-புளித்தவிளங்காய்,ஆம் - இறக்குங் காலத்திலாகும் (எ-று) ❋ இ-ம். இளவயதில் புண்ணியஞ் செய்யாது பின்செய்வோமென்றிருந்தவர்தாங்கள் இறக்கும்போது வாயடைத்து வைத்தபொருளைக்கையாற்காட்டுவர் அப்பொருள்புளித்தவிளாங்கனி கேட்கிறுதென்றுபிறதொன்றும்படியாய்விடும்-என்பதாம். ☞ பொன்-எ,புளிவிளங்காயம்-ப. (அ)

வெறுமையிடத்தும்விழுப்பிணிப்போழ்து ...... ❋
மறுமைமனத்தாரோயாகி-மறுமையை ... . ❋
யைந்தையனைத்தானுமாற்றியகாலத்துச் ... . ❋
சிந்தியார்சிற்றறிவினார் ... ... ❋

(இ-ள்.) சிற்றறிவினார்-அற்பவறிவுடையோர்— வெறுமையிடத்தும்-வறுமையிடத்தும்—விழு-சிறந்த—பிணிப்போழ்தும்-வியாதியிடத்தும்,மறுமை-வருபிறப்பிற்குறுதி செய்யும்,மனத்தாரோயாகி மனமுடையவராகி—ஆற்றியகாலத்து செல்வம்வந்தகாலத்து—ஐந்தை கடுகு,அனைத்தானும் அளவாகிலும்,மறுமையை வருபிறப்பிற்குறுதியாந் தருமத்தை,சிந்தியார் நினையார்.(எ-று) ❋ இ-ம். சிற்றறிவுடையார்செல்வமடைந்தகாலத்தும் வருபிறப்பிற்குறுதியாகுந்தருமங்களைச்செய்ய நினையார்-என்பதாம். ☞ சிற்றறிவினார்-எ,சிந்தியார்- ப, மறுமை-செ.

என்னேமற்றிவ்வுடம்புபெற்றுமறநினையார் ..... ❋
கொன்னேகழிப்பர்தம்வாழ்நாளை-யன்னோ ..... ❋
வளவிறந்தகாதற்றமாருயிரன்னார்க் .... ❋
கொளவிழைக்குங்கூற்றமுங்கண்டு .... ❋

(இ-ள்.) அன்னோ ஐயோ,அளவிறந்த அளவுகடந்த, காதல் ஆசையையுடைய,தம் தமது,ஆர் நிறைந்த, உயிரன்னார் உயிருக்கொப்பானவரை,கொள-கொண்டுபோக,இழைக்கும்-(முயற்சி)செய்யும், கூற்றமும் யமனையும்,கண்டு பார்த்திருந்தும், என்னே என்ன, இவ்வுடம்பு-இவ்வுடலை,பெற்றும் பெற்றிருந்தும்,அறம்-தருமத்தை,நினையார்-என்றவராய்,கொன்னே-பயனில்லாமல்,தம் தம்முடைய,வாழ்நாளை-ஆயுள்களை,கழிப்பர் போக்குவர்,(எ-று) ❋ இ-ம்.ஐயோ? தமது உயிருக்கொப்பானவரை யமன் கொண்டுபோகக்கண்டிருந்தும்பெறுதற்கரிய வுடலைப்பெற்றும்தருமஞ்செய்யாது வீணாள்கழிப்பரறிவிலார்-என்பதாம், ☞ அறிவிலார்-தோன்றுவெழுவாய் கழிப்பர் ப,வாழ்நாளை- செ என்னே,அன்னோ இரக்கக்குறிப்பு-மற்று-அசை. (ய)

புல்லறிவாண்மை- முற்றிற்று.

௩௪-ம் அதிகாரம்.

பேதைமை.

அஃதாவது-அறிவில்லாமையைச்சொல்லுதலாம்.

கொலைஞருலையேற்றித்தீமடுப்பவாமை...... ...*
நிலையறியாதந்நீர்ப்படிந்தாடி-யற்றே...... ......*
கொலைவல்பெருங்கூற்றங்கோட்பார்ப்பவீண்டை*
வலையகத்துச்செம்மாப்பார்மாண்பு... .. ..*

(இ-ள்.) கொலை கொலைசெய்யும்—வல் வலிய — பெருங்கூற்றம்-பெரியயமன்– கோள் நாள்—பார்ப்ப பார்த்திருப்ப—ஈண்டை—இவ்விடத்து—வலையகத்து சமுசாரவலையில்—செம்மாப்பார் இறுமாந்திருப்பவர்—மாண்பு பெருமையானது, ஆமை-ஆமையை—கொலைஞர் கொல்பவர்—உலையேற்றி உலையிற்போட்டு—தீமடுப்ப தீமூட்ட—நிலையறியாது ஆமைஇறக்குநிலைமையறியாது—அந்நீர் அந்த நீரிலே—படிந்து மூழ்கி—ஆடியற்று விளையாடினாற் போலும்—(எ-று) ❁ இ-ம். இல்வாழ்க்கையிலிறுமாந்தவர்பெருமையானதுஆமை சாவதறியாமலுலையிற்கூத்தாடினாற்போலும் என்பதாம். ☞ மாண்பு-எ, ஆடியற்று-பு,எ-அசை. (௧)

பெருங்கடலாடியசென்றாரொருங்குட........ ...*
னோசையவிந்தபின்னாடு-மென்றற்றால் .... *
வீட்டிற்குசெய்குறைவினைநீக்கியறவினை .... *
மற்றறிவாமென்றிருப்பார்மாண்பு...... .... *

(இ-ள்.) இல் வீட்டிற்கு—செய் செய்காரியங்களை— குறை-வினை நீக்கி,குறைவற-முடித்து—அறவினை தருமத்தை—மற்று பின்பு —அறிவாம் செய்வோம், என்றிருப்பார் என்றிருப்பவர்—மாண்பு-பெருமையானது—பெருங்கடல் பெரியகடலில்—ஆடிய ஸ்நானஞ்செய்ய—சென்றார் போனவர்—ஒருங்கு ஒருமிக்க—உடன் உடனே—ஓசை சத்தம்—அவிந்தபின்-அடங்கினபின்பு, ஆடுதும்-ஸ்நானஞ்செய்வோம்—என்றற்று சொன்னாற்போலும்—(எ-று) ❁ இ-ம் வீட்டுக்காரியங்களைக்குறைவறமுடித்துப்பின்பு தருமஞ்செய்வோமென்றிருப்பவர்பெருமைகடலிலேமுழுகச்சென்றவர்அதன்னோசை யடங்கினபின்புமுழுகுவோமென்றாற்போலும் என்பதாம். ☞ மாண்பு-எ, என்றற்று-பு, ஆல்-அசை. (௨)

குலந்தவங்கல்விகுடிமைமூப்பைந்தும் .... *
விலங்காமெலியத்திரியக்கண்ணும்-நலஞ்சான்ற .... *
மையறுதோல்சீருலகமறியாமை....................*
நெய்யிலாட்டோர்ச்சோற்றினோர்...... .. ..*

(இ-ள்.) குலம்-குலமும்—தவம்-தவமும்—கல்வி-கல்வியும், குடிமை குடிப்பிறப்பும்—மூப்பு-முதுமையும்—ஐந்தும்-இவ்வைந்தும்—விலங்காமல்-தவறாமல்—எய்தியக்கண்ணும்-(ஒருவ)னடைந்தாலும்— நலம்-நன்மை—சான்ற மிகுந்த—மையறு-குற்றமற்ற—தொல்-பழைய—சீர்-சிறப்புடைய—உலகம்-உலகநடையை—அறியாமை-அறியாதிருக்கை—நெய்யிலா-நெய்யில்லாத—பாற்சோற்றின்-பாற்சோற்றுக்கு—நேர்-ஒப்பாகும்—(எ-று) ※ இ-ம்-குலமுந்தவமுங்கல்வியுங் குடிப்பிறப்பும்முதிர்வயதும்ஒருவனடைந்தாலும் உலகநடையறியாதிருத்தல்நெய்யில்லாப்பாற்சோற்றுக்கொப்பாம்-என்பதாம். ☞ அறியாமை ன, நேர்-ப.

கன்னனிநல்லகடையாயமாக்களிற் .... *
சொன்னனிதாமுணராவாயினு-மின்னினியே ... *
நிற்றலிருத்தல்கிடத்தலியங்குதலென் ... . *
றுற்றவர்க்குத்தாமுதவலான் .... *

(இ-ள்.) சொல்-சொல்லை—நனி-மிகவும்—தாம்-கற்கடாம்—உணராவாயினும்-அறியாமலிருப்பினும்—இன்னினியே-இப்பொழுதே—நிற்றல்-நிற்றலுக்கும்—இருத்தல்-இருத்தலுக்கும்—கிடத்தல்-கிடத்தலுக்கும்—இயங்குதல்-நடத்தலுக்கும்—உற்றவர்க்கு-அடைந்தவர்க்கு, தாம்-கற்கடாம்—உதவலான்(தொழில்களுக்)குதவுதலால்—கடையாய-கடையான—மாக்களில்-மனிதரைப்பார்க்கிலும்—கல்-அந்தக்கற்கள், நனி-மிகவும்—நல்ல-நல்லனவாகும், (எ-று) ※ இ-ம்-கற்களானவைசொல்லைக்கேளாவிடினு நிற்றலுக்குமிருத்தலுக்குங் கிடத்தலுக்குநடத்தலுக்கும்உதவுதலால்கடையானவர்களைப்பார்க்கிலுங்கற்களேநல்லனவாம் என்பதாம், ☞ கல்-எ, நல்ல-ப, என்று இடைச்சொல். (௪)

பெறுவதொன்றின்றியும்பெற்றானேபோலக் ... *
கறுவுகொண்டேலாதார்மாட்டுங்-கறுவினாற் ... ...*
கோத்தின்னாகூறியுரையாக்காற்பேதைக்கு ....*
நாத்தின்னுநல்லசுனைத்து .... *

(இ-ள்.) பெறுவது-தான்பெறுவது—ஒன்றின்றியும்- ஒருபொருளில்லையாயினும்—பெற்றான்போல- சிலபொருள்பெற்றவனைப்போல, கறுவுகொண்டு-கோபங்கொண்டு, ஏலாதார்மாட்டும்-இணங்காதாரிடத்தும்—கறுவினால்-கோபத்தால்—கோத்தின்னா- கொடுஞ்சொற்களைச் சேர்த்து, கூறியுரையாக்கால்- மிகவுஞ்சொல்லாவிடில், பேதைக்கு-அறிவில்லாதவனுக்கு—நா-நாவை—நல்ல-தன்மையாகிய—சுனைத்து- தினவானது—தின்னும்-தின்னும், (எ-று) ※ இ-ம்-அறிவில்லாதவன் கொடுஞ்சொற்களைச்சொல்லாவிட்டால் அவனது நாவைத்தினவுதின்னும்-என்பதாம், ☞ தினவு-எ, தின்னும்-ப, நாவை-செ-எ, ஆசை. (௫)

தங்கண்மரபில்லார்பின்சென்றுதாமவரை ... . *
யெங்கண்வணக்குதுமென்பார்-புன்கேண்மை ... *

நற்றளிர்ப்புன்னைமலருங்கடற்சேர்ப்ப *
கற்கிள்ளிக்கையிழந்தற்று *

(இ-ள்.) நல்-நல்ல—தளிர்-தளிருடைய—புன்னை-புன்னைமரங்கள், மலரும்-அலரும்—கடற்சேர்ப்ப-கடற்கரையையுமுடையபாண்டியனே—தங்கண்-தம்மிடத்து—மரபு-பொருத்தம்—இல்லார்-இல்லாதவர்கள்—பின்சென்று-பின்போய்—தாம்-தாம்—அவரை-அவர்களை, எங்கண்-எம்மிடத்து—வணக்குதும்-வசப்படுத்துவோம்—என்பவர்-என்பவர்களுடைய—புன்கேண்மை-அற்பசிநேகச்செய்கை—கல்-கல்லை—கிள்ளி-கிள்ளி—கை-கையை—இழந்தற்று-இழந்தாற்போலும் (எ-று) ❊ இ-ம். பாண்டியனே தமக்கிணக்கமில்லாதவரைத்தமக்கிணக்கமாக்குவோமென்பவர்கள்சிநேகச்செய்கையானது கல்லைக்கிள்ளிக்கையிழந்தாற்போலும்- என்பதாம். ☞ புன்கேண்மை-எ, இழந்தற்று-ப, கை-செ. (௬)

ஆகாதெனினுமகத்துநெய்யுண்டாகிற் *
போகாதெறும்புபுறஞ்சுற்றும்-யாதுங் *
கொடாஅரெனினுமுடையாரைப்பற்றி *
விடாஅருலகத்தவர் *

(இ-ள்.) எறும்பு-எறும்புகள்—ஆகாதெனினும்-தமக்குதவாதாகிலும், அகத்து-ஒன்றனுள்—நெய்யுண்டாகில்-நெய்யுண்டானால், போகாது-விட்டுப்போகாது—புறஞ்சுற்றும்-அதன்புறம்பாகச்சுற்றும்—(அதுபோல)உலகத்தவர்-உலகிலுள்ளோர்—யாதும்-ஏதும்— கொடாஅரெனினும்-கொடாராகிலும்—உடையாரை(பொரு)ளுடையாரை, பற்றி-பற்றிக்கொண்டு—விடாஅர்-விட்டுப்போகார்—(எ-று) ❊ இ-ம், நெய்யுள்ளதைஎறும்புகள்பற்றிச்சுற்றுதல்போலப்பொருளுள்ளவர்களைஉலகத்தார்பற்றிசுற்றுவார்-என்பதாம். ☞ உலகத்தவர்-எ, விடார்-ப.

நல்லவைநாடொறுமெய்தாரறஞ்செய்யா *
ரில்லாதார்க்கியாதொன்றுமீகலா-ரெல்லா *
மினியார்தோள்சேராரிசைபடவாழார் *
முனியார்கொறாம்வாழுநாள் *

(இ-ள்.) நாடொறும்-ஒவ்வொருநாளும்—நல்லவை-நல்லபோசனங்களை, எய்தார்-அடையார், அறஞ்செய்யார்-தருமஞ்செய்யார், இல்லாதார்க்கு-தரித்திரர்க்கு, யாதொன்றும்-யாதொருபொருளும், ஈகலார்-கொடார், எல்லாம்-எல்லாநலமுமுடைய, இனியார்தோள்-இனியமாதர்தோள்களை, சேரார்-சேரமாட்டார், இசைபட-புகழுண்டாக, வாழார்-வாழார்கள், தாம்வாழுநாள்-தாமுயிர்வாழ்நாள்களை, முனியார்கொல்-வெறுக்கார்கள் (எ-று) ❊ இ-ம், அறிவிலார்நல்லுணவையுண்ணார்தருமஞ்செய்யார் வறியவர்க்குக்கொடார் மாதரைப்புணரார் கீர்த்தியாகவாழார்-என்ப

தாம். ☞ தாம்-எ, முனியார்கொல்-ப, வாழுநாள்-செ,* (அகத்தியம்) அ வாவறவளித்தலாலறமெனப்படுமே. (அ)

விழைந்தொருதம்மைவியப்பவொருவர் ... ...*
விழைந்திலேமென்றிருக்குங்கேண்மை- தழங்குரற்
பாய்திரைசூழ்வையம்பயப்பினுமின்னாதே......[
யாய்நலமில்லாதார்மாட்டு......................*

(இ-ள்.) ஒருவர்தம்மை-ஒருவர்தம்மை——ஒருவர்-மற்றொருவர், விழைந்து-விரும்பி, வியப்ப-கொண்டாட——விழைந்திலேம்- விரும்பிலேம், என்றிருக்கும்-என்றுநினைத்திருக்கும், ஆய்நலம்-ஆராய்ந்தறியுநன்மை இல்லாதார்மாட்டு-இல்லாதவரிடத்து, கேண்மை-கொண்டசிநேகம், தழங்கு-முழங்கும்——குரல்- சத்தமுடைய——பாய்திரை-பாயுங்கடல், சூழ் வையம்-சூழ்ந்தவுலகத்தை——பயப்பினும்-கொடுத்தாலும், இன்னாதே-பொல்லாதேயாம் (எ-று) ※ இ-ம். ஒருவர்மற்றொருவரைப்புகழ அப்புகழ்ச்சியை விரும்பிலேமென்று நினைத்திருக்கும் நலமில்லாரிடத்திற் கொண்டசிநேகமானது பொல்லாது-என்பதாம். ☞ கேண்மை-எ இன்னாது-ப.

கற்றனவுங்கண்ணகன்ற*சாயலுமிற்பிறப்பும் *
பக்கத்தார்பாராட்டப்பாடெய்துந் - தானுரைப்பின்*
மைத்துனர்பல்கிமருந்திற்றணியாத ... ...*
பித்தனென்றெள்ளப்படும்... ... ...*

(இ-ள்.) கற்றனவும்-கற்றகல்விகளையும்——கண்ணகன்ற-இடமகன்ற, சாயலும்- மேன்மையையும், இற்பிறப்பும்-குடிப்பிறப்பையும், பக்கத்தார்-அயலார், பாராட்ட-கொண்டாட, பாடு-பெருமை, எய்தும்-ஒருவனடைவான், தானுரைப்பின்-தான்சொன்னால், மைத்துனர்- நமக்கு மைத்துனர், பல்கி-அதிகரித்து, மருந்தில்-ஒருமருந்திலும், தணியாத-தீராத——பித்தனென்று-வெறிகொண்டவனென்று, எள்ளப்படும்- இகழப்படுவான் (எ-று) ※ இ-ம். கல்வியையும்மேன்மையையுங்குடிபிறப்பையும் பிறர்சொல்ல ஒருவன்பெருமையடைவான்தான்சொன்னால்வெறியனென்றிகழப்படுவான், என்பதாம் ☞ ஒருவன் தோன்றுவெழுவாய் எய்தும்-ப, பாடு-செ, தான்-எ-படும்-ப, * (அகத்தியம்) சாயன்மேன்மை நிறனுஞ்சம்மே. பேதைமை-முற்றிற்று.

௫௫-ஆம்-அதிகாரம்.

கீ ழ் மை.

அஃதாவது-கீழ்மக்களைக்குறித்துச்செல்லுதலாம்.

கட்பிடவதாக்கரலைத்தன்வாய்ப்பெயினுங் ... ...*
சுட்டைகிளைப்போவாக்கோழ்போன்-மிக்க... ...*

கனம்பொதிந்த நூல்விரித்துக்காட்டினுங்கீழ்தன் *
மனம்புரிந்தவாறேமிகும் ... ...*

(இ-ள்.) காலை உதயத்தில்—கடவதா-கடாவையாக, கப்பி-சாணிக்க ப்பியை—தன் தனது—வாய் வாயில்—பெயினும் போட்டாலும், குப்பை குப்பையை, கிளைப்ப கிண்டுதலை—ஓவா ஒழியாத, கோழிபோல் கோழியைப்போல—மிக்க மிகுந்த, கனம் மேன்மை—பொதிந்த-பொருந்திய—நூல் தருமநூல்களை— விரித்துக்காட்டினும் விரிவாக விரித்தாலும்—கீழ் கீழானவன்—தன்-தனது—மனம் மனது, புரிந்த-விரும்பிய—ஆறே வழியே—மிகும் போவான்—(எ-று) இ-ம்-கோழிக்கிரைபோட்டாலும் அதுகுப்பையைச்சீக்கப்போகும் அதுபோலக் கீழ்மகனுக்குத்தருமநூலைச்சொன்னாலும் அவன்மனம்போனவழியே போவான் என்பதாம், ☞ கீழ்-எ, மிகும்-ப. (க)

காழாயகொண்டுகசடற்றார்தஞ்சாரற் ....
றாழாதுபோவாமெனவுரைப்பிற்கீழ்தா .... *
னுறங்குவாமென்றெழுந்துபோமாமஃதன்றி .. *
மறங்குமற்றொன்றுரைத்து ... ... *

(இ-ள்.) காழாய உறுதியாகிய நூல்களை—கொண்டு கற்றுக்கொண்டு கசடு குற்றம்—அற்றார் அற்றவர்—தம் தமது—சாரல் பக்கலில், தாழாது தாமதியாமல்—போவாமென போவோமென்று—உரைப்பின் சொன்னால்—கீழ்தான் கீழ்மகன்—உறங்குவாமென்று நித்திரைசெய்வோமென்று— எழுந்து எழுந்திருந்து, போம் போவான், அஃதன்றி அஃதல்லாமல்—மற்றொன்று வேறொன்றை—உரைத்து சொல்லி மறங்கும் மறுத்துநிற்பான், (எ-று) இ-ம்-குற்றமற்றவரிடத்திற்போகலாம்வாவென்றால் கீழ்மகன் தூங்குவோமென்றும் இவ்வேளை நீங்கு, வோமென்றுஞ்சொல்லுவான்-என்பதாம். ☞ கீழ்-எ, மறங்கும்-ப, ஒன்றும் ஆம்-அசைகள் *(அகத்தியம்)காழென்கிளவிவைரமுறுதியே.(உ)

பெருநடைதாம்பெறினும்பெற்றிபிழையா ... ...*
தொருநடையராகுவர்சான்றோர்-பெருநடை ... *
பெற்றக்கடைத்தும்பிறங்கருவிநன்னாட .. ..*
வற்றாமொருநடைகீழ் .... *

(இ-ள்.) பிறங்கு பிரகாசிக்கும், அருவி யாற்றையும், நல் நல்ல, நாட நாட்டையுமுடையபாண்டியனே, சான்றோர் பெரியோர்கள், பெருநடை பெருஞ்சிறப்பு, தாம்பெறினும் தாங்கள்பெற்றாலும், பெற்றி முன்னிருந்தபெருமையில், பிழையாது வேறுபடாது, ஒருநடையராகுவர் ஒரேதன்மையுடையராவர், கீழ் கீழ்மகன், பெருநடை பெருஞ்சிறப்பை, பெற்றக்கடைத்தும் பெற்றாலும், ஒருநடை வேறுநடைநடக்க, வற்றாம் வல்லமையுடையவனாவான் (எ-று) இ-ம், பாண்டியனே

போர்சிறப்பைப்பெற்றாலுமுன்னிருந்தநிலையிலேநிற்பார்கள்கீழானவை -சிறப்படைந்தால்வேறுநடை நடக்கவல்லவனுவான்- என்பதாம். ☞ சான்றோர்- எ, ஆகுவர் ப, கீழ்- எ,வற்றும்-ப, (வல்-து- வற்று- என்றுயிற்று.) (௫)

தினையனைத்தேயாயினுஞ்செய்தநன்றுண்டாற் .... *
பனையனைத்தாவுள்ளுவர்சான்றோர்-பனையனைத் .... *
தென்றுஞ்செயினுமிலங்கருவிநன்னாட .... *
நன்றிலநன்றறியார்மாட்டு .... *

(இ-ள்.) இலங்கு-பிரகாசிக்கும்—அருவி - வைகையாற்றையும்—நன்னாட - செந்தமிழ்நாட்டையுமுடையபாண்டியனே— சான்றோர்-மேலோர், தினையனைத்தேயாயினும்- தினையளவேயாகினும், செய்த-பிறர்செய்த—நன்று-நன்மையானது—உண்டால்- உண்டானால்—பனையனைத்தா-பனையளவாக—உள்ளுவர்- நினைப்பார்கள்—நன்றறியார்மாட்டு-நன்றியறியாதவரிடத்து—பனையனைத்து - பனையளவு நன்றியை—என்றும்-எக்காலத்தும்—செயினும்-செய்தாலும்— நன்றில- நன்மையில்லனவாம்—(எ-று) இ-ம்-பாண்டியனேமேலோர்க்கொருநாள்தினையளவுஉதவிசெய்தாற்பனையளவுஉதவியாகக்கொள்வார்கள் கீழோர்க்குப்பலநாளும்பனையளவுஉதவிசெய்தாலும் தினையளவும்நினையார்கள்-என்பதாம், ☞ சான்றோர்-எ,உள்ளுவர்-ப,நன்று-எ,இல்-ப. (௬)

பொற்கலத்தூட்டிப்புறந்தரினுநாய்பிற .... *
ரெச்சிற்கிமையாதுபார்த்திருக்கு-மச்சீர் .... *
பெருமையுடைத்தாக்கொளினுங்கீழ்செய்யும் .... *
கருமங்கள்வேறுபடும் .... *

(இ-ள்.) பொற்கலத்து- பொன்னாலாகியகலத்துள்—ஊட்டி-உண்பித்து—புறந்தரினும்-காப்பாற்றினாலும்— நாய்- நாயானது— பிறர்-அயலாருடைய—எச்சிற்கு-எச்சிற்சோற்றிற்கு, இமையாது - கண்ணிமையாமல், பார்த்திருக்கும்-பார்த்துக்கொண்டிருக்கும்— அச்சீர்-அச்சிறப்பைப்போல— பெருமையுடைத்தா-பெருமையுடையவராக —கொளினும்-கொண்டாலும்— கீழ்-கீழ்மக்கள் —செய்யும்-செய்யும், கருமங்கள்-காரியங்கள் — வேறுபடும்-வேறுபட்டிருக்கும்— (எ-று) இ-ம்- நாயைப்பொற்கலத்திற்சோறிட்டுவளர்த்தாலுமது பிறர்எச்சிற்சோற்றுக்குப்போகும்-அதுபோலக்கீழ்மக்களைமேலாகக்கொண்டாலுமவர்கள்கீழான நிலையிற்போவார்கள்- என்பதாம், ☞ கருமங்கள்-எ, வேறுபடும்-ப. (௭)

சக்கரச்செல்வம்பெறினும்விழுமியோ .... *
ரக்காலுஞ்சொல்லார்மிகுதிச்சொ-லெக்காலு .... *
முந்திரிமேற்காணிமிகுவதற்கீழ்தன்னை .... *
யிந்திரனாவெண்ணிவிடும் .... *

(இ-ள்.) விழுமியோர்-பெரியோர்—சக்கரச்செல்வம்-இந்திரசெல்வத்தை—பெறினும்-பெற்றாலும்—மிகுதிச்சொல்-நெறிகடந்தசொல்லை, எக்காலும்-எந்நாளும்—சொல்லார்-சொல்லார்கள்—கீழ்-கீழ்மகனானவன்—முந்திரிமேல்-முந்திரிகைபொன்னுக்குமேல்—காணி-காணிப்பொன்—மிகுவதேல்-மிகுமாகில்—எக்காலும்-எந்நாளும்—தன்னை-தன்னை, இந்திரனா-தேவேந்திரனாக, எண்ணிவிடும்-நினைத்துவிடுவான்(எ-று) ※ இ-ம்-பெரியோர்பெருஞ்செல்வம்பெற்றாலும்வரம்புகடந்துசொல்லார்கீழ்மகன்முந்திரிகைபொன்னுக்குமேல் காணிபொன்பெறுவானாகில்தன்னைஇந்திரனாகவெண்ணுவான்-என்பதாம், ☞ விழுமியோர்-எ, சொல்லார்-ப, மிகுதிச்சொல்-செ. கீழ்-எ, எண்ணிவிடும்-ப, தன்னை-செ. (௬)

மைதீர்பசும்பொன்மேன்மாண்டமணியழுத்திச் ... ... *
செய்ததெனினுஞ்செருப்புத்தன்-காற்கேயா .... *
மெய்தியசெல்வத்தராயினுங்கீழ்களைக் ... . *
செய்தொழிலாற்காணப்படும் ... . *

(இ-ள்.) மை-குற்றம்—தீர்-அற்ற—பசும்பொன்மேல்-பசுமையாகியபொன்னின்மேல்—மாண்ட-பெருமைபொருந்திய—மணி-நவமணிகளை—அழுத்தி-பதித்து—செய்ததெனினும்-செய்ததானாலும்—செருப்பு-செருப்பானது—தன்-தன்னுடைய—காற்கேயாம்-காலுக்கேயாம்—எய்திய-நிரம்பிய—செல்வத்தராயினும்-செல்வமுடையவரானாலும்—கீழ்களை-கீழ்மக்களை—செய்தொழிலால்-அவர்கள்செய்யுந்தொழிலால்—காணப்படும்-அறியக்கூடும்—(எ-று) ※ இ-ம்-பொன்னின்மேல்நவமணிபதித்தாலுஞ்செருப்புதன்காலிற்குத் தானாகும் அதுபோலநிரம்பியசெல்வமுடையவரானாலுஞ்செய்தொழிலினாலேகீழ்மக்களையறியலாம்-என்பதாம், ☞ ஒருவன்றோன்றாவெழுவாய்-படும்-ப, கீழ்களை-செ. [படும்-என்பது-கூடுமென்னும் பொருள்கொள்ளும்.] (௭)

கடுக்கெனச்சொல்வற்றாங்கண்ணோட்டமின்று .... *
இடுக்கண்பிறர்மாட்டுவக்கு-மடுத்தடுத்து ... . *
வேகமுடைத்தாம்விறன்மலைநன்னாட .... *
வேகுமாமெள்ளுமாங்கீழ் .... *

(இ-ள்.) விறல்-பலம்பொருந்திய—மலை-மலையையும்—நல்-நல்ல, நாட-நாட்டையுமுடையபாண்டியனே—கீழ்-கீழ்மகன்—கடுக்கென-கடியசொற்களை—சொல்-சொல்ல, வற்றான்-வல்லவனாவான்—கண்ணோட்டம்-சினேகம்—இன்றாம்-இல்லாதவனாவான்—பிறர்மாட்டு-அயலாரிடத்துண்டாகும், இடுக்கண்-துன்பத்திற்கு, உவக்கும்-மகிழ்ந்திருப்பான், அடுத்தடுத்து-மேலுமேலும், வேகமுடைத்தாம்-கோபங்கொள்

ளுவான்—ஏகும்-செல்லுவான்—எள்ளும்-இகழுவான், (எ-று) ✻ இ-ம், பாண்டியனே கீழ்மகன் கடுஞ்சொல்சொல்லுவான் சிநேகஞ்செய்யான் பிறர்துன்பங்கண்டு மகிழ்வான் கோபிப்பான் செல்லுவான் இகழுவான்-என்பதாம். ☞ கீழ்மகன்-எ, வற்றும்-இன்றும்-உவக்கும்-உடைத்தாம் ஏகும்-எள்ளும்-ப, ஆம்-இரண்டும்-அசைகள். (௮)

பழையரிவரொன்றுபன்னாட்பின்னிற்பி... ✻
னுழையினியராகுவர்சான்றோர்-விழையாதே ... ✻
கள்ளுயிர்க்குநெய்தற்கனைகடற்றண்சேர்ப்ப... ✻
வெள்ளுவர்கீழாயவர் ... ✻

(இ-ள்.) கள்-மதுவை—உயிர்க்கும்-பொழியும்—நெய்தல்-நெய்தற்பூவையுடைய—கனை-சத்திக்கும்—தண்-குளிர்ந்த—கடற்சேர்ப்ப-கடற்கரையையுடையபாண்டியனே—சான்றோர்-பெரியோர்—உழை-தம்மிடத்து—பன்னாள்-பலநாளும்—பின்-பின்னே—நிற்பின்-ஒருவனின்றால்—பழையர்-பழமையானவர்—இவரொன்று-இவரொன்றுநினைத்து—இனியராகுவர்-இன்பமுடையசிநேகரர்வர்—கீழாயவர்-கீழானவர்—விழையாதே-இச்சியாமல்—எள்ளுவர்-இகழ்வார்—(எ-று) ✻ இ-ம், பாண்டியனே பெரியோர் தங்களையடுத்தவர்களுக்குச் சிநேகமாவர் சிறியோர் தங்களையடுத்தவரை இச்சியாதிகழ்வர் - என்பதாம். ☞ சான்றோர்-எ, ஆகுவர்-ப, கீழாயவர்-எ, எள்ளுவர்-ப. (௯)

கொய்புற்கொடுத்துக்குறைத்தென்றுந்தீற்றினும்... ✻
வையம்பூண்கல்லாசிறுகுண்டை-யையகே... ✻
ளெய்தியசெல்வத்தாராயினுங்கீழ்களைச்... ✻
செய்தொழிலாற்காணப்படும் ... ✻

(இ-ள்.) ஐய-பாண்டியனே—கேள்-கேட்பாயாக—கொய்புல்-அறுக்கும்புல்லை—குறைத்து-அறுத்து—என்றும்-எப்பொழுதும், கொடுத்து-வாயிற்கொடுத்து—தீற்றினும்-ஊட்டினாலும்—சிறுகுண்டை-சிறியஎருதுகள்—வையம்-இரதத்தை—பூண்கல்லா-பூணப்பட்டிழுக்காவாம்—(அதுபோல)எய்திய-மிகப்பொருந்திய—செல்வத்தாராயினும்-செல்வமுடையவரானாலும்—கீழ்களை-கீழ்மக்களை—செய்தொழிலால்-அவர்கள்செய்யுந்தொழிலால்—காணப்படும்-அறியக்கூடும்—(எ-று) ✻ இ-ம், பாண்டியனே சிறியவெருதுகளுக்குப் புல்லறுத்துவாயிலூட்டினாலும்-அவை இரதத்தையிழுக்கமாட்டாவாம்-அதுபோல நிரம்பியசெல்வமுடையவரானாலுஞ் செய்தொழிலிலே கீழ்மக்களையறியலாம் என்பதாம், ☞ ஒருவன்தோன்றுமெழுவாய்-படும்-ப, கீழ்களை-செ-[தீற்றல்-உண்டல்-இஃதுதேசிகம்.] (௰)

கீழ்மை-முற்றிற்று.

௩௬-ம்- அதிகாரம்.

கயமை.

அஃதாவது-கயவர்களினியல்பைச்சொல்லுதலாம்.

ஆர்த்தவறிவினராண்டிளையராயினுங் ... ... *
காத்தோம்பித்தம்மையடக்குப-மூத்தொறூஉந் ... ... *
தீத்தொழிலேகன்றித்திரிதந்தெரிவைபோற் ... ... *
போத்தறார்புல்லறிவினார் ... ... *

(இ-ள்.) ஆர்த்த பிணிக்கப்பட்ட—அறிவினர் அறிவினையுடையவர், ஆண்டு வயதால்—இளையராயினும் இளையராகவிருந்தாலும், தம்மை—தங்களை—காத்தோம்பி பாதுகாத்து— அடக்குப பொறிகளையடக்குவார்கள்— புல்லறிவினார் அறிவில்லாதவர்— மூத்தொறூஉம் முதிர்ந்துவளருந்தோறும்—தீத்தொழிலே தீமையாகிய தொழிலையே— கன்றி நினைத்து—திரிதந்து திரிந்து— எரிவைபோல் கொறுக்கைத்தண்டுபோல்—போத்து உட்டுளைக்குற்றம், அறார்-நீங்கார், (எ-று) ❁ இ-ம், அறிவுடையார் இளையராயினுங் குற்றம்வாராமற் றங்களைக்காத்து நடப்பார்கள், அறிவில்லரர் முதிர்வயதுள்ளோராயினுங் குற்றஞ்செய்தலை விடார்கள் என்பதாம். ☞ அறிவினர்-எ, அடக்குப-ப, தம்மை-செ, புல்லறிவினார்-எ, அறார்-ப, போத்து-செ, [பொத்துபோத்தென நீண்டது.]

செழும்பெரும்பொய்கையுள்வாழினுமென்றும் ... ... *
வழும்பறுக்க * கில்லாவாந்தேரை-வழும்பில்சீர் ... ... *
நூல்கற்றக்கண்ணு நுணுக்கமொன்றில்லாதார் ... ... *
தேர்கிற்கும்பெற்றியரிது ... ... *

(இ-ள்.) தேரை தவளைகள்—செழும் செழித்த—பெரும் பெரிய, பொய்கையுள் தடாகத்துள்—என்றும் எந்நாளும்— வாழினும் வாழ்ந்தாலும்—வழும்பு வழும்பென்னுங்குற்றத்தை—அறுக்ககில்லாவாம் -நீக்கமாட்டாவாம்—வழும்பு குற்றம், இல் இல்லாத—சீர் சிறப்புடைய—நூல் நூல்களை, கற்றக்கண்ணும் கற்றாலும்— நுணுக்கம் நட்பவறிவு—ஒன்றில்லாதார் ஒன்றில்லாதவர்—தேர்கிற்கும் தெரிந்துகொள்ளும்—பெற்றி தன்மை—அரிது அருமை—(எ-று) ❁ இ-ம், தவளைகள் பொய்கையுள்வாழ்ந்தாலும் வழும்பை நீக்கிக்கொள்ளாவாம் அதுபோல அறிவில்லாதார் நூலைக்கற்றாலுமதன்பொருளையறிந்துகொள்ளார் என்பதாம், ☞ ஒன்றில்லாதார் எ, அரிது-ப, * (அகத்தியம்) கில்கில்விரண்டுமெதிர்மறையிடைச்சொல். (உ)

கணமலைநன்றுடைகண்ணின்றொருவர் ... ... *
குணனேயுங்கூறற்கரிதாற்-குணனழுங்கக் ... ... *

குற்றமுழைநின்றுகூறுஞ்சிறியவர்கட்... ... ...*
கெற்றாலியன்றதோநா... ... ... *

(இ-ள்.) கணமலை-கூட்டமாகியமலைகளையும், நன்னாடு-நல்லநாட்டையுமுடையபாண்டியனே—கண்ணின்று முன்னின்று—ஒருவர்-ஒருவருடைய, குணனேயும்-நற்குணத்தையாகிலும்—கூறற்கு சொல்லுதற்கு, அரிது-அருமையாயிருக்க, குணன்-அவரதுகுணம், அழுங்க-கெட, குற்றம்-குற்றத்தை—உழைநின்று-அவரிடத்துநின்று—கூறும்-சொல்லும், சிறியவர்கட்கு-அறிவிலார்க்கு—நா-நாவானது, எற்றாலியன்றதோ-எதினாற்செய்ததோ, (எ-று) ❁ இ-ம்-பாண்டியனே ஒருவர்குணத்தைப்புகழ்ந்துசொல்லுதலரிதாயிருக்கவவர்கள்முன்னின்று இகழ்ந்துசொல்லுஞ்சிறியவர்கட்கு நாவெதினாற்செய்ததோவென்பதாம். ☞ நா-எ, எற்றாலியன்றதோ-ப, ஆல்-அசை. (௫)

கோடேந்தகலல்குற்பெண்டிர்தம்பெண்ணீர்மை*
சேடியர்போலச்செயறேற்றார்-கூடிப்... ... ...*
புதுப்பெருக்கம்போலத்தம்பெண்ணீர்மைகாட்டி*
மதித்திறப்பர்*மற்றையவர்... ... .*

(இ-ள்.) கோடு-இருகரைகொண்டு—ஏந்து-உயர்ந்து—அகல்-அகன்ற—அல்குல்-அல்குலையுடைய—பெண்டிர்-குலமாதர்—தம்-தமது, பெண்ணீர்மை-பெண்டன்மையை—சேடியர்போல-தாதிகளைப்போல, செயல்-அழகுசெய்தலை—தேற்றார்-அறியார், கூடி-சேர்ந்து, புதுப்பெருக்கம்போல-புதியவெள்ளம்போல, தம்-தம்முடைய—பெண்ணீர்மைகாட்டி-பெண்டன்மையைக்காட்டி, மற்றையவர்-பொதுமாதர்—மதித்து-தம்மைமதித்து—இறப்பர்-நடப்பார்—(எ-று) ❁ இ-ம்-குலமளிர்தங்களையலங்கரித்துக்கொள்ளார்- விலைமகளிர்தங்களையலங்கரித்துக்கொள்வார்களென்பதாம் ☞ பெண்டிர் எ, தேற்றார்-ப, மற்றையவர் எ, இறப்பர்-ப, * (அகத்தியம்) மற்றையசைநிலைசுட்டிற்கினமே

தளிர்மேலேநிற்பினுந்தட்டாமற்செல்லா........*
வுளிநீரர்மாதோகயவ-ரளிநீரார்க்...... ... .*
கென்றானுஞ்செய்யாரெனைத்தானுஞ்செய்பவே... *
யின்னாங்குசெய்வார்ப்பெறின்... ....*

(இ-ள்.) கயவர்-கீழ்மக்கள்—தளிர்மேலே-தளிரின்மேலே, நிற்பினும்-நின்றாலும்—தட்டாமல்-அடியாமல்—செல்லா-உள்ளிறங்காத, உளிநீரர்-உளிகளுக்கொப்பானகுணமுடையவராவார், அளிநீரார்க்கு-கிருபைக்குணமுடையார்க்கு—என்றானும்-யாதாகிலும், செய்யார்-உதவிசெய்யார்—இன்னாங்கு-துன்பங்களை, செய்வார்-செய்பவர்களை—பெறின்-பெற்றால்—எனைத்தானும்-யாதாகிலுமோருதவி—செய்ய-செய்

வார்கள்—(எ-று)※இ-ம், கீழ்மக்கள் கிருபையையுடையோர்க்குக்கொடார்கள் துன்பஞ்செய்பவர்களுக்குக் கொடுப்பார்கள் - என்பதாம், ☞ கயவர்-எ, செய்ப-ப, மாதோ-வ, அசைகள். (௫)

மலைநலமுள்ளுங்குறவன்பயந்த ※
விளைநிலமுள்ளுமுழவன்-சிறந்தொருவர் ※
செய்தநன்றுள்ளுவர்சான்றோர்கயந்தன்னை ※
வைததையுள்ளிவிடும் ※

(இ-ள்.) குறவன்-வேடன்—மலைநலம்-மலையிலுள்ள நன்மைகளை, உள்ளும்-எண்ணுவான்—உழவன்-பயிர்செய்வோன்—பயந்த-பயன்றந்த—விளைநிலம்-விளைநிலத்து நன்மைகளை—உள்ளும்-எண்ணுவான்—, சான்றோர்-மேலோர்—சிறந்த-சிறப்புடைய, ஒருவர்-ஒருவர்—செய்த செய்த—நன்று-நன்மைகளை—உள்ளுவர்-எண்ணுவார், கயம்-கீழ்மகன்—தன்னை-தன்னை, வைததை-ஒருவன்வைததை—உள்ளிவிடும்-எண்ணுவான்—(எ-று)※இ-ம், வேடன்மலையின்பலனையெண்ணுவான்உழுபவன்நிலத்தின்பலனையெண்ணுவான் மேலோர்பிறருதவியபலனையெண்ணுவார்கீழ்மகன்ஒருவன்வைததையெண்ணுவானென்பதாம். ☞ கயம்-எ, உள்ளிவிடும்-ப, வைததை-செ (சிறந்தஎன்பதினகரம்விகாரத்தாற்றொக்கது.) (௬)

ஒருநன்றிசெய்தவர்க்கொன்றியெழுந்த ※
பிழைநூறுஞ்சான்றோர்பொறுப்பர்-கயவர்க் ※
கெழுநூறுநன்றிசெய்தொன்றுதீதாயி ※
னெழுநூறுந்தீதாய்விடும் ※

(இ-ள்.) சான்றோர்-மேலோர், ஒருநன்றிசெய்தவர்க்கு-ஒருதவிசெய்தவர்களுக்கு—ஒன்றி-பொருந்தி—எழுந்த-உண்டாகிய, பிழைநூறும்-நூறுகுற்றங்களையும்—பொறுப்பர்-பொறுத்துக்கொள்வார்கள், கயவர்க்கு-கீழ்மக்களுக்கு—எழுநூறு நன்றி-எழுநூறு நன்மைகளை, செய்து-பண்ணி—ஒன்றுதீதாயின்-ஒன்றுகுற்றமாகில், எழுநூறும்-முன்செய்தவெழுநூறு நன்மைகளும்— தீதாய்விடும் - குற்றமாய்விடும்—(எ-று)※இ-ம்-மேலார் தங்களுக்கொருநன்றிசெய்பவர்களுக்குண்டான நூறுகுற்றங்களையும்பொறுத்துக்கொள்ளுவார்கள் கீழோர்க்கெழுநூறுநன்றிசெய்துஒருநன்றிகுற்றமானால்முன்செய்தவெழுநூறுநன்றியுங்குற்றமாய்விடும்-என்பதாம் ☞ சான்றோர்-எ, பொறுப்பர்-ப, பிழை-செ, நன்றி-எ, தீதாய்விடும்-ப. (௭)

எட்டைப்பருவத்துமிற்பிறந்தார்செய்வன ※
மோட்டிடத்துஞ்செய்யார்முழுமக்கள்-கோட்டை ※
வைரஞ்செறிப்பினும்வாட்கண்ணாய்பன்றி ※
செயிர்வேழமாகுதலின்று ※

(இ-ள்.) வாட்கண்ணாய்- வாள்போலுங்கண்களையுடையவளே — பன்றி-பன்றியானது — கோட்டு-கொம்பினிடத்து — ஐ- அழகிய — வைரம்-வைரமானது — செறிப்பினும்-நெருங்கியிருந்தாலும் — செயிர்-கோபம்பொருந்திய — வேழமாகுதல்-யானையாகுதல் — இன்று-இல்லை — (அதுபோல)முழுமக்கள் கீழ்மக்கள் — எட்டைப்பருவத்தும்-தரித்திரகாலத்தும் — இற்பிறந்தார்-நற்குடியிற்பிறந்தார் — செய்வன- செய்காரியங்களை — மோட்டிடத்தும்-செல்வத்தினிடத்தும் — செய்யார்-செய்யார்கள்,(எ-று) இ-ம்.கொம்பில்வைரமடைந்தாலும் பன்றி யானையாகாதுஅதுபோல மேலோர்வறுமையிற் செய்காரியங்களைக் கீழ்மக்கள்செல்வத்திடத்துஞ்செய்யார்கள்-என்பதாம். ☞ முழுமக்கள்-எ,செய்யார்-ப,செய்வன-செ. (அ)

இன்றாதுமிந்நிலையேயாதுமினிச்சிறிது ... *
நின்றாதுமென்றுநினைத்திருந்-தொன்றி ... *
யுரையின்மகிழ்ந்துதம்முள்ளம்வெருவி ... *
மரையிலையின்மாய்ந்தார்பலர் ... *

(இ-ள்.) இன்று-இன்று — ஆதும்- செல்வம்பெறுவோம் — இந்நிலையே-இப்பொழுதே — ஆதும்-பெறுவோம், இனி-இனிமேல் — சிறிது-சிறிதுபொழுது — நின்று-கழித்து — ஆதுமென்று- பெறுவோமென்று — நினைத்திருந்து-எண்ணியிருந்து — ஒன்றி-பொருந்தி — உரையின்மகிழ்ந்து-சொலலால்மகிழ்ந்து — தம்முள்ளம்-தம்முடையமனம் — வெருவி-வேறுபட்டு — மரையிலையின்-தாமரையிலைபோல — மாய்ந்தார்-இறந்தார் — பலர்-அநேகர் — (எ-று) இ-ம்.அநேகர் இன்றுவாழ்வோமிப்பொழுதுவாழ்வோ மினிச்சிலகாலஞ்சென்றுவாழ்வோமென்றுநினைத்துச்சொல்லால்மகிழ்ந்திறந்தார்கள்-என்பதாம். ☞ பலர்-எ,மாய்ந்தார் ப (நன்னூல்)ஒருமொழிமூவழிக் குறைதலுமணைத்தே இவ்விதியால்மறைதலைக்குறைப்பதம்[மரையிலையின்என்றதற்குமரைமான்தின்ன இலைச்சீரணமானதுபோலவெனினும் பொருந்தும்.] (௯)

நீருட்பிறந்துநிறம்பசியதாயினு ... *
மீரங்கிடையகத்தில்லாகு-மோரு ... *
நிறைப்பெருஞ்செல்வத்துநின்றக்கடைத்து ... *
மறைப்பெருங்கல்லன்னாருடைத்து ... *

(இ-ள்.) நீருட்பிறந்தும்-நீரிடத்திற்பிறந்தும் — நிறம்பசியதாயினும்-நிறம்பசுமையாயிருந்தாலும் — ஈரம்-ஈரமானது — கிடையகத்து-சடையினுள்ளே — இல்லாகும்-இல்லையாகும் — (அதுபோல) நிறை - நிறைந்த, பெருஞ்செல்வத்து-பெரியசெல்வத்தில் — நின்றக்கடைத்தும்-நின்றாலும், மறை-மறைக்கும், பெரும்-பெரிய, கல்லன்னார்-கற்கொ

டானவரை, உடைத்து-உடையது உலகம், (எ-று) ❁ இ-ம். சடை நீரிலிருந்தாலும் தனுளீரமிராது அதுபோல நிறை செல்வத்திருந்தாலும் உதவி செய்யாதாரை உலகமுடையது என்பதாம். ☞ உலகம்-எ, உடைத்து-ப, கவன்றூர்-செ, ஒரும் இடைச்சொல். (௰)

கயமை-முற்றிற்று.

௩௭-ம்-அதிகாரம்.

பன்னெறி.

அஃதாவது-பலவழிகளைச் சொல்லுதலாம்.

மழைதிளைக்குமாடமாய்மாண்பமைந்தகாப்பா ... ❊
யிழைவிளக்குநின்றிமைப்பினென்னும்- விழைதக்க
மாண்டமனையாளையில்லாதானில்லகந் .... ❊
காண்டற்கரியதோர்காடு .... ❊

(இ-ள்.) விழைதக்க-விரும்பத்தக்க — மாண்ட- நற்குண நற்செய்கையுடைய — மனையாளை-மனையவளை — இல்லாதான்-இல்லாதவனுடைய — இல்லகம்-வீடானது, மழை-மேகம் — திளைக்கும்-தவழும் — மாடமாய்-மாளிகையாய் — மாண்பு-பெருமை — அமைந்த-நிரம்பிய — காப்பாய்-காவலாய் — இழை-ஆபரணங்கள் — விளக்கு விளக்கைப்போல — நின்றிமைப்பின் நின்று-பிரகாசித்தால், என்னும்-என்னபிரயோசனம் — காண்டற்கு- பார்ப்பதற்கு — அரியதோர்காடு -, அரிதாகியதோர் காட்டுக்கொப்பாம் — (எ-று) ❁ இ-ம். நற்குண நற்செய்கையுடைய மனையவளை இல்லாதவன் வீடானது எவ்வளவு சிறப்புடையதாயினுங் காட்டுக்கொப்பாமென்பதாம். ☞ இல்லகம்-எ, காடு போலும்-ப. (௧)

வழுக்கெனைத்துமில்லாதவாள்வாய்க்கிடந்து ..... ❊
மிழுக்கினைத்தாம்பெறுவராயி-னிழுக்கெனைத்துஞ் ❊
செய்குறுப்பாணிசிறிதேயச்சின்மொழியார் ..... ❊
கையுறுப்பாணிபெரிது ... ... ❊

(இ-ள்.) வழுக்கு தவறு — எனைத்தும்-எவ்வளவு — இல்லாத- இல்லாத — வாள்வாய்-வாள்வீரர்காவலிடத்து — கிடந்தும்-இருந்தும் — இழுக்கினை-காவற்சோர்வை — தாம்பெறுவராயின் - தாங்கள்பெறுவாராகில், இழுக்கு-அவ்விழுக்கை, எனைத்தும்- எவ்வளவாகிலும் — செய்குறு-செய்யத்தொடங்காத — பாணி-காலம், சிறிது-சிறிதாம், அச்சின்மொழியார் - மெல்லிய சொற்களையுடைய அப்பெண்கள்கை ஒழுக்கத்தை, உறு-பொருந்தாத-பாணி-காலமே, பெரிது- பெரிது — (எ-று) ❁ இ-ம். தவ

றொன்றில்லாதவாள்வீரர்காவலுளிருந்துங்காவலின்சோர்வைச்சிறிது
தாங்கள்பெறுவாராகில் எவ்வளவாகிலுங் குற்றஞ்செய்யாதகாலஞ்சிறி
தாம், அப்பெண்கள் ஒழுக்கத்தைமேவாதகாலம்பெரிதாம் என்பதாம்.
☞ பாணி-எ, சிறிது-ப, பாணி-எ, பெரிது-ப. (௨)

எறியென்றெதிர்நிற்பாள்கூற்றஞ்சிறுகாலை ……… ⁂
யட்டில்புகாதாளரும்பிணி-யட்டதனை ……… ⁂
யுண்டியுதவாதாளில்வாழ்பேயிம்மூவர் ……… ⁂
கொண்டானைக்கொல்லும்படை ……… ⁂

(இ-ள்.) எறியென்று-அடியென்று—எதிர்நிற்பாள்- எதிரேநிற்பவ
ள்—கூற்றம்-இயமனுக்கொப்பானவள்—சிறுகாலை- சிறுகாலை—அட்
டில்-மடப்பள்ளியில்—புகாதாள்-நுழையாதவள்—அருமபிணி-அரிய
நோவுக்கொப்பானவள்—அட்டதனை-சமைத்ததை, உண்டி- உணவெ
ன்று—உதவாதாள்-(கணவனுக்குக்) கொடாதவள், இல்- வீட்டில்—வா
ழ்-வாழ்கின்ற—பேய்-பேய்க்கொப்பானவள் — இம்மூவர்-இம்மூவரு
ம்—கொண்டானை-கொண்டவனை—கொல்லும்-கொல்லுகின்ற, படை-
ஆயுதங்களுக்கொப்பாவார் (எ-று) ※ இ-ம்- அடியென்றெதிர்நிற்பவள்
யமனுக்கொப்பானவள் சமயல்வீட்டுள்புகாதவள் நோவுக்கொப்பான
வள் சமைத்ததைக்கணவனுக்கிடாதவள்பேய்க்கொப்பானவள், இம்மூ
வரும்ஆயுதங்களுக்கொப்பாவார் என்பதாம். ☞ மூவர்-எ, ஒப்பர்-ப.

கடியெனக்கேட்டுங்கடியான்வெடிபட ……… ⁂
வார்ப்பதுகேட்டுமது தெளியான்-பேர்த்துமோ ……… ⁂
ரிற்கொண்டினிதிருக்குமேமுறுதலென்பவே ……… ⁂
கற்கொண்டெறியுந்தவறு ……… ⁂

(இ-ள்.) கடியென-இல்வாழ்க்கையைக்கடியென்று, கேட்டும்-கேட்டு
ம்—கடியான்-விடான்—வெடிபட-சத்தமுண்டாக—ஆர்ப்பது- பிண
ப்பறையடிப்பதை—கேட்டும்- கேட்டும்— அது தெளியான்-அதைய
றியான்—பேர்த்தும்-மீளவும்—ஓர்-ஒரு—இற்கொண்டு-மனைவியைக்
கொண்டு—இனிது-இன்பமாக—இருக்கும்- இருக்கும்—ஏமுறுதல்-மய
ங்குதலையுடையவனை—கற்கொண்டு-கல்லைக்கொண்டு—எறியும்-அடி
க்கும், தவறென்பகுற்றஞ்செய்யும்- வெறியனென்று—சொல்லுவர்-பு
லவர்—(எ-று) ※ இ-ம்-இல்வாழ்க்கையைவிட்டுவிடெனக்கேட்டும்விடா
ன் பிணப்பறையடிப்பதைகேட்டுந்தெளியான் மீண்டும்விவாகம்பண்
ணி இல்வாழ்க்கையில் மயக்கமடைபவனைப் பித்தனென்றுசொல்லுவர்
பெரியோர் என்பதாம். ☞ அறிவுடையோர் தோன்று வெழுவாய்
என்ப-பட. (௪)

தலையேதவமுயன்றுவாழ்தலொருவர்க் ……… ⁂
கிடையேயினியார்கட்டங்கல்-கடையே ……… ⁂

புணராதென்றெண்ணிப்பொருணசையாற்றம்மை *
யுணரார்பின்சென்றுநிலை.............................*

(இ-ள்.) ஒருவற்கு-ஒருவருக்கு—தவம்-தவத்திலே—முயன்று-முய
ச்சிசெய்து—வாழ்தல்-வாழுதல்—தலையே-உத்தமமே—இனியார்கண்
இனியமகளிரிடத்து—தங்கல-தங்கிவாழ்தல்— இடையே-மத்திமமே,
புணராதென்று-பொருள்பொருந்தாதென்று—எண்ணி- நினைத்து—
பொருள்-திரவியத்தின்—நசையால்-இச்சையால்—தம்மை-தம்மை—
உணரார்-அறியாதார், பின்சென்று-பின்போய், நிலை- நிற்கின்றநிலையா
னது, கடையே-அதருமமே(எ-று) ❊ இ-ம்-ஒருவர்க்குத்தவஞ்செய்து,
வாழ்தலுத்தமம் பெண்களிடத்துவாழ்தல்மத்திமம் பொருளாசையாற்,
பிறரிடத்திற்சேவித்தல்அதருமம் என்பதாம். ☞ தலைஇடைகடை-எ, வா
ழ்தல்-தங்கல் நிலை-ப. (௫)

கல்லாக்கழிப்பர்தலையாயார்நல்லவை.........................*
துவ்வாக்கழிப்பரிடைகள்-கடைக..............................*
ளினிதுண்மேமாரப்பெறேம்யாமென்று.........*
முனிவினாற்கண்பாடிலர்...................................*

(இ-ள்.) தலையாயார் உத்தமர்கள்—கல்லா பலநூலைக்கற்று—கழிப்ப
ர் காலங்கழிப்பார்கள்—இடைகள் மத்திமர்கள்—நல்லவை நல்லவுண
வுகளை—துவ்வா உண்டு—கழிப்பர் காலங்கழிப்பார்கள், கடைகள் அத
ர்மர்கள், இனிது இன்பமாக, உண்மேம்- உண்டிலேம்—ஆர-நிறைய,
பெறேம் செல்வம்பெற்றிலேம் — யாமென்றும் யாமென்று நினைத்
தும்—முனிவினால் வெறுப்பால்— கண்பாடிலர் நித்திரைசெய்யார்க
ள்—(எ-று) ❊ இ-ம்-உத்தமர்கள்கற்றுப் பொழுதுபோக்குவார்கள்மத்
திமர்கள்உண்டுபொழுதுபோக்குவார்கள் அதர்மர் பொருளில்லையென்
றுவெறுப்பாற்பொழுதுபோக்குவார்கள் என்பதாம். ☞ தலையாயார்
இடைகள் கடைகள்-எ, கழிப்பர்-கழிப்பர்-இலர்-ப. (௬)

செந்நெல்லாலாயசெழுமுளைமற்றுமச்...........*
செந்நெல்லேயாகிவிளைதலா-லந்நெல்.................*
வயனிறையக்காய்க்கும்வளவயலூர..........................*
மகனறிவுதந்தையறிவு.......................................*

(இ-ள்.) செந்நெல்லால்-செந்நெல்லினால்—ஆய-உண்டாகிய—செ
ழுமுளை செழித்தமுளை—மற்றும் பின்னும், அச்செந்நெல்லேயாகி-
அந்தச்செந்நெல்லேயாகி—விளைதலால் விளைகின்றதால், அந்நெல் அ
ந்தச்செந்நெல்—வயனிறைய வயல்முழுவதும்— காய்க்கும் காய்க்கு
ம்—வளம் வளப்பமுடைய—வயல்கழனிசூழ்ந்த, ஊர மருதநிலத்தை
யுடையபாண்டியனே — தந்தையறிவு பிதாவினறிவே — மகனறிவு

பிள்ளையறிவு—(எ-று) ❋ இ-ம், பாண்டியனே பிதாவுக்குள்ளவறிவே பிள்ளைக்கறிவாமென்பதாம், ☞ தந்தையறிவு-எ, மகனறிவு ப. (எ)

உடைப்பெருஞ்செல்வருஞ்சான்றோருங்கெட்டுப் ... *
புடைப்பெண்டிர்மக்களுங்கீழும்-பெருகிக் ... *
கடைக்காறலைக்கண்ணதாகிக்குடைக்கால்போற் ... *
கீழ்மேலாய்நிற்குமுலகு ... *

(இ-ள்.) உடை பொருளுடைய—பெருஞ்செல்வரும் மிக்கசெல்வரும்—சான்றோரும் பெரியோரும்—கெட்டு அழிந்து, புடைப்பெண்டிர் வைப்பாட்டிகளுடைய—மக்களும் பிள்ளைகளும், கீழும் கீழானவர்களும்—பெருகி பெருத்து—கடைக்கால் கடையிடத்தது, தலைக்கண்ணதாகி முதலிடத்ததாகி—குடைக்கால்போல் குடையினுடைய கால்போல—கீழ் கீழானது— மேலாய்நிற்கும் மேலானதாய்நிற்கும், உலகு இவ்வுலகம்—(எ-று.) ❋ இ-ம், செல்வர்களும் பெரியோர்களுங் கெட்டு வைப்பாட்டி பிள்ளைகளுங் கீழ்மக்களும் பெருத்துக் குடையின்காலைப்போல முடியடியாகி அடிமுடியாகிக் கீழ்மேலாயிருக்கும்-உலகு-என்பதாம், ☞ உலகு-எழுவாய்-நிற்கும்-பயனிலை. (அ)

இனியார்தந்நெஞ்சத்துநோயுரைப்பவந்நோய் ... *
தணியாதவுள்ளமுடையார்-மணிவரன்றி ... *
வீழுமருவிவிறன்மலைநன்னாட ... *
வாழ்வின்வரைபாய்தனன்று ... *

(இ-ள்.) மணிவரன்றி மணிகளைவாரிக்கொண்டு—வீழுமருவி விழுகின்ற யாற்றையும்—விறல் பலம்பொருந்திய—மலை மலையையும்—நன்னாட நல்லநாட்டையுமுடைய பாண்டியனே, இனியார் இனியசிநேகிதர், தம் தம்முடைய—நெஞ்சத்து மனதுள்—நோய் துன்பத்தை—உரைப்ப சொல்ல—அந்நோய் அத்துன்பத்தை— தணியாத மாற்றாத—உள்ளமுடையார் மனமுடையவர்—வாழ்வின் வாழ்வதினும்—வரைபாய்தல் மலையின்மேலேறிவீழ்தல்—நன்று நல்லது—(எ-று) ❋ இ-ம், பாண்டியனே சிநேகர் துன்பத்தை நீக்காதவர்கள் வாழ்கிறதினு மலைமேலேறி வீழ்ந்திறத்தலே நல்லது என்பதாம். ☞ வரைபாய்தல்-எ, நன்று-ப. (௯)

புதுப்புனலும்பூங்குழையார்நட்புமிரண்டும் ... *
விதுப்பறநாடின்வேறல்லப்-புதுப்புனலு ... *
மாரியறவேயறுமேயவரன்பும் ... *
வாரியறவேயறும் ... *

(இ-ள்.) புதுப்புனலும் புதுநீரும்— பூங்குழையார் அழகியகுண்டலத்தையுடையவரது—நட்பும் சிநேகமும்—இரண்டும் இவ்விரண்டும்—விதுப்பற மயக்கமற—நாடின் ஆராயில்— வேறல்ல வேறுபாடில்லை—புதுப்புனலும் புதுநீரும்— மாரியறவே மழைநீங்கவே—

அறும் அற்றுப்போம், அவரன்பும் அம்மாதரன்பும், வாரியறவே பொருள்வரவு நீங்கவே — அறும் அற்றுப்போம் — (எ-று) ❁ இ-ம், புதுவெள்ளமும் வேசைர்நட்பும் ஒன்றாகும், மழையில்லாவிடில் புதுவெள்ளமில்லை-பொருளில்லாவிடில்-வேசையரன்பில்லை-என்பதாம். ☞ அன்பு-எ, அறும்-ப. (௰)

பன்னெறி-முற்றிற்று.

௯௮-ஆம்-அதிகாரம்.

பொதுமகளிர்.

அஃதாவது- யாவர்க்கும்பொதுவாகியவேசையர்தன்மையைச்சொல்
[லுதலாம்

விளக்கொளியும்வேசையர்நட்புமிரண்டுந் ...
துளக்கறநாடின்வேறல்ல-விளக்கொளியு... ...*
நெய்யற்றகண்ணேயறுமேயவரன்புங்... ... *
கையற்றகண்ணேயறும் .. ..*

(இ-ள்.) விளக்கொளியும் விளக்கினது பிரகாசமும் — வேசையர்நட்பும் வேசையருடைய சிநேகமும், இரண்டும் இவ்விரண்டும் — துளக்கற குற்றமற — நாடின் ஆராயில் — வேறல்ல வேறுபாடில்லை, நெய்யற்றகண்ணே தைலம்வற்றியபொழுது — விளக்கு விளக்கினுடைய, ஒளியும் பிரகாசமும் — அறும் அற்றுப்போம் — (அதுபோல) அவரன்பும் அவ்வேசையரன்பும், கையற்றகண்ணே கைப்பொருளற்றபொழுது — அறும் அற்றுப்போம் — (எ-று) ❁ இ-ம், தைலம்வற்றியபொழுது விளக்கொளியற்றுப்போம் (அதுபோலக்) கைப்பொருளற்றபொழுது வேசையர்நட்பற்றுப்போம் என்பதாம் ☞ நட்பு எ, அறும்-ப, எ-உ-ம்-அசைகள். (௧)

அங்கோட்டகல்குலாயிழையாணம்மொடு... ... *
செங்கோடுபாய்துமேயென்றாண்மற்-செங்கோட்டின் *
மேற்காணமின்மையான்மேயாதொழிந்தாளே... ...*
காற்கானோய்காட்டிக்கலுழ்ந்து... ... ... *

(இ-ள்.) அம் அழகிய — கோடு பக்கம் — அகல் அகன்ற — அல்குல் அல்குலையுடைய — ஆய் ஆய்ந்த — இழையாள் ஆபரணங்களைத்தரித்தவள் — நம்மொடு நம்முடன் — செங்கோடு செவ்வியமலைச்சிகரத்தின் மேல், பாய்தும் எறிவிழுவோம், என்றாள் என்றுசொன்னவள், செங்கோட்டின்மேல் செவ்வியமலைச்சிகரத்தின்மேல்எறிவிழுதற்கு, காணம் பொருள், இன்மையால் இல்லாமையால், கால் தன்கால்களுக்கு, கால் வாதத்தினால்வரும், நோய் நோயை, காட்டி காண்பித்து, கலுழ்ந்து அழுது, மேயாது உடன்வராது, ஒழிந்தாள் நீங்கினாள். (எ-று) ❁ இ-ம்

அழகியஅல்குலையுடையவள் நம்முடன்மலைமேலேறிவிழுவோமென்று சொன்னாள்-பொருளில்லாமையால்மலைமேலேறிவிழுதற்குநம்முடன் வாராதிருந்தாள்-எ-ம் ☞ ஆயிழையாள்-எ, ஒழிந்தாள்-பு,எ-மன்-அசை,

அங்கண்விசும்பினமரர்தொழப்படுஞ்... ....*
செங்கண்மாலாயினுமாகமற்-றங்கைக் ....*
கொடுப்பதொன்றில்லாரைக்கொய்தளிரன்னார்... *
விடுப்பர்தங்கையாற்றொழுது..................*

(இ-ள்.) கொய்-கொய்யும்-தளிரன்னார்-தளிர்போலுமேனியையுடையவேசையர்—அம்-அழகிய—கண்-இடமகன்ற,விசும்பின்-சுவர்க்கத்தில்,அமரர்-தேவர்களால்,தொழப்படும்-வணங்கப்படும்,செங்கண்-சிவந்தகண்களையுடைய—மாலாகிலும்-இந்திரனாகிலும்,ஆக- ஆகக்கடவது, தங்கை-தமதுகையில்,கொடுப்பது-கொடுப்பதற்கு, ஒன்று- ஒருபொருளும்—இல்லாரை-இல்லாதவரை,தங்கையாற்றொழுது- தங்கையாற்கும்பிட்டு,விடுப்பர்-விட்டுவிடுவர்—(எ-று)☼இ-ம்வேசையர்கள் இந்திரனாகிலும் கைப்பொருளில்லாரை விட்டுவிடுவர்-எ-ம்,☞ தளிரன்னார் எ,விடுப்பர்-பு,இல்லாரை-செ,மன்-ஒழியிசை. (௩)

ஆணமினெஞ்சத்தணிநீலக்கண்ணார்க்குக் ....*
காணமில்லாதார்கடுவனையர்-காணவே... .. .. *
செக்கூர்ந்துகொண்டாருஞ்செய்தபொருளுடையா
ரக்காரமன்னாரவர்க்கு .... *

(இ-ள்.) ஆணம்-அன்பு—இல்-இல்லாத—நெஞ்சத்து- மனதையும், அணி-அழகிய, நீலம் நீலோற்பலம்போலும், கண்ணார்க்கு-கண்களையுமுடையவேசையர்க்கு—காணம்-பொருள்—இல்லாதார்-இல்லாதவர்கள்,கடுவனையர்-விஷத்துக்கொப்பானவர்—காணவே-யாருங்காண, செக்கு செக்கை,ஊர்ந்து-செலுத்தி,கொண்டாரும்-கொண்டவரும், செய்த-தேடிய,பொருளுடையார்-திரவியமுடையவர், அவர்க்கு-அவ்வேசையர்க்கு—அக்காரமன்னார்-சருக்கரைக்கொப்பாவார்(எ-று)☼இ-ம் வேசையர்க்குப் பொருளில்லாதார்விஷத்துக்கொப்பாவார்-பொருளுள்ளவர் அசுத்தராகிலும் அவ்வேசையர்க்குச்சருக்கரைக்கொப்பாவார் என்பதாம்,☞ இல்லார்-எ,அனையர்-பு,கடு-செ,உடையார்-எ, அன்னார்-பு,அக்காரம்-செ. (௪)

பாம்பிற்கொருதலைகாட்டியொருதலை........ ...*
தேம்படுதெண்கயத்துமீன்காட்டு-மாங்கு........*
மலங்கன்னசெய்கைமகளிர்தோள்சேர்வார் ... . ..*
விலங்கன்னவெள்ளறிவினார்...... ....*

(இ-ள்.) விலங்கன்ன-மிருகங்களையொத்த—வெள்ளறிவினார்-வெள்ளறிவுடையார்—பாம்பிற்கு பாம்பிற்கு, ஒருதலை-ஒருதலையை, காட்டி

காண்பித்து, ஒருதலை மற்றொருதலையை—தேம்படு தேனுண்டாகு மலர்பொருந்திய, தெண் தெளிந்த, கயத்து தடாகத்தில், மீன் மீனுக்கு, காட்டும் காண்பிக்கும்—மலங்கன்ன விலாங்குமீனையொத்த, செய்கை-செய்கையினையுடைய—மகளிர் வேசையர்—தோள் தோள்களை, சேர்வார்-அணைவார். (எ-று) ✽ இ-ம்-அறிவில்லார் விலாங்குமீனுக்கொப்பாகியசெய்கையையுடைய வேசையரைச்சேர்வார்கள்-எ-ம். ☞ வெள்ளறிவினார்-எ, சேர்வர்-ப, தோள்-செ, ஆங்கு-அசை. (௫)

பொத்தநூற்கல்லும்புணர்பிரியாவன்றிலும்போ ✽
னித்தலுநம்மைப்பிரியலமென்-றுரைத்த .. [ஞ்சே
பொற்றொடியும்போர்த்தகர்க்கோடாயினாணன்னெ
நிற்றியோபோதியோநீ........ ✽

(இ-ள்.) நன்னெஞ்சே நல்லமனமே—நூல் நூலிற்கோக்கப்பட்ட, பொத்த துளைத்த—கல்லும் மணிகளும், புணர்பிரியா இணைபிரியாத, அன்றிலும்போல் அன்றிற்பறவையும்போல— நித்தலும் எந்நாளும், நம்மை நம்மை—பிரியலமென்று பிரியோமென்று—உரைத்த-சொன்ன—பொற்றொடியும் பொன்வளையலையுடையவேசையும், போர்த்தகர் போர்செய்யுமாட்டுக்கடாவின்கோடாயினாள்- கொம்புபோலாயினாள்—நீ-நீ—நிற்றியோ என்னிடத்துநிற்கிறாயோ, போதியோ அவளிடத்திற்போகிறாயோ—(எ-று) ✽ இ-ம்-மனமேமணியும்நூலும்போலும், ஆணன்றிலும் பெண்ணன்றிலும்போலும் எந்நாளுநம்மைப்பிரியோமென்று சொன்னவேசையும்பகையானாள்- நீ என்னிடத்திருக்கிறாயோ-அவளிடத்திற்போகிறாயோ-என்பதாம். ☞ நீ-எ, நிற்றியோ-போதியோ-ப. (௬)

ஆமாபோனக்கியவர்கைப்பொருள்கொண்டு ... ✽
சேமாபோற்குப்புறூஉஞ்சில்லைக்-கணன்பினை .. ✽
யேமாந்தெமதென்றிருந்தார்பெறுபவே .... ✽
தாமாம்பலரானகை.......... ✽

(இ-ள்.) ஆமாபோல்-காட்டுபசுவைப்போல—நக்கி-இன்புறநக்கி, அவர்கை-அவர்கையிலிருக்கும், பொருள்கொண்டு-பொருளைக்கைக்கொண்டு—சேமாபோல்-இடபமாகியமிருகம்போல, குப்புறூஉம்- குதித்தோடும், சில்லைக்கண்-காமியாகியவேசையிடத்து, அன்பினை-அன்பை, ஏமாந்து-மெய்யென்றேமாந்து, எமதென்றிருந்தார்-எம்முடையதென்றிருந்தவர்—தாம்-தாங்கள்—பலரால் அனேகரால், நகை இகழ்ச்சியை—பெறுப பெறுவார்கள்(எ-று) ✽ இ-ம்- காட்டுப்பசுவைப்போல இன்புறநக்கிப்பொருளைக்கைக்கொள்ளும்வேசையரன்பைமெய்யென்றிருந்தவர் பலராலிகழ்ச்சிபெறுவர் என்பதாம். ☞ இருந்தவர்-எ, பெறுப-ப, நகை-செ, ஆம்-அசை. (௭)

ஏமாந்தபோழ்தினியார்போன்றின்னாராய்த்... *
தாமார்ந்தபோதேதகர்க்கோடா-மானேக்கிற்......*
றன்னறிப்பெண்டிர்தடமுலைசேராரே............*
செந்நெறிச்சேர்துமென்பார்... ....*

(இ-ள்.) செந்நெறி செவ்வையானவழியில்—சேர்துமென்பார் அடைவோமென்று சொல்லுவோர், ஏமாந்தபோழ்தின் காமுகர்பொருளேமாந்தகாலத்து— இனியார்போன்று அவர்க்கின்பமுடையார்போலாகி—தாமார்ந்தபோதே அவர்பொருளில்லாதிச்சித்தகாலத்து, இன்னாராய் சத்துருவாய்— தகர்க்கோடாம் ஆட்டுக்கடாவின்கொம்புபோலாகும், மானேக்கின் மான்போலும்பார்வையுடைய— தன்னெறி தமதுகள்ளவழியிலிருக்கும்—பெண்டிர் வேசையர்களுடைய—தடமுலை பருத்தமுலையினிடத்து—சேரார் அணையார்—.(எ-று)❋இ-ம் நல்வழிச் சேர்வோமென்பவர்கள் காமுகர்பொருள் கொடுக்குங்காலத்து நேசமாகவும், கொடாக்காலத்துப்பகையாகவுமிருக்கும் வேசியரைச் சேரார்கள் என்பதாம். ☞என்பார்-எ, சேரார் ப, முலை-செ, ஏ-அசை.

ஊறுசெய்நெஞ்சந்தம்முள்ளடக்கியொண்ணுதலா
தேறமொழிந்தமொழிகேட்டுத்-தேறி............[ர்
ஏமமொன்றுகொள்வாருங்கொள்பவேயார்க்குந்... *
தமரல்லர்தம்முடம்பினார்...... ....*

(இ-ள்.) ஒண்ணுதலார் ஒளிபொருந்தியநெற்றியையுடையவர், ஊறு-வருத்தம்—செய் செய்யும்—நெஞ்சம் மனதை—தம்முள்ளடக்கி தங்களுக்குள்ளடக்கி— தேற தெளிய—மொழிந்த சொன்ன— மொழி சொல்லை, கேட்டு கேட்டு, தேறி அறிந்து—ஏமமொன்று-எம்முடையவொன்றுகொள்வாரும் கொள்பவரும்— கொள்ப கொள்ளுவர்— யார்க்கும் எவர்க்கும்—தமரல்லர் சுற்றத்தாரல்லர், தம்முடம்பினார் தம்முடம்பைத்தமக்காகவுடையவர்,(எ-று)❋இ-ம் வேசையர்சொன்ன சொல்லைக்கேட்டுஅவர்களைத் தம்முடையவொன்றுகொள்பவர்யாவர்க்குஞ்சிநேகரல்லர்தம்முடம்பைத்தமக்காகவுடையவரென்பதாம். ☞தம்முடம்பினார்-எ, தமரல்லர்-ப, வ-அசை. (௯)

உள்ளமொருவனுழையதாவொண்ணுதலார்...... *
கள்ளத்தாற்செய்யுங்கருத்தெல்லாந்-தெள்ளி ... *
யறிந்தவிடத்துமறியாராம்பாவஞ் ....*
செறிந்தவுடம்பினவர்........ ....*

(இ-ள்.)ஒள் ஒள்ளிய— நுதலார் நெற்றியையுடையவேசையர்—உள்ளம் தமதுள்ளம்—ஒருவின் ஒருவன்—உழையதா இடமாக—கள்ளத்தால் களவால்—செய்யும் செய்யும், கருத்தெல்லாம் நினைவெல்லாம், தெள்ளி ஆராய்ந்து, அறிந்தவிடத்தும் அறிந்தவிடத்தும், பாவம் தீவி

ளை—செறிந்த நெருங்கிய—உடம்பினவர் உடம்பினையுடையார் அறி
யார் அறியாதவராவார்—(எ-று) இ-ம்- பாவிகள்வேசையர் மனதை
யறிந்துமறியாதவராம், எ-ம். ☞ உடம்பினவர்- எ, அறியார்- ப, ஆம்-
அசை. (௰)

பொதுமகளிர்-முற்றிற்று.

௩௯-ம்-அதிகாரம்.

கற்புடைமகளிர்.

அஃதாவது - கற்புள்ளமாதர்தன்மையைச்சொல்லுதலாம்.

அரும்பெறற்கற்பினயிராணியன்ன... ....*
பெரும்பெயர்ப்பெண்டிரெனினும்-விரும்பிப் ...*
பெறுநசையாற்பின்னிற்பாரின்மையேபேணு...*
நறுநுதலாண்மைத்துணை.................. .. ..*

(இ-ள்.) அரும்பெறல் பெறுதற்கரிய— கற்பின் கற்புடைய, அயி
ராணியன்ன இந்திராணிக்கொப்பான, பெரும் பெரிய—பெயர் பெ
யரையுடைய—பெண்டிரெனினும் மனைவியாகினும்—விரும்பி இச்சி
த்து,பெறும்(அநுபவிக்கப்)பெற்ற—நசையால் இச்சையால்— பின்
னிற்பார்(தன்னழகைக்கண்டு)பின்னிற்பவர்—இன்மையே இல்லாமை
யையே—பேணும் பாதுகாக்கும்— நறுநுதலாள் பரிமளநெற்றியை
யுடையாள், நன்மை (நாயகநடையு)நன்மைக்கு—துணை துணையாவா
ள்—(எ-று) இ-ம் இந்திராணிக்கொப்பான செல்வமுள்ளவளானாலு
ம் தன்னைப்பிறரிச்சியாதிருக்க வலங்காரஞ்செய்யாதிருப்பவளே கற்பு
டையவள்-என்பதாம். ☞ நறுநுதலாள் எ, துணை-ப. (௧)

குடநீரட்டுண்ணுமிடுக்கட்பொழுதும்..............*
கடனீரறவுண்ணுங்கேளிர்-வரினுங் ... .*
கடனீர்மைகையாறுக்கொள்ளுமடமொழி... ......*
மாதர்மனையாட்டியாள்...... ....*

(இ-ள்.)குடநீர் ஒருகுடநீரால்—அட்டு சமைத்து—உண்ணும்-புசி
க்கும்—இடுக்கட்பொழுதும் தரித்திரகாலத்தும்—கடல் கடலின்,நீர்-
நீரை,அற முற்றுக—உண்ணும் உண்ணும்—கேளிர் இனத்தார்— வரி
னும் வந்தாலும்,கடனீர்மை செய்கடமைகுணங்களை, கையாறு ஒழுக்
கவழியாக,கொள்ளும் கொண்டிருக்கும்,மடமொழி மென்சொல்லையு
டைய,மாதர் மாதர்கள்,மனை மனைவாழ்க்கைக்குத்தக்க,மாட்சியாள்- பெ
ருமையையுடையாள்,(எ-று) இ-ம். ஒருகுடைநீரிற்சமைத்துண்ணு
மவறுமைக்காலத்தும் கடனீரைமுற்றுகக் குடிக்குஞ் சுற்றத்தார்வந்தா

லுஞ்செய்கடமையைக்கொண்டிருப்பவளே இல்வாழ்க்கைக்குரியமனை யவளாம். எ-ம். ☞ மாதர் எ, மாட்சியாள்-ப. (௨)

நாலாறுமாறாய் நனிசிறிதாயெப்புறனு *
மேலாறுமேனுறைசோரினு-மேலாய *
வல்லாளாய்வாழுமூர்தற்புகழுமாண்கற்பி *
னில்லாளமர்ந்ததேயில் *

(இ-ள்.) நாலாறும்-நாலுதிக்கும்—ஆறாய்-வழியாய்—நனி-மிகவும், சிறிதாய்-சிறியதாய்—எப்புறனும்-எவ்விடத்தும்—மேலாறு- மேல்வழியாய்—மேல்-தம்மேல்—உறை-மழைநீர்—சோரினும் - சொரிந்தாலும்—மேலாய-மேலாகியதருமங்கள்செய்ய—வல்லாளாய்- வலிமையுடையவளாய்—வாழும் - தான்வாழும்—ஊர்- ஊரார்—தற்புகழும்-தன்னைப்புகழும்—மாண்-பெருமைபொருந்திய, கற்பின்-கற்புடைய, இல்லாள்-மனையாள்—அமர்ந்ததே-பொருந்தியதே—இல்-மனையாகும்—(எ-று) ※ இ-ம். வறுமையிலுந்தருமஞ்செய்யுமனமுடையவள் வாழ்ந்திருப்பதே வீடாகும், எ-ம். ☞ இல்-எ, அமர்ந்தது-ப. (௩)

கட்கினியாள் காதலன் காதல்வகைபுனைவா *
ளுட்குடையாளூர் நாணியல்பினா-ளுட்கி *
யிடனறிந்தூடியினிதினுணரு *
மடமொழிமாதராள்பெண் *

(இ-ள்.) கட்கு-கண்ணுக்கு—இனியாள்- இனியவளாய் — காதலன், நாயகன்—காதல்வகை-இச்சிக்கத்தக்கவைகளை—புனைவாள்-அலங்கரிப்பவளாய், உட்குடையாள்-அஞ்சத்தக்கவளாய்—ஊர்-ஊரார்க்கு —நாண்-நாணத்தக்க—இயல்பினாள்-குணமுடையவளாய்— உட்கி-நாயகனுக்குப்பயந்து—இடனறிந்து-சமயமறிந்து—ஊடி-பிணங்கி— இனிதின்-இன்பத்துடன், உணரும் (புணர்தலை) யறியும்— மடமொழி-மெல்லியசொல்லுடைய—மாதராள் மாதானவள்—பெண்- கற்புடைப்பெண்ணாவாள்—(எ-று) ※ இ-ம். கண்ணிற்கினியளாய் நாயகனுக்கு வந்தவளாய் ஊரார்மதிக்கத்தக்கவளாயிருப்பவளே கற்புடையவள் எ-ம். ☞ மாதராள்-எ, பெண்-ப. (௪)

எஞ்ஞான்றுமெங்கணவரெந்தோண்மேற்சேர்ந்தெழினு
மஞ்ஞான்றுகண்டேம்போனாணுதுமா-லெஞ்ஞான்று *
மென்னைகெழீஇயினர்கொல்லோபொருணசையாற் *
பன்மார்புசேர்ந்தொழுகுவார் *

(கருத்து) குலமகள் விலைமகளைப்பழித்தல்கூறுகின்றது.

(இ-ள்.) எஞ்ஞான்றும்-எந்நாளும்—எங்கணவர்- எம்முடையநாயகர்—எந்தோண்மேல்-எம்முடையதோள்களின்மேல்—சேர்ந்தெழினும்-சேர்ந்தெழுந்தாலும்—அஞ்ஞான்று-விவாகஞ்செய்தவந்நாள்—கண்டேம்போல்-யாம்கண்டாற்போல—நாணுதும்- வெட்கத்தையுடை

போம்—எஞ்ஞான்றும் எந்நாளும்—பொருள்-பொருளின்— நசையால்-இச்சையால்—பன்மார்பு-பலருடையமார்புகளை — சேர்ந்தொழுகுவார்-சேர்ந்துநடப்பவர்—என்னகெழீஇயினர்கொல்லோ - என்னையாகத்தழுவினார்களோ—(எ-று)❁இ-ம்.எந்நாளுமென் கணவனைத்தழுவினும்-விவாகஞ்செய்தநாளிற்றழுவினாற்போலநாணமடைகிறேன் பொருளிச்சையால்எந்நாளும்பலபேரைச்சேர்பவர்களெப்படித்தழுவினார்களோஎன்றாள்,எ-ம்.☞ஒழுகுவார்-எ,என்னகொல்லோ-ப,ஆல் அசை. (௫)

உள்ளத்துணர்வுடையானோதிய நூலற்றால் ...... *
வள்ளன்மைபூண்டான்கணொண்பொரு-டெள்ளிய *
வாண்மகன்கையிலயில்வாளனைத்தரோ ... . *
நாணுடையாள்பெற்றநலம் .... *

(இ-ள்.) உள்ளத்து-இதயத்து—உணர்வுடையான்-அறிவுடையவன்—ஓதிய நூலற்று-கற்ற நூற்பயன்போலும்—வள்ளன்மை-கொடுக்குந்தன்மை—பூண்டான்கண்-கொண்டவனிடத்து—ஒண்பொருள் - ஒள்ளியபொருளும்பயன்படும்—தெள்ளிய- தெளிந்த —ஆண்மகன்கையில்- ஆண்மகன்கையில்—அயில்வாள்- கூரியவாள்—அனைத்து- ஒப்பாகும்—நாணுடையாள்-நாணுடையவள்—பெற்றநலம்-பெற்றிருக்கின்றகற்பினலம்—(எ-று)❁இ-ம், அறிவுடையோன்- கற்றகல்விபயன்படுதல்போலும் கொடுப்பவன்கையிற்பொருள்பயன்படும்நாணமுடையவள்பெற்றகற்புச்சுத்தவீரன்கைவாள்போலும்-எ-ம்.☞நலமனைத்து ப,ஆல்-அரோ-அசைகள். (௬)

கருங்கொள்ளுஞ்செங்கொள்ளுந்தூணிப்பதக்கென்
றொருங்கொப்பக்கொண்டானுமூர-னொருங்கொவ்வா
நன்னுதலார்த்தோய்ந்தவரைமார்பநீராடா .... *
தென்னையுந்தோயவரும் .. .. *

(கருத்து) தலைவிதோழிக்குச்சொல்லியது.

(இ-ள்.) ஊரன்-தலைவன்—ஒருங்கொவ்வா-முற்றுமொவ்வாத—நன்னுதலார்-நல்லநெற்றியையுடையாரை—தோய்ந்த-சேர்ந்த—வரைமார்ப-மலைபோலுமார்பு—நீராடாது - நீரிலேமுழுகாது—என்னையும்-என்னையும்—தோய-சேர—வரும் வருவான்—(இஃதெதுபோலெனில்)கருங்கொள்ளும்- கறுத்தகொள்ளையும்—செங்கொள்ளும்- சிவந்தகொள்ளையும், தூணிப்பதக்கென்று-பணத்துக்கு தூணிப்பதக்கென்று—ஒருங்கொப்ப-சரியொக்க—கொண்டானும்- கொண்டான்போலாகும்.(எ-று)❁இ-ம்.என்னாயகன்பலமாதரைச்சேர்ந்து நீராடாது என்னைச்சேரவருவான்இஃதெதுபோலெனில் ஒருவன்கருங்கொள்ளையுஞ்செங்கொள்ளையும்பணத்துக்குத்தூணிப்பதக்கென்று கொண்டான்போலும்,எ-ம்.☞ஊரன்-எ,வரும்-ப. (௭)

கொடியவைகூறுதிபாணநீகூறி ... ... *
னடியையவிட்டொதுங்கிச்சென்று-துடியி ...... *
னிடக்கண்ணனையம்யாமூரற்கதனால் .... *
வலக்கண்ணனையார்க்குரை ... ... *

(கருத்து) தலைவிபாணனுக்குச் சொல்லியது.

(இ-ள்.) பாண-பாணனே—கொடியவை-கொடியசொற்களை—கூறுதி-சொல்லாதே—நீகூறின்-நீசொல்லில்—யாம்-நாம், ஊரற்கு-நாயகனுக்கு—துடியின்-உடுக்கையின்—இடக்கண்-இடதுபக்கத்தை—, அனையம்-ஒப்பாமேனும், அதனால்-அதனாலே—அடி-அடியை—பைய-மெள்ள—இட்டு-வைத்து—ஒதுங்கி-பதுங்கி—சென்று-போய்—வலக்கண்-அவ்வுடுக்கையின்வலதுபக்கத்தை—அனையார்க்கு-ஒப்பானவர்க்கு—உரை-சொல்வாயாக—(எ-று) ※ இ-ம். பாணனே-கொடியசொற்களைச்சொல்லாதே நீசொல்லில் எமதுநாயகனுக்குடுக்கையினிடதுபக்கத்தையொப்பாமேனன், அதனாலுடுக்கையின்வலதுபக்கத்தையொப்பானவருக்குச்சொல்வாயாக-என்பதாம். ☞ நீ-எ, உரை-ப. (௮)

சாய்ப்பறிக்கநீர்திகழுந்தண்வயலூரன்மீ ..... *
தீப்பறக்கநொந்தேனும்யானேமற்-றீப்பறக்கத் *
தாக்கிமுலைபொருததண்சாந்தணியகல ... ... *
நோக்கியிருந்தேனும்யான் ... ... *

(கருத்து) தலைவிபாங்கிக்குச்சொல்லியது.

(இ-ள்.) சாய்ப்பறிக்க-கோரையைப்பிடுங்க—நீர்திகழும்-நீர்விளங்கும், தண்வயல்-குளிர்ந்தவயலையுடைய—ஊரன்மீது-நாயகன்மேல், ஈப்பறக்க-ஈயானதுபறக்க—நொந்தேனும்-நொந்தவளும்—யானே-நானே, தீ-தீப்பொறி—பறக்க-பறக்க—முலை-வேசையர்முலையால்—தாக்கி-மோதி—பொருத-போர்செய்த—தண்சாந்து-குளிர்ந்தசந்தனத்தை—அணியகலம்-அணிந்தமார்பை—நோக்கி-பார்த்து, இருந்தேனும்-இருந்தவளும்—யான்-நானே—(எ-று) ※ இ-ம். எமதுநாயகன்மேலே-ஈப்பறக்க-நொந்தவளுநானே இப்போதுவேசையர் முலைகளாலேதீப்பறக்க மோதிப்போர்செய்தமார்பைப்பார்த்திருந்தவளுநானே என்பதாம். ☞ யான்-எ, நொந்தேன்-ப, யான்-எ, இருந்தேன்-ப, மன்-அசை. (௯)

அரும்பவிழ்தாரினனெம்மருளுமென்று .... *
பெரும்பொய்புரையாதிபாண-கரும்பின் .... *
கடைக்கண்ணனையநாமூரற்கதனா .... *
லிடைக்கண்ணனையார்க்குரை .... *

(கருத்து) தலைவிபாணனுக்குச்சொல்லியது.

(இ-ள்.) பாண-பாணனே — அரும்பவிழ்-பூமுகைவிரிந்த — தாரினன்-மாலையையுடையவன், எம்மருளுமென்று- எமக்கருள்செய்வானென்று, பெரும்பொய்-பெரியபொய்யை — உரையாதி-சொல்லாதே — நாம்-யாம் — ஊரற்கு-நாயகனுக்கு — கரும்பின்-கரும்பினது, கடைக்கண்-கடையிடத்தை, அனையம்-ஒப்பாமேனும், அதனால்-அதனால், இடைக்கண்-கரும்பினடுவிடத்தை — அனையார்க்கு-ஒப்பானவர்க்கு — உரை-சொல்வாயாக — (எ-று) ❋ இ-ம். பாணனே- நாயகனருள்செய்வானென்றுபொய்சொல்லாதே நாயகனுக்குநாம்கரும்பின்கடையிடத்தையொப்பாமேனும், அதனாலேகரும்பினடுவிடத்தையொப்பானவர்க்குச்சொல்வாயாக-என்பதாம். ☞ நீ-எ.உரை-ப. (௰)

கற்புடைமகளிர்- முற்றிற்று.

இரண்டாவது, பொருட்பால்- முற்றிற்று.

மூன்றாவது,

காமத்துப்பால்.

அஃதாவது-காமத்தின்பகுதியைச் சொல்லுதலாம்.

௪௰-ம்-அதிகாரம்.

காமநுதலியல்.

அஃதாவது-காமத்தன்மையைச்சொல்லுதலாம்.

முயங்காக்காற்பாயும் ✻ பசலைமற்றூடி ....✻
யுயங்காக்காலுப்பின்றாங்காமம்-வயங்கோத......✻
நில்லாத்திரையலைக்குநீள்கழித்தண்சேர்ப்ப ......✻
புல்லாப்புலப்பதோராறு ....✻

(௧) தலைமகற்குவாயினேர்ந்ததோழிதலைமகள்புலவிநீங்கச்சொல்லியது.

(இ-ள்.) வயங்கும்-பிரகாசிக்கும் — ஓதம்-கடலோசை — நில்லா-நில்லாமல், திரை-அலைகள் — அலைக்கும்-அலைக்கின்ற — நீள்-நீண்ட, கழி-கழிபொருந்திய — தண்-குளிர்ந்த — சேர்ப்ப-கரையையுடையபாண்டியனே, முயங்காக்கால்-புணராவிடில், பசலை-தேமல் — பாயும்-மெய்யிலுண்டாம், ஊடி-பிணங்கி — உயங்காக்கால்-வருந்தாவிடில், காமம்-காமமானது, உப்பு-இன்பம், இன்றாம்-இல்லையாம், புல்லா-கூடி — புலப்பது-பிணங்குவது, ஓராறு-ஒருவழியின்படாம் (எ-று) ❋ இ-ம், பாண்டியனே புணராவிட்டாற்றேமலுண்டாகும் பிணங்கிச்சேராவிடிலின்ப

மில்லைசேர்ந்துபிணங்குதலொருவழியின்பம்-என்பதாம், ☞ பசலை-காமம்-எழுவாய்-பாயும்-உப்பின்றும்-பயனிலை. (௧)

தம்மமர்காதலர்தார்சூழணியகலம் ....✻
விம்முறயங்குந்துணையில்லார்க்-கிம்மெனப் ......✻
பெய்யவெழிலிமுழங்குந்திசையெல்லா ... .✻
நெய்தலறைந்தன்ன நீர்த்து .... ✻

(கருத்து) பருவங்கண்டாற்றாளாகிய தலைவிதோழிக்குச்சொல்லியது.

(இ-ள்.) தம்-தம்மால—அமர்- இச்சிக்கப்பட்ட—காதலர் நாயகரது, தார்சூழ்-மாலைசூழ்ந்த—அணியகலம்-அழகியமார்பை, விம்ம-அழுந்த, முயங்கும்-தழுவும்—துணையில்லார்க்கு-துணையில்லாதவர்க்கு, இம்மென-இம்மென்னுமோசையாய்—பெய்ய-பொழிய, எழிலி-மேகம், முழங்கும்-சத்திக்கும்—திசையெல்லாம்-திக்கெல்லாம், நெய்தல்-நெய்தற்பறை—அறைந்தன்ன-அறைந்தாற்போலும், நீர்த்து-குணமுடையது, (எ-று) ❃ இ-ம்-தோழியே நாயகர்மார்பையணையுந்தொழிலில்லாதவர்க்குமேகஞ்சத்திக்குந்திசையெல்லாஞ்சாப்பறையடித்தாற்போலும்-என்பதாம், ☞ முழக்கம்-எ, நீர்த்து-ப, இம்மெனல்-ஓசைக்குறிப்பு. (௨)

கம்மஞ்செய்மாக்கள்கருவியொடுக்கிய ... ...✻
மம்மர்கொண்மாலைமலராய்ந்து-பூத்தொடுப்பாள் ✻
கைம்மாலையிட்டுக்கலுழ்ந்தாடுணையில்லார்க் ....✻
கிம்மாலையென்செய்வதென்று ....✻

௧, தலைமகள்செலவுடன்படாமையைத்தலைமகற்குத்தோழிசொல்லியது

(இ-ள்.) கம்மம்-தொழில்—செய்-செய்யும்—மாக்கள்-மக்கள், கருவி-தம்முடையகருவிகளை, ஒடுக்கிய-அடக்கிய—மம்மர்-மயக்கம், கொள்-கொண்டிருக்கிற—மாலை-மாலைக்காலத்து—மலர்-மலரை, ஆய்ந்து-தெரிந்து, பூ-பூவை, தொடுப்பாள்-தொடுக்குமவள், துணை-துணைவனை, இல்லார்க்கு-இல்லாதவர்க்கு, இம்மாலை-இம்மாலையானது, என்-என்னபயன்—செய்வதென்று-செய்குவதென்று, கை-கையிலிருக்கின்ற, மாலை-மாலையை—இட்டு-போட்டு—கலுழ்ந்தாள்-அழுதாள்—(எ-று) ❃ இ-ம்-தலைவனேமாலைக்காலத்திலேபூத்தொடுத்ததலைவியானவள்நாயகனில்லாதவர்க்குஇம்மாலையென்னசெய்வதென்று கைம்மாலையைப்போட்டழுதாள்-என்பதாம், ☞ தொடுப்பாள்-எ, கலுழ்ந்தாள்-ப. (௩)

செல்சுடர்நோக்கிச்சிதரரிக்கண்கொண்டநீர் ......✻
மெல்விரலூழ்தெரியாவிம்மித்தன்-மெல்விரலி ... ✻
னாள்வைத்துநங்குற்றமெண்ணுங்கொலந்தோதன் ✻
றோள்வைத்தணைமேற்கிடந்து .... ✻

(கருத்து) வினைமுற்றிமீண்டதலைமகன்பாகன்கேட்பச்சொல்லியது.

(இ-ள்.) செல்-படுகின்ற—சுடர்-சூரியனை—நோக்கி-பார்த்து, சிதர்சிந்திய—அரி-செவ்வரிபரந்த—கண்-கண்கள், கொண்ட-கொண்டிருக்

திற—நீர்-நீரை—மெல் மெல்லிய—விரல்-விரலால்—ஊழ்-முறைமு
றையாக—தெரிய-வாங்கித்தெரித்து—விம்மி-அழுது—தன்-தன்னு
டைய—மெல்-மெல்லிய—விரலின்-விரலால்—நாள்-(நாம்பிரிந்த)நா
ள்களை, வைத்து-வைத்தெண்ணி, அணைமேல்-அணைமேலே—தன்-தன
து—தோள்-தோளை—வைத்து-வைத்து—கிடந்து-படுத்து, அந்தோ
ஐயோ—நம்-நம்முடைய—குற்றம்-குற்றங்களை—எண்ணுங்கொல்-நி
னைப்பாளோ—(எ-று) ※ இ-ம், பாகனே தலைவியானவள் நாம்பிரிந்துவ
ந்தநாள்களை யெண்ணிக் கண்ணீர்விட்டழுவாளோ என்றான்- என்பதா
ம், ☞ தலைவி-எ, எண்ணுங்கொல்-ப, குற்றம்-செ. (௪)

கண்கயலென்னுங் கருத்தினாற் காதலி ※
பின்சென்றதம்மசிறுசிரல்-பின்சென்று ※
ஊக்கியெழுந்து மெறிகல்லா வொண்புருவங் ※
கோட்டியவில்வாக்கறிந்து ※

(கருத்து) தலைமகன்றானுற்றதனைப் பாங்கற்குச்சொல்லியது.

(இ-ள்.) கண் நாயகிகண்களை—கயலென்னும்- சேலென்றுசொல்லு
ம், கருத்தினால்-கருத்தால்—காதலி-அந்நாயகி—பின்சென்றது - பின்
னேதொடர்ந்தது, சிறுசிரல் சிச்சிலிக்குருவி—ஒண்புருவம்-ஒள்ளியபு
ருவம், கோட்டியவில்வாக்கு- வில்வளைந்தாற்போலிருந்ததை,
அறிந்து தெரிந்து—பின்சென்றும்-பின்னேதொடர்ந்தும், ஊக்கி- உ
றுதிகொண்டு—எழுந்தும்- எழுந்தும்— எறிகல்லா- எறியமாட்டாது,
(எ-று) ※ இ-ம்- பாங்கனே தலைவிகண்களைச் சேலென்றுசொல்லுங்கரு
த்தால் சிச்சிலிக்குருவி அந்நாயகிபின்னே சென்றது சென்றும் புருவத்
தை வில்லென்றறிந்து கொத்தாமல்விட்டது-என்பதாம் ☞ சிரல்-எ, எறிக
ல்லா-ப, அம்ம-இடைச்சொல். (௫)

அரக்காம்பல் நாறும்வாயம்மருங்கிற்கன்னோ ※
பரற்கானமாற்றினகொல்லோ-வரக்கார்ந்த ※
பஞ்சிகொண்டூட்டினும் பையெனப் பையெனவென்
றஞ்சிப்பின்வாங்குமடி ※

(கருத்து) மகட்போக்கியதாயர் செவிலிக்குச்சொல்லியது.

(இ-ள்.) அரக்காம்பல் செவ்வல்லிப்பூப்போலும், நாறும்- மணம்வீசு
ம்—வாய்-வாயையும், அம்-அழகிய—மருங்கிற்கு- இடையினையுடை
யாட்கு—அரக்கு முன்சிவப்பு—ஆர்ந்த- தோய்ந்த—பஞ்சிகொண்டு-
பஞ்சைக்கொண்டு—ஊட்டினும்-ஊட்டிப்பூசுதல்செய்யினும், பையெ
னப்பையெனவென்று(அதற்குநொந்து)மெல்லெனமெல்லெனவென்
று—அஞ்சி-ஊட்டுதற்கஞ்சி, பின்-பின்னே— வாங்கும்-வாங்கிப்போ
கும்—அடி-பாதங்கள், பரல்- பருக்கைக்கற்களையுடைய, கானம்-காட்

டுவழிபோக— அன்றே- ஐயோ—ஆற்றினகொல்லோ- பொறுத்தனவோ(எ-று)❋இ-ம்-செவிலியே நமதுமகளுடைய மெல்லடிகளுக்குச்செம்பஞ்சூட்டில் மெல்ல மெல்லவென்பாளோ அவள்பாதங்கள் பருக்கன் கற்களையுடைய காட்டிற்செல்லச் சகித்தனவோ - என்பதாம்.
☞ அடி-எ, ஆற்றினகொல்லோ-பயனிலை. (௬)

ஒலிக்கணக்கரொலியடங்குபுன் செக்கர் ... ... ❋
மாலைப்பொழுதின் மணந்தார்ப் பிரிவுள்ளி ... ...❋
மாலைபரிந்திட்டழுதாள் வனமுலைமேற் ... ... ❋
கோலஞ்செய்சாந்தந் திமிர்ந்து ... ... ❋

(௧)தலைமகள்பிரிவுடன்படாமையைத்தோழிதலைமகற்குச்சொல்லியது

(இ-ள்.) ஒலி-ஒலியெழுதும்—கணக்கர்-கணக்கராது—ஒலி- ஓசை, அடங்கும்-ஒடுங்கும்—புன்- புல்லிய—செக்கர்- செம்மையையுடைய, மாலைப்பொழுதில்-மாலைக்காலத்திலே— மணந்தார்-கூடினவர், பிரிவு-பிரிவை, உள்ளி- நினைத்து—மாலை-பூமாலையை—பரிந்திட்டு-அறுத்தெறிந்து—வனம்-அழகிய, முலைமேல்-முலைமேல்—கோலம்-அழகு,செய்-செய்திருக்கிற—சாந்தம்-சந்தனத்தை, திமிர்ந்து-அழித்து, அழுதாள்-புலம்பினாள்—(எ-று)❋இ-ம்-தலைவனே தலைவிமாலைக்காலத்திலேஉமதுபிரிவைநினைந்து மலர்மாலையையறுத்தெறிந்து முலைமீதணிந்த சந்தனக்கோலத்தையுமழித்தழுதாள்-எ-ம். ☞ தலைமகள்-எ, அழுதாள்-ப

கடக்கருங்கானத்துக்காளைபின்னாளை ... ...❋
நடக்கவும்வல்லையோவென்றி-சுடர்த்தொடீஇ ... ❋
பெற்றானொருவன் பெருங்குதிரையந்நிலையே ... ❋
கற்றானஃதூருமாறு ... ... ❋

௧.உடன்போக்குக்குப்பொருந்தினதலைமகள்தோழிக்குச்சொல்லியது

(இ-ள்.)கடக்கரும்-கடத்தற்கரிய—கானத்து-காட்டிலே—காளை-நாயகனாகியகாளை—பின்- பின்னால்—நாளை-நாளை—நடக்கவும்- நடந்துபோகவும்—வல்லையோ- வல்லமையையுடையையோ—என்றி- என்றென்னைவினாவினாய்—சுடர்-விளங்கிய—தொடீஇ- வளையல்களையுடையாய், ஒருவன்-ஒருவன்—பெரும்-பெரிய—குதிரை- குதிரையை—பெற்றான்-அடைந்தான்—அந்நிலையே-அப்பொழுதே—அஃது- அக்குதிரையை—ஊருமாறு-செலுத்துமுறைமையினையும்—கற்றான்- கற்றவல்லவனானான்—(அதுபோலக்காதலன்பின்சேறற்கருமையில்லை) (எ-று) ❋இ-ம்-தோழியே நாளைகாட்டிலே நடக்கவல்லமையுடையவளோவென்றுகேட்டாய்ஒருவன்குதிரைகொண்டால் அதன்மேலேறவுங்கற்றிருப்பான்என்றாள்-என்பதாம். ☞ அருமை-தோன்றாவெழுவாய்- இல்லை-தோன்றாப்பயனிலை. (௮)

முலைக்கண்ணுமுத்தமுமுழுமெய்யும்புல்லு ... ... ❋
மிலக்கணம்யாதுமறியேன்-கலைக்கணம் ... ... ❋

வேங்கைவெரூஉ நெறிசெலியபோலுமென் ※
பூம்பாவைசெய்தகுறி ※

(கருத்து) மகளைப்போக்கிய தாயானவள் கவலையடைந்து சொல்லியது.

(இ-ள்) முலைக்கண்ணும்-முலைக்காம்புகளையும்—முத்தும் முத்துமாலைகளையும்—முழுமெய்யும்-சரீரமுழுமையையும்—புல்லும்-தன்னுடலிலழுந்தவென்னைத்தழுவிக்கொண்ட—இலக்கணம்-அடையாளம் யானும்-நானும்—அறியேன்-தெற்றறிந்திலேன்—கலைக்கணம்-மான்கூட்டங்கள்—வேங்கை-வேங்கைக்கு—வெரூஉம்-பயந்தோடும், நெறி-வழியை, செலியபோலும்-செல்வாள்போலும்—என்-என்னுடைய—பூம்பாவை-அழகியபெண்ணானவள்—செய்த-பண்ணின—குறி-குறிகளை (எ-று) ※ இ-ம், முலைகளும் முத்துமாலைகளும் தன்மெய்யிலழுந்த என்மெய்யைத் தழுவிக்கொண்ட குறிகளை தெற்றறிந்திலேன்-என்மகள் காட்டுவழிச்சென்றாள்போலும்-என்பதாம். ☞ யான்-தோன்றாஎழுவாய், அறியேன்-ப. (௯)

கண்மூன்றுடையானுங்காக்கையும்பையரவு ※
மென்னீன்றவாயும்பிழைத்ததென்-பொன்னீன்ற ※
கோங்கரும்பன்னமுலையாய்பொருள்வயிற் ※
பாங்கனார்சென்றநெறி ※

(கருத்து) தலைமகள்பிரிவாற்றாமையைத்தோழிக்குச்சொல்லியது.

(இ-ள்) பொன்னீன்ற-பொன்போலுநிறமுடைய, கோங்கரும்பன்ன-கோங்கரும்புக்கொப்பான—முலையாய்-தனதனங்களையுடைய தோழியே—பொருள்வயின்-பொருள்வயிற்பிரிந்து, பாங்கனார்சென்றநெறி-தலைவர்சென்றவழிக்கு—கண்மூன்றுடையானும்-மூன்றுகண்களையுடையபரமசிவனும்—காக்கையும்-காகமும்—பையரவும்-படமுடையசர்ப்பமும்—என்னீன்ற-என்னைப்பெற்ற—ஆயும்-தாய், பிழைத்ததென்-எனக்குப்பிழைசெய்தது—(எ-று) ※ இ-ம், தோழியே, தலைவர் பொருள்மேற்பிரிந்தவழிக்கு எனக்குப்பிழைசெய்தவர் மன்மதனையுருவழித்துப்பின்னும் உயிராக்கிவிட்ட சிவனும் குயிலைவளர்த்துவிட்டகாகமும், சந்திரனைவிழுங்கிவிட்டபாம்பும், பெற்றகாலத்தென்னைக்கொல்லாதுவிட்டதாயுந்தான் என்றாள்-என்பதாம். ☞ கண்மூன்றுடையான்-காக்கை-அரவு-ஆய்-எழுவாய், பிழைத்தது-பயனிலை. (௰)

காமத்துப்பால்-முற்றிற்று.

ஆ பால்-௩-க்கு-அதிகாரம்-௪௰-க்கும்-கூடியசெய்யுள்-௪௱.

நாலடியார் மூலமும் உரையும்

முற்றுப்பெற்றது.